# சோவியத் தகவல் சாதனங்கள்



சோவியத் நாடு
பிரசுரங்கள்

# சோவியத் தகவல் சாதனங்கள்



சோவியத் நாடு பிரசுரங்கள்
1982

**SOVIET MASS MEDIA**

(in Tamil)

மாஸ்கோவிலுள்ள
நவோஸ்தி செய்தி நிறுவனம்
தயாரித்தளித்த வாசகம்

Published by Y. F. Runov at Soviet Nadu office, 115, Theagaraya Road, Madras—600 017, for the Information Department of the USSR Embassy in India. Printed at New Century Printers, Madras-600 098.

Price: Rs. 2-00 விலை: ரூ. 2-00

இந்த சிறு நூலை பின்கண்டவர்கள் சேர்ந்து எழுதியுள்ளனர்: பேராசிரியர் என்வர் பகிரோவ், துணைப் பேராசிரியர் யெவ்கெனி பிளாஷ்னேவ், பேராசிரியர் போரிஸ் தாத்ஸ்யுக், விஞ்ஞானக் கேண்டிடேட் (வரலாறு) யெவ்கெனி துகின், துணைப் பேராசிரியர் விசவலோத் ருஷ்னிகோவ், விஞ்ஞானக் கேண்டிடேட் (வரலாறு) மிகையில் ஷிகோந்தின், விஞ்ஞானக் கேண்டிடேட் (வரலாறு) யூரி காஷ்லெவ், விஞ்ஞானக் கேண்டிடேட் (தத்துவம்) விக்தர் மோவ்சன்.

மாஸ்கோ பல்கலைக் கழகத்தின் பத்திரிகைத் துறைத் தலைவரான பேராசிரியர் யாசன் ஐசுர்ஸ்கியினது பொது மேற்பார்வையில் எழுதப்பட்ட புத்தகம் இது.

# பொருளடக்கம்

# முன்னுரை

சோவியத் யூனியனில் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் போன்ற வெகுஜன தகவல், செய்தி தொடர்பு அமைப்பு எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது? இதில் அதன் அனுபவம் யாது? இதற்கு அடிப்படையாக உள்ள கோட்பாடுகள் யாவை? இந்த வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனம் சம்பந்தமான சர்வதேசப் பிரச்சினைகளில் சோவியத் நிலை என்ன? இவற்றைப் பற்றி எல்லாம் இந்தச் சிறு பிரசுரத்திலிருந்து நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

இங்கு ஒரு விஷயத்தை வலியுறுத்திக் கூறியாக வேண்டும்; எங்கள் அனுபவத்தைப் பிறர் பின்பற்றுதற்குரிய ஒரு முன்மாதிரியாக முன் வைக்க நாங்கள் ஒருபோதும் முயன்றதில்லை. எனினும் எங்கள் அனுபவம் சுயேச்சையான வளர்ச்சிப் பாதையை தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள நாடுகளுக்கும், மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்க முடியும் என்று நம்புகிறோம். ஏனென்றால் இன்று இந்த நாடுகளையும் மக்களையும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவற்றையே அறுபதுக்கும் சற்று அதிகமான ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் சமாளிக்க வேண்டியிருந்தது. அதே சமயம் வரலாற்றில் பரிபூரண ஒப்புமை என்று எதுவும் இருக்க முடியாது என்பதையும் நாங்கள் மறந்து விடவில்லை.

1917 ஆம் வருட அக்டோபர் புரட்சிக்கு முன்னர் ரஷ்யா ஒரு பிரதான முதலாளித்துவ நாடாக இருந்தது; அபரிமிதமான இயற்கை வளங்களையும் மனித சக்தி வளங்களையும் கொண்டிருந்தது; ஓரளவு வளர்ச்சி அடைந்த தொழில் துறையையும், விஞ்ஞான ஆராய்ச்சித் துறையையும், கலாசாரத்தையும், பத்திரிகைத் துறையையும் பெற்றிருந்தது. ஆயினும் பெரிதும் முன்னேற்றமடைந்த மேலைய நாடுகளுக்கு ரஷ்யா தொழில் நுட்ப ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் 50 முதல் 100 ஆண்டுக் காலம் பின்தங்கி இருந்தது; வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தொழில் நுட்பத்தை அது பெருமளவுக்கு நம்பிக் கொண்டிருந்தது; அதன் விஞ்ஞானிகளது பல முக்கிய கண்டுபிடிப்புகளை பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்த முடியாத நிலையில் அது இருந்தது. வெகுஜன தகவல், செய்தி தொடர்பு

சாதனங்கள் ஆளும் வர்க்கங்களுக்குச் சொந்தமாக இருந்தன; அவற்றின் நலன்களைப் பிரதிபலித்தன. முற்போக்குப் பத்திரிகைகள் பணமுடையால் அவதிப்பட்டன; சட்டத்தால் வேட்டையாடப் பட்டன. புரட்சிகரப் பத்திரிகைகளின் கதியைப் பற்றியோ சொல்லவே வேண்டியதில்லை. மக்கள் தொகையில் எழுபத்தைந்து சதவீதத்தினர் கல்வி வாசனையற்றவர்களாக இருந்தனர்; பத்திரிகைகள் படிக்க முடியாதவர்களாக இருந்தனர். ஆகவே, வெகுஜன தகவல், செய்தி தொடர்பு அமைப்பின் எந்திர சாதன தொழில் நுட்ப வசதிகளும், அதன் அரசியல் திசை வழியும், அது சேவை புரிந்த மக்களின் எண்ணிக்கையும் வெற்றி வாகை சூடிய புரட்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவையாக இருக்கவில்லை.

வளரும் நாடுகளை இதே போன்ற பல பிரச்சினைகள் எதிர்நோக்குகின்றன. இந்த ஒற்றுமை இத்துடன் நின்று விடவில்லை. அடிப்படை மாற்றங்கள் ஏற்பட வேண்டிய அவசியத்திலும், அதேபோல் பொருளாதார மூலவளங்கள், மக்கள் லட்சியத்துக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட தேர்ச்சி பெற்ற ஊழியர் எண்ணிக்கை ஆகியவற்றில் நிலவும் கடுமையான பற்றுக்குறையிலும், மேலும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பிற்போக்கு சக்திகளின் உக்கிரமான எதிர்ப்பிலும் இந்த ஒற்றுமையைக் காண்கிறோம்.

சோவியத் அனுபவத்தின் முக்கியத்துவம் எதில் பொதிந்துள்ளது? மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளை நாம் துரிதமாக சமாளிக்க முடிந்ததிலும், சோஷலிசம் வகுத்துத் தந்த பணியை நிறைவேற்றவல்ல ஒரு வெகுஜன தகவல், செய்தி தொடர்பு அமைப்பை நாம் நிறுவ முடிந்ததிலும்தான் இந்த முக்கியத்துவம் பொதிந்துள்ளது. இவ்வாறு சோஷலிசம் இந்த அமைப்புக்கு நிர்ணயித்துத் தந்த பணி யாது? உள்நாட்டு விவகாரங்கள் சம்பந்தப்பட்ட, வெளிநாட்டு விவகாரங்கள் சம்பந்தப்பட்ட பிரதான நிகழ்ச்சிப் போக்குகளை லட்சக் கணக்கான பிரஜைகள், இன்னும் சொல்லப் போனல் அநேகமாக நாட்டு மக்கள் அனைவரும் பரிச்சயம் செய்து கொள்ள உதவுவதும், விவாதத்திலும் முடிவுகள் எடுப்பதிலும் அவர்கள் முன்னின்று பங்கெடுத்துக் கொள்ள ஊக்குவிப்பதுமே இந்தப் பணி. முன்னாள் ஒடுக்கப்பட்ட மக்களிடம், எழுத்து வாசனையில்லாத மக்களிடம் சமூக விழிப்பு உணர்வைக் கிளர்த்திவிடுதல், எல்லோரையும் சமுதாயத்தின் நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்ளச் செய்தல் எனும் புரட்சியின் பிரதான கடமைகளில் இதுவும் ஒன்றாகும்.

இன்று ஒரு சராசரி சோவியத் குடும்பம் நான்கு வெவ்வேறு பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் சந்தா கட்டுகிறது. சோவியத் யூனியனில் சுமார் 8,000 செய்திப் பத்திரிகைகள் இருக்கின்றன. 1980-ல் 85 சதவிகிதக் குடும்பங்களிடம் தொலைக்காட்சிப் பெட்டிகளும், 86 சதவிகிதக் குடும்பங்களிடம் வானொலிப் பெட்டிகளும் இருந்தன. ஆண்டுதோறும் 60 முதல் 70 லட்சம் தொலைக்காட்சி

செட்டுகளும், அதே எண்ணிக்கையுள்ள வானொலி செட்டுகளும் வாங்கப்படுகின்றன. குடும்ப விகிதத் தொலைக் காட்சி செட்டுகள் எண்ணிக்கையில் 20–25 ஆண்டுகளுக்கு முன்னர் சோவியத் யூனியன் பெரிதும் முன்னேற்றமடைந்த மேலைய நாடுகளுக்கு வெகுதூரம் பின்தங்கியிருந்தது; ஆனால் இந்த நிலைமை துரிதமாக மறைந்து வருகிறது.

வாழ்க்கையின் சகல துறைகளிலும் நிகழ்ந்தேறிவந்த முக்கிய சமூக மாற்றங்களுக்கு இணங்க சோவியத் யூனியனில் வெகுஜன தகவல் தொடர்பு சாதனம் வளர்ச்சி அடைந்தது. எழுத்தறியாமை ஒழித்துக் கட்டப்பட்டதும், முதலில் சர்வஜன ஆரம்பக் கல்வியும் பிறகு கட்டாய உயர்நிலைக் கல்வியும் புகுத்தப்பட்டதும் பத்திரிகை படிப்போரின் எண்ணிக்கையை வெகுவாக அதிகப்படுத்தின; வாசகர்களை மிகவும் விஷயம் தெரிந்தவர்களாக ஆக்கின. சோவியத் யூனியனில் கடந்த 15 ஆண்டுகளில் மக்களின் உண்மை வருமானங்கள் இரண்டு மடங்காகப் பெருகியுள்ளன; இதனால் அனைவருமே தொலைக் காட்சி, வானொலி செட்டுகளை எளிதாக வாங்குவது சாத்தியமாகி உள்ளது. சோவியத் பிரஜைகளின் சமூக உணர்வு இடையறாது வளர்ந்து வருவதன் காரணமாக, அவர்கள் பத்திரிகை வாசகர் களாகவும், வானொலி, தொலைக் காட்சி நேயர்களாகவும் பரிணமித் திருப்பது மட்டுமன்றி, செய்திப் பத்திரிகைகளை வெளியிடுவதிலும், தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதிலும் நேரடியாகப் பங்கேற்பவர்களாகவும் மாறியுள்ளனர்.

பத்திரிகைத் துறை என்பது ''பொறுக்கியெடுக்கப்பட்ட'' ஒரு சிலருக்கே உரிய தொழில் என்ற நிலை சோவியத் யூனியனில் மலையேறி விட்டது. சோவியத் பல்கலைக் கழகங்களின் 22 விசேட துறைகளிலும், பிரிவுகளிலும் பத்திரிகையாளர்களாகப் படித்துத் தேர்ச்சி பெறுபவர்கள் மட்டுமே இன்று ஆசிரியர் குழாங்களில் இடம் பெறுவதில்லை. ஆண்டுதோறும் முழுநேரப் பத்திரிகையாளர்களாக ஆகும் சுமார் 3,000 பேரில் இவர்கள் 50 சதத்தினரே ஆவர். எஞ்சியவர்கள் ஏனைய தொழில்களைச் சேர்ந்தவர்கள்; பத்திரிகைத் துறையில் ஆர்வமும் தேர்ச்சியும் மிக்கவர்கள். தவிரவும், ஒவ்வொரு முழு நேரப் பத்திரிகையாளருக்கும் அவ்வாறு முழுநேரப் பத்திரிகையாளர்களாக இல்லாத 100 எழுத்தாளர்கள் வீதம் இருக்கின்றனர். அவர்கள் தொழிலாளி, விவசாய நிருபர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். தொழிற்சாலைகளிலும், ரயில்வேக்களிலும், கூட்டுப் பண்ணைகளிலும், அரசாங்கப் பண்ணைகளிலும், அலுவலகங் களிலும் பணி புரியும் இவர்கள் செய்திப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வழக்கமாக, முறையாக எழுதுகின்றனர்.

சோவியத் யூனியனிலுள்ள பத்திரிகைகள், தொலைக் காட்சி, வானொலி முதலிய தகவல், செய்தித் தொடர்பு சாதனங்கள் எந்த

கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் மக்களுடைய சாதனங்களாகவே விளங்குகின்றன; அவை தனிப்பட்டவர்களுக்கு அல்லாமல் மக்களுக்கு, பொது நிறுவனங்களுக்குச் சொந்தமாக உள்ளன; சலுகை படைத்த சில கூட்டத்தினரின் நலன்களை அல்லாமல் மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கின்றன; லட்சக்கணக்கான மக்கள் செய்திப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதுகின்றனர்; தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதில் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

# குறிக்கோள்களும் ஒழுங்கமைப்பும்

இன்றைய வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களின் முக்கியத்துவத்தையும், அவற்றின் வளர்ந்துவரும் பங்கையும் எல்லோருமே ஒப்புக்கொள்ளு கின்றனர். ஆயினும் இவை யாருக்குச் சொந்தமாக இருக்க வேண்டும்? இவற்றை எவர் நிர்வகிக்க வேண்டும்? எந்த நோக்கங் களுக்காக இவை சேவை செய்ய வேண்டும்? எத்தகைய வழிமுறைகளை இவை பயன்படுத்த வேண்டும்? இவற்றில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

இவ்வகையில் சோவியத் கருத்து யாது? இக்கருத்துக்கு ஆதார மாக இருப்பது என்ன? ஒரு வர்க்க சமுதாயத்தில் பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி போன்றவை வர்க்க சார்புடையவையாக அல்லது ஒருதலைப்பட்சமானவையாகவே இருக்கும் என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டதே சோவியத் கருத்து. ஒரு செய்திப் பத்திரிகை, சஞ்சிகை, வானொலி அல்லது தொலைக்காட்சி நிறுவனம் உண்மையில் நடுநிலைமையானதாக இருக்க முடியாது; அவற்றின் உரிமையாளர்களும் ஊழியர்களும் நடுநிலைமையாளர்களாகத் தங்களைக் கருதிக் கொண்டாலும் அவ்வாறு இருக்க முடியாது. சுரண்டலை அஸ்திவாரமாகக் கொண்ட ஒரு சமுதாயத்தில் அரசியல் ரீதியில் பாராமுகமாக இருப்பது அல்லது நடுநிலைமையாக இருப்பது என்பது அந்தச் சுரண்டல் அமைப்பை ஆதரிப்பதையும், மாற்றத்தைக் கொண்டுவர முயற்சிக்கும் சக்திகளை எதிர்ப்பதையுமே தவிர்க்க முடியாதபடி குறிக்கும்.

வேறுவிதமாகச் சொன்னால், சோவியத் பத்திரிகைகளுக்கும் முதலாளித்துவப் பத்திரிகைகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு முந்தியவை கட்சி சார்புடையவை, பிந்தியவை கட்சிசார்பற்றவை என் பதில் பொதிந்திருக்கவில்லை; அதற்கு மாறாக, சோவியத் பத்திரிகைகள் மக்களின் நலன்களை ஒளிவுமறைவின்றி பகிரங்கமாகப் பிரதிபலிக்கும் போது, முதலாளித்துவப் பத்திரிகைகள் நடுநிலைமை என்ற போர் வையில் உண்மையில் சொத்துடைத்த வர்க்கங்களின் நலன்களையே பாதுகாக்கின்றன என்ற உண்மையில்தான் இந்த வேறுபாடு அடங்கி யுள்ளது.

இந்த ஆதாரக் கோட்பாட்டிலிருந்து இயல்பாகவே பின் கண்ட முடிவு எழுகிறது; சமூகப் புரட்சியும், தேசவிடுதலை இயக்கங்களும் பூரணமாக வெற்றிவாகை சூட வேண்டுமானல், வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் அமைப்பு முழுவதுமே அடியோடு புனரமைக்கப்பட வேண்டும். இதனைச் செய்யவில்லை என்ருல், மிகவும் சக்தி வாய்ந்த இந்த அரசியல் போராட்ட சாதனங்கள், பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்கும் சாதனங்கள், அவற்றின் முன்னுள் உரிமையாளர்களது கரங்களில், தூக்கியெறியப்பட்ட ஆட்சிக்குப் பல்லாண்டு பாடுவோர் கரங்களில் விடப்படுமானல், அது மக்கள் ஈட்டிய ஆதாயங்களுக்கு நேரடியான, இடையருத அச்சுறுத்தலை தோற்றுவிக்கும். பத்திரிகைகள் யாருக்கு சேவை புரிகின்றன எனும் பிரச்சினை வரலாற்றில் நெருக்கடியான கட்டங்களில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. புரட்சிகர மாற்றங்களைச் செய்த நாடுகளின் ஆக்க பூர்வமான அனுபவமும் சரி, எதிர்மறையான அனுபவமும் சரி இந்த உண்மைக்கு சான்று பகர்கிறது. பத்திரிகைகள் வானெலி, தொலைக்காட்சி போன்ற வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களை புரட்சி சக்திகள் தமது ஆதிக்கத்தில் எடுத்துக் கொண்ட நாடுகளில் அவை இந்த சக்திகளின் ஆற்றல்மிக்க, பயனுறுதி யுடைய கூட்டாளியாக விளங்கின. ஆனல் இந்த சக்திகள் இவ்வாறு செய்ய இயலாதுபோன அல்லது செய்ய முன்வராத நாடுகளில் இந்த சாதனங்கள் எதிர்ப் புரட்சி சக்திகளின் ஒரு வலிமை வாய்ந்த ஆயுத மாக மாறின.

1917-ல் ரஷ்யாவில் நடைபெற்ற அக்டோபர் புரட்சியை இங்கு சற்று நினைவு கூர்வோம்.

அந்தப் புரட்சி வெற்றி வாகை சூடிய ஒரு சில நாட்களில், மக்கள் கமிசார் கவுன்சில் (சோவியத் அரசாங்கம்) பத்திரிகைகள் குறித்த ஆணையைப் பிறப்பித்தது. அந்த ஆணை பின்வருமாறு மிகத் தெளி வாகக் கூறிற்று: ''பூர்ஷுவாப் பத்திரிகைகள் பூர்ஷுவாக்களின் மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதங்களில் ஒன்று. குறிப்பாக, தொழிலா ளர்கள், விவசாயிகளின் புதிய ஆட்சி இப்பொழுதுதான் நிலைபெற்று வரும் நெருக்கடியான வேளையில், இந்த ஆயுதத்தை முற்றிலுமாக பகைவனின் கையில் விட்டு வைக்க முடியாது; ஏனென்ருல் இத்தகைய நெருக்கடியான நிலைமைகளில் இந்த ஆயுதம் வெடிகுண்டுகளையும், எந்திரத் துப்பாக்கிகளையும் விட அபாயகரமானது.''*

இந்த ஆணை எல்லாப் பூர்ஷுவா, குட்டி பூர்ஷுவா செய்திப் பத்திரிகைகளும் மூடப்பட வேண்டும் என்று கூறவில்லை; அதற்கு மாருக, (1) தொழிலாளிகள், விவசாயிகளின் அரசாங்கத்தைப் பகிரங்கமாக எதிர்க்கும்படி அல்லது அதற்குக் கீழ்ப்படிய மறுக்கும்படி

* சோவியத் ஆட்சியின் முதல் ஆணைகள், லாரன்ஸ் அண்டு விஷார்த், 1970, பக்கம் 29.

தூண்டும் பத்திரிகைகளும், (2) அவதூறான முறையில் உண்மைகளைத் திரித்திப் புரட்டி அரசாங்கத்துக்கு எதிராக துவேஷத்தைக் கிளர்த்தி விடும் பத்திரிகைகளும், (3) சட்டப்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச் செயல்கள் புரியும்படித் தூபம் போடும் பத்திரிகைகளும் மட்டுமே மூடப்படவேண்டும்'' என்று கூறிற்று.* மேலும், புதிய ஆட்சி வலுப்பட்டதுமே, பத்திரிகைகள் மீதுள்ள சகல நிர்வாக நிர்பந்தங்களும் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், சட்ட வரம்புகளுக்குள் அவற்றுக்குப் பரிபூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்றும்'' அந்த ஆணை வலியுறுத்திற்று.**

அது மட்டுமல்ல, மற்றொரு ஆணையும் பிறப்பிக்கப்பட்டது. தனியார் பத்திரிகை விளம்பரத்தில் அரசாங்க ஏகபோகத்தை அது பிரகடனம் செய்தது. பூர்ஷுவாப் பத்திரிகைகளின் உரிமையாளர்களிடம் நல்ல வசதியான அச்சகங்களும் ஏராளமான அளவில் பத்திரிகைக் காகித இருப்பும் இருந்தன; விளம்பரத்தின் மூலம் அவர்களுக்கு அபரிமிதமான வருமானம் கிடைத்து வந்தது; இதனால் அவர்களது நிலை உறுதியடைந்து போல்ஷிவிக் பத்திரிகைகளைவிட மிகவும் அனுகூலமான இடத்தைப் பெற்றிருந்தனர். இத்தகைய நிலைமையில், இந்தப் பகைமை வெளியீடுகளுக்கு தொழில் நுட்ப வசதிகள் மட்டுமன்றி, நிதி வசதிகளும், விளம்பர வருமானங்களும் கிட்டாதபடி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது இன்றியமையாததாயிற்று.

இந்த ஆணை வரலாற்று ரீதியில் அவசியமானதாக இருந்தது. பத்திரிகை விளம்பரத் துறையில் அரசாங்க ஏகபோகத்தை ஏற்படுத்துவது ''மிகவும் எளிய, சிறந்த, சட்டபூர்வமான ஒரு நடவடிக்கையாகும்'' என்று லெனின் கூறினார். ''தொழிலாளர்கள் அரசியல் அதிகாரத்தை வென்றடைந்ததும் இது இல்லாமல் எதுவும் செய்ய முடியாது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.***

ஐந்தாவது அகில ரஷ்ய சோவியத்துகள் காங்கிரசில் 1918 ஜூலையில் ஏற்கப்பட்ட முதலாவது சோவியத் அரசியல் சட்டம் உழைப்பாளி மக்களுக்குப் பரந்த உரிமைகளை வழங்கிற்று; அதே சமயம், பத்திரிகைத் துறையில் நிலவி வந்த முதலாளித்துவ ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டிற்று. இந்த அரசியல் சட்டத்தின் 14-வது விதி கூறியதாவது: ''உழைப்பாளி மக்களுக்கு மெய்யான கருத்துச் சுதந்திரத்தை உறுதி செய்யும் பொருட்டு ரஷ்ய சோவியத் சோஷலிச சமஷ்டிக் குடியரசானது பத்திரிகைகள் முதலாளிகளைச் சார்ந்திருப்பதற்கு முற்றுப்புள்ளி வைக்கிறது; செய்திப் பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள், மற்றும் இதர எல்லாவிதமான பிரசுரங்

* மேற்படி நூல், பக்கங்கள் 29-30.

** மேற்படி நூல், பக்கம் 29.

*** வி. இ. லெனின், நூல் தொகை, தொகுதி 25, பக்கம் 376.

களையும் வெளியிடுவதற்கு அவசியமான அனைத்துத் தொழில் நுட்ப, பொருளாயத வசதிகளையும் தொழிலாளி வர்க்கத்துக்கும், ஏழை விவசாயிகளுக்கும் செய்து தருகிறது; அவை நாடு முழுவதிலும் தங்கு தடையின்றி விநியோகமாவதற்கு உத்தரவாதம் செய்கிறது.''*

ரஷ்ய சமஷ்டியின் 1918 ஆம் வருட அரசியல் சட்டமும், சோவியத் சோஷலிசக் குடியரசுகள் ஒன்றியம் அமைக்கப்பட்ட பிறகு ஏற்கப்பட்ட சோவியத் யூனியனின் 1924 ஆம் வருட அரசியல் சட்டமும் உழைப்பாளி மக்களுக்கு மட்டுமே பத்திரிகை சுதந்திரத்தை அளித்தன; அதே சமயம் சுரண்டலாளர்களுக்கு இந்த உரிமையைத் தர மறுத்தன.

இந்த நடவடிக்கைகள் மனித உரிமைகளுக்கும், பேச்சு சுதந்திரத்திற்கும், பத்திரிகை சுதந்திரத்திற்கும் முரணானவை என்று பல மேலைய ஆசிரியர்கள் பழிக்கின்றனர்; இவை யாவும் சோஷலிசப் புரட்சியின் தவிர்க்க முடியாத தீய விளைவுகளே தவிர வேறல்ல என்று கதைக்கின்றனர்; இதற்கு முன்னர் சுதந்திரம் நிலவி வந்தது என்றும், புரட்சிதான் அதனைக் குழிதோண்டிப் புதைத்து விட்டது என்றும் விதண்டாவாதம் செய்கின்றனர். ஆனால் அதேசமயம் ஜார்கால ரஷ்யாவில் உழைப்பாளி மக்களுக்கு துளிகூடப் பத்திரிகை சுதந்திரம் இருக்கவில்லை என்பதையும், லெனின் தலைமையில் கம்யூனிஸ்டுகள் அதிகாரத்துக்கு வந்தபோது, ஊசலாட்டக்காரர்களிடமும், இன்னும் சொல்லப்போனால் உண்மையில் அரசாங்கத்தை எதிர்த்து ஆயுதமேந்திப் போராடாத அரசியல் பகைவர்களிடமும்கூட அதிகபட்ச அளவுக்கு சகிப்புத் தன்மை காட்ட அவர்கள் தயாராக இருந்தனர் என்பதையும், எனவே அப்போது மேற்கொள்ளப்பட்ட "எந்த தீவிர நடவடிக்கைகளும்'' எதிர்ப்புரட்சி சக்திகள் காட்டிய ஆயுதந் தாங்கிய எதிர்ப்புக்கும், அந்த சக்திகள் இழைத்த கொடிய அட்டூழியங்களுக்கும் எதிராக புரட்சி எடுத்துக் கொண்ட பதிலடி நடவடிக்கைகளே ஆகும் என்பதையும் அவர்கள் ''மறந்து விடுகின்றனர்.'' இது விந்தையினும் விந்தையாக இருக்கிறது.

புரட்சிக்குப் பிந்திய முதல் மாதங்களின், முதல் வருடங்களின் அனுபவத்தை வரலாற்றுப் பின்னணியிலிருந்து பிரித்து எவரும் சரியாக மதிப்பிட்டுவிட முடியாது. பட்டினிக் கொடுமையில் உழன்று வந்த ரஷ்யாவில், சொல்லெண்ணு போர் நாசத்துக்கு உள்ளான ரஷ்யாவில் வல்லமை மிக்க உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள மக்கள் போராடி வந்தனர். சோஷலிச அரசு வெல்வதா, வீழ்வதா என்பதே அப்போது அவர்களை எதிர்நோக்கிய ஜீவமரணப்

* சோவியத் ஆட்சியின் முதல் ஆணைகள், லாரன்ஸ் அண்டு விஷார்த், 1970, பக்கம் 155.

பிரச்சினையாக இருந்தது. அன்றைய மிக நெருக்கடியான நிலைமையில் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் துறை உட்பட சகல துறைகளிலும் மிக அசாதாரண நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. எந்த ஒரு புரட்சியும் தான் ஈட்டிய ஆதாயங்களை இழக்காதிருப்பதற்கு, வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள்மீது கட்டுப்பாட்டைக் கொண்டு வருவது அவசியம்தான் என்ற போதிலும், இந்தக் குறிக்கோளை எய்துவதற்கான முறைகள் சந்தர்ப்ப சூழ்நிலைமைகளைப் பொறுத்து மாறுபடக் கூடும்; பிரதானமாக, அதிகாரத்திலிருந்து தூக்கியெறியப் பட்ட ஆட்சியாளர்களும் அவர்களுடைய அந்நியக் கூட்டாளிகளும் காட்டும் எதிர்ப்பின் பரிமாணத்தைப் பொறுத்து வேறுபடக்கூடும்.

சோவியத் யூனியனில் சுரண்டும் வர்க்கங்கள் ஒழித்துக் கட்டப் பட்டு, சோஷலிசம் பரிபூரண வெற்றி பெற்றுவிட்ட நிலைமையில், பத்திரிகை சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் பிரச்சினை எழவில்லை.

சோவியத் யூனியனின் 1936 ஆம் வருட அரசியல் சட்டம் சமுதாயத்தின் சகல உறுப்பினர்களுக்கும் பத்திரிகை சுதந்திரத்தை உத்தரவாதம் செய்தது.

பொதுக் கட்டிடங்களையும், வீதிகளையும், சதுக்கங்களையும் உழைக்கும் மக்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு வகை செய்வதன் மூலம் மட்டுமன்றி, ''தகவல்களை விரிவாகப் பரப்புவதன் மூலமும், பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி முதலியவற்றை உபயோகிக்க வாய்ப்பு அளிப்பதன் மூலமும்'' சோவியத் யூனியனில் அரசியல் சுதந்திரங்களை அனுபவிப்பதற்கு உறுதி செய்யும் ஒரு முக்கியமான ஷரத்து 1977 ஆம் வருட புதிய அரசியல் சட்டத்தில் முதல் முறையாக இடம் பெற்றுள்ளது.

சோஷலிச ரீதியில் நாட்டைப் புனரமைத்ததன் மூலம் சோவியத் ஆட்சி உண்மையில் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளையும், சுதந்திரங்களையும் வழங்கியுள்ளது. சோவியத் அரசு பத்திரிகை சுதந்திரத்தைப் பிரகடனம் செய்திருப்பது மட்டுமல்லாமல், நடைமுறையில் அந்த சுதந்திரத்தை உத்தரவாதமும் செய்துள்ளது. சோவியத் பத்திரிகைகள் மக்களுக்குச் சொந்தமானவை என்பதிலும், அவர்களது நலன்களுக்காக அவை பாடுபடுகின்றன என்பதிலும் ஐயமில்லை.

சோவியத் யூனியனிலுள்ள பத்திரிகைகள் தானடித்த மூப்பாக தமது இஷ்டப்படி எல்லாம் கண்டதே காட்சி கொண்டதே கோலமாக எழுதும் ''பரிபூரண சுதந்திரம்'' பெற்றவை என்று இதற்குப் பொருள் அல்ல. சோவியத் நாட்டில் பத்திரிகை சுதந்திரத்திற்கு சில நியாயமான வரம்புகள் உண்டு. எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்பது சுதந்திரம் ஆகாது. போர்வெறிப் பிரசாரம் செய்தல், வருண இன அல்லது தேசிய

இனப்பகைமைக்குத் தூபமிடுதல், ஒழுக்கக் கேட்டையும் வன்முறையையும் ஆதரித்தல், சோவியத் சமூக, அரசியல் அமைப்புப் பற்றி அவதூறுகளையும் கட்டுக்கதைகளையும் பரப்புதல் முதலியவை சோவியத் யூனியனில் தடை செய்யப்பட்டுள்ளன; இவை யாவும் அங்கு சட்டப்படி தண்டிக்கப்படத் தக்க குற்றங்களாகும். இவற்றையும் இவை போன்ற நடவடிக்கைகளையும் பேச்சு சுதந்திரம் என்ற போர்வையில் அனுமதிக்க முடியாது; ஏனென்றால் இவை மக்களின் நலன்களுக்கு ஊறு விளைவிக்கின்றன; எந்தக் குறிக்கோள்களுக்காக சோவியத் அரசியல் சட்டம் பத்திரிகை சுதந்திரத்தை உத்தரவாதம் செய்துள்ளதோ அந்தக் குறிக்கோள்களுக்கு முரணாக உள்ளன.

''பரிபூரண பத்திரிகை சுதந்திரம்'' என்ற கண்ணோட்டம் முதலாளித்துவ சமுதாயத்தில்தான் பிறந்தது. இந்தக் கண்ணோட்டத்தின் தத்துவ ஆசான்கள் மேலைய நாடுகளில் நிலவுவதாகக் கூறப்படும் ''முழு முதல் சுதந்திரத்தையும்,'' ''சுத்த சுயம்பிரகாச ஜனநாயகத்தையும்'' எப்பொழுதுமே தலைமீது தூக்கிவைத்துக் கொண்டாடி வருகின்றனர். முதலாளித்துவம் வழங்கும் சுதந்திரங்கள் ''தன்னேரற்றவை, சர்வ வியாபகமானவை, ஆண்டவன் பார்த்து அருளியவை'' என்று சித்திரித்துக் காட்ட பூர்ஷுவாப் பத்திரிகையாளர்கள் என்னென்னவோ ஜாலங்கள் புரிகின்றனர்; பூர்ஷுவா அறிஞர்கள் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று விபரீதமான கோட்பாடுகளை இட்டுப் புனைந்து வருகின்றனர்.

ஆனால் சித்தாந்த மேல் கட்டுமானம் முழுவதன் வர்க்க இயல்பை நாங்கள் பட்டவர்த்தனமாக, பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறோம். தவிரவும், பத்திரிகை சுதந்திரத்தை சமூக, வர்க்க நோக்கங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு அதன் வரலாற்றுப் பின்னணியோடு நாங்கள் நோக்குகிறோம். இதனை பிரச்சினை குறித்த ஓர் எதார்த்த பூர்வமான பார்வை எனலாம். மேற்கத்திய சித்தாந்தவாதிகள் ''பரிபூரண பத்திரிகை சுதந்திரம்'' எனும் கோஷத்தை முன்வைக்கும் போதெல்லாம் எப்பொழுதும் சமூக வாழ்க்கையின் ஒரு பிரதான விதியை மறந்து விடுகின்றனர்-பகைமை வர்க்கங்களாகப் பிரிந்துள்ள ஒரு சமுதாயத்தில் பத்திரிகைகள் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலிக்கின்றன; அரசியல் போராட்ட ஆயுதமாக அமைகின்றன; ஆளும் கட்சியின், அரசின் கைகளில் இருக்கும் போது அவை ஆட்சி அதிகாரத்தின் ஒரு கருவியாக மாறிவிடுகின்றன என்பதே அந்த விதி.

முதலாளித்துவப் பத்திரிகைகளை ''சுதந்திரமானவையாகவோ'' அல்லது ''வர்க்க நலன்களுக்கு அப்பாற்பட்டவையாகவோ'' படம் பிடித்துக் காட்டுவதற்கு செய்யும் எந்த முயற்சிகளும் கேலிக் கூத்தானவைகளே ஆகும்; ஏனென்றால் ஒரு முதலாளித்துவ சமுதாயத்தில் ஒரு பதிப்பகம் வேறு எந்த முதலாளித்துவ நிறுவனங்களிலிருந்தும்

எவ்வகையிலும் மாறுபட்டதல்ல. ஆகவே, அது முதலாளித்துவ போட்டி சம்பந்தப்பட்ட விதிக்கு இணங்க அதிகப்பட்ச லாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கிறது. இத்தகைய ஒரு நிறுவனத்தில் அதன் சொந்தக்காரர்தான் அதனுடைய கொள்கையை நிர்ணயிக்கிறார்.

தனியார்க்கு சொந்தமான எந்தச் செய்திப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், புத்தகப் பதிப்பகங்களும் கடந்த 60 சொச்சம் ஆண்டுகளாக சோவியத் யூனியனில் இல்லை. அதே போல் தனியார் வானொலி நிலையங்கள் அல்லது தொலைக்காட்சி நிலையங்கள் ஏதும் அங்கு இல்லை. எங்கள் நாட்டில் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் யாவும் அரசுக்கோ, கட்சிக்கோ, தொழிற்சங்கங்கள், மற்றும் இதர பொதுஜன நிறுவனங்கள், கலை கலாசார அமைப்புகள் அல்லது உழைப்பு கூட்டமைப்புகள் ஆகியவற்றுக்கோ சொந்தமாக உள்ளன.

சோவியத் செய்திப் பத்திரிகைகள் லட்சக்கணக்கான பிரதிகள் விற்பனை ஆகின்றன. இவற்றில் **பிராவ்தா** கம்யூனிஸ்டுக் கட்சியின் பத்திரிகை. மக்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகள் **இஸ்வெஸ்தியா**வையும், தொழிற்சங்கங்கள் **த்ருதை**யும், இளம் கம்யூனிஸ்டுக் கழகம் **காம்சொமால்ஸ்கயா பிராவ்தா**வையும், சோவியத் எழுத்தாளர் சங்கம் **லித்தரேத்துர்னயா கஜியேத்தா**வையும் வெளியிடுகின்றன. சோவியத் யூனியனில் இரண்டு செய்தி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் ஒன்று **டாஸ்**, சோவியத் யூனியனின் டெலகிராப் ஏஜன்ஸி என்பது இதன் முழுப் பெயர். இந்த நிறுவனம் அரசாங்கத்துக்குச் சொந்தமானது. மற்றது **நவோஸ்தி செய்தி நிறுவனம்**, இது ஏபிஎன் என்று அழைக்கப்படுகிறது. பல்வேறு பொது ஸ்தாபனங்கள் சேர்ந்து நடத்தும் அரசாங்க சார்பற்ற அமைப்பு இது.

சோவியத் யூனியனில் செயல்பட்டுவரும் இத்தகைய அமைப்பு முறை பத்திரிகை சுதந்திரம் பற்றிய சோவியத் கண்ணோட்டத்துக்கு இசைந்ததாக உள்ளது; மக்களுக்கு சேவை செய்வதற்கு வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களுக்கு வாய்ப்பு அளிக்கின்றது; பண பலத்திலிருந்தும், தனியார் நலன்களுக்கு சேவை செய்யும் அவசியத்திலிருந்தும் அவற்றை விடுவிக்கிறது. அதுமட்டுமல்ல, லட்சக் கணக்கான மக்கள் பத்திரிகைகளின் வாசகர்களாக மட்டுமன்றி, அவற்றுக்கு விஷயதானம் செய்பவர்களாகவும் விளங்க இந்த அமைப்பு முறை வகை செய்கிறது. ஒவ்வொரு சோவியத் செய்திப் பத்திரிகையையும் பார்த்தால் அவற்றின் மொத்த பக்கங்களில் பாதிக்கும் குறையாதவற்றில் ஆலை அல்லது பண்ணை நிருபர்களும், வாசகர்களும் அனுப்பும் கடிதங்களும், யோசனைகளும், விமர்சனக் குறிப்புகளும் வெளியிடப்படுவதைக் காணலாம். வேறுவிதமாகச் சொன்னால், பல்வேறு விஷயங்களைப்பற்றி எழுதுவோர் ஒவ்வொரு சோவியத் செய்திப் பத்திரிகைக்கும் அதன் அளவையும், விநியோகத்தையும் பொறுத்து நூற்றுக் கணக்கில் இருக்கின்றனர்

எனலாம். அநேகமாக மக்கள் அனைவருமே முக்கிய பிரச்சினைகளை பத்திரிகைகளில் எழுப்பும் வாய்ப்பை எந்த முதலாளித்துவப் பத்திரிகையும் என்றும் வழங்கியதில்லை; இனி ஒருபோதும் வழங்கப் போவதுமில்லை.

சோவியத் பத்திரிகைகளுக்கு வரும் ஆசிரியருக்குக் கடிதங்களின் எண்ணிக்கையானது ஒரு பத்திரிகையும் அதன் வாசகர்களும் பரஸ்பரம் கொண்டுள்ள அக்கறைகளையும், அரசு விவகாரங்களில் மக்கள் உணர்வு பூர்வமாக முன்னின்று எடுத்துக்கொள்ளும் பங்கெடுப்பையும் மிகத்தெளிவாகப் பிரதிபலிக்கிறது. பிராவ்தாவுக்கு நாள்தோறும் ஆயிரத்துக்கும் அதிகமான கடிதங்கள் வருகின்றன. இஸ்வெஸ்தியா, த்ருத் ஆகிய பத்திரிகைகளுக்கும் கிட்டத்தட்ட இதே அளவு கடிதங்கள் வந்து குவிகின்றன. ஏனைய மத்திய பத்திரிகைகளுக்கும் தினசரி சராசரியாக 200-க்கும் அதிகமான கடிதங்கள் வருகின்றன. குடியரசுகளிலும், பிரதேசங்களிலும், பிராந்தியங்களிலும் பிரசுரிக்கப்படும் செய்திப் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் இதேபோல் நாள்தோறும் 180 கடிதங்கள் வரை பெறுகின்றன. ஒவ்வொரு வட்டார பத்திரிகைக்கும் தினமும் 10 முதல் 60 கடிதங்கள் வருகின்றன. ஆக, சோவியத் யூனியனில் வாசகர் கடிதங்களின் எண்ணிக்கை ஒரு நாளில் 2 லட்சத்தையும், ஒரு மாதத்தில் 60 லட்சத்தையும், வருடத்தில் 6 கோடி முதல் 7 கோடியையும் எட்டுகிறது.

வாசகர்கள் தமது பத்திரிகைகளுக்கு ஒரு குறிப்பிட்ட செய்தியை அல்லது நடப்பு நிகழ்ச்சிகளைப் பற்றிக் கருத்து தெரிவித்து எழுதுவதுடன் நின்றுவிடுவதில்லை. ஆசிரியருக்கு வரும் கடிதங்களில் ஒரு கணிசமான பகுதி ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் முன்னின்று தலையிடும்படியும், முக்கிய சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுவதற்கு முன்னிலும் செயலூக்கமிக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படியும் சம்பந்தப்பட்ட பத்திரிகையையும், நிறுவனங்களையும் தூண்டும் கடிதங்களைக் கொண்டதாக உள்ளது. சோஷலிச சமுதாயத்தின் சகல அரசியல் நிறுவனங்களுடனும் சோவியத் பத்திரிகைகள் பிரிக்க முடியாதபடி பிணைந்துள்ளன. அரசியல் மேற்கட்டுமானத்தின் ஓர் அமைப்பாக விளங்கும் பத்திரிகைகள் சமுதாயத்தை நிர்வகிப்பதில் உத்வேகமிக்க பங்காற்றுகின்றன. எனவே, பொருளாதார, கலாசார வளர்ச்சியில் நேரடியாக செல்வாக்கு செலுத்துவதற்கும், முக்கிய பிரச்சினைகளுக்கு தாமதமின்றி தீர்வு காணுவதற்கும், சமுதாயத்தை நிர்வகிக்கும் இயக்க நிகழ்வில் தனிநபர்களுக்கும், குழுக்களுக்கும், நிறுவனங்களுக்கும் இடையே உறவுகளை நிறுவி, அவற்றை மேம்படுத்துவதற்கும் பத்திரிகைகளை வாசகர்கள் ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

பத்திரிகைக்கும் அதன் வாசகர்களுக்கும் இடையே பல்வேறு விதமான ஒத்துழைப்பு வடிவங்கள் நிலவுகின்றன; அதேபோல்

பிரசுரிக்கப்படும் விஷயங்களில் வாசகர்களின் ஆர்வத்தைக் கிளர்த்தி விடும் முறைகளும் வேறுபடுகின்றன.

கடிதப் போக்குவரத்து மூலம் நடைபெறும் "பிராவ்தா" வாசகர் மாநாடு: கடிதப் போக்குவரத்து வாயிலாக ஏற்பாடு செய்யப்படும் வாசகர் மாநாட்டில் பங்கெடுத்துக்கொள்ளும்படி ஒவ்வோர் புத் தாண்டின்போதும் பிராவ்தா ஆசிரியர் குழு தனது வாசகர்களைக் கேட்டுக் கொள்வது இப்போது ஒரு பாரம்பரியமாகி விட்டது. பத்திரிகையில் வருகிற ஆண்டில் என்னென்ன அம்சங்கள் இடம்பெற வேண்டுமென விரும்புகிறார்கள் என்பதை எழுதும்படியும், பத்திரிகை யின் உள்ளடக்கத்தையும் அமைப்பையும் அபிவிருத்தி செய்வதற்குத் தமது கருத்துகளையும் யோசனைகளையும் தெரிவிக்கும்படியும் வாசகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இத்தகைய மாநாட்டினுல் கிட்டும் முக்கிய பலன்களை ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதம் இந்தப் பத்திரிகை வெளியிடுகிறது. உதாரண மாக, 1980 ஆம் ஆண்டில் பத்திரிகையின் வேண்டுகோளுக்கு இணங்க ஆயிரத்துக்கு மேற்பட்ட கடிதங்கள் ஆசிரியர் குழுவிடம் வந்து குவிந்தன. லெனின் கிராடு, நொவோசிபிர்ஸ்க், பிஸ்கோவ், மற்றும் இதர பிராந்தியங்களில் நடைபெற்ற வாசகர் மாநாடுகளிலும் பல அரிய யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. இதற்கு முன்னதாக பிராவ்தா வாசகர்களின் ஆர்வ விருப்பங்களையும், கோரிக்கைகளையும் பற்றி சமூகவியல் சர்வேக்கள் நடத்தப்பட்டன. இவை யாவும் பிராவ்தா ஆசிரியர் குழுவாலும், ஊழியர்களாலும் கவனமாகப் பரிசீலிக்கப் படுகின்றன; அடுத்த ஆண்டுக்கான பத்திரிகைத் திட்டங்கள் வகுக்கப் படும்போது இவை கணக்கிலெடுத்துக் கொள்ளப் படுகின்றன.

1980ஆம் ஆண்டில் பிராவ்தா பத்திரிகைக்கு 5,81,700 கடிதங்கள் வந்தன. உழைப்பாளி மக்கள் எழுதும் விஷயங்களை பத்திரிகை தனது ஒவ்வொரு இதழிலும் வெளியிடுகிறது. இந்த மீறவொண்ணு லெனினிய நெறியை, பாரம்பரியத்தை பிராவ்தா இடையருமல் வழுவாது, பிறழாது பின்பற்றி வருகிறது. "ஆசிரியருக்குக் கடிதங்கள்," "வாசகர்களுடன் கடிதப் போக்குவரத்து," "பிராவ்தா விமர்சனங் களுக்குப் பதில்கள்," "மக்கள் கண்காணிப்புப் பக்கம்," "ஒரு கடிதத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை," "எமக்கு வரும் கடிதங்கள் பற்றிய ஆய்வு" போன்ற விசேட பக்கங் களையும், பகுதிகளையும், மற்றும் வரப்பெறும் கடிதங்கள் குறித்த சர்வேக்களையும், விமர்சனங்களையும் பத்திரிகை தவருமல் வெளியிடு கிறது. வாசகர்கள் தெரிவிக்கும் தலைப்பு விஷயங்கள் பத்திரிகையின் சம்பந்தப்பட்ட பகுதிகளது பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படு கின்றன.

வாசகர்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கும், பத்திரிகை

நடத்தும் இயக்கங்களை மேலும் வலுப்படுத்துவதற்கும், கட்சி, தொழிற் சங்க, நிர்வாக அமைப்புகளுக்கு மக்கள் அனுப்பும் புகார்கள் மீது அவசியமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதற்கும் பிராவ்தா பின்கண்ட நிரந்தரப் பகுதிகளை வெளியிட்டு வருகிறது: "என்ன செய்யப்பட்டுள்ளது" "குறிப்பிட்ட விஷயம் குறித்து எத்தகைய நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?" "ஏற்கனவே பிரசுரிக்கப் பட்டதைத் திரும்பிப் பார்க்கிறோம்."

"இஸ்வெஸ்தியா" வாசகர் கவுன்சில்: இஸ்வெஸ்தியா ஆசிரியர்கள் ஆண்டுதோறும் தமது வாசகர் கவுன்சிலின் கூட்டத்தை நடத்துகின்றனர். கடந்த ஆண்டில் ஆசிரியர் குழு புரிந்துள்ள பணி இத்தகைய கட்டத்தில் விரிவாக மதிப்பீடு செய்யப்படுகிறது. வருகிற ஆண்டில் எத்தகைய புதிய விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும், பத்திரிகையின் நடவடிக்கைகளில் எத்தகைய புதிய திசைவழிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது பற்றி யோசனைகள் தெரிவிக்கப் படுகின்றன. முக்கியமாக, பத்திரிகையானது பணியின் பிரதான திசைவழிகள் குறித்தும், அதன் குறைபாடுகள் குறித்தும், பத்திரிகையில் எழுப்பப்பட வேண்டிய அவசர பிரச்சினைகள் குறித்தும் தமது கருத்துகளைத் தெரிவிக்கும்படி வாசகர்களை ஆசிரியர்குழு கேட்டுக் கொள்கிறது. இதன்படி கிடைக்கும் பதில்கள் முறையாகத் தொகுக்கப் பெற்று, அடுத்த ஆண்டுக்கான வழிகாட்டு நெறிகள் அடங்கிய ஒரு விசேட வெளியீட்டில் பிரசுரிக்கப்படுகின்றன.

எதிர்காலத் திட்டங்களை வகுப்பதிலும், பத்திரிகையில் பணி யாற்றுவோரும், அதில் பணியாற்ருதோரும் எழுதுவதற்கான விஷயங்களைத் தேர்ந்தெடுப்பதிலும் வாசகர்களின் வேண்டுகோள்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுகின்றன. பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் குறிப்பிட்ட விஷயங்களின், பத்திரிகை அவ்வப்போது நடத்தும் இயக்கங்களின் பயன்தன்மையை மதிப்பிடுவதற்கும் வாசகர்களின் இந்த யோசனைகளும், கருத்துகளும் முக்கியமானவை.

ஆக, ஆசிரியர் குழுவின் பணியில் வாசகர்களை ஈடுபடுத்துவதற்கும், பத்திரிகையின் கொள்கையை உருவாக்குவதில் ஆசிரியர்களுக்கு உதவுவதற்கும் இந்த வாசகர் கவுன்சில்கள் ஒரு கருவியாக விளங்குகின்றன. இவ்வாறு வாசகர்கள் பத்திரிகையின் சக ஆசிரியர்களாக மாறுகின்றனர் எனலாம். இதில்தான் பத்திரிகைப் பணியின் பிரதான முக்கியத்துவம் பொதிந்துள்ளது; தொழில் முறைப் பத்திரிகையாளர்களுக்கும் லட்சக்கணக்கான வாசகர்களுக்கும் இடையிலுள்ள பிணைப்புகளைப் பலப்படுத்துவதற்கு இது துணை புரிகிறது. ஆசிரியர் குழுவினர்க்கும் வாசகர்களுக்கும் இடையே உள்ள பரஸ்பர இணக்கத்தை வலுப்படுத்தவும், அவர்களிடையிலுள்ள உளப் பூர்வமான உறவுகளை வளர்க்கவும், பரஸ்பர உதவியை ஊக்குவிக்கவும், பத்திரிகையின் பணிக்கான பொது வழிகாட்டு நெறிகளின் கட்டுக்

கோப்புக்குள் செயலொற்றுமையை நிலைநாட்டவும் இந்த நேச உறவு வகை செய்கிறது.

**''காம்சொமால்ஸ்கயா பிராவ்தா''வின் கேள்விப் பட்டியல்:** இந்தக் கேள்விப் பட்டியல் வாசகர்களின் கருத்துகளைக் கண்டறிவதற்கு ஒரு நம்பகமான முறையாக அமைந்துள்ளது.

பல சோவியத் பத்திரிகைகள் இந்த முறையைக் கைக்கொள்கின்றன; பத்திரிகையின் கொள்கை பற்றியும், எதிர் காலத்தில் எத்தகைய விஷயங்கள் வெளியிடப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள் என்பது பற்றியும் வாசகர்களை அவை ஏராளமான கேள்விகள் கேட்கின்றன. 1980 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் **காம்சொமால்ஸ்கயா பிராவ்தா** தனது வழக்கமான அபிப்பிராய வாக்கெடுப்புகளில் ஒன்றை நடத்திற்று. அப்போது அது கேட்ட கேள்விகள் வருமாறு: அடுத்த ஆண்டு எந்தெந்த தலைப்புப் பொருள்களும், அம்சங்களும் தொடர்ந்து பிரசுரிக்கப்பட வேண்டும்? பல்வேறு துறைகளில் பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பத்திரிகை என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? எத்தகைய தார்மிகப் பிரச்சினைகள் விவாதிக்கப்பட வேண்டும்? நம் காலத்தைச் சேர்ந்த எப்படிப்பட்ட வீரர்களை **காம்சொமால்ஸ்கயா பிராவ்தாவில்** சித்திரிக்க வேண்டும்? வாசகர்களுடைய தந்தைமார்களின், பாட்டன்மார்களின் வீரச் செயல்களையும், அவர்களது சமாதானக் கால, யுத்தகால சாதனைகளையும் சிறப்பிப்பதற்கும், நாட்டின் வரலாற்றுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கும் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும்? நமது நாட்டின் இயற்கை எழிலையும் செல்வத்தையும் காப்பதற்கு நீங்கள் என்ன செய்து வருகிறீர்கள்? அயல்நாட்டு இளம் மக்களின் வாழ்க்கை மற்றும் போராட்டம் சம்பந்தப்பட்ட எத்தகைய பிரச்சினைகளில் நீங்கள் முக்கியமாக அக்கறை காட்டி வருகிறீர்கள்?

இந்தக் கேள்விகளுக்கு வாசகர்கள் அனுப்பிய பதில்கள் **காம்சொமால்ஸ்கயா பிராவ்தா** பத்திரிகையில் பல மாதக் காலம் தொடர்ந்து பிரசுரிக்கப்பட்டன; அடுத்த ஆண்டுக்கான பத்திரிகையின் திட்டங்களில் இவை குறிப்பிடத்தக்க பிரதிபலிப்பை ஏற்படுத்தின.

**''த்ரூத்'' தொழிலாளர் மாநாடு:** இந்தத் தொழிற்சங்கப் பத்திரிகையின் வாசகர்கள் நடப்புப் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்கான தேச வியாபகமான அரங்கு என இம்மாநாட்டினைக் கூறலாம். இத்தகைய விவாதம் தொடங்கியதற்கு ஒரு சுவையான பின்னணி உண்டு. ஐ. லொபனேவ் என்பவர் கோர்க்கி நகரைச் சேர்ந்த ஒரு கட்டிடத் தொழிலாளி. அவர் ''த்ரூத்'' பத்திரிகைக்கு கடிதம் ஒன்றை எழுதினார். எல்லா வேலைகளையும் ஒரே வேலைக் குழு செய்யும் ஒரு சிறந்த முறையை, சோவியத் யூனியனில் மிகத் துரிதமாகப் பரவி வந்த ஒரு முறையை சகல நிர்மாணத் தளங்களிலும்

நடைமுறைக்குக் கொண்டு வரலாம் என்று அவர் தன்னுடைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கடிதம் பிரசுரிக்கப் பட்டதைத் தொடர்ந்துதான் இப்படிப்பட்ட விவாதம் தொடங்கிற்று. கட்டிட நிர்மாணத் தளங்களிலேயே நடைபெற்ற கூட்டங்களில் இந்தப் பிரச்சினை குறித்து ஆயிரக்கணக்கான கட்டிடத் தொழிலாளிகள் விவாதித்தனர். யரோஸ்லாவல், வொரோனேஷ் பிராந்தியங்களில் மட்டுமே 250-க்கு மேற்பட்ட கூட்டங்கள் நடைபெற்றன; இவற்றில் மொத்தம் 9,932 பேர் பங்கெடுத்துக் கொண்டனர்; 1,029 பேர் பேசினர்; இந்த நல்ல முறையை நாடு முழுவதிலும் அமலாக்கு வதற்குக் குறுக்கே நிற்கும் முட்டுக்கட்டைகளை அகற்றுவதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றி 259 யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. இவ்வாறு தொழிலாளர் மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டோர் முன்வைத்த யோசனைகளை பத்திரிகை ஊழியர்கள் தொகுத்து, உரிய முடிவுகள் எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத்தின் மத்தியக் கமிட்டிக்கு அனுப்பி வைத்தனர்.

"உங்கள் வேலை நேரத்தில் ஒரு நிமிடத்தைக்கூட வீணாக்கா தீர்கள்." "த்ரூத்" பத்திரிகை ஏற்பாடு செய்த மற்றொரு தொழி லாளர் மாநாட்டில் விவாதிக்கப்பட்ட பொருள் இது. வி. போஸ்தினிக் கோவ் என்ற ஒரு தொழிலாளி எழுதிய கடிதம் பிரசுரிக்கப்பட்டதை ஒட்டியே இந்த மாநாடு கூட்டப்பட்டது. போஸ்தினிக்கோவ் மாஸ்கோவுக்கு அருகில் உள்ள எலெக்த்ரோஸ்தால் ஆலையில் பணி புரியும் ஓர் உருக்குத் தொழிலாளி; சோஷலிச உழைப்பு வீரர் விருது பெற்றவர்; சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் பிரதிநிதி; 16-வது தொழிற்சங்க காங்கிரசிலும் பிரதிநிதியாகக் கலந்து கொண்டவர். அவருடைய கடிதம் பிரசுரிக்கப்பட்ட ஒன்றரை மாத காலத்தில் "தொழிலாளர் மாநாடு" என்று குறிப்பிட்டு 500-க்கு மேற்பட்ட கடிதங்கள் வந்தன. இவற்றில் சுமார் 100 கடிதங்கள் பிரசுரிக்கப் பட்டன. இந்த மாநாட்டின் நடவடிக்கைகள் ஒவ்வொரு உழைப்புக் கூட்டமைப்பிலும் முக்கிய முடிவுகள் மேற்கொள்வதற்கு அடிப்படை யாக அமைந்தன.

1981 பிப்ரவரி—மார்ச்சில் நடைபெற்ற சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 26-வது காங்கிரசைத் தொடர்ந்து த்ரூத் பத்திரிகை ஒரு முக்கியமான கடிதத்தைப் பிரசுரித்தது. உக்ரைனைச் சேர்ந்த தொழிற் சங்க குழு அமைப்பாளர்களும், முன்னணி ஆலைத் தொழிலாளர் களும், கூட்டுப் பண்ணை விவசாயிகளும் சேர்ந்து எழுதிய கடிதம் இது. ஒரு தொழிற் சங்கக் குழுவில் ஒரு தொழிலாளி கூட பின்தங்கியிராத வகையில் பணியாற்றும்படி தொழிற் சங்க ஊழியர்களை அவர்கள் தமது கடிதத்தில் கேட்டுக் கொண்டனர். உக்ரைன் தொழிற் சங்க அமைப்பாளர்களின் இந்த அறைகூவலுக்கு நாட்டின் சகல பகுதி களையும் சேர்ந்த அவர்களுடைய சகாக்கள் பேராதரவு தெரிவித் தனர். இதனைத் தொடர்ந்து இந்தப் பத்திரிகை ஒரு புதிய பகுதியை

ஆரம்பித்தது. ''தொழிற்சங்கக் குழு அமைப்பாளர்களின் அகில யூனியன் கூட்டம்'' என்பது இப்பகுதியின் தலைப்பு. உழைப்பு கூட்டமைப்புகளின் வாழ்க்கையில் தொழிற்சங்கக் குழுக்களின் பங்கை எவ்வாறு உயர்த்துவது, வேலை நிலைமைகளை மேம்படுத்து வதிலும், உழைப்பின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதிலும் அவற்றின் பாத்திரத்தை எவ்வாறு அதிகப்படுத்துவது, உழைப்பாளி மக்களுக்கு சிறந்த வாழ்க்கை நிலைமைகளையும் ஓய்வு பொழுதுபோக்கு வசதி களையும் எவ்வாறு உத்தரவாதம் செய்வது, கல்விப் பணியை எவ்வாறு அபிவிருத்தி செய்வது ஆகிய விஷயங்கள் குறித்து தொழிற் சங்கங் களைச் சேர்ந்த செயலூக்கமிக்க தொழிலாளர்களும் கூட்டுப் பண்ணை விவசாயிகளும் இந்தப் பகுதியின் வாயிலாகத் தங்கள் கருத்துகளை வெளியிட முடியும். இந்தப் பகுதியில் பங்கெடுத்துக் கொள்பவர்கள் தொழிற் சங்கக் குழுக்களின் பங்கையும், செல்வாக்கையும் உயர்த்தும் நோக்கத்துடன் ஆக்க பூர்வமாக விமர்சனம் செய்கின்றனர்; உருப்படி யான யோசனைகள் தெரிவிக்கின்றனர்.

**நாடு தழுவிய காம்சொமால் கூட்டம்:** சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 26-வது காங்கிரஸ் நடைபெற்று முடிந்ததும் காம்சொமால் (இளம் கம்யூனிஸ்டுக் கழகம்) மத்தியக் கமிட்டி அனைத்துக் காம்சொமால் நிறுவனங்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்தது; ''சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 26-வது காங்கிரசின் முடிவுகளைச் செயல்படுத்த நாங்கள் சங்கற்பமேற்கிறோம்'' எனும் கோஷத்தின் அடிப்படையில் கூட்டங்கள் நடத்தும்படி அது கேட்டுக் கொண்டது. இந்தக் கூட்டங்களின் நடவடிக்கைகள் இளம் கம்யூனிஸ்டுக் கழகத்தின் பத்திரிகைகளில் விரிவாகப் பிரசுரிக்கப்பட்டன. நிர்மாணத் தளங்கள், ஆலைகள், கழனிகள், ஆய்வுக்கூடங்கள் எல்லைக் காவல் சாவடிகள் முதலிய பல்வேறு இடங்களில் இளம் மக்கள் கூடி பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர்; கம்யூனிச நிர்மாணத் தில் இளம் தலைமுறையினர் பங்கெடுத்துக் கொள்ளும் பல்வேறு முறைகளையும், மற்றும் இளைஞர்களிடம் சமூகக் கடமை உணர்வை ஊட்டுதல், சொற்களுக்கு செயல் வடிவம் அளித்தல், காம்சொமால் பணியின் தரத்தை உயர்த்துதல் போன்ற பிரச்சினைகளையும் பற்றித் தமது கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர். **காம்சொமால்ஸ்கயா பிராவ்தா** பத்திரிகை இந்த விவாதங்களின் முடிவுகளைத் தொகுத் துரைத்தது; புதிய கருத்துகளைப் பிரபலப்படுத்தியது; இந்த முக்கிய சமூக, அரசியல் இயக்கத்தை நடத்துவதில் தோன்றிய பலதரப்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியது.

பத்திரிகையில் பணியாற்றுமல் வெளியிலிருந்து பத்திரிகைக்கு எழுதுவோருடன் ஒத்துழைப்பது சோவியத் பத்திரிகைத் துறையின் நீண்ட நெடுங்காலப் பாரம்பரியங்களில் ஒன்று. தற்போது, ஏறத்தாழ எழுபது லட்சம் தொழிலாளர்களும், விவசாயிகளும் பத்திரிகை களுக்கு முறையாக எழுதி வருகின்றனர். முன்னணித் தொழிலாளர்

களும் விவசாயிகளும் மட்டுமன்றி, சோவியத் அறிவுத் துறையினரும் இவர்களில் அடங்குவர். தொழிலாளி வர்க்கத்தினரும், கிராமப் புறத்தினரும் பத்திரிகைகளுக்கு எழுதத் தொடங்கி 50 ஆண்டுகளுக்கு மேலாகின்றன; இந்த ஆண்டுகளில் பத்திரிகைகளுக்கும் அவற்றில் பணி புரியாமல் வெளியிலிருந்து எழுதுவோருக்கும் இடையே பயனுள்ள ஒத்துழைப்பு வளர்வதற்கு உறுதியான ஸ்தாபன வடிவங்களை சோவியத் பத்திரிகைத் துறை உருவாக்கியுள்ளது. ஒவ்வொரு ஐந்து தொழில் முறைப் பத்திரிகையாளர்களுக்கும் 500 அல்லது இன்னும் சொல்லப்போனால் 5000 தொழில் முறையல்லாத பத்திரிகையாளர்கள் வீதம் இருக்க வேண்டும் என்றார் லெனின். அவரது இந்தக் கருத்து இன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

அறுபதாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் பல பத்திரிகைகள் வெளியிலிருந்து எழுதுவோர் கொண்ட ஒரு நிரந்தரப் படையை அமைத்துக் கொண்டன. ஒவ்வொரு பத்திரிகையும் சொந்த வேலை முறைகளையும், பல்வேறு இடங்களில் அநேக தீவிர ஊழியர்களையும் பெற்றுள்ளது. வெளியிலிருந்து நிரந்தரமாக எழுதுவோர் நன்கு செயல்பட சாதகமான நிலைமைகளைத் தோற்று விப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நேரடியாகப் பத்திரிகையில் பணி புரியாமல் வெளியிலிருந்து இவ்விதம் விஷயதானம் செய்வோர் பத்திரிகைப் பணியில் பங்கெடுத்துக் கொள்ள இஸ்வெஸ்தியா ஆசிரியர் குழு விசேட விதிமுறைகளை வகுத்துள்ளது. நேரடிப் பத்திரிகை ஊழியரல்லாத நிருபர்களின் தேச வியாபகமான மாநாடுகள் அநேகம் நடைபெற்றுள்ளன. கடிதப் போக்குவரத்து மூலம் அவ்வப்போது ''உற்பத்திக் கூட்டங்கள்'' நடைபெறுவதற்கும் பத்திரிகை ஏற்பாடு செய்கிறது. இத்தகைய கூட்டங்கள் சம்பந்தமாக நேரடிப் பத்திரிகை ஊழியரல்லாத ஒவ்வொரு நிருபருக்கும் ஆசிரியர் அலுவலகத்திலிருந்து ஒரு விசேட வெளியீடு கிடைக்கிறது. அந்த நிருபரது சகாக்களின் பணி குறித்து இதில் அலசி ஆராயப் படுகிறது. இதுவல்லாமல், ஆசிரியர் அலுவலகம் தனது ஊழியரல்லாத நிருபர்களுக்கு தனது பல்வேறு பகுதிகளின் பணி குறித்தும், தனது எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் தகவல் வழங்குகிறது. ஊழியரல்லாத நிருபர்கள் தமது எழுத்து வன்மையையும், செய்திகளைத் தரும் திறமையையும் மேம்படுத்திக் கொள்வதற்கு இஸ்வெஸ்தியா அலுவலகத்தில் பயிற்சி பெறுகின்றனர். பல்வேறு போட்டிகளில் பங்கெடுத்துக் கொள்ளும்படி ஆண்டுதோறும் ஊழிய ரல்லாத நிருபர்கள் அழைக்கப்படுகின்றனர்.

பொது வாழ்வில் நடந்தேறும் பல பிரதான நிகழ்ச்சிகளுக்கு சோவியத் பத்திரிகைகளில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது; இந்த நிகழ்ச்சிகள் விரிவாகவும் துல்லியமாகவும் பிரசுரிக்கப் படுகின்றன. ஆலைகளுக்கு இடையேயும், வேலைக் குழுக்களுக்கு இடையேயும், தனிப்பட்ட தொழிலாளர்களுக்கு இடையேயும்

நடைபெறும் சோஷலிச உழைப்புப் போட்டி, ஒவ்வொரு உழைப்புக் கூட்டமைப்பிலும் தேசிய உற்பத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் உழைப்பின் மீது பொதுஜனக் கண்காணிப்பை கொண்டு வருதல், முக்கிய கட்சி, அரசாங்க தஸ்தாவேஜுகள் பற்றிப் பொது விவாதங்களுக்கு ஏற்பாடு செய்தல் ஆகியவற்றை இவ்வகையில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். கலாசாரப் புரட்சியிலும், முக்கியமாக எழுத்தறிவின்மையை ஒழித்துக்கட்டுவதிலும், உழைப்பை விஞ்ஞான ரீதியில் ஒழுங்கமைப்பதிலும், மிகுந்த சமூக, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இதர பல இயக்கங்களிலும் சோவியத் பத்திரிகைகள் கடந்த காலத்தில் மாபெரும் பங்காற்றியுள்ளன.

லெனினிய பாரம்பரியங்களை மிக உறுதியாகப் பின்பற்றும் சோவியத் பத்திரிகையாளர்கள் வெகுஜனங்களிடையே எல்லா வழிகளிலும் ஸ்தாபனப் பணியை மேம்படுத்துகின்றனர்; முன்னணித் தொழிலாளர்களின் கூட்டங்கள், மாநாடுகள் மிகச் சிறப்பாக உழைக்கும் தொழிலாளர் விழாக்கள், உயர் நிபுணர் களிடையே திறமைப் போட்டிகள் ஆகியவற்றை நடத்துவதன் மூலமும், நேரடியாக மேற்பார்வையிடும் பயணங்களை ஏற்பாடு செய்வதன் மூலமும், சோஷலிச உழைப்புப் போட்டியின் முடிவுகளை வெளியிடுவதன் மூலமும், பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து கூட்டங்களையும் மாநாடுகளையும் கூட்டுவதன் மூலமும் இதனை அவர்கள் செய்கின்றனர். பத்திரிகைகள் விமர்சிக்கும் பல்வேறு பிரச்சினைகளில் எங்கள் நாட்டு உழைப்பாளி மக்கள் எவ்வளவு மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர் என்பதை இவை போன்ற பணி முறைகள் பிரதிபலிக்கின்றன.

நாட்டின் பிரதான நிர்மாணத் திட்ட நிலையங்களில் தொழிலாளர்-நிருபர் பணிப் பிரிவு ஒன்று அமைக்கப்படுகிறது; ஒரு பத்திரிகையின் கொள்கையை அதன் ஊழியரல்லாத நிருபர்களின் முன்முயற்சியுடன் ஒருங்கிணைக்கும் மிகவும் பிரபலமான வடிவங்களில் ஒன்றாக இது விளங்குகிறது. முக்கிய நிர்மாணத் திட்ட நிலையங்களில் நடைபெறும் பணியைப் பற்றி நன்கு தெரிந்து கொள்வதற்கும், அங்கு புதிய தொழில் நுட்ப முறைகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதை விவரமாக அறிந்து கொள்வதற்கும் பத்திரிகை ஆசிரியர் களால் இத்தகைய பிரிவு நிறுவப்படுகிறது. உதாரணமாக, கொம்முனு எனும் பத்திரிகையில் "நொவோரோனெஸ்கயா அணுமின் நிலைய நிர்மாணம்" என்ற தலைப்பில் ஒரு புதிய பகுதி தொடங்கப்பட்டது; இந்தத் திட்ட நிலையம் பற்றி ஏராளமான செய்திகள் இப்பகுதியில் தொடர்ந்து வெளியிடப்பட்டன. அதுமட்டுமன்றி, இந்தப் பகுதி திட்ட இலக்குகளை இதுவரை சாதிக்கப்பட்டுள்ளவற்றுடன் ஒப்பிட்டுக் காட்டி, இந்தத் திட்ட நிலையம் வெற்றிகரமாகப் பூர்த்தி அடைவதற்கு உதவி செய்தது. ஓய்வுக்கும் பொழுது போக்குக்குமான பொருள்கள், வீட்டு உபயோகப் பண்டங்கள் ஆகியவற்றின்

உற்பத்தியையும், தரத்தையும், மற்றும் புதிய குடியிருப்புகள், சமூக, கலாசார வசதிகள் முதலியவற்றின் நிர்மாணத்தையும் தற்போது தொழிலாளர் நிருபர்களும், கிராமப்புற நிருபர்களும் மிக உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றன. ஒரு தொழிலாளர் நிருபர் பணிப் பிரிவில் பொதுவாக எல்லா மட்டங்களிலுமுள்ள உற்பத்தி நிர்வாகிகளும், கம்யூனிஸ்டுக் கட்சி ஊழியர்களும், காம்சொமால் ஊழியர்களும், பத்திரிகை ஊழியரல்லாத நிருபர்களும் இடம் பெற்றிருப்பது உண்டு. ஒரு நிர்மாணத் தளத்தில் பணி நடைபெறும் காலம் முழுவதிலும் இந்தப் பிரிவு செயல்படுகிறது; நிர்மாணம் பூர்த்தி அடைந்ததும் இந்தப் பிரிவும் தன் பணியை முடித்துக் கொள்கிறது.

அரசாங்கத் திட்டம் அல்லது ஒரு சோஷலிசப் பிரதிக்ஞை சரிவர நிறைவேற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு பல்வேறு பத்திரிகைளின் ஆசிரியர் குழுக்கள் தொழிலாளர்—நிருபர்களைக் கொண்டு நேரடி சோதனைகளுக்கு ஏற்பாடு செய்கின்றன. இது சம்பந்தமாக இங்கு சில உதாரணங்களைக் கூறலாம். சுவெர்த்லோவ்ஸ்கியிலிருந்து வெளிவரும் யூரல்ஸ்கி ரபோச்சி எனும் பத்திரிகை வரப்போகும் குளிர் காலத்திற்கு ஸ்தல பண்ணைகள் அவசியமான தயாரிப்புகளை செய்துள்ளனவா என்பதைத் தெரிந்து கொள்ள அவ்வப்போது இத்தகைய பல நேரடி சோதனைகளை நடத்துகிறது. இதே போல், ஆல்டாய்ஸ்கயா பிராவ்தா எனும் பத்திரிகையானது வாசகர்கள் தனது கவனத்திற்குக் கொண்டு வரும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள (பொதுஜனக் கண்காணிப்பாளர்களின் வழக்கமான சோதனைகள் தவிர) அடிக்கடி நேரடி சோதனைகள் நடத்த ஏற்பாடு செய்கின்றது.

ஐந்தாண்டுத் திட்டங்களின் பிரதான பொருளாதாரத் திட்ட நிலையங்களுக்கும், முக்கிய நிர்மாணத் திட்ட நிலையங்களுக்கும் தீவிர ஆதரவு அளிப்பது என்பது பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் பத்திரிகையாளர்களும், பத்திரிகை ஊழியரல்லாத நிருபர்களும் பங்கெடுத்துக் கொள்ளும் மிகவும் பயனுறுதியுடைய வடிவங்களில் ஒன்று எனலாம். ஆயிரம் கிலோமீட்டர் நீளமுள்ள பைகால்—அமூர் பிரதான ரயில் பாதை (பாம்), தலைசிறந்த அணுமின் நிலையமான அட்டாம்மாஷ், சயான்—ஷுசென்ஸ்கோயே நீர்மின் நிலையம், கான்ஸ்க்—அச்சின்ஸ்க் எரிபொருள், மின்விசைத் தொகுதி (காதெக்), ஓஸ்கோல் மின்-உலோகவியல் ஆலை, செபோக்சரி டிராக்டர் ஆலை புதிதாகக் கட்டப்பட்டு வரும் நிஸ்னேவர்தோவ்ஸ்க் நகர நிர்மாணத் தளம், சிக்திவ்கார் வெட்டுமரத் தொழில் தொகுதி, நீப்ரோபெத்ரோவ்ஸ்க் அறுவடைக் கம்பைன் ஆலை, புனர் நிர்மாணம் செய்யப்பட்டு வரும் கார்க்கோவ் மோட்டார் கார்—டிராக்டர் ஆலை ஆகியவற்றில் 11—வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1981-85) காம்சொமால்ஸ்கயா பிராவ்தா ஏராளமான நிருபர் பிரிவுகளை அமைத்

துள்ளது. நாட்டின் கரிசல் மண்ணல்லாத பிராந்தியங்களிலும், கஜாக்ஸ்தானில் செலிஞேகிராடு பிராந்தியத்திலும் பணியாற்றும் காம்சொமால் உறுப்பினர்களும், இதர இளம் மக்களும் அடங்கிய அநேக வேலைக் குழுக்களுக்கு இப்பத்திரிகையின் ஆசிரியர் குழு ''புரவலர் பொறுப்பை'' ஏற்றுள்ளது.

சயான்—ஷுசென்ஸ்கோயே நீர்மின் நிலைய நிர்மாணம் பற்றிய செய்திகளை கிராஸ்னோயார்ஸ்கி ரபோச்சி, கிராஸ்னோயார்ஸ்கி காம்சொமா லெத்ஸ், சோவெத்ஸ்கயா காகாசியா போன்ற ஸ்தல பத்திரிகைகள் விசேட முக்கியத்துவம் அளித்துப் பிரசுரம் செய்து வருகின்றன. இத்திட்ட நிலையம் இவ்வகை திட்ட நிலையங்களில் உலகிலேயே மிகப் பெரியதாகும். அண்மைக் காலம் வரை இப்பத்திரிகைகள் யாவும் கிராஸ்னோயார்ஸ்க் நீர்மின் நிலைய நிர்மாணப் பணி பற்றிய செய்திகளை விரிவாகப் பிரசுரித்து வந்தன என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. இந்தப் பத்திரிகைகள் சோஷலிச உழைப்புப் போட்டிகளை ஏற்பாடு செய்கின்றன; நிர்மாணப் பணி எவ்வாறு நடைபெறுகிறது என்பதை சரிபார்ப்பதற்கு பொதுஜனக் கண்காணிப்புக் குழுக்களை அமைக்கின்றன; நிர்மாணிகளுக்குத் தேவையான சேவை வசதிகளும், ஓய்வு பொழுதுபோக்கு வசதிகளும் கிட்டும்படியாகப் பார்த்துக் கொள்கின்றன. அது மட்டுமல்லாமல், நிர்மாணப் பணியின் முன்னேற்றம் குறித்து செய்தித் தாள்களையும், விசேட தகவல் வெளியீடுகளையும் இவை பிரசுரிக்கின்றன.

இளம் கவிஞர்கள், ஓவியர்கள், எழுத்தாளர்கள், இசைவாணர்கள், விரிவுரையாளர்கள் போன்றோரும் மற்றும் பிரசாரக் குழுவினரும் சயான்—ஷுசென்ஸ்கோயே நிர்மாணத் தளத்துக்குச் சென்று வருவதற்கு கிராஸ்னோயார்ஸ்கி காம்சொமாலெத்ஸ் பத்திரிகை ஏற்பாடு செய்கிறது. மேலும், காம்சொமால் கிளை நிறுவனங்கள் தமது பணியை மிகவும் திறமையோடு நிறைவேற்றுவதற்கு இந்தப் பத்திரிகை ஆலோசனை கூறியும் உதவுகிறது. இந்த நிர்மாணத் தளத்தில் ஒரு விசேட நிருபர் பிரிவையும் அது அமைத்துள்ளது.

சயான்—ஷுசென்ஸ்கோயே நீர்மின் நிலையத்துக்கு மட்டுமன்றி, பக்கத்து நகரமான அபாகனிலுள்ள ரயில் பெட்டி தயாரிப்பு ஆலைக்கும் சோவத்ஸ்கயா காகாசியா பத்திரிகை முழு ஆதரவு அளித்து வருகிறது. இந்த நிர்மாணத் தளத்தில் நிர்மாணிகளிடையே சோஷலிச உழைப்புப் போட்டியை நடத்துவதில் இப்பத்திரிகை முன்னின்று பங்கெடுத்துக் கொள்கிறது; இறுதி மதிப்பெண்களை நிர்ணயிப்பதில் நடுவராகவும் அது செயல்படுகிறது. தவிரவும், நிர்மாணிகள் ஒக்னி சயான் (சயான் மலைகளின் ஒளி விளக்குகள்) எனும் தமது சொந்தப் பத்திரிகையை நடத்துவதற்கும் சோவத்ஸ்கயா காகாசியா ஒத்தாசை புரிந்தது.

நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு பண்டங்களின் உற்பத்தியும் ஒரு பத்திரிகையின் காப்பாதரவுக்கு உள்ளாகலாம். உதாரணமாக, கிரோவ் ஆலேயில் நடைபெற்று வரும் கே-701 டிராக்டர் உற்பத்தியில் லெனின்கிராடு பத்திரிகையாளர்களும், அதே போல் யரோஸ்லாவிலுள்ள பல்வேறு தொழில் நிலேயங்களில் இந்த டிராக்டருக்கான இஞ்சினேத் தயாரிப்பதில் யரோஸ்லாவல் நகரப் பத்திரிகையாளர்களும் ஒரு கண் வைத்துள்ளனர். லெனின்கிராடு, யரோஸ்லாவல் ஆகிய இரு நகரங்களேயும் சேர்ந்த பத்திரிகையாளர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றபோது அவர்கள் தமது நடவடிக்கைகளே ஒருங்கிணேக்கத் தீர்மானித்தனர்; தமது அனுபவத்தைப் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டனர்; கூட்டாகப் பணியாற்ற ஒப்புக் கொண்டனர்.

ஒரே திட்ட நிலேயத்துக்கு பல பத்திரிகைகள் காப்பாதரவு அளிப்பது உண்டு. இதன் விளேவாய் விசேட இதழ்கள் கூட்டாக வெளியிடப்படுகின்றன. உதாரணமாக, **பாம்** நிர்மாணத் திட்ட நிலேயம் சம்பந்தமாக எழுந்த பல பிரச்சினேகள் சைபீரியாவையும் சோவியத் தொலேக் கிழக்கையும் சேர்ந்த ஆறு பத்திரிகைகள் கூட்டாக வெளியிட்ட ஓர் இதழின் உள்ளடக்கமாக அமைந்தன.

குர்ஸ்க் பிராந்தியப் பத்திரிகையாளர் நிறுவனம் ஸ்தல அணுமின் நிலேய நிர்மாணத்துக்குப் பேராதரவு அளித்தது. இவ்வகையில் **குர்ஸ்கயா பிராவ்தா** மகத்தான பணி புரிந்து வருகிறது. அது பத்திரிகை நிருபர் கூட்டங்களேயும், வட்டமேஜை விவாதங்களேயும் ஏற்பாடு செய்கிறது; அணுமின் நிலேயத்தின் பல்வேறு பகுதிகளே மேற்பார்வை இடுகிறது. இளம் தொழிலாளர் வேலேக் குழுக்களுக்கு இடையே சோஷலிச உழைப்புப் போட்டி ஒன்றையும் இப்பத்திரிகை நடத்திற்று.

பொருளாதார முடிவுகள் நிறைவேற்றப்படுவது சம்பந்தமாக பொதுஜனக் கண்காணிப்பை உத்தரவாதம் செய்வதை பத்திரிகைகளது ஸ்தாபனப் பணியின் ஒரு முக்கிய அம்சம் எனலாம். நேரடி மேற்பார்வைக் குழுக்களும், பொது மக்கள் விமர்சனங்களும் இந்தப் பணியின் மிகவும் பயனுறுதியுடைய வடிவங்களாகும். உற்பத்தி ஆற்றல்கள், பொருள்கள், தொழில் நுட்பம், எந்திரங்கள் ஆகியவற்றை கூடிய மட்டும் முழு அளவுக்குப் பயன்படுத்திக் கொள்வதை உறுதி செய்யும் பொருட்டு துலா பிராந்தியத்தில் ஓர் இயக்கம் நடைபெற்று வருகிறது. உற்பத்தி வளங்களே மதிப்பிடும் நோக்கத்துடன் துலாவில் உள்ள பிராந்தியக் கட்சிக் கமிட்டியின் அலுவலகமும், பிராந்தியத் தொழிற் சங்கக் கவுன்சிலும் ஓர் இயக்கத்தை மேற்கொண்டன. நொவோமோஸ்கோவ்ஸ்கோயே "அஸோத்" ஆலேத்தொகுதியிலுள்ள, கொம்முனர் எனும் பிராந்தியப் பத்திரிகையின் தொழிலாளர் நிருபர்கள் இந்த முடிவை ஒட்டி ஒரு முக்கிய முன்முயற்சியில் ஈடுபட்டனர். ஜிஸ்னும்யா கொம்முனிஸ்மா என்ற ஷிச்யோகினோ நகரப் பத்திரிகையின் தொழி

லாளர்-நிருபர்களுடன் சேர்ந்து அவர்கள் உற்பத்தியின் திறமையையும், பொதுவாக வேலையின் தரத்தையும் மேம்படுத்தும் நடவடிக்கைகளைக் கண்காணித்தனர். பிராந்திய பத்திரிகையாளர் நிறுவனத்தின் முடிவுக்கு இணங்க உள்ளூர் தொலைக்காட்சி நிலையமும், வானொலி நிலையமும், பிராந்தியத்தைச் சேர்ந்த இதர பத்திரிகைகளும் இந்த இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டன.

கலுகாவில் வெளியாகும் ஜினம்யா எனும் பத்திரிகையின் ஆசிரியர் குழுவினர் 11 ஆம் ஐந்தாண்டுத் திட்ட தொடக்கத்தில் தொழிலாளி வர்க்க மற்றும் கிராமப்புற நிருபர்களின் உதவியுடன் நேரடியாக மேற்பார்வையிடும் இயக்கத்தை ஆரம்பித்தனர். "திறமைக்கும் தரத்துக்கும் முதலிடம்" என்பதே அவர்களின் கோட்பாட்டு வாசகமாக இருந்தது. எல்லாத் தரப் பிரிவுகளையும் சேர்ந்த பல உற்பத்தி நிர்வாகிகளும், பொருளாதார நிபுணர்களும் இந்த இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தப் பத்திரிகையின் முன்முயற்சியை ஆதரித்த கலுகா பிராந்திய கட்சிக் கமிட்டி அலுவலகம் ஸ்தல கம்யூனிஸ்டுக் கட்சி அமைப்புகளும், அரசாங்க அமைப்புகளும் இந்த இயக்கத்தில் பங்கு கொள்வோருக்கு சகல உதவியும் புரியவேண்டும் என்றும், மேற்பார்வையிடும் குழுக்கள் செய்யும் விமர்சனங்களைச் செவிமடுத்துக் கேட்க வேண்டும் என்றும் யோசனை கூறிற்று.

"டாஸ்க் ஆபரேஷன்ஸ்" என அழைக்கப்படும் வெகுஜனக் கண்காணிப்பு இயக்கங்களுக்கு இளைஞர் பத்திரிகைகள் மிகுந்த பிரதானம் அளித்து வருகின்றன. உதாரணமாக, காம்சொமால்ஸ்கயா பிராவ்தா பத்திரிகையும், நாட்டிலுள்ள ஏனைய இளைஞர் பத்திரிகைகளும் "ஆபரேஷன் காதெக்" எனும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன. இதன்படி, இளம் மக்கள் பொறுப்பேற்று நிறைவேற்றி வரும் நிர்மாணத் திட்ட நிலையங்கள் தரும் ஆர்டர்களை சப்ளை ஆலைகள் எவ்வாறு பூர்த்தி செய்கின்றன என்பது பெரிய அளவில் கண்காணிக்கப்படுகிறது.

லவோவில் பிரசுரிக்கப்படும் லெனின்ஸ்கா மொலோத் எனும் உக்ரைன் பத்திரிகையைச் சேர்ந்த நிருபர்கள் "ஆபரேஷன் குவாலிட்டி" என்ற நடவடிக்கையை 1972 முதல் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடவடிக்கையின் நோக்கம் குற்றம் குறைகளை எடுத்துக்காட்டுவது மட்டுமே அல்ல, இதைவிட வாசகர்களுடன் சேர்ந்து உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துவதற்கும், வேலையில் காணப்படும் குறைபாடுகளுக்கான மூலகாரணத்தைக் கண்டுபிடிப்பதற்கும், நிபுணர்களின் உதவியுடன் அவற்றைக் களைவதற்குமான வழிதுறைகளைக் காணுவதே இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கம் என்பதை இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவினர் சுட்டிக் காட்டினர். இவ்வாறு, லவோவ் பிராந்தியத்திலுள்ள ஆலைகளின் உற்பத்திப் பொருள்களது தரத்தைக் கண்காணிப்பதற்கு ஒரு விரிவான திட்டத்தை அமல் செய்ய இந்தப் பத்திரிகை உதவி செய்தது.

வோல்கா நதியின் மத்திய தீரங்களில் அமைந்துள்ளது சின்னஞ் சிறு மாரி சுயாட்சிக் குடியரசு. இக்குடியரசைச் சேர்ந்த கம்யூனிஸ்டு களது அதிகார பூர்வமான பத்திரிகையான மாரிஸ்கயா பிராவ்தா சிறிது காலத்திற்கு முன்னர் ''மெதால்'' எனும் கண்காணிப்புப் பயணத்தை ஏற்பாடு செய்தது. வெட்டுமரத் தொழிலுக்கான எந்திரங்களைத் தயாரிக்கும் யோஷ்கார்-ஓலா ஆலையின் தொழி லாளர்கள் இந்தப் பத்திரிகையில் ஒரு கடிதம் எழுதினர்கள். ஒவ்வொரு தொழிலாளியும் உலோகத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று அதில் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்; இக்கடிதம் பிரசுரமானதைத் தொடர்ந்தே இந்தப் பயணமும், அதனை ஒட்டி ஓர் இயக்கமும் நடத்தப்பட்டன. மூலப்பொருள்களையும், முன்கூட்டியே தயாரிக்கப்படும் கட்டிட பாகங்களையும் சிக்கனமாகப் பயன்படுத்து வதில் யோஷ்கார் ஓலா தொழிலாளர்கள் ஈட்டிய அனுபவத்தை இந்தப் பத்திரிகை ஒரு கட்டுரையில் விவரித்திருந்தது. இக்கட்டுரைக்கு வாசகர்களிடையே மிகுந்த ஆதரவு கிட்டிற்று.

இப்பத்திரிகை ''கண்காணிப்பாளர்களுக்கு'' ஒரு தலைமைக் காரியாலயத்தை அமைத்தது; உத்தேசப் பயணத்திற்கான நிரலை தயாரித்து அளித்தது; பல்வேறு உற்பத்தி வகைகளின் விசேட இயல்பு களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு இதனைச் செய்தது. மாரி சுயாட்சிக் குடியரசைச் சேர்ந்த இதர சில பத்திரிகைளும் இந்த நடவடிக்கைக்கு ஆதரவு அளித்தன. மாரிஸ்கயா பிராவ்தா ஏற்பாடு செய்த இந்தப் பயணத்தில் மொத்தம் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். சுற்றுப் பயண முடிவில் இவர்கள் பத்திரிகை அலுவல கத்தில் கூடினர்; அங்கு நடைபெற்ற ஒரு வட்டமேசைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, கண்காணிப்புப் பயணத்தின் பலன்களையும், தாங்கள் கண்டுபிடித்த புதிய உற்பத்தி ஆற்றல்களையும் பற்றி விவாதித்தனர்.

சோவியத் யூனியனில் இதர எல்லா வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களை விடவும் பத்திரிகைகளே முன்னணியில் உள்ளன என்பதை சமூகவியல் ஆய்வுகள் காட்டுகின்றன. பல்வேறு வயதுப் பிரிவுகளையும், சமூகப் பிரிவுகளையும் சேர்ந்த ஏராளமான ஆடவரும் பெண்டிரும் பேட்டி காணப்பட்டனர். இவர்களில் அநேகமாக எல்லோருமே தவருமல் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பவர்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்ப்பவர்கள் என்பது தெரிய வந்தது. எனினும் பத்திரிகைகளே தாங்கள் தகவல் அறிந்து கொள்வதற்குப் பிரதான ஆதாரமாக இருக்கின்றன என்று இவர்களில் சுமார் 60 முதல் 80 சதத்தினர் கூறினர்.

பத்திரிகைகளை அரசியல் தகவல் பெறுவதற்கான பிரதான சாதன மாகக் கருதும் இந்தத் போக்கு சோஷலிச நாடுகளில் மட்டுமன்றி, வளரும் நாடுகள் உட்பட இதர பல நாடுகளிலும் பெரிதும் பரவி யுள்ளது என்று சமூகவியலாளர்கள் கூறுகின்றனர். எழுத்தறிவின்மை

மிகவும் பரவலாக உள்ள இளம் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் மக்கள் வானொலி மூலம் பல செய்திகளைத் தெரிந்து கொள்ளுகின்றனர். எனினும் இந்த நாடுகளில் கூட பத்திரிகைகளில் உறுதி செய்யப்படும் தகவலே வேறு எவ்வகையில் கிடைக்கும் தகவலை விடவும் பெரிதும் நம்பகமானது எனக் கருதப்படுகிறது.

மேலைய நாடுகளில் கூறப்படும் ஆருடங்களுக்கு மாறாக, ஒரு தகவல் சாதனம் என்ற முறையில் பத்திரிகைகள் தொடர்ந்து செயல் பட்டு வரும் என்பதற்கும், இனி நீண்ட காலம் வரை அச்சகங்கள் சோம்பிக் கிடக்க மாட்டா என்பதற்கும் இந்த உண்மையே போது மான சான்றாகும். இன்னும் 20 அல்லது 25 ஆண்டுகளில் பத்திரிகைகள் காலத்திற்கு ஒவ்வாதவையாகி விடும் என்றும், அவற்றின் இடத்தை ஒவ்வொரு இல்லத்திலும் தொலைக்காட்சித் திரை ஆக்கிரமித்துக் கொண்டு விடும் என்றும், மேலைய நாடுகளில் சில தத்துவ நிபுணர்கள் கூறி வருவது அனைவருக்கும் தெரிந்ததே.

கனடாவைச் சேர்ந்த மார்ஷல் மக்லுஹான் போன்றவர்கள் பிரசாரம் செய்து வரும் இத்தகைய கவைக்குதவாத கற்பனாவாதக் கருத்துகளை உண்மை நிலவரங்கள் வன்மையாக மறுதலிக்கின்றன. மார்க்சிஸ்டுகள் கூறுவது போல மனித குல வரலாறு வர்க்கப் போராட்டங்களின் வரலாறு அல்ல, அதற்கு மாறாக அது வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களின் வரவாறே ஆகும் என்று அவர் கூறுகிறார். பொதுவாக மின்னணுவியல் துறையில், குறிப்பாக தொலைக் காட்சி, வானொலி துறைகளில் ஏற்பட்டு வரும் இன்றைய மாபெரும் முன்னேற்றம் முடிவில் மனித குலத்தை வர்க்கப் போராட்டங்கள் இல்லாத, சமூகக் கொந்தளிப்புகள் இல்லாத ஓர் ஒளிமயமான எதிர்காலத்துக்கு இட்டுச் செல்லும் என்றும், அப்போது வர்க்க முரண்பாடுகளும், மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமையும், கொள்ளைக்காரத்தனமான யுத்தங்களும், மற்றும் முதலாளித்துவ அமைப்புக்கே உரிய இதர பல விரும்பத்தகாத சமூக சீர்கேடுகளும் மறைந்தொழியும் என்றும் மக்லுஹான் கருதுகிறார்.

இவை யாவற்றையும் சாதிப்பதற்கு மனிதகுலம் பழைய கிராமப் புற சமூக வாழ்க்கை முறைக்கு திரும்பிச் செல்ல வேண்டும், படிக்கும் அல்லது எழுதும் தொல்லை மக்களுக்கு இல்லாத ஒரு சமுதாயத்தைத் தோற்றுவிக்க வேண்டும், இத்தகைய சமுதாயத்தில் மக்கள் ஒலியின் மூலமும், உருவங்கள் மூலமும் மட்டுமே கருத்துகளை வெளியிடு வார்கள் என்பது அவரது வாதம்.

இத்தகைய அழுகுணி ஆருடங்கள் எத்தனை எத்தனையோ கூறப் பட்ட போதிலும், இன்றைய உலகில், அதிலும் குறிப்பாக சோஷலிச நாடுகளில் அச்சுப் பிரசுரங்களின் பரிமாணம் இடையறாது அதிகரித்து வந்துள்ளது.

தொலைக் காட்சி, வானொலி துறையில் ஏற்படும் தொழில் நுட்ப முன்னேற்றம் அச்சுத் தொழிலில் ஏதேனும் சில மாற்றங்கள் தோன்று வதைத் தடுத்து விடுகிறது என்று இதற்குப் பொருள் அல்ல. மாறாக, இத்துறையில் முன்னேற்றம் கண்டிருப்பதற்கான திட்டவட்டமான அறிகுறிகள் தென்படுகின்றன. வாரம் இரண்டு அல்லது மூன்று முறை கூடத் தோன்றும் வார வெளியீடுகள், பத்திரிகைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும், நாளேடுகளைவிட அவை அதிக பக்கங் களுடன் வெளிவருவதையும் இத்தகைய அறிகுறிகளில் ஒன்றாகச் கூறலாம். உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளை மின்னல் வேகத்தில் வெளியிடும் பணியை தொலைக் காட்சியும், வானொலியும் எடுத்துக் கொண்டு விட்டதே சஞ்சிகைகளின் இந்த வளர்ச்சிக்குப் பிரதான காரணம்.

பத்திரிகைகள் சில குறிப்பிட்ட விசேட இயல்புகளைப் பெற்றிருப் பதன் காரணமாக, சமூக வாழ்க்கையில் அவை செயலூக்க மிக்க பங்காற்றுகின்றன. பத்திரிகை என்பது தகவலை விரிவாகப் பரப்பும் ஒரு சாதனம். அது ஒரே இதழில் உள்ளடக்கத்திலும் வடிவத்திலும் மாறுபடக்கூடிய வெவ்வேறு வகையான விஷயங்களைத் தாங்கி வெளி வர முடியும். தொலைக்காட்சி, வானொலி நேயர்களைப் போலன்றி, வாசகர்கள் ஒரு பத்திரிகையை எந்த நேரத்திலும் திறந்து பார்க்க லாம்; அதில் தங்களுக்கு மிகவும் பிடித்தமானதைப் படிக்கலாம். ஒரு செய்திப் பத்திரிகை மிகவும் நம்பகமான தகவல் சாதனம். அது திரிபுகளை வெகுவாகக் குறைக்கிறது. செவியால் பெறப்படும் செய்தி களும், தகவல்களும் அப்படியல்ல; அவை பெரிதும் சிதைவதற்கு ஏதுவுண்டு (ஒரு வானொலி நிகழ்ச்சியைக் கேட்டு இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, அதில் என்ன கூறப்பட்டது என்பதை 50 சதவிகிதம் மக்கள்தான் ஓரளவு துல்லியமாகக் கூறமுடியும், புள்ளி விவரங்கள், தேதிகள், பெயர்கள் முதலியவற்றை பொறுத்தவரையில் ஞாபக சக்திக் குறைவு 60 அல்லது 70 சதவிகிதம் வரைகூட இருப்பது உண்டு). இந்தக் காரணத்தால், வதந்திகள், ஊர்ச் செய்தி போன்ற திரிபடைந்த தகவல் நபருக்கு நபர் இடையே யான தொடர்பு சாதனத்தை பல சந்தப்பங்களில் மாசுபடுத்துகிறது. இரைச்சல் போன்ற தொழில் நுட்பக் கோளாறுகளாலும் தகவல் கிட்டாது போகக்கூடும். இதற்கு மாறாக, அச்சிடப்பட்ட செய்தி இத்தகைய தகவல் இழப்புக்கு எதிராக கிட்டத்தட்ட முழு உத்தர வாதம் அளிக்கிறது.

செய்திப் பத்திரிகை பல வகைகளில் முக்கியமான ஒரு வெகு ஜன தகவல் தொடர்பு சாதனம். பத்திரிகையில் வெளியான ஒரு குறிப்பிட்ட செய்தியில் வாசகர்களுக்கு விசேட அக்கறை இருக்கக் கூடும். அத்தகைய செய்தியை எப்போது வேண்டுமானாலும் அவர் திரும்பிப் படிக்கலாம்; அதை தனது உறவினர்களுக்கும், நண்பர்களுக் கும், சகாக்களுக்கும் காட்டலாம். பல வாசகர்கள் தங்களுக்கு

மிகவும் பிடித்தமான சமாசாரம் அடங்கியதாகக் கருதும் பத்திரிகையின் சில குறிப்பிட்ட இதழ்களை நீண்டகாலம் பத்திரமாகப் பாதுகாத்து வருவதைக் காண்கிறோம். முப்பது சதவிகிதத்துக்குக் குறையாத வாசகர்கள் பத்திரிகைத் துணுக்குகளை சேகரித்து வைக்கும் பழக்கத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர். இவ்வகையில் பார்க்கும் போது, "ஒரு செய்திப் பத்திரிகையின் ஆயுள் ஒருநாள்தான்" எனும் பொதுக் கருத்து அவ்வளவு சரியானதல்ல என்பது புலனாகும்.

சோவியத் வானொலியையும் தொலைக் காட்சியையும் பற்றி இந்தப் பிரசுரத்தின் பிறிதொரு இடத்தில் விவரமாகக் கூறுவோம். எனினும், இவற்றின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுவது எவ்வகையிலும் நமது நோக்கமல்ல என்பதை இங்கு சுட்டிக் காட்டுவது அவசியம். சோவியத் யூனியனில் எல்லா வெகுஜன தகவல், செய்தித் தொடர்பு சாதனங்களும் ஒரே ஒன்றிணைந்த அமைப்பாக செயல்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைப்பு என்பது சித்தாந்தப் பணி சம்பந்தமான ஒரு விரிவான அணுகுமுறையின் உள்ளார்ந்த பகுதியாகும். பல்வேறு வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் பரஸ்பரம் ஒன்றன்மீது ஒன்று மிகவும் பயனுறுதியுடைய முறையில் செல்வாக்கு செலுத்துவதற்கும், அவற்றின் ஆற்றல்களை முழு அளவுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும் இது வகை செய்கிறது. மக்களின் சித்தாந்த, உழைப்பு, தார்மிக போதனையின் மிக முக்கியமான, தீர்மானமான அம்சங்கள்மீது கூட்டு முயற்சிகளை ஒருமுகப்படுத்துவதற்கும் இது துணை புரிகிறது.

தகவல், பிரசார சாதனங்களின் நடவடிக்கைகள் பல்வேறு வழிகளில், வெவ்வேறு மட்டங்களில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. ஒரு புறம், பத்திரிகைகள், வானொலி, தொலைக் காட்சி போன்ற பலதரப்பட்ட வெகுஜன தகவல், செய்தித் தொடர்பு சாதனங்களின் பணி ஒருங்கிணைக்கப்பட்டு வருகிறது. எல்லா வெகுஜன தகவல், செய்தி தொடர்பு அமைப்புகளும் ஏககாலத்தில் செய்யும்போது பிரசார இயக்கங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவையாக இருக்கின்றன என்பது நடைமுறையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. மறுபுறம், வெகுஜன தகவல், செய்தித் தொடர்பு சாதனங்களின் நடவடிக்கைகளை வெவ்வேறு மட்டங்களில், அதாவது மத்திய, குடியரசு, பிராந்திய மட்டங்களில் ஒருங்கிணைப்பதும் அவசியம்.

வெவ்வேறு வெகுஜனத் தகவல், செய்தித் தொடர்பு சாதனங்களின் பரஸ்பர செல்வாக்கைப் பொறுத்தவரையில், மேலைய நாடுகளில் ஒரு பரவலான கருத்தோட்டம் நிலவுகிறது. லூயி மெர்லின் எனும் பிரெஞ்சு சமூகவியலாளர்தான் இந்தக் கருத்தோட்டத்தை முன் வைத்தவர். ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி எப்பொழுது நடந்தேறியது என்பதை வானொலி தெரிவிக்க வேண்டும், அது எவ்வாறு நிகழ்ந்தது என்பதை தொலைக்காட்சி கூறவேண்டும், அது ஏன் நிகழ்ந்தது

என்பதை செய்திப் பத்திரிகை விளக்க வேண்டும். இதுவே லூயி மெர்லின் முன்வைத்த கருத்தோட்டம்.

இந்தப் பாணியானது அந்தந்த வெகுஜன தகவல், செய்தித் தொடர்பு சாதனங்களின் சில குறிப்பிட்ட பணிகளை ஓரளவுக்குப் பிரதிபலிக்கிறது என்பதில் ஐயமில்லை. இந்தப் பணிகள் அவற்றின் தொழில் நுட்ப சாத்தியக் கூறுகளிலிருந்து தோன்றுகின்றன; சம்பந்தப்பட்ட வெகுஜன தகவல், செய்தித் தொடர்பு சாதனங்கள் வழங்கும் எவ்வகையான தகவல்கள் நேயர்களை மனேதத்துவ ரீதியில் அதிகம் கவர்கின்றன என்பதைக் கொண்டு அவை தீர்மானிக் கப்படுகின்றன.

ரேடியோ ஒலிபரப்பு மற்ற இரு சாதனங்களையும்விட விரைவாக செயல்படுகிறது, உணர்ச்சி வேகமிக்கதாக இருக்கிறது; பத்திரிகை அதிக செய்தி விமர்சனத்தை வழங்குகிறது; எனினும் தொலைக் காட்சி தான் நேயர்களே பங்கெடுத்துக் கொள்ளும் உணர்வை ஏற்படுத்து கின்றது.

ஆனுல் மெர்லினது கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்வதற் கில்லை. நிகழ்ச்சிகள் பற்றிய பகுத்தாய்வை வானெலியும், தொலைக் காட்சியும் வழங்க முடியும் என்பதை மறுப்பது அவரது கருத்தின் பிரதான குறைபாடாகும். சுவையான தகவல்களை உடனுக்குடன் வழங்கும் ஒரு சாதனமாகவே இவற்றை மெர்லின் கருதுகிருர்; எனினும் செய்தி ஆய்வு என்பது பத்திரிகைகளின் ஏகபோகமாக இருக்க முடியாது.

சோவியத் யூனியனில், வானெலி, தொலைக்காட்சி நிலையங்கள் அளிக்கும் சமூக, அரசியல் நிகழ்ச்சிகளில் மக்கள் மேன்மேலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். பல்வேறு சமூக, அரசியல் விஷயங்கள் குறித்தும், தத்துவம், வரலாறு, பொருளாதாரம் குறித்தும் ஏற்பாடு செய்யப்படும் ஒலி, ஒளி பரப்புகள் மிகுந்த பிரபலம் பெற்று வருகின்றன.

* * *

சோவியத் தரப்பிலிருந்து அல்லாமல், மேலைய முதலாளித்துவ நாடுகளில் ஒருதலைப்பட்சு மனேபாவம் கொண்ட ஆசிரியர்கள் எழுதுபவற்றிலிருந்து சோவியத் பத்திரிகைகள் பற்றி இதுவரை தெரிந்திருக்கும் நமது வாசகர்களில் சிலருக்கு இந்தப் பிரசுரம் வியப்பூட்டுவதாக இருக்கலாம். சோவியத் பத்திரிகைகள் ''கவர்ச்சி யற்றவை'' என்றும், ''சலிப்பூட்டுபவை'' என்றும், ''முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டவை'' என்றும் மேலைய நாடுகளில் வருணிக்கப் படுகிறது. அப்படியானுல் சோவியத் பத்திரிகைகளை உருவாக்குவதில் லட்சக் கணக்கானேர் பங்கெடுத்துக் கொள்வது எப்படி சாத்திய மாகிறது? எல்லோரும் ஒரே மாதிரியாக நினைக்க முடியுமா? விவாதிப்பதற்கு அல்லது விமர்சனம் செய்வதற்கு எதுவுமே இல்லா திருப்பது சாத்தியமா?

இது சாத்தியமல்ல என்பதை சோவியத் வாசகர்கள் அறிவார்கள்; சோவியத் பத்திரிகைகளில் சர்ச்சைக்கும், விமர்சனத்திற்குமுரிய விஷயங்கள் நிறைய வெளிவருகின்றன என்பதை அவர்கள் அறிவார்கள்; அவை பல சமயங்களில் கட்சி நிர்வாகிகளேயும், அரசாங்க அமைச்சர்களேயும், திட்ட நிறுவனங்களேயும் கடுமையாக விமர்சிக்கின்றன என்பதை அவர்கள் அறிவார்கள்; அற்ப விஷயங்கள் குறித்து அல்லாமல், முக்கிய பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் குறித்து, தார்மிகப் பிரச்சினைகள் குறித்து, கலாசாரம், சட்டம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து தமது பத்திரிகைகளில் விவாதங்கள் நடைபெறுகின்றன என்பதை அவர்கள் அறிவார்கள்; இவை கவைக்குதவாத வெட்டிப் பேச்சுகள் அல்ல என்பதையும், மாருக இவை உண்மையையும், யதார்த்த நிலவரத்தையும் தெரிந்து கொள்வதற்கான, சரியான முடிவுகள் எடுப்பதற்கான ஓர் ஆக்க பூர்வமான முயற்சி என்பதையும் அவர்கள் அறிவார்கள். மிக உயர்ந்த கட்சி, அரசாங்க மட்டத்தில் எடுக்கப்படும் பல முடிவுகள் பத்திரிகை களின் முன் முயற்சியால் நடைபெறும் முழு நிறைவான விவாதங்களே அடிப்படையாகக் கொண்டவை ஆகும்.

சோவியத் பத்திரிகைகள் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டவை; சுவாரஸ்யமும் ஜீவனுமற்றவை என்று கூச்சநாச்சமின்றி எழுதும் மேலேய நாடுகளிலுள்ள இதே ஆசிரியர்கள் சோவியத் பத்திரிகைகளில் அடங்கியுள்ள விஷயங்களே விரிவாகப் பயன்படுத்திக் கொள்கிருர்கள். அவற்றிலுள்ள எதிர்மறையான அம்சங்களேத் தங்களுக்கே உரித்தான முறையில் உபயோகித்துக் கொள்கிருர்கள். எங்கள் பத்திரிகைகள் ஒரு சர்க்கார் அதிகாரியைக் கண்டிக்கும்போது, குறைபாடுகளேக் களேந்து நிலேமையை சரிசெய்ய வேண்டும் எனும் நோக்கத்தோடு ஆக்கபூர்வமான முறையில் இதனேச் செய்கின்றன. ஆனல் இதற்கு மாருக சோவியத் எதிர்ப்பு ஆசிரியர் சோவியத் அமைப்பை இழிவு படுத்த வேண்டும் எனும் ஒரே குறிக்கோளாடு இதே விஷயத்தை முன் வைக்கிருர்.

சோவியத் பத்திரிகைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்வதற்கு, ஒருவர் தவருமல் சோவியத் பத்திரிகைகளே படிக்க வேண்டும்; அவற்றில் பிரசுரமாகியுள்ள விஷயங்களே சோவியத் மக்களின் வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக இதனே ஒவ்வொரும் செய்வதில்லே. மேலும், அனேவருமே இதனேச் செய்ய விரும்புகிருர்கள் என்றும் கூற முடியாது.

சோவியத் மக்கள் தங்கள் பத்திரிகைகள் தவறே இழைக்காதவை என்று கருதுவதில்லே. அவை முன்னிலும் உத்வேகமிக்கவையாக, சுவையானவையாக இருக்க வேண்டும், முன்னேவிட மின்னல் வேகத்தில் செய்திகளே வழங்க வேண்டும் என்று அவர்கள் விரும்பு கிருர்கள். அவை எப்போதும்போல் மக்களின் நலன்களுக்கு உண்மை யானவையாகவும், விசுவாசமானவையாகவும் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் விரும்புகின்றனர்.

# வெகுஜன தகவல் சாதனங்களும் சர்வதேச உறவுகளும்*

சர்வதேச தகவல் பரிமாற்றம் அண்மை ஆண்டுகளில் குறிப்பிடத் தக்க அளவு தீவிரமடைந்துள்ளது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. பொதுவாக சமூக, அரசியல், கலாசார வாழ்க்கை என்றையும் விட அதிக உத்வேகம் பெற்றிருப்பதையும், சித்தாந்தப் போராட்டம் தீவிரமும் சிக்கலும் அடைந்திருப்பதையும், சர்வதேச அரங்கில் பல புதிய சுதந்திர அரசுகள் உதித்தெழுந்திருப்பதையும் இவ்வகையில் முக்கியமாக குறிப்பிட வேண்டும். இந்த இயக்க நிகழ்வில் விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றம் ஒரு முக்கிய பங்காற்றுகிறது. ''தகவல் புரட்சி'' என்று இந்த முன்னேற்றம் அழைக்கப்படுகிறது. இன்று உலகில் சுமார் 40 கோடி தொலைக்காட்சி பெட்டிகளும், 25,000 வானொலி நிலையங்களும், 100 கோடி வானொலிப் பெட்டிகளும், நூற்றுக்கு மேற்பட்ட தந்தி செய்தி நிறுவனங்களும் உள்ளன; மொத்தம் கோடிக் கணக்கான பிரதிகள் விற்பனையுள்ள ஆயிரக் கணக்கான செய்திப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகின்றன.

இன்று விரிவாகப் பரப்பப்படும் தகவலின் உள்ளடக்கம் மேன் மேலும் முக்கியத்துவம் பெற்று வருகிறது; அது சமாதானம், பரஸ்பர நல்லிணக்கம் எனும் லட்சியத்தை, சமூக, தேசிய சுதந்திரத்தை வளர்க்கிறதா? அல்லது பதற்றத்தை அதிகப்படுத்தி, ஆயுத உற்பத்திப் போட்டியைத் தூண்டி, லட்சக்கணக்கான மக்களை ஆன்மிக ரீதியில் அடிமைப்படுத்துகிறதா?

உலகில் தகவலைப் பரப்புவது சம்பந்தமான பெரும்பாலான சர்வதேசக் கூட்டங்களில் நடைபெறும் விவாதங்களில் இந்தக் கேள்வியே பிரதானமாக இடம் பெறுவதைப் பார்க்கிறோம். வியன்னா, ஸ்டாக்ஹோம், பிளாரன்ஸ், வார்சா முதலிய நகரங்களில் நடை பெற்ற பல பத்திரிகையாளர் மாநாடுகளிலும், 1976-ல் நெய்ரோபி யிலும், 1978-ல் பாரிசிலும், 1980-ல் பெல்கிரேடிலும் கூடிய

*யுனேஸ்கோவுக்கான சோவியத் யூனியன் கமிஷனின் நிர்வாக செய லாளரான யூரி காஷ்லெவ் இந்த அத்தியாயத்தை எழுதியுள்ளார்

யுனெஸ்கோ பொது மாநாட்டின் மூன்று கூட்டத் தொடர்களிலும் இந்த அத்தியாயத்தை எழுதிய ஆசிரியர் அண்மை ஆண்டுகளில் பங்கெடுத்துக் கொண்டுள்ளார்; ஆசிய நாடுகளது அரசாங்கங்களின் சார்பில் கோலாலம்பூரில் வெகுஜன தகவல் சாதனங்கள் பற்றி நடைபெற்ற முதலாவது மாநாட்டிலும் இந்த ஆசிரியர் கலந்து கொண்டு, இப்பிரச்சினை குறித்து பல அயல்நாட்டுப் பத்திரிகையாளர்களுடன் விவாதித்தார். இத்துறையில் இரண்டு முரண்பட்ட அணுகுமுறைகள் நிலவுகின்றன என்பதை இக் கூட்டங்களும் உரையாடல்களும் காட்டியுள்ளன. இவற்றில் ஒன்று சோஷலிச நாடுகளும் வளரும் நாடுகளும் பின்பற்றும் அணுகுமுறை; மற்றொன்று ஏகாதிபத்திய நாடுகள் கடைப்பிடிக்கும் அணுகுமுறை.

## பெரும்பாலான நாடுகளின் ஆக்கபூர்வமான கொள்கை வழி

சர்வதேச செய்திப் போக்குவரத்துத் துறையில் மேன்மேலும் காணப்பட்டுவரும் தொழில் நுட்ப முன்னேற்றத்தை தார்மிக, அரசியல் நிலைமையை மேம்படுத்துவதற்கும், சமாதானத்தையும் பரஸ்பர இணக்கத்தையும் வலுப்படுத்துவதற்கும் பயன்படுத்த வேண்டும்; ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கும் சமூக, அரசியல் முன்னேற்றத்தைத் தீவிரப்படுத்துவதற்கும் உபயோகிக்க வேண்டும். இதுவே சோஷலிச நாடுகளதும், பல வளரும் நாடுகளதும் அணுகுமுறையாக இருந்து வருகிறது.

வேறுபட்ட அரசியல் அமைப்புகளைக் கொண்ட நாடுகளிடையேயான உறவுகளைப் பொறுத்த வரையில் இந்த அணுகுமுறை எதைக் குறிக்கிறது? சித்தாந்த சீர்குலைவுக்கு முடிவுகட்ட வேண்டும் என்பதையும், இதர தேசங்களை அறிவுத்துறையில் அடிமைப்படுத்துவதற்கும் அவற்றின் விவகாரங்களில் தலையிடுவதற்கும் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவதை நிராகரிக்க வேண்டும் என்பதையும் இது குறிக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அரசுகள் தகவலைப் பரப்புவது சம்பந்தப்பட்ட தமது நடவடிக்கைகளில், சர்வதேச உறவுகளுக்கும் சர்வதேச சட்டங்களுக்கும் பல ஆண்டுகளாகவே அடிப்படையாக இருந்து வந்துள்ள கோட்பாடுகளையும், ஐ. நா. சாசனம், ஹெல்சிங்கியில் நடைபெற்ற ஐரோப்பிய பந்தோபஸ்து, ஒத்துழைப்பு மாநாட்டின் இறுதித் தீர்மானம் போன்ற அகில உலக தஸ்தாவேஜுகளையும் தமக்கு வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும்.

எனினும், சித்தாந்தப் போராட்டம் எதுவும் நடைபெறக் கூடாது என்று இதற்குப் பொருள் அல்ல. இத்தகைய போராட்டம் தொடர்ந்து நடைபெற்றே தீரும்; ஏனென்றால் இது ஓர் எதார்த்தமான இயக்க நிகழ்வு. ஆனால் எதிர்காலத்தில் மனோதத்துவப் போராட்டத்தின் விளைவுகளிலிருந்து தகவல்துறை விடுவிக்கப்பட

வேண்டும்; அவதூறு பிரசாரம் செய்வதற்கு அது பயன்படுத்தப்படக் கூடாது.

இந்தக் கொள்கை வழியைப் பின்பற்றும் சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிச நாடுகளும் நேசபூர்வமான சர்வதேச உறவு களை வளர்ப்பதற்கு வகை செய்யக்கூடிய தகவல் துறை சம்பந்தப் பட்ட நியதிகளையும், கோட்பாடுகளையும் வகுத்து செயல்படுத்து வதற்கு பாடுபட்டு வருகின்றன. இந்த நாடுகளின் முன்முயற்சியின் பேரில் ஐக்கிய நாடுகள் சபையின் கட்டுக்கோப்புக்குள் ஏற்கெனவே பல தஸ்தாவேஜுகள் ஏற்கப் பட்டுள்ளன. அவை போர்வெறிப் பிரசாரத்தையும், நிறவெறியையும், காலனியாதிக்கத்தையும் கண்டிக் கின்றன; நல்லிணக்கத்தையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பதற்கு வெகு ஜன தகவல், செய்தித் தொடர்பு சாதனத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று வற்புறுத்துகின்றன. விண்வெளி செயற்கைத் துணைக்கோள்களை நேரடித் தொலைக்காட்சி ஒளிபரப்புக்குப் பயன்படுத்துவது சம்பந்த மான கோட்பாடுகள் குறித்து சோவியத் யூனியன் சமர்ப்பித்த ஒரு நகல் ஒப்பந்தத்தை கடந்த சில ஆண்டுகளாக ஐ. நா. அமைப்புகள் பரிசீலனை செய்து வருகின்றன. இந்தப் பிரச்சினை ஐக்கிய நாடுகள் சபையின் பரிசீலனைக்குக் கொண்டு வரப்பட்டதற்குக் காரணம் உண்டு; ஆரம்பம் முதலே இந்தப் புதுவகையான விண்வெளி செய்திப் போக்குவரத்துத் தொழில் நுட்பம் சமாதானத்தையும் தேசங் களிடையே நட்புறவையும் பலப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே இந்தப் பிரச்சினை ஐ. நா.வின் பரிசீலனைக்குக் கொண்டுவரப்பட்டது. சமாதானத்தையும் சர்வதேச இணக்கத்தையும் பலப்படுத்துவதற்கும், மனித உரிமைகளை வளர்ப் பதற்கும், நிறவெறி, இன ஒதுக்கல், போர் வெறியைத் தூண்டுதல் போன்ற சீர்கேடுகளை எதிர்ப்பதற்கும் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் பங்காற்றுவது சம்பந்தப்பட்ட அடிப்படைக் கோட்பாடுகள் குறித்த ஒரு பிரகடனத்தை 1978-ல் யுனெஸ்கோ ஏற்றது. இந்தப் பிரகடனத்தை சோவியத் யூனியனும் சமர்ப்பித்தது இது பற்றிப் பின்னர் கூறுவோம்.

ஐரோப்பிய பந்தோபஸ்து, ஒத்துழைப்பு மாநாட்டின் இறுதித் தீர்மானத்தில் தகவல் துறை பிரச்சினை பற்றி அடங்கியுள்ள ஷரத்து களுக்கு சோவியத் பத்திரிகையாளர்கள் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றனர். சோஷலிச நாடுகளின் முன்முயற்சியின் பேரில் சில முக்கிய ஷரத்துகள் இந்தத் தீர்மானத்தில் சேர்க்கப்பட்டன என்பது இங்கு நினைவு கூரத்தக்கதாகும். கலாசார மற்றும் தகவல் பரிமாற்றமும் ஒத்துழைப்பும் ''மக்களிடையே சமாதானத்தையும் இணக்கத்தையும் பலப்படுத்துவதற்கும், மனிதனது அகப்பண்பின் ஆன்மிக செழுமைக்கும் துணை புரிய வேண்டும், இந்த மாநாட்டில் பங்கெடுத்துக் கொள்ளும் நாடுகளிடையேயான உறவுகளுக்கு அடிப்படையாக உள்ள கோட்பாடுகளுக்கு அதாவது பரிபூரண

சமத்துவம், பிற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமை, இதர அரசுகளின் சமூக அமைப்பை மதித்தல் எனும் கோட்பாடுகளுக்கு மதிப்பு அளிக்கும் வகையில் இந்த ஒத்துழைப்பு அமைந்திருக்க வேண்டும்'' என்று இந்த ஷரத்துகள் கூறுகின்றன.

சர்வதேச அரங்கில் சோவியத் யூனியன் முன் வைக்கும் கோட்பாடுகளின், நியதிகளின் அடிப்படையிலேயே சோவியத் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் எப்பொழுதுமே செயல்பட்டு வந்துள்ளன; எந்த ஒரு தேசத்திற்கும் எதிராக அவை ஒருபோதும் பகைமைப் போக்கைக் கடைப்பிடித்ததில்லை; அதன் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட முயன்றதில்லை; தேசங்களுக்கும் அவற்றின் அரசு அல்லது பொது வாழ்வுப் பிரமுகர்களுக்கும் எத்தகைய அவமதிப்பும் காட்டியதில்லை. இதே பாதையையே சோவியத் பத்திரிகையாளர்களும் என்றும் பின்பற்றி வந்துள்ளனர். சோவியத் யூனியனில் யுத்த வெறிப் பிரசாரம் தடை செய்யப் பட்டுள்ளது என்பதையும், வருண இன அல்லது தேசிய இன பகைமையை, துவேஷத்தைத் தூண்டுவது சட்டப்படி தண்டிக்கப் படத்தக்க குற்றமாக்கப்பட்டுள்ளது என்பதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

மாஸ்கோ ரேடியோ டஜன் கணக்கான மொழிகளில் ஒலி பரப்பு கிறது. வெளிநாடுகளிலுள்ள வானொலி நேயர்களிடமிருந்து இந்த ரேடியோவுக்கு ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான கடிதங்கள் வருகின்றன. சோஷலிசம் குறித்து நம்பகமான தகவல் பெறுவதற்கும், சமாதானத்தையும் சர்வதேச இணக்கத்தையும் வளர்க்கும் தகவலை ஈட்டுவதற்கும் அயல்நாடுகளிலுள்ள மக்கள் எவ்வளவு ஆர்வமாக உள்ளனர் என்பதை இது காட்டுகிறது.

மேலைய நாடுகளில் இருக்கும் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களில் கணிசமானவை முற்றிலும் வேறுபட்ட, சமயங்களில் நேரெதிரான குறிக்கோள்களுக்கு சேவை செய்கின்றன. அண்மை ஆண்டுகளில் கம்யூனிச எதிர்ப்புப் பிரசாரம் தீவிரமடைந் துள்ளது; பதற்றத் தணிவு கொள்கை மீதும், ஹெல்சிங்கி மாநாட்டு இறுதித் தீர்மானத்தின் மீதும் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இந்தத் தீர்மானம் பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் பிரசுரிக்கப்படவே இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பிரசாரத்தை அமெரிக்க அயல்துறைக் கொள்கையின் ''முக்கிய அம்சமாக'' முன்னாள் ஜனாதிபதி ஜேம்ஸ் கார்ட்டர் பிரகடனம் செய்தார். அவரது நிர்வாகத்தின்போது அமெரிக்கப் பிரசார எந்திரம் புனரமைக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டது. யு எஸ் ஐ ஏ வுக்குப் பதில் சர்வதேச செய்திப் போக்குவரத்து நிறுவனம் (ஐ சி ஏ) தோன்றிற்று. இந்த நிறுவனத்தில் 8,900 பேர் பணி புரிகின்றனர். ஆண்டுதோறும் ஏறத்தாழ 50 கோடி டாலர் செலவிடப்படுகிறது. சோஷலிச நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் ஒலிபரப்பக் கூடிய

புதிய ரேடியோ நிலையங்களைக் கட்டும் பணி தொடங்கிற்று; ''மனித உரிமைகளைப் பாதுகாப்பது'' எனும் படாடோபமான கோஷத்தின் பேரால் இந்த நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடும் ஒரு பரந்த இயக்கம் கட்டவிழ்த்துவிடப் பட்டது; சோவியத் அபாயம் எனும் பூச்சாண்டி மீண்டும் கிளப்பிவிடப்பட்டது.

ரீகன் நிர்வாகத்தில் சோவியத் எதிர்ப்பு வெறி மேலும் முடுக்கி விடப்பட்டுள்ளது; சோவியத் ஆதரவுடன் எங்கும் ''சர்வதேச பயங்கரவாதம்'' தலைவிரித்தாடுவதாக விஷமப் பிரசாரம் செய்யப் பட்டு வருகிறது. சர்வதேச நிலைமையை மிகவும் மோசமாக்கும், ''மனோதத்துவ யுத்தத்தை''க் கிளர்த்தி விடும் ஒரு கொள்கை திட்ட மிட்டு கடைப்பிடிக்கப்படுகிறது.

மேலைய சமுதாயத்தில் ஏகபோக மூலதனத்துக்குச் சொந்தமான வெகுஜன செய்திப் போக்குவரத்து சாதனங்கள் மிகவும் பிற்போக்கான சக்திகளின் கரங்களில் மேன்மேலும் குவிந்து வருகின்றன; அவை கம்யூனிச எதிர்ப்பு வெறியைப் பரப்பி வருகின்றன. அவை ராணுவ-தொழில் துறைத் தொகுதியின் நிர்ப்பந்தத்துக்குக் கீழ்ப்படிந்து செயல்படுகின்றன; கம்யூனிச எதிர்ப்பு நிறுவனங்களாலும், உளவுத் துறை நிறுவனங்களாலும் விரிவாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. சோஷலிச நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் எதிராக சித்தாந்தத் துறையில் மேலைய நாடுகளின் சீர்குலைவு நடவடிக்கைகள் இப்போது மேன்மேலும் மாவோயிசப் பிரசாரத்துடன் கைகோத்துக் கொண்டு வருகின்றன. ''மனோதத்துவப் போர்'' நடவடிக்கைகள் நேட்டோவின் கட்டுக் கோப்புக்குள் கவனமாக ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன.

மொத்தத்தில், மேற்கத்திய பிரசார எந்திரம் இன்னும் ''கெடு பிடிப்போர்'' நோக்கியே திருப்பிவிடப் பட்டுள்ளது. தவிரவும், சித்தாந்த, பிரசாரத் துறையில் பதற்ற நிலையை மோசமாக்குவதற்கு இடையறாது மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் நோக்கம் தெள்ளத் தெளிவானது: ஆயுத உற்பத்திப் போட்டியைத் தொடர்ந்து நடத்தும் ஏகாதிபத்தியக் கொள்கையை, ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், லத்தீன் அமெரிக்காவிலும் முற்போக்கு இயக்க நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்தும் ஏகாதிபத்தியக் கொள்கையை பிரசாரத் திரையிட்டு மூடி மறைப்பதே இதன் நோக்கம். இதற்கு எத்தனையோ உதாரணங்களைக் கூறலாம். பிற்போக்கான அமெரிக்க வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் எவ்வளவு மூர்க்க வெறியோடு சால்ட்-2 ஒப்பந்தத்தைத் தாக்கின என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும். இதன் விளைவாய், இந்த ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்வது கடந்த பல ஆண்டுகளாகவே தாமதமாகி வருகிறது.

எல் சால்வடாரில் உள்ள பாசிஸ்டு எதிர்ப்பு ஆட்சிக்கு ரீகன் நிர்வாகம் பகிரங்க ஆதரவு அளித்து வருவதை நியாயப்படுத்த இந்த

சாதனங்கள் எவ்வாறு பிரசாரம் செய்து வருகின்றன என்பதையும், "சர்வதேச பயங்கரவாதம்" என்று கூப்பாடு போட்டு இவை அந்த நாட்டில் அமெரிக்கா நடத்திவரும் படுபயங்கரச் செயல்களிலிருந்து உலக கவனத்தை எவ்வாறு திசை திருப்ப முயன்று வருகின்றன என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியம். இதற்கிடையே புது வகையான ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன; இதன் மூலம் ராணுவ-தொழில் துறை அதிபர்கள் கோடிக்கணக்கான டாலர் கொள்ளை அடித்துள்ளனர். ஐய்ரேயில் நேட்டோ துருப்புகள் மேற்கொண்ட அட்டூழிய நடவடிக்கைகளை மூடிமறைப்பதற்கு எவ்வாறு புளுகுணிப் பிரசாரம் பயன்படுத்தப்பட்டது என்பதையும், எதியோப்பியாவுக்கு எதிராக ஆக்கிரமிப்பில் ஈடுபடும்படி எவ்வாறு மேலைய பிரசாரம் சோமாலியாவைத் தூண்டி ஊக்குவித்தது என்பதையும், ஆப்கனிஸ்தானிலும் ஈரானிலும் நிகழ்ந்தேறிய புரட்சிகர மாற்றங்கள் சம்பந்தமாக அது எவ்வாறு பகிரங்க பகைமைப் போக்கைக் கடைப்பிடித்தது என்பதையும் இங்கு நினைவு கூற வேண்டும்.

சமாதானத்தையும் முன்னேற்றத்தையும் வளர்ப்பதற்கு சர்வதேச உறவுகளில் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவது சம்பந்தமான நியதிகளையும் கோட்பாடுகளையும் வகுக்க சோஷலிச நாடுகளும் பல வளரும் நாடுகளும் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் எவ்வளவு சரியானவை, அவசியமானவை என்பதை இவை யாவும் ஊர்ஜிதம் செய்கின்றன.

## வளரும் நாடுகளின் நியாயமான கோரிக்கை

"தகவல் துறையில் ஏகாதிபத்திய ஆதிக்கம்" நிலவுவது சர்வதேச அளவில் தகவலைப் பரப்புவதில் பிரதான பங்காற்றுகிறது என்று கூறினார் பின்லந்து ஜனாதிபதி உர்ஹோ கெக்கோனன். எனவே தான் கடந்த சில ஆண்டுகளில் எல்லா சர்வதேச அரங்குகளிலும் இது விவாதிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட பத்திரிகையாளர் கூட்டங்கள் அனைத்திலும், அதே போல் யுனெஸ்கோவிலும் இது காரசாரமான விவாதத்திற்குரிய விஷயமாக இருந்து வந்திருக்கிறது.

இந்தப் போக்கின் சாராம்சம் யாது? புதிதாக சுதந்திரம் அடைந்த நாடுகளில் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் போதிய அளவில் வளர்ச்சி அடையாத நிலைமையை ஏகாதிபத்திய அரசுகள் பயன்படுத்திக் கொண்டு, அங்கு பரந்த அளவில் சித்தாந்த விஸ்தரிப்பை நடத்தி வருகின்றன. பொதுவாக சர்வதேச நிகழ்ச்சிப் போக்குகளைத் திரித்துக் கூறக்கூடிய, சோஷலிச நாடுகளிலும் வளரும் நாடுகளிலும் நடந்தேறும் நிகழ்ச்சிகளைத் தவறுகப் படம் பிடித்துக்

காட்டக்கூடிய தகவலை அவை ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் மீது திணிக்கின்றன. முதலாளித்துவக் கருத்துக்களைப் பிரபலப்படுத்துவதும், மேற்கத்திய வாழ்க்கை முறையை தலைமீது தூக்கிவைத்துக் கொண்டாடுவதும், முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாப்பதும், சோஷலிச உலகை இழிவுப்படுத்துவதுமே பிற நாடுகளில் மேற்கத்திய பிரசுரங்களைப் பரப்புவதன் பிரதான நோக்கம்என்று லண்டன் பைனான்ஷியல் டைம்ஸ் பத்திரிகை பட்டவர்த்தனமாக ஒப்புக் கொள்கிறது. அசோஸியேட்டட் பிரஸ், தி யுனைட்டெட் பிரஸ் இன்டர் நேஷனல், ராய்ட்டர், பிரான்ஸ்—பிரெஸ்ஸே ஆகிய மேலைய நாடுகளின் நான்கு மிகப் பெரிய செய்தி நிறுவனங்கள் நாள்தோறும் ஏறத்தாழ 4,50,00,000 சொற்களை 110 நாடுகளுக்கு அனுப்புகின்றன. உதாரணமாக, லத்தீன் அமெரிக்காவில் பத்திரிகைகளுக்குக் கிட்டும் தகவல்களில் 70 சதவிகிதத்தை யு பி ஐ, ஏ பி ஆகிய அமெரிக்க செய்தி நிறுவனங்களே வழங்குகின்றன. அமெரிக்கத் திரைப்படத் துறைக்கு அயல் நாடுகளில் சுமார் 700 அலுவலகங்கள் உள்ளன; அவற்றில் 16,000 பேர் பணியாற்றுகின்றனர்; சோஷலிச நாடுகள் அல்லாத பிற நாடுகளில் திரைப்பட நேரத்தில் பாதிக்கும் அதிகமானதை ஆக்கிரமித்துக் கொள்ளும் திரைப்படங்களை அமெரிக்க நிறுவனங்கள் தயாரிக்கின்றன. தொலைக்காட்சி உலகிலும் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்துகிறது. அதன் 161 நிறுவனங்கள் ஆண்டுதோறும் அயல்நாடுகளில் 2,00,000 மணி தொலைக்காட்சி நேரத்தை கபளீகரம் செய்து கொள்கின்றன, பிரிட்டன் சுமார் 30,000 மணி நேரத்தை எடுத்துக் கொள்கிறது. இதற்கு அடுத்தபடியாக பிரான்சும், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசும், ஜப்பானும் வருகின்றன. மொத்தத்தில், முதலாளித்துவ நாடுகளிலிருந்து வளரும் நாடுகளுக்கு மடை திறந்து விட்டதுபோல் செல்லும் தகவல்களின் பரிமாணம், வளரும் நாடுகளிலிருந்து முதலாளித்துவ நாடுகளுக்குச் செல்லும் தகவல்களின் பரிமாணத்தைப் போல் பல மடங்கு அதிகம்.

எனவேதான், "தகவல் துறையில் நிலவும் ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு" முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், அதாவது அயல்நாட்டு செய்தி நிறுவனங்களும், வானொலி, தொலைக்காட்சி நிலையங்களும் அளவுக்கு மீறி வழங்கும் தகவல்களுக்கு முடிவு கட்டவேண்டும், தாம் தமது சொந்த தகவல் அமைப்புகளை நிறுவிக் கொள்வதற்கும், தமது பத்திரிகையாளர்களைப் பயிற்றுவிப்பதற்கும் உதவி செய்யவேண்டும் என்று ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் முற்றிலும் நியாயமான கோரிக்கையை முன்வைத்து வருகின்றன. தகவல் பரப்புத் துறையில் சர்வதேச நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் நியாயமான, ஜனநாயக பூர்வமான கோட்பாடுகளை வகுப்பது அவசியம், நாடுகளின் அரசுரிமையையும் சமத்துவத்தையும் மதிக்கும் கோட்பாடுகளின் அடிப்படையிலும், சமாதானத்தையும் சமூக முன்னேற்றத்தையும் மக்களின் தேசிய சுதந்திரத்தையும் மேம்படுத்துவதற்கு வெகுஜன

தகவல், செய்தி தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தும் அடிப்படையிலும் இவை அமைந்திருக்க வேண்டும் என்று சோஷலிச நாடுகள் கூறிவரும் கருத்தை அவை வரவேற்கின்றன.

1976-ல் அநேக வளரும் நாடுகள் சேர்ந்து கூட்டுச் சேரா செய்தி நிறுவன கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டன. பிரபல இந்தியப் பத்திரிகையாளரான டி. ஆர். மன்கேகர் இந்தக் கூட்டமைப்பின் தலைவர். வளரும் நாடுகளில் ஆண்டுதோறும் 25 மொழிகளில் 50 லட்சம் பிரதிகள் பிரசார நூல்களை அமெரிக்கப் பதிப்பகங்களும் இதர பதிப்பகங்களும் வெளியிட சர்வதேச செய்திப் போக்குவரத்து நிறுவனம் உதவி புரிந்துள்ளது என்று அவர் கூறினார். இதனை அவர் ''கலாசார ஏகாதிபத்தியம்'' என்று வருணித்தார். ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் இந்தக் ''கலாசார ஏகாதிபத்தியம்'' ஏராளமான நாடுகளில் தனது வலையை விரித்துள்ளது.

கூட்டுச் சேரா நாடுகளிடையே செய்திப் பரிமாற்றத்தை அதிகரிப்பதே இந்தக் கூட்டமைப்பின் பணி. தொழில் நுட்ப ரீதியிலும், அரசியல் ரீதியிலும் எண்ணற்ற இடையூறுகள் எதிர்ப்பட்ட போதிலும், கூட்டமைப்பின் நடவடிக்கைகள் விரிவடைந்து வருகின்றன. சோவியத் யூனியனதும் இதர சோஷலிச நாடுகளதும் செய்தி நிறுவனங்கள் இந்தக் கூட்டமைப்பின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கை ஆதரிக்கின்றன; வளரும் நாடுகளுடன் சமத்துவ அடிப்படையில் ஒத்துழைப்பை தொடர்ந்து விஸ்தரித்து வருகின்றன. சோஷலிசக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகளின் கூட்டுறவுடன்தான் வளரும் நாடுகள் "தகவல் துறையில் நிலவும் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை" எதிர்த்துப் போராட முடியும், இத்துறையில் அவை சுதந்திரத்தை எய்த முடியும், சர்வதேச வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமாக விளங்கும் தகவல் பரிமாற்றத்தில் தமது பங்கை அதிகப்படுத்த முடியும் என்பது வெள்ளிடைமலை.

அதே சமயம் சில கூட்டுச்சேரா நாடுகளின் போக்கில் ஓரளவு முரண்பாடு காணப்படுகிறது. சோஷலிச நாடுகளது வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களுக்கும், முதலாளித்துவ நாடுகளது தகவல், செய்தி தொடர்பு சாதனங்களுக்கும் இடையே உள்ள அடிப்படை வேறுபாட்டை அவை புரிந்து கொள்ளத் தவறி விடுகின்றன. "வடக்கு" என்றும், ''தெற்கு'' என்றும், "பணக்கார நாடுகள்'', "ஏழை நாடுகள்'' என்றும் உலகம் பிரிந்துள்ளது என்ற தவறான அனுமானத்தின் அடிப்படையில் அவை செயல்படுகின்றன. ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போராட்டத்தில் தமது இயல்பான கூட்டாளியாக விளங்கும் சோஷலிசக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகளிடமிருந்து வளரும் நாடுகளைத் தனிமைப்படுத்த தம்மால் முடிந்த அனைத்தையும் செய்து வருவோர்க்குத்தான் இத்தகைய போக்குகள் பலனளிக்கும். ஆகவே, இதனால் வளரும் நாடுகளின் நிலைகள் பலவீன

மடைகின்றன; அவை வகுத்துக் கொண்டுள்ள இலக்குகளை எய்து வதற்கு தடங்கல் ஏற்படுகிறது.

தகவல் துறையில் நிலவும் ''காலனியாதிக்கத்தை'' ஒழித்துக் கட்டுவதற்கு வளரும் நாடுகள் செய்யும் முயற்சிகளின் பால் ஏகாதிபத்திய நாடுகள் காட்டும் மனோபாவத்தை இதற்கு மற்று மொரு சான்றாகக் கூறலாம். கூட்டுச்சேரா செய்தி நிறுவன கூட்டமைப்பு நிறுவப்படுவது சம்பந்தமாக தமக்குள்ள வெறுப்பையும் துவேஷத்தையும் மேலைய நாடுகள் எவ்வகையிலும் மூடி மறைக்க வில்லை. ஆனால் இந்த அமைப்பு உருவாவதைத் தடுக்க முடியாத நிலைமையில், மேலைய ஏகபோக தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் வேறொரு உத்தி முறையைக் கையாள்கின்றன: வளரும் நாடுகளது மலர்ந்து வரும் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களுக்குள் ஊடுருவவும், தாராளமாக தொழில் நுட்ப, நிதி உதவி அளிப்பதாக ஆசை காட்டி அந்தக் கூட்டமைப்பின் காலனி எதிர்ப்பு அஸ்திவாரத் தைத் தகர்த்திடவும், சோஷலிச நாடுகளின் வெகுஜன தகவல் செய்தி தொடர்பு சாதனங்களுக்கும் வளரும் நாடுகளின் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களுக்கும் இடையே ஒத்துழைப்பு வளராதபடி தடுப்பதற்கும் அவை சகல முயற்சியும் செய்து வருகின்றன.

இந்தக் கூட்டமைப்பு நிறுவப்பட்ட பிறகு அமெரிக்கப் பத்திரி கைகள் ஒன்று சேர்ந்து பத்திரிகை சுதந்திரத்திற்கான கமிட்டி எனும் ஓர் அமைப்பை ஏற்படுத்தின. பிரபல அமெரிக்க செய்தி நிறுவனங்களின் தொலைக்காட்சி நிறுவனங்களின் இயக்குநர்களும், யு எஸ் ஐ ஏவின் முன்னாள்இயக்குநரும், மற்றும் அமெரிக்கத் தகவல் துறைத் தொழிலைச் சேர்ந்த இதர பல பழம்பெரும் பெருச்சாளிகளும் இந்தக் கமிட்டியில் இடம் பெற்றனர். இந்தக் கமிட்டி வகுத்துக் கொண்ட குறிக்கோள்கள் யாவை? வளரும் நாடுகளைச் சேர்ந்த எந்த வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் ''பத்திரிகை சுதந்திரம்'' பற்றிய மேலைய கண்ணோட்டத்தை ஆதரிக்கின்றனவோ, தமது சொந்த அரசாங்கங் களைக் கண்டிக்கின்றனவோ, வளரும் நாடுகளிலுள்ள எந்த வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் தகவல் பரப்புத் துறையில் மேற்கத்திய செய்தி நிறுவனங்களதும், பன்னாட்டு செய்தி நிறுவனங் களதும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான கோட்பாடு களையும் விதிகளையும் வகுப்பதற்கு சர்வதேச நிறுவனங்கள் முன் வைத்துள்ள யோசனையை எதிர்த்து மேலைய நாடுகள் நடத்தி வரும் இயக்கத்தில் அவற்றின் பக்கம் நிற்கின்றனவோ அந்த வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களுக்கு தாராள ''உதவி'' அளிப்பதாக கமிட்டி வாக்குறுதி அளித்தது. அதே சமயம், அமெரிக்காவில் பல்வேறு ஆராய்ச்சிப் படிப்புகளில் பங்கெடுத்துக் கொள்ளும்படியும், அந்த நாட்டில் சுற்றுப் பயணம் செய்யும்படியும் வளரும் நாடுகளைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான பத்திரிகையாளர்

களுக்கு அழைப்பு விடுத்து, அவர்களை மூளைச் சலவை செய்வதிலும் கமிட்டி ஈடுபட்டது.

வளரும் நாடுகளிலுள்ள ஏகாதிபத்திய ஏஜண்டுகள், கைக் கூலிகள் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். 1978-ல் அமெரிக்காவின் நிதி உதவியுடன் ஜொஹன்னஸ்பர்கில் "குளோபல் பிரஸ் இன்டர்நேஷனல்" எனும் ஒரு சர்வதேச செய்தி நிறுவனம் அமைக்கப்பட்டது. தென்னுப்பிரிக்கக் குடியரசு, சிலி, தென்கொரியா, கௌதமாலா, தைவான் முதலான நாடுகளிலிருந்து முடை நாற்ற மெடுத்த பிரசார சரக்கைப் பரப்புவதே இதன் நோக்கம். ஏறத்தாழ இதே சமயம், சவுதி அராபியா, எகிப்து, அமெரிக்கா ஆகிய நாடு களின் செய்தி நிறுவனங்களது கட்டுக்கோப்புக்குள் "பத்திரிகை சுதந்திரத்திற்காகவும் தகவல் சுதந்திரத்துக்காகவும்" எனும் ஒரு சர்வதேச நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. "கம்யூனிசத் தையும் நாத்திகவாதத்தையும் எதிர்த்து, அடிப்படை சமய, தார்மிக மதிப்புகளுக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் போராடு வதே" தனது குறிக்கோள் என்று இந்த நிறுவனம் அறிவித்தது. இந்த நோக்கங்களுக்காக 200 கோடி டாலர் ஒதுக்கப்பட்டது. எனினும் பணத்தைக் கையாடி துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு தொடுக்கப்பட்ட ஒரு கிரிமினல் வழக்கில் 1978 இறுதியில் இந்த "நிறுவனத்தின்" தலைவர்கள் நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நிற்க வேண்டியதாயிற்று. 1978-ல் எம் இ என் என்ற எகிப்திய செய்தி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் கெய்ரோவில் ஒரு சர்வதேச மாநாட்டை அமெரிக்கா கூட்டிற்று; சோஷலிச நாடுகளைத் தவிர்த்து, முதலாளித்துவ நாடுகளதும், வளரும் நாடு களதும், "பன்னுட்டு செய்தி நிறுவனக் கூட்டமைப்பு" ஒன்றை நிறுவும் திட்டத்தை இந்த மாநாட்டில் அது முன்வைத்தது.

இவை யாவும் காட்டுவது என்ன? அமெரிக்காவின் தலைமையி லுள்ள ஏகாதிபத்திய நாடுகள் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களையும் பிரசார எந்திரத்தையும் ஒன்றுடன் ஒன்று மிகவும் நெருக்கமாக சம்பந்தப்பட்ட இரண்டு திசை வழிகளில் விரிவாகப் பயன்படுத்த விரும்புகின்றன; அதாவது ஒருபுறம், உலக சோஷலிசத் துக்கும் அது கடைப்பிடித்துவரும் பதற்றத் தணிவுக் கொள்கைக்கும் எதிராகவும், இன்னொரு புறம், சித்தாந்தத் துறையில் சுதந்திரத்திற் காகப் பாடுபட்டு வரும் வளரும் நாடுகளுக்கு எதிராகவும் பயன்படுத்த விரும்புகின்றன என்பதை இவை தெள்ளத் தெளிவாகப் புலப்படுத்து கின்றன.

ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த எல்லாப் பத்திரிகையாளர்களுமே இந்த மூளைச் சலவைக்கு இலக்காகி விட்டார்கள் என்று கூற முடியாது. மேலைய நாடுகளில் பரிபூரண "பத்திரிகை சுதந்திரம்" நிலவுகிறது, வளரும் நாடுகள் விஷயத்தில் ஏகாதிபத்தியம் "நேர்மையான நோக்கங்களையே" கொண்டுள்ளது

என்றெல்லாம் வாய் இனிக்கப் பேசி இன்று மக்களை எளிதாக ஏமாற்றிவிட முடியாது. முதலாளித்துவ அமைப்பில் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் ஒரு சில ஏகபோகங்களின் கைகளில் குவிந்துள்ளன என்பதையும், அவை ஏகாதிபத்திய உளவுத் துறை அமைப்புகளுடன் ஒத்துழைத்து வருகின்றன என்பதையும், பல ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு எதிராக அவை இரகசியமாக சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றன என்பதையும் இன்று உலக மக்கள் நன்கு அறிவார்கள்.

பல காரணங்களால் மேலைய சூதுவாது சூழ்ச்சிகளை உணர்ந்து கொள்ளத் தவறிவிட்ட சில வளரும் நாடுகளும், வெகுஜன செய்திப் போக்குவரத்துத் துறையில் உதவி வழங்கப்படும் என்ற வாக்குறுதி கண்டு மயங்கிப் போன சில வளரும் நாடுகளும் விரைவிலேயே ஏகாதிபத்தியத்தின் சுயரூபத்தைத் தெரிந்து கொள்ளும்; நிபந்தனைகள் ஏதுமில்லாமல் ஏகாதிபத்தியம் ஒருபோதும் உதவி அளிக்காது என்பதையும், அவ்விதம் ஏதேனும் உதவி கிட்டினால் அது பொருளாதார, கலாசார அடிமைத்தனத்துக்கே இட்டுச் செல்லும் என்பதையும் இந்த நாடுகள் அறிந்து கொள்ளும்.

## யுனெஸ்கோவின் பாத்திரம்

கல்வி, விஞ்ஞானம், கலாசாரம் ஆகிய துறைகளில் யுனெஸ்கோ பாடுபட்டு வருகிறது; இதுவே இந்நிறுவனத்துக்கு இப்பெயர் சூட்டப்பட்டதற்குக் காரணம். இதுவல்லாமல், இந்நிறுவனம் வெகுஜன செய்திப் போக்குவரத்துத் துறையிலும் முக்கியமாக செயல்பட்டு வருகிறது. ஆகவே, யுனெஸ்கோவின் விதி முறைகளில் குறிப்பிடப்பட்டிருப்பது போல், பல்வேறு வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் வாயிலாக தேசங்களிடையே பரஸ்பர இணக்கத்தை வளர்ப்பது அதன் பணிகளில் ஒன்றாக இருப்பது தற்செயலானதல்ல. ''யுத்தங்கள் மனிதர்களின் மனங்களில் ஆரம்பமாவதால் மனிதர்களின் அந்த மனங்களில்தான் சமாதானத்தைப் பாதுகாக்கும் எண்ணம் தோன்றி வலுப்பட வேண்டும்'' என்றும் அதன் விதிமுறை வலியுறுத்துகிறது.

யுனெஸ்கோ தனது விதிமுறைக்கு இணங்க தகவலின் உள்ளடக்கத்தில் செயலூக்கமுடனும், பயனுறுதியுடனும், காரிய நோக்கோடும் அக்கறை கொள்வதை உத்தரவாதம் செய்வதற்கு சோவியத் யூனியனும் சோஷலிசக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஏனைய நாடுகளும் எப்பொழுதுமே பெரு முயற்சி எடுத்து வந்துள்ளன. இந்த நாடுகளின் முன் முயற்சியின் பேரில்தான் யுனெஸ்கோவின் பொது மாநாடும், அரசாங்கங்களுக்கு இடையேயான இதர மாநாடுகளும் சமாதானத்தையும் தேசங்களிடையே இணக்கத்தையும் வளர்ப்பதில் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் ஆற்ற வேண்டிய பங்கு குறித்துத் தமது கவனத்தை செலுத்த முற்பட்டன.

1955-ல் மான்டிவிடியோவில் யுனெஸ்கோவின் பொது மாநாடு நடைபெற்றது. இதன் கூட்டத் தொடரில்தான் சோவியத் யூனியன் முதன் முறையாகக் கலந்து கொண்டது. யுத்தப் பிரசாரத்தைக் கண்டிக்கும் நகல் தீர்மானம் ஒன்றை இக்கூட்டத் தொடரில் சோவியத் பிரதிநிதிக் குழு சமர்ப்பித்தது. இப்பிரச்சினை பற்றி மாநாடு தனது பிந்திய பல கூட்டத் தொடர்களில் விவாதித்தது.

யுனெஸ்கோ பொது மாநாடு 1966-ல் நடைபெற்ற தனது பதினான்காவது கூட்டத் தொடரில் சர்வதேசக் கலாசார ஒத்துழைப்புக் கோட்பாடுகள் குறித்த பிரகடனத்தை ஏற்றது. அந்தப் பிரகடனத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது: ''நட்புறவு, சமாதான சூழ்நிலைமையை உருவாக்குவதற்கு உகந்த, கருத்துகளுக்கும் மதிப்புகளுக்கும் கலாசாரத் துறையில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். எத்தகைய போக்கைக் கடைப்பிடிப்பதிலும் சரி, அபிப்பிராயத்தை வெளியிடுவதிலும் சரி பகைமை உணர்வைத் தவிர்க்க வேண்டும். தகவலை வழங்கும் போதும், பரப்பும் போதும் அது நம்பகமானதாக இருப்பதற்கு உத்தரவாதம் அளிக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்'' (பாயிண்ட் 2, ஷரத்து 7).

தங்கு தடையின்றி தகவல் கிட்டுவதற்கும், கல்வி பரவுவதற்கும், பெருமளவில் கலாசாரப் பரிமாற்றத்திற்கும் செயற்கைத் துணைக்கோள் ஒலிபரப்பை பயன்படுத்துவது சம்பந்தமான கோட்பாடுகள் குறித்த பிரகடனம் 1972-ல் பாரிசில் நடைபெற்ற பொது மாநாட்டின் பதினேழாவது கூட்டத் தொடரில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இந்தப் பிரகடனத்தின் ஒரு பகுதி கூறுவதாவது:

''1. அறிவாற்றலை பரப்புவதற்கும், மக்களிடையே சிறந்த இணக்கத்தை வளர்ப்பதற்கும் செயற்கைத் துணைக்கோள் ஒலிபரப்பு ஒரு புதிய வாய்ப்பை வழங்குகிறது.

''2. இந்த வாய்ப்புக் கூறுகளை உபயோகித்துக் கொள்வதற்கு நேயர்களின் தேவைகளும், உரிமைகளும், அதேபோல் சமாதானம், நட்புறவு, மக்களிடையே ஒத்துழைப்பு, பொருளாதார, சமூக, கலாசார முன்னேற்றம் எனும் குறிக்கோள்களும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட வேண்டும்'' (ஷரத்து 4).

கலாசாரக் கொள்கையின் ஸ்தாபன நிர்வாக நிதி அம்சங்கள் குறித்து 1970 ஆம் ஆண்டில் வெனிசில் அரசாங்க மட்டத்தில் நடைபெற்ற மாநாடு சமாதானத்தின் நலன்களுக்காக தகவல் துறையைப் பயன்படுத்துவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தது. சமாதானத்தின் பொருட்டும், சர்வதேச நல்லிணக்கத்தின் பொருட்டும் தாம் ஆற்றிவரும் பணியை கலாசாரத் துறையின் மூலமும், தகவல் துறையின் மூலமும் யுனெஸ்கோ உறுப்பினர் நாடுகள் பலப்படுத்த

வேண்டும், தேசங்களிடையே துவேஷத்தையும், வன்முறையையும், யுத்தத்தையும் தூண்டும் கருத்துக்கள் அடங்கிய படைப்புகளை உருவாக்குவதற்கும், வெளியிடுவதற்கும், விநியோகிப்பதற்கும் எதிராகத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்று கலாசார அமைச்சர்களின் இந்த முதலாவது உலக மாநாடு பரிந்துரைத்தது (பாயிண்ட் 1, தீர்மானம் 2). இந்தப் புதிய செய்திப் போக்குவரத்து சாதனத்தைப் பயன்படுத்துவதில், முக்கியமாக செயற்கைத் துணைக்கோள்களைப் பயன்படுத்துவதில் கலாசாரங்களின் சமத்துவம், தேசங்களிடையே சமாதான பூர்வமான உறவுகள், நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமை எனும் கோட்பாட்டுக்கு மதிப்பளிக்க வகை செய்யும் சர்வதேச ஒப்பந்தங்களை வகுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள இதர நிறுவனங்களுடன் ஒத்துழைக்கும்படி யுனெஸ்கோவை மாநாடு பணித்தது (பாயிண்ட் 3, தீர்மானம் 20).

தேசங்களிடையே சமாதானம், நட்புறவு, பரஸ்பர இணக்கம் எனும் கருத்துக்களைப் பரப்புவதற்கு யுனெஸ்கோவின் ஐரோப்பிய உறுப்பினர் நாடுகள் ''கலாசார உறவுகளையும் தகவல் துறையையும் செயலூக்கமுடன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று 1972-ல் ஹெல்சிங்கியில் ஐரோப்பிய கலாசாரக் கொள்கைகள் குறித்து அரசாங்க மட்டத்தில் நடைபெற்ற மாநாடு சிபாரிசு செய்தது (பாயிண்ட் 3, பரிந்துரை 32).

''யுத்தம், வன்முறை, மக்களிடையே பகைமை, துவேஷம், வருண இன பாரபட்சம் ஆகிய கருத்துகளை ஆதரித்து வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் உட்பட பல்வேறு வழிகளில் செய்யப்படும் பிரசாரம் இளம் மக்களின் தார்மிக, ஆன்மிக ஆரோக்கியத்துக்கு மிகுந்த அபாயங்களை உண்டு பண்ணுகிறது'' என்பதை 1973-ல் ஜோக்ஜகர்த்தாவில் ஆசிய கலாசாரக் கொள்கைகள் குறித்து அரசாங்க மட்டத்தில் நடைபெற்ற மாநாடு ஒப்புக் கொண்டது (பாயிண்ட் 4, பரிந்துரை 7).

1970-ல் பாரிசில் நடைபெற்ற யுனெஸ்கோ பொது மாநாட்டின் பதினாறுவது கூட்டத் தொடர் ''பொதுஜனத் தகவல் துறையும், சர்வதேச நல்லிணக்கமும்'' என்பது பற்றி ஏற்ற 4-வது தீர்மானத்தின் 301-வது பாயிண்ட் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. அதன் பீடிகை சமுதாயத்தின்மீது மேன்மேலும் அதிகரித்துவரும் தகவல் சாதனங்களின் செல்வாக்கைப் பற்றி குறிப்பிட்டது; தகவல் சாதனங்களின் மூலம் போர் வெறி, வருண இனவெறிப் பிரசாரமும், தேசங்களிடையே துவேஷப் பிரசாரமும் செய்வது ஐ. நா. சாசனத்தின், யுனெஸ்கோ விதிமுறையின் நோக்கங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் புறம்பானது என்பதைச் சுட்டிக் காட்டிற்று; சமாதானத்தின், மனித குல சுபிட்சத்தின் நலன்களை முன்னிட்டு சர்வதேச இணக்கத்தையும்,

ஒத்துழைப்பையும் வளர்ப்பதில் தகவல் சாதனங்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்றும் வலியுறுத்திற்று. தீர்மானம் மேலும் தெரிவித்ததாவது; (1) தேசங்களிடையே போர்வெறி, வருண இனவெறி, துவேஷப் பிரசாரம் செய்வதற்கு தகவல் சாதனங்களைப் பயன்படுத்துவது ஏற்கத் தக்கதல்ல என்பதை மாநாடு ஊர்ஜிதம் செய்தது; (2) தேசங்களிடையே போர் வெறியையும், வருண இன வெறியையும், பகைமையையும் ஆதரித்துப் பிரசாரம் செய்வதற்கு தகவல் சாதனங்கள் பயன்படுத்தப் படாதபடி உத்தரவாதம் செய்ய சட்ட நடவடிக்கைகள் உட்பட அவசியமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும்படியும், இது சம்பந்தமாக யுனெஸ்கோவுக்கு விவரங்கள் தரும்படியும் சம்பந்தப்பட்ட நாடுகளை மாநாடு வலியுறுத்திற்று; (3) தேசங்களிடையே போர் வெறி, வருண இன வெறி, துவேஷப் பிரசாரம் செய்வதற்கு தகவல் சாதனங்கள் பயன்படுத்தப் படாதபடி தடுக்க தாம் எடுத்துள்ள நடவடிக்கைகளையும், தற்போதுள்ள சட்டங்களையும் பற்றி யுனெஸ்கோ உறுப்பினர் நாடுகள் அளிக்கும் பதில்களின் அடிப்படையில் அமைந்த ஓர் அறிக்கையை பொது மாநாட்டின் 17-வது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கும்படி அது டைரக்டர்-ஜெனரலைக் கேட்டுக் கொண்டது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கான நிலைமைகளைத் தோற்றுவிப்பதற்கு அடுத்த தருக்க ரீதியான நடவடிக்கை 1972 ஆம் ஆண்டு பாரிசில் நடைபெற்ற பொது மாநாட்டின் 17-வது கூட்டத் தொடரில் எடுத்துக் கொள்ளப்பட்டது. சமாதானத்தையும் சர்வதேச இணக்கத்தையும் வலுப்படுத்துவதற்கும், போர் வெறி, வருண இன வெறிப் பிரசாரம், இன ஒதுக்கல் ஆகியவற்றை எதிர்ப்பதற்கும் வெகுஜனத் தகவல், செய்தி தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவது சம்பந்தமான அடிப்படைக் கோட்பாடுகள் குறித்து ஒரு நகல் பிரகடனத்தைத் தயாரித்து, பதினெட்டாவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கும்படி இந்த மாநாடு டைரக்டர்-ஜெனரலை வேண்டிக் கொண்டது (தீர்மானம் 4, பாயிண்ட் 113).

பொது மாநாடு 1974-ல் பாரிசில் நடைபெற்ற தனது பதினெட்டாவது கூட்டத் தொடரில், நகல் பிரகடனத்தையும், உறுப்பினர் நாடுகள் முன்வைத்த திருத்தங்களையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது. நகலையும் திருத்தங்களையும் பற்றி மேலும் ஆராய்வது அவசியம் என்பதையும் அது ஒப்புக் கொண்டது. எனவே, அரசாங்கங்கள் மட்டத்தில் அமைந்த ஒரு நிபுணர்கள் கமிட்டி மூலம் நகல் குறித்து தொடர்ந்து பரிசீலனை செய்து, பத்தொன்பதாவது கூட்டத் தொடரில் அதனைச் சமர்ப்பிப்பது என்று முடிவு செய்யப் பட்டது (தீர்மானம் 4, பாயிண்ட் 111).

அரசாங்கங்கள் மட்டத்தில் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் கமிட்டி 1975 ஆம் ஆண்டு டிசம்பர் 15-22 தேதிகளில் பாரிசில் கூடி நகல் பிரகடனத்தைத் தயாரித்தது. 1976-ல் நய்ரோபியில் நடைபெற்ற

பொது மாநாட்டின் பத்தொன்பதாவது கூட்டத்தொடரில் இந்த நகல் பரிசீலிக்கப்பட்டது.

நய்ரோபியில் நடைபெற்ற விவாதத்தைத் தொடர்ந்து, மேலைய நாடுகளில் ஒரு பெரிய பிரசாரப் புழுதிப் புயல் கிளப்பி விடப்பட்டது. உதாரணமாக, தகவல் அமைப்புகளின் மீது அரசாங்கக் ''கட்டுப்பாட்டை'' ஏற்படுத்துவதும், ''தணிக்கை முறையை''க் கொண்டு வருவதுமே இந்தப் பிரகடனத்தின் நோக்கம் என்று கதை கட்டிவிடப்பட்டது. உண்மையில் அப்போது விவாதிக்கப்பட்டு வந்த இந்த நகலில் இத்தகைய அம்சங்கள் ஏதும் இடம் பெற்றிருக்கவில்லை.

இப்படிப்பட்ட ஒரு பிரகடனத்தை ஏற்கும் கருத்தை மேலைய நாடுகளும், முதலாளித்துவப் பத்திரிகைகளும், குறிப்பாக அமெரிக்கப் பத்திரிகைகளும் ஆரம்பம் முதலே மூர்க்கத்தனமாக எதிர்த்து வந்தன. தகவல் சாதனங்களை சமாதானத்திற்காகவும், ராணுவாதிக்கத்தையும் வருண இன வெறியையும் எதிர்ப்பதற்காகவும் பயன்படுத்தும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோள், வளரும் நாடுகள் தமது சொந்த செய்திப் போக்குவரத்து அமைப்பை விரிவுபடுத்திக்கொள்ள உதவ வேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட யோசனை, தாம் பரப்பும் தகவல்களுக்கு அரசுகளும், தகவல் அமைப்புகளும், பத்திரிகையாளர்களும் பொறுப்பேற்க வேண்டும் என்ற கண்ணோட்டம் போன்ற அந்தப் பிரகடனத்தில் அடங்கியிருந்த எதுவும் மேலைய ''தகவல் சாதன ஏகபோகங்களுக்கு'' ஏற்புடையதாக இல்லை.

இத்தகைய ஒரு பிரகடனம் ஏற்கப்படுமானால் அது பல தொடர் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும், பிற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடும் நடைமுறைக்கு அது முற்றுப்புள்ளி வைக்கும் என்பதையும், ''மனோதத்துவப் போருக்கும்'', ''தகவல் துறையில் நிலவும் ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கும்'' முடிவு கட்ட அது நாளடைவில் வழிகோலும் என்பதையும் மேலைய சித்தாந்தவாதிகள் நன்கு அறிவார்கள்.

எனவே உத்தேச பிரகடனம் போன்ற எந்த சர்வதேச உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் கொள்கை அளவில் ஏற்க ஏகாதிபத்தியம் தயாராக இல்லை. இதனை மூடிமறைக்க பல தகிடுதத்தங்கள் புரியப்பட்டன; தணிக்கை முறையையும், அரசாங்கக் கட்டுப்பாட்டையும் எதிர்த்து ''புனிதமான பத்திரிகை சுதந்திரத்துக்காக''ப் போராடுவதாக ஆடம்பர ஆர்ப்பாட்ட பிரசாரம் செய்யப்பட்டது.

இந்தப் பிரசாரத் தாக்குதலுக்கு பக்கபலமாக அரசியல் பூச்சாண்டியும், பொருளாதாரப் பூச்சாண்டியும் காட்டப்பட்டன. நய்ரோபியில் (இதற்கு சிறிது காலத்திற்குப் பிறகு பாரிசில்) பொது மாநாட்டின் பத்தொன்பதாவது கூட்டத் தொடர் நடைபெறவிருந்த தறுவாயில், உறுப்பினர் கட்டணங்கள் செலுத்துவதை நிறுத்தப் போவதாகவும், யுனெஸ்கோவிலிருந்து கூட வாபசாகப் போவதாகவும்

மேலைய நாடுகளில் பலவிதமான பயமுறுத்தல்கள் அமளிதுமளிப் பட்டன.

நகல் பிரகடனத்தை ஏற்க முடியாது என்று சில மேலைய நாடுகள் கடுமையாக எதிர்த்த காரணத்தால், இந்தப் பிரச்சினை பொது மாநாட்டின் இருபதாவது கூட்டத் தொடரினது பரிசீலனைக்கு விடப்பட்டது.

எனினும், நய்ரோபியில் மேலைய நாடுகளின் நிர்ப்பந்தம் ஓரளவு வெற்றி பெற்றாலும், பாரிசில் நடைபெற்ற இருபதாவது கூட்டத் தொடரில் மேலைய முயற்சிகள் தோல்வி அடைந்தன. பிரகடனம் ஏற்கப்படுவதற்கு தாம் உறுதியாகப் போராடப் போவதாகவும், பிரச்சினையை வாக்கெடுப்புக்கு விடப்போவதாகவும், அவ்வாறு நேர்ந்தால் நேட்டோ உறுப்பினர் நாடுகள் தனிமைப்பட்டுப் போகும் என்றும் சோஷலிச நாடுகளும், பெரும்பாலான வளரும் நாடுகளும் அறிவித்தன.

பிறகு பாரிஸ் மாநாட்டில் பல்வேறு அரசியல் செப்படி வித்தைகள் ஆரம்பமாயின. ஒருபுறம், வளரும் நாடுகளில் நவீன செய்திப் போக்குவரத்து வசதிகளை விரிவுபடுத்தவும், தொழில் முறைப் பத்திரிகையாளர்களைப் பயிற்றுவிக்கவும் பல லட்சம் டாலர் கொண்ட ஒரு பரந்த தொழில்நுட்ப உதவித் திட்டத்தை ஏகாதிபத்திய நாடுகள் அறிவித்தன. ஆனால் இதற்கு அவை ஒரு நிபந்தனையையும் விதித்தன; அதாவது, இது சம்பந்தமாக எத்தகைய உடன்படிக்கைகளும், ஒப்பந்தங்களும் கூடாது என்றும், இப்போதைய அமைப்புக்குப் பாதகமான முறையில் எந்தப் புதிய கோட்பாடுகளையும் முன்வைக்கக் கூடாது என்றும் அவை கூறின. மறுபுறம், நகலைத் திருத்தி அமைப்பதற்கு மட்டுமன்றி, அதன் தலைப்பைக்கூட மாற்றுவதற்கும் பாரிசில் மேலைய பிரதிநிதிக் குழுக்கள் முயற்சி செய்தன. பத்து மேலைய நாடுகள் வேறொரு நகலை சமர்ப்பித்தன. அதில் தகவல் சுதந்திரத்தையும், மனித உரிமைகள் மீறப்படுவதை எதிர்ப்பதையும் குறிக்கும் முற்றிலும் ஒரு வேறுபட்ட தலைப்பு பிரகடனத்துக்கு வழங்கப்பட்டது. அதே சமயம், பிரிட்டன் மற்றொரு யோசனையை முன்வைத்தது; மூல நகல் பிரகடனத்தை இப்போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாமல், யுனெஸ்கோ பொது மாநாட்டின் அடுத்த கூட்டத் தொடரில் அதனைச் சமர்ப்பிக்கலாம் என்று அது தெரிவித்தது.

தகவல் துறையில் மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் பெற்றுள்ள முதலாளித்துவ நாடுகள் இவ்வாறெல்லாம் பலத்த எதிர்ப்பு காட்டிய போதிலும், பிரகடனம் எவ்வாறு ஏற்கப்பட்டது? இது எவ்விதம் சாத்தியமாயிற்று?

சோஷலிச நாடுகளும் பெரும்பாலான வளரும் நாடுகளும் உறுதியாக ஒன்றுபட்டு நின்ற நிலைமையில், இந்தப் பிரச்சினை

வாக்கெடுப்புக்கு விடப்பட்டிருக்குமானுல் மேலேய நாடுகள் நிச்சயம் முற்றிலும் தனிமைப்பட்டுப் போயிருக்கும். எனவே, இத்தகைய சூழ்நிலேமையில், அவை நகல் பிரகடனத்தை அறவே எதிர்க்கத் துணியவில்லே; அதற்குப் பதிலாக பிரகடனத்தில் ஆங்காங்கு சிற்சில ஐயப்பாடான சொற்களேப் புகுத்தி, அதன் வாசகத்தைப் பலவீனப் படுத்துவதில் ஓரளவு வெற்றி பெற்றன. எனினும் அதே சமயம் இந்த நாடுகள் தமது முந்தைய நிலேயிலிருந்து இறங்கி வந்து, பிரகடனத்தை ஏற்றுக் கொள்ளும்படி நேர்ந்தது என்பது முக்கியமான தாகும். முடிவில், வாக்கெடுப்பு இல்லாமல் கருத்தொற்றுமை அடிப்படையில் பிரகடனம் ஏற்கப்பட்டது. யுனெஸ்கோவின் வரலாற்றில் இது பெருமிதத்துக்குரிய ஒரு நிகழ்ச்சியாகும். இறுதியில் பிரகடனம் ஏற்கப்பட்ட போது மாநாட்டில் பிரசன்னமாகி இருந்த யுனெஸ்கோவின் டைரக்டர்-ஜெனரலான அமதோ மஹ்தார் எம்போவால் பொங்கி வந்த தமது கண்ணீரை அடக்கிக் கொள்ள முடியவில்லே.

## பிரகடனமும் அதனேத் திரித்துப் புரட்டுபவர்களும்

இந்தப் பிரகடனத்தின் முழுத்தலேப்பையும் ஒருவர் படித்தாலே அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம். சமாதானத்தையும் சர்வதேச இணக்கத்தையும் வலுப்படுத்துவதற்கும், மனித உரிமைகளே மேம்படுத்துவதற்கும், வருண இன வெறி, இன ஒதுக்கல், போர் வெறியைத் தூண்டி விடுதல் ஆகியவற்றை எதிர்ப்பதற்கும் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் ஆற்ற வேண்டிய பங்குப் பணி சம்பந்தமான அடிப்படைக் கோட்பாடுகள் குறித்த பிரகடனம் என்று அதன் தலேப்பு கூறுகிறது. இந்த ஒப்பந்தம்தான் சர்வதேச உறவுகள் வரலாற்றிலேயே, சமாதானம், மக்களின் நட்புறவு, சுதந்திரம் எனும் லட்சியத்தின் பால் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களின் கவனத்தை எத்தகைய ஐயப்பாட்டிற்கும் இடமின்றி தெள்ளத் தெளிவாக ஈர்க்கும் முதல் பிரகடனமாகும். ''சமாதானத்தையும் சர்வதேச இணக்கத்தையும் பலப்படுத்தவும், வருண இனவெறி, இன ஒதுக்கல், போர் வெறியைத் தூண்டுதல் ஆகியவற்றை எதிர்க்கவும் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் முக்கிய பங்காற்ற வேண்டும்'' என்று மூன்ருவது ஷரத்து கூறுகிறது. ''மக்களிடையே நிலவும் அறியாமையையும், தப்பபிப்பிராயங்களேயும் ஒழித்துக் கட்டுவதற்கும், ஒரு நாட்டின் மக்கள் மற்றவர்களின் தேவைகளேயும் ஆர்வ விருப்பங்களேயும் உணர்ந்து கொள்ளும்படி செய்வதற்கும், அனேத்து தேசங்களின், சகல மக்களின், எல்லாத் தனிநபர்களின் உரிமைகளும் கௌரவமும் மதிக்கப்படுவதற்கும்'' பாடுபடுவது தகவல், செய்தித் தொடர்பு சாதனங்களின் கடமை என்று அந்த ஷரத்து மேலும் பகர்கிறது. ''சமாதானம், நீதி, சுதந்திரம், பரஸ்பர மரியாதை, நல்லிணக்கம்

எனும் உணர்வில் இளம் மக்களைப் பயிற்றுவிப்பதில் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் முக்கிய சேவை செய்ய வேண்டும்...'' என்று நான்காவது ஷரத்து வலியுறுத்துகிறது. உலக சமாதானத்தையும், சர்வதேசப் பந்தோபஸ்தையும் வலுப்படுத்தும் பணிகளைப் பற்றிக் கூறும் ஐ. நா. சாசனம், யுனெஸ்கோவின் விதிமுறைகள் உட்பட பல சர்வதேச உடன்படிக்கைகள் பிரகடனத்தின் பீடிகையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த உடன்படிக்கைகளின் சாராம்சம் சர்வதேச அரங்கில் தகவல் துறையின் பணிகளுடன் பிணைக்கப்பட்டிருப்பது இங்கு முக்கியமானதாகும். உதாரணமாக, ஐ. நா. பொதுச் சபையின் 110 (2)-வது தீர்மானம் இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதை இவ்வகையில் விசேடமாகக் குறிப்பிட வேண்டும். சமாதானத்துக்கு எத்தகைய அச்சுறுத்தலையோ, சமாதானப் பங்கத்தையோ, அல்லது ஆக்கிரமிப்புச் செயலையோ விளைவிக்கும் நோக்கம் கொண்ட அல்லது அதனைத் தூண்டிவிடக்கூடிய, ஊக்குவிக்கக்கூடிய எல்லா வகையான பிரசார வடிவங்களையும் இத் தீர்மானம் கண்டிக்கிறது. ஏகாதிபத்திய நாடுகளின் கடுமையான எதிர்ப்புக்கு இடையே 1947 ஆம் ஆண்டு வாக்கிலேயே ஏற்கப்பட்ட இந்தத் தீர்மானம் இவ்வாறு புதுப்பிக்கப்பட்டது.

பிரகடனத்தில் அதன் தலைப்பிலும், அதன் ஷரத்துக்கள் பலவற்றிலும் மிக முனைப்பாக வெளிப்படும் மற்றோர் அம்சம் நவீன காலனியாதிக்கம், வருண இனவெறி, இன ஒதுக்கல் ஆகிய சாபத்தீடுகளுக்கு, சாபக் கேடுகளுக்கு எதிரான போராட்டமாகும். எல்லாவிதமான வருண இன பாரபட்சங்களையும் ஒழித்துக்கட்டுவது சம்பந்தமான சர்வதேச உடன்படிக்கை, இன ஒதுக்கல் குற்றத்தை ஒடுக்குவது, தண்டிப்பது சம்பந்தமான சர்வதேச உடன்படிக்கை போன்றவை பிரகடனத்தில் குறிப்பிடப்படுவதை மேலைய நாடுகள் உக்கிரமாக எதிர்த்தன (வளரும் நாடுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த இந்த உடன்படிக்கைகளை ஊர்ஜிதம் செய்ய மேலைய ''மனித உரிமை ரட்சகர்கள்'' இன்றளவும் மறுத்து வருகிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது). எனினும் இந்தப் பிடிவாதமான எதிர்ப்புக்கு இடையேயும் இவ்விரு உடன்படிக்கைகளும் பிரகடனத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டன. காலனியாதிக்கம், வருண இனவெறி, இன ஒதுக்கல் ஆகிய அனுசாரங்கள் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுபவை என்று சில ஷரத்துகள் கூறுகின்றன. வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் இத்தகைய அவல நிலையை எதிர்த்துப் போராட வேண்டும்; மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்; குறிப்பாக, ஒடுக்கப்பட்ட மக்கள் ''தங்கள் பிரதேசங்களுக்குள்ளேயே குரல் எழுப்ப இயலாதவர்களாக இருப்பதால்'', அவர்கள் காலனியாதிக்கத்தையும், நவீன காலனியாதிக்கத்தையும், அந்நிய ஆக்கிரமிப்பையும், சகலவித வருண இன பாரபட்சங்களையும் எதிர்த்து நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவு அளிக்க வேண்டும் (ஷரத்து 2).

முதல் தடவையாக ஒரு சர்வதேச உடன்படிக்கை "வளரும் நாடுகளுக்கு தகவல்கள் வழங்குவதிலும், அவற்றிலிருந்து தகவல்களைப் பெறுவதிலும் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவது'' அவசியம் என்பதைத் தெள்ளத் தெளிவாகப் பிரகடனம் செய்தது (ஷரத்து 4); வளரும் நாடுகளிலுள்ள வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் வலிமையும் விரிவும் அடைவதை சாத்தியமாக்கக்கூடிய நிலைமைகளையும், வாய்ப்பு வளங்களையும் ஈட்டுவதற்கு'' நாடுகள் துணை புரிய வேண்டும் என்பதை அது வலியுறுத்திற்று (ஷரத்து 10).

வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களில் பணியாற்றும் ஊழியர்களும், பத்திரிகையாளர்களும் செய்யவேண்டிய கடமைகளை பல இடங்களில் பிரகடனம் சுட்டிக்காட்டுகிறது. உதாரணமாக 8-வது ஷரத்து கூறுவதாவது: "பத்திரிகையாளர்களையும், வெகுஜனத் தகவல், செய்தி தொடர்பு சாதனங்களில் பணி புரியும் ஏனையோரையும் தொழில்முறையில் பயிற்றுவிப்பதில் பங்கெடுத்துக் கொள்வோரும், ஸ்தாபனங்களும், மற்றும் அவர்கள் பொறுப்பான முறையில் தமது பணிகளை ஆற்ற உதவி செய்பவர்களும் அவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறை ஒழுங்குகளை வகுத்து அவை சரிவரப் பின்பற்றப்படுவதற்கு உத்தரவாதம் செய்யும்போது இந்தப் பிரகடனத்தின் கோட்பாடுகளுக்கு விசேட முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.'' செய்திகளை வழங்குவதற்கு சுதந்திரமும், தகவல்களைப் பெறுவதற்கு முழு அளவுக்கு வசதிகளும் பெற்றிருக்கும் பத்திரிகையாளர்கள் "உறுப்பினர் நாடுகளின் சட்ட, நிர்வாக விதிகளுக்கும், இதர கடமைப் பொறுப்புகளுக்கும் உரிய மதிப்பு அளித்து'' செயல்பட வேண்டும் என்று பிரகடனத்தில் திட்டவட்டமாகக் கூறப்பட்டிருப்பது மிக முக்கியமானது (ஷரத்து 9). ஐரோப்பிய பந்தோபஸ்து, ஒத்துழைப்பு மாநாட்டின் இறுதி தீர்மானத்தில் காணப்படும் சம்பந்தப்பட்ட விதிகளுக்கு இது முற்றிலும் இசைவானதாக உள்ளது.

இறுதியாக, பிரகடனம் மனித உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கைகளையும் குறிப்பிடுகிறது; போர் வெறியைத் தூண்டுவதையும், தேசிய இன அல்லது வருண இன துவேஷத்தையும் கண்டித்தல், செய்தி சுதந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு எதிரான நடவடிக்கைகளை வகுத்தளித்தல் போன்ற இந்த உடன்படிக்கைகளின் சில ஷரத்துகள் தகவல் துறைப் பிரச்சினைகளுடன் நேரடியாக சம்பந்தப்பட்டவையாகும்.

இந்தப் பிரகடனம் ஏற்கப்பட்ட பிறகு, மேலைய நாடுகளிலுள்ள சகல தகவல், செய்தி தொடர்பு சாதனங்களும் உடனடியாக இந்த உணர்வுடன் செயல்படத் தொடங்கிவிடும் என்று எதிர்பார்ப்பது அப்பாவித்தனமே தவிர வேறல்ல. இப்பிரகடனத்தைப் பல ஆண்டுகளாகக் கடுமையாக எதிர்த்து வந்த மேலைய நாடுகள் அது ஏற்கப்பட்டதை தமக்குக் கிட்டிய ஒரு வெற்றியாக சித்திரித்துக் காட்ட முதலில் முயற்சி செய்தன. எனினும் வெகு விரைவிலேயே, செல்வாக்கு மிகுந்த பல மேலைய பத்திரிகைகள் தமது உண்மை

சொரூபத்தைக் காட்ட தலைப்பட்டன; தமது எதிர்மறைப் போக்கை வெளிப்படுத்தின; கிட்டத்தட்ட அனைத்து அரசுகளாலும் ஏற்கப்பட்ட இந்த அதிகாரபூர்வமான உடன்படிக்கையிலிருந்து தம்மை கத்தரித்துக் கொள்ள முற்பட்டன. வருண இன வெறி, இன ஒதுக்கல், யுத்தம் ஆகியவற்றை ஆதரிப்பவர்களுக்கும்கூட பேச்சு சுதந்திரம் அளிக்கப்பட்டாலொழிய அமெரிக்கர்களைப் பொறுத்த வரையில் பேச்சு சுதந்திரம் அல்லது நடுநிலையான தகவல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று 1978 நவம்பர் 29-ல் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை எழுதிற்று.

அமெரிக்கப் பத்திரிகையாளர்களதும், பொது மக்களதும், அரசாங்க அமைப்புகளதும் மெய்யான அபிப்பிராயத்தையே உண்மையில் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை பிரதிபலிக்கிறதா என்பது நமக்கு தெரிய வேண்டும். யுத்தத்தையும் வருண இன வெறியையும் ஆதரிப்பவர்களுக்கு பத்திரிகைகளில் இடம் ஒதுக்குவதும், வானொலியில் நேரம் ஒதுக்குவதும் உண்மையிலேயே பத்திரிகை சுதந்திரத்துக்கு ஒரு முன் நிபந்தனையாக இருக்க முடியுமா? இங்கு நாம் ஓர் அராஜகக் கும்பலைப் பற்றிக் கூறவில்லை; அதற்கு மாறாக, சர்வதேச சட்டத்தாலும், எண்ணற்ற உடன்படிக்கைகளாலும், மற்றும் தேசங்களிடையே சமாதானத்தையும் அண்டை நேய உறவுகளையும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஐ. நா. சாசனத்தாலும் வழி வழிகாட்டப்படும் ஒரு சர்வதேச சமுதாயத்தைப் பற்றி இங்கு கூறுகிறோம்.

இந்தப் பிரகடனமானது முதலாளித்துவ சமுதாயத்தில் நிலவுவதாகக் கூறப்படும் எல்லையற்ற தகவல் சுதந்திரம் எனும் கோட்பாட்டுக்கு முரணானது என்ற கூற்றைப் பொறுத்த வரையில், அபிப்பிராயங்கள் வேறுபடுகின்றன. செல்வாக்கு மிகுந்த ஒரு பிரெஞ்சுப் பத்திரிகையாளர் குறிப்பிட்டதுபோல, மேலைய நாடுகளில் ஒரு பிரஜை தனது சொந்த புவித்துணைக்கோளை செலுத்த எவ்வளவு சுதந்திரம் பெற்றிருக்கிறாரோ அவ்வளவு சுதந்திரம் தனது சொந்தப் பத்திரிகையை வெளியிடுவதற்கும் பெற்றுள்ளார்.

பேச்சு சுதந்திரம் எனும் பிரச்சினை சம்பந்தப்பட்ட மட்டில், பின்கண்ட சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. 1978 நவம்பர் பிற்பகுதியில், பொது மாநாட்டுக் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர், இது பாரிசில் நடைபெற்றது. பிரகடனம் ஏற்கப்பட்டதற்கு மறுநாள் சோவியத் பிரதிநிதிக் குழு பத்திரிகை நிருபர்கள் கூட்டம் ஒன்றை நடத்திற்று. ஒரு குறிப்பிட்ட தகவல் ஒருதலைப் பட்சமானதா, இல்லையா என்பதை எந்த அடிப்படையில் நிர்ணயிப்பது என்று கேட்கப்பட்டபோது, இந்தக் கட்டுரை ஆசிரியர் அப்போதுதான் வெளிவந்த இன்டர் நேஷனல் ஹெரால்டு டிரிபியூன் பத்திரிகை இதழை நிருபர்களுக்குக் காட்டினார். பிரகடனம் பற்றி ஒரு நீண்ட விமர்சனக் கட்டுரை அதில் பிரசுரமாகி

இருந்தது; பிரகடனம் ஏற்கப்பட்டது மேலைய ராஜதந்திரத்துக்குக் கிட்டிய ஒரு வெற்றி என்றும் அதில் கூறப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கட்டுரையைப் பற்றிய மிகவும் ஆச்சரியப்படத்தக்க விஷயம் என்ன வென்றால், பிரகடனத்தின் தலைப்பை ஒருமுறைகூட அது குறிப்பிட வில்லை; அதேபோல் சமாதானம், சர்வதேச இணக்கம், நிறவெறி, இன ஒதுக்கல், போர்வெறியைத் தூண்டுதல் ஆகிய சொற்களை, இந்தப் பிரகடனத்துக்கே ஜீவ சக்தியாக விளங்கும் கண்ணோட்டங்களை எந்த இடத்திலும் அது பிரஸ்தாபிக்கவில்லை. பிரகடனத்தின் தலைப்பை குறிப்பிடாமல், அதன் சாராம்சத்தைப் பற்றி ஒரு வார்த்தையும் கூறாமல், மாறாக அதனை முற்றிலும் புறக்கணித்துவிட்டு வாசகர் களுக்கு ஒருவர் எவ்வாறு போதிய தகவலை வழங்க முடியும் என்று மேலைய பத்திரிகையாளர்களைக் கேட்டேன். பத்திரிகை சுதந்திரம் பற்றி சண்டப்பிரசண்டமாகப் பேசி, அதன் திரைமறைவில் ஒரு பத்திரிகை நிருபர் கடைப்பிடிக்கும் மிகவும் பொறுப்பற்ற போக்குக்கு இது ஒரு தெள்ளத் தெளிவான உதாரணமாகும்.

அடுத்த நாள் இதே இண்டர் நேஷனல் ஹெரால்டு டிரிபியூன் பத்திரிகை இந்த சம்பவம் குறித்து மிகச் சுருக்கமாக வெளியிட் டிருந்தது; மேலைய பத்திரிகைகள் பாரபட்சமாக நடந்து கொள்வ தாக சோவியத் பிரதிநிதி குற்றம் சாட்டினார் என்றும் தெரிவித் திருந்தது. ஆனால் இப்போதும் அது பிரகடனத்தின் தலைப்பையோ, அதன் சாராம்சத்தையோ, எனது விமர்சனத்தின் முக்கிய பகுதி களையோ பிரசுரிக்கவில்லை. மேலைய தகவல் சுதந்திரத்துக்கு அல்லது இன்னும் சொல்லப்போனால் அரசியல் தகிடுதத்தத்துக்கு ஓர் அருமை யான எடுத்துக்காட்டு!

பிரகடனம் குறித்து நடைபெற்ற வாக்குவாதத்தின் போது பலர் பின்வருமாறு கேட்டார்கள்: இன்றைய நிலைமையில், சர்வதேச தகவல் துறை நடவடிக்கைகள் சம்பந்தமான கோட்பாடுகளின் அடிப் படையில் அமைந்தவையும், வேறுபட்ட சமூக அமைப்புகள் கொண்ட நாடுகள் ஒப்புக் கொள்ளக் கூடியவையுமான இத்தகைய உடன்பாடு களை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்கு முயல்வது காரிய சாத்திய மானதுதானா? இந்த உடன்பாடுகள் பதற்றத் தணிவு நிலைமைகளுக்கு இணக்கமானவையாகவும், வளரும் நாடுகளின் நியாயமான நலன் களைக் கணக்கிலெடுத்துக் கொள்ளக்கூடியவையாகவும் இருப்பது சாத்தியமா? இது உண்மையிலேயே ஒரு கடினமான பிரச்சினை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஏனென்றால் இது நேரெதிரான சமூக அமைப்புகளதும், அரசுகளதும், வர்க்கங்களதும் மிக ஜீவாதார மான நலன்களைப் பொறுத்த விஷயம்.

இவ்வாறு சிரமங்கள் இருந்தாலும், கூடியவிரைவில் இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணுவது அவசியம். எவ்வாறு ஆயுத உற்பத்திப் போட்டியுடன் சேர்ந்து அரசியல் பதற்றத்தணிவு வளர முடியாதோ, அவ்வாறே இடையறாத சீர்குலைவு நிலைமைகளிலும் ''மனோதத்துவப்

போர்'' நிலைமைகளிலும் பரஸ்பர இணக்கமும் நம்பிக்கையும் வளர்ந்து வலுப்பெற முடியாது. ''தகவல் துறையில் நிலவும் ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு'' முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்றால், பரிபூரண சுதந்திரம் அடைவதற்கும், காலனி ஆதிக்கம் விட்டுச் சென்ற சீர்கேடுகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வதற்கும் வளரும் நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிகள் தோல்வியுறவே செய்யும். சோஷலிச நாடுகள், வளரும் நாடுகள், அனைத்து ஜனநாயக சக்திகள், மேலைய நாடுகளிலுள்ள நிதான மனோபாவம் படைத்த அரசியல் தலைவர்கள், முற்போக்கான பத்திரிகையாளர்கள், அவர்களது நிறுவனங்கள் ஆகியவை சேர்ந்து எடுத்துக் கொள்ளும் கூட்டு நடவடிக்கையானது கெடுபிடிப் போர் காலத்து அசமந்தத்தையும், காலனியாதிக்கப் போக்குகளையும் துடைத்தெறிவதற்கு வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களுக்கு உதவி புரியும். இந்தப் பகைப்புலனில்தான் யுனெஸ்கோ பிரகடனத்தை நோக்க வேண்டும். பத்திரிகையாளர்களும், வழக்குரைஞர்களும் இந்தப் பிரகடனம் குறித்து அவ்வப்போது விமர்சிப்பார்கள், பகுத்தாய்வுகள் செய்வார்கள் என்பது நிச்சயம். எனினும், மக்களிடையே சமாதானம், நல்லிணக்கம் எனும் லட்சியத்துக்கு அனுகூலம் பயக்கக்கூடிய மிக முக்கியமான ஓர் உடன்பாடு உருவாக்கப்பட்டுள்ளது என்பதை முதலாவது மதிப்பீடுகள் காட்டுகின்றன. யுனெஸ்கோவின் இந்த சாதனை தகவல்துறை பிரச்சினைகளைப் பரிசீலித்துவரும் இதர அமைப்புகளுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்க முடியும். ஏனென்றால், தேசங்களின் சமாதான சகவாழ்வு, சுதந்திரம் எனும் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளுக்கு இணங்க சர்வதேசத் தகவல்துறை நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்படும் என்பதற்கு இந்தப் பிரகடனம் முதலாவது நம்பிக்கைச் சின்னம் மட்டுமே ஆகும்.

ஜனநாயகப் பத்திரிகையாளர் நிறுவனங்களுக்கு, முக்கியமாக சர்வதேசப் பத்திரிகையாளர் நிறுவனத்துக்கு இந்தப் பிரகடனம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களின் பிரம்மாண்டமான ஆற்றல்களை சமாதானம், நல்லிணக்கம், சமூக முன்னேற்றம், தேசிய முன்னேற்றம் ஆகியவற்றின் நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று நீண்ட காலத்திற்கு முன்பு அவை வகுத்துக் கொண்ட இலட்சியத்தை எய்துவதற்கான அவற்றின் போராட்டத்தில் அவற்றுக்கு இப்போது ஒரு புதிய ஆயுதம் கிடைத்துள்ளது.

யுனெஸ்கோவைப் பொறுத்த வரையில், இன்றைய சர்வதேச வாழ்க்கையின் மிக முக்கியமான ஒரு துறையில், வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் துறையில் தற்போது அது ஒரு சிறந்த அரசியல் அடித்தளத்தைப் பெற்றுள்ளது. யுனெஸ்கோ பொது மாநாட்டின் இருபத்தி ஒன்றாவது கூட்டத்தொடர் 1980-ல் பெல்கிரேடில் நடைபெற்றது. இக்கூட்டத்தொடர் யுனெஸ்கோ பிரகட

னத்தை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்த ஒரு தீர்மானத்தை ஏற்றது. சர்வதேசத் தகவல் பரிமாற்ற கோட்பாடுகள் பற்றி பத்திரிகையாளர்களின் பங்கெடுப்புடன் அடுத்த இரண்டு ஆண்டுகளில் பத்து யுனெஸ்கோ கருத்தரங்குகளை நடத்தவும், பிரகடனத்தை அமல் நடத்துவது சம்பந்தமாக 1983-ல் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு மாநாட்டைக் கூட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆயுத உற்பத்திப் போட்டியைத் தடுத்து நிறுத்துவதற்கும், படைக்குறைப்புக்கு மாறுவதற்கும் ஆதரவாக பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதில் யுனெஸ்கோவின் பங்கு பற்றி சோவியத் யூனியன் கொண்டுவந்த ஒரு தீர்மானத்தையும் இந்தக் கூட்டத் தொடர் ஏற்றது. மனிதகுல வாழ்க்கை முழுவதற்கும் பெரும் அச்சுறுத்தலை உண்டு பண்ணும் ஆயுத உற்பத்திப்போட்டி பூதாகாரமாக வளர்ந்து வருவது சமாதானத்தை வலுப்படுத்துவதற்கு முக்கிய இடையூறாக தொடர்ந்து இருந்து வருகிறது என்பதை இந்தத் தீர்மானம் வலியுறுத்திக் கூறிற்று.

சமாதானத்திற்கு யுனெஸ்கோவின் சேவை பற்றியும், மனித உரிமைகளை மேம்படுத்துதல், காலனி ஆதிக்கத்தையும், வருண இன வெறியையும் ஒழித்துக்கட்டுதல் சம்பந்தமான அதன் பணிகள் பற்றியும் போலந்து சமர்ப்பித்த ஒரு தீர்மானமும் ஏற்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட கமிஷன்களில் இத்தீர்மானங்கள் குறித்து விவாதம் நடைபெற்றபோது, இவை ஏற்கப்படுவதை அமெரிக்கப் பிரதிநிதிகளும், நேட்டோ நாடுகளும், சீனவும் எதிர்த்தன. எனினும் பொது மாநாட்டின் பிளீனம் கூட்டங்களில் நமக்கு ஆதரவு இல்லை என்பதைக் கண்டதும் தீர்மானங்களின் சிற்சில அம்சங்கள் குறித்து தமது ஆட்சேபங்களைத் தெரிவிப்பதுடன் அவை நிறுத்திக் கொண்டன. இதர பல தீர்மானங்களும், முக்கியமாக, மத்தியக் கிழக்கில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பைக் கண்டிக்கும் ஒரு தீர்மானமும் ஏற்கப்பட்டன. சோஷலிச நாடுகளதும் சில வளரும் நாடுகளதும் முன்முயற்சியின் பேரிலேயே இந்தப் பிரச்சினைகள் மாநாட்டுக் கூட்டத் தொடரில் விவாதத்திற்கு முன்வைக்கப்பட்டன.

செய்திப் போக்குவரத்துப் பிரச்சினைகளை ஆராய்வதற்கான சர்வதேசக் கமிஷன் தெரிவித்த பிரதான முடிவுகளைக் கூட்டத் தொடர் அங்கீகரித்தது; புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளில் ஆதிக்கம் வகிக்க மேலைய அரசுகள் செய்யும் முயற்சிகளுக்கு எதிரானவை இவை. வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் துறையில் ஒரு புதிய சர்வதேச ஏற்பாட்டை கொண்டுவருவது சம்பந்தப்பட்ட பிரதான கோட்பாடுகள் குறித்த ஒரு பிரகடனத்தை யுனெஸ்கோ ஏற்க வேண்டும் என்று வெனிஜுலா மொழிந்த தீர்மானம் ஆக்க பூர்வமான பலன்களை விளைவிக்கக் கூடியதாகும்.

பெல்கிரேடு கூட்டத்தொடர் ஒரு நடைமுறை சாத்தியமான முடிவையும் மேற்கொண்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

செய்திப் போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஒரு புதிய சர்வ தேச வேலைத் திட்டம் யுனெஸ்கோவின் கட்டுக்கோப்புக்குள் தொடங்கப்பட்டது. வளரும் நாடுகள் தமது சொந்த வெகுஜன தகவல் சாதனங்களை உருவாக்கிக்கொள்ள உதவுவதே இத்திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்திற்காக யுனெஸ்கோ பட்ஜெட்லிருந்து ஆரம்பத்தில் 17,50,000 டாலர் ஒதுக்கப்பட்டுள்ளது. உபகரணங்கள், நிதி, உபகாரச் சம்பளங்கள் முதலியவை அளித்து உதவும்படி இதர நாடுகளும், சர்வதேச நிறுவனங்களும் கேட்டுக் கொள்ளப்படும்.

சர்வதேச தகவல் பரிமாற்றத்தை ஜனநாயக அடிப்படையில் புனரமைக்க வேண்டும், ''அறிவுத்துறை ஏகாதிபத்திய'' நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று நீண்ட காலமாகவே வளரும் நாடுகளும், சோஷலிச நாடுகளும் கோரி வந்துள்ளன. எனவே, பெல்கிரேடு மாநாட்டின் முடிவுகளை இந்நாடுகளுக்குக் கிட்டிய ஒரு முக்கிய வெற்றி எனக் கூறலாம். அதே சமயம் அமெரிக்காவின் தலைமையிலுள்ள ஏகாதிபத்திய நாடுகளுக்கு இந்த முடிவுகள் ஒரு பலத்த அடியாகும்.

## யுனெஸ்கோவின் நடவடிக்கைகள்

வெகுஜன தகவல் சாதனங்கள் துறையை ஒழுங்கமைப்பதில் யுனெஸ்கோ செயலூக்கமுடன் ஈடுபட்டிருக்கிறது. அது மட்டுமன்றி, இத்துறையில் நடைமுறைப் பணியிலும் அது முனைந்து இறங்கியுள்ளது. வளர்ச்சி குன்றிய நாடுகளில் பத்திரிகைகள், வானொலி, திரைப்படங்கள், தொலைக்காட்சி முதலியவற்றை அபிவிருத்தி செய்வதற்கு திட்டங்கள் வகுக்கும் நோக்கத்தோடு ஐம்பதாம் ஆண்டுகளின் பிற்பகுதி வாக்கிலும் அறுபதாம் ஆண்டுகளிலும் முற்பகுதி வாக்கிலும் யுனெஸ்கே பல பிராந்திய ஆய்வுகளை மேற்கொண்டது; பிராந்திய மாநாடுகளைக் கூட்டிற்று; ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளது செய்திப் போக்குவரத்துத் தேவைகள் பற்றிய ஒரு சர்வேயை நடத்திற்று. வெகுஜன செய்திப் போக்குவரத்து சாதனங்களின் இன்றைய தரம் குறித்தும், அவற்றின் வளர்ச்சி வாய்ப்புகள் குறித்தும் பல ஆண்டுக்காலமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் உலக செய்திப் போக்குவரத்து (1975) எனும் புத்தகத்தில் வெளியிடப்பட்டன.

கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக வளரும் நாடுகளில் ஏராளமான பெரிய செய்திப் போக்கு வரத்துத் திட்டங்களை யுனெஸ்கோ நிறைவேற்றியுள்ளது. அவற்றில் முக்கியமானவை வருமாறு:

—ரேடியோ ஒலிபரப்பு அபிவிருத்திக்காக ஆசியக் கழகம் அமைக்கப்பட்டது (மலேசியா);

—தேசிய, பிராந்திய செய்தி நிறுவனங்களின் வளர்ச்சிகாக உதவி அளிக்கப்பட்டது: மலேசியாவில் பெர்னமா, கரிபியனில் கானு;

—லத்தீன் அமெரிக்காவில் தேசிய டாகுமெண்டரி திரைப்படத் தயாரிப்புக் கேந்திரம் நிறுவப் பெற்றது (கோஸ்டாரிகா);

—கிராமப்புறங்களை மேம்படுத்துவதற்கான சாதனமாக வானொலி பயன்படுத்தப் பட்டது (இந்தியா, கானா, செனகல்);

—பத்திரிகைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன; கிராமப்பகுதிகளில் நாளேடுகளும், செய்திப் பத்திரிகைகளும் பிரசுரிக்கப்பட்டன (டோகோ, மாலி, கீன்யா, கானா, தான்ஜானியா, தொபாகோ);

—செய்திப் போக்குவரத்து சம்பந்தமான கல்வி நிலையங்களும் ஆராய்ச்சி நிலையங்களும் அமைப்பதற்கு உதவி வழங்கப்பட்டது (செனகல், ஈக்வடார், நைஜீரியா, இந்தியா, கீன்யா, மலேசியா, பிலிப்பைன்ஸ், கரிபியன்);

—ஊழியர் பயிற்சிக்கும், வெகுஜன தகவல், செய்தி தொடர்பு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுக்குத் திட்டமிடுவதற்கும், நிர்வகிப்பதற்குமான வழிதுறைகள் உருவாக்கப்பட்டன;

—செயற்கைத் துணைக்கோள்கள் உட்பட தகவல் சாதனங்களை கல்வி நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் பல முன்னோடித் திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

செய்திப் போக்குவரத்துத் துறையில் வளரும் நாடுகளின் தேவைகளை முழு அளவுக்குப் பூர்த்தி செய்யும் திசைவழியில் யுனெஸ்கோ தற்போது தனது நடவடிக்கைகளைத் திருப்பிவிட்டுள்ளது.

பொது மாநாட்டின் பத்தொன்பதாவது, இருபதாவது, இருபத்தியொன்றுவது கூட்டத் தொடர்களின் தீர்மானங்களுக்கு இணங்க யுனெஸ்கோ சர்வதேச தகவல் பரிமாற்றம் சம்பந்தமான நியாயமான கோட்பாடுகளை வகுப்பதில் ஈடுபட்டுள்ளது; தேசிய செய்திப் போக்குவரத்து கட்டமைப்புகளை உருவாக்குவதற்கும், செய்திப் போக்குவரத்து நிபுணர்களைப் பயிற்றுவிப்பதற்கும் பாடுபட்டு வருகிறது; செய்தி நிறுவனங்களையும் கூட்டுகளையும் அமைத்து வருகிறது; தேசிய செய்திப் போக்குவரத்துக் கொள்கைகளை வகுத்து வருகிறது.

தகவல் கொள்கைகள் குறித்து அரசாங்கங்கள் மட்டத்தில் யுனெஸ்கோ ஏற்பாடு செய்யும் மாநாடுகள் இவ்வகையில் முக்கிய பங்காற்றுகின்றன; குறிப்பாக "தகவல்களையும் கருத்துகளையும் தங்கு தடையின்றி அனுப்பும்" ஏகாதிபத்தியக் கண்ணோட்டத்தை அம்பலப் படுத்துவதில் பிரதான பாத்திரம் வகிக்கின்றன.

லத்தீன் அமெரிக்காவிலும், கரிபியனிலும் செய்திப் போக்குவரத்துக் கொள்கைகள் பற்றி 1976 ஜூலையில் கோஸ்டாரிகாவில் அரசாங்க மட்டத்தில் ஒரு மாநாடு நடைபெற்றது; சமாதானத்தின் நலன்களுக்காக தகவல் துறையைப் பயன்படுத்துவது சம்பந்தமான கோட்பாடுகளை நிலைநாட்டுவதற்கு இந்த மாநாடு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. லத்தீன் அமெரிக்காவில் தகவல் துறையில் கடைப்பிடிக்க வேண்டிய கோட்பாடுகள் குறித்த

ஒரு பிரகடனத்தை இந்த மாநாடு ஒருமனதாக ஏற்றது. சான்ஜோஸ் பிரகடனம் என இது பெயர் பெற்றது. ''செய்திப் போக்குவரத்து சாதனங்களை ஆக்க ரீதியாகவும், அனுகூலமான முறையிலும் பயன் படுத்துவதை உத்தரவாதம் செய்வதற்கு சமூதாயத்தின் எல்லா உறுப்பினர்களுமே பொறுப்பேற்க வேண்டும் என்று இந்தப் பிரகடனத்தின் ஒரு ஷரத்து கூறுகிறது.

ஆசியாவிலும் ஓசியானியாவிலும் செய்திப் போக்குவரத்துக் கொள்கைகள் குறித்த, அரசாங்கங்களுக்கு இடையிலான முதலாவது மாநாடு மலேசியா கோலாலம்பூரில் 1979 பிப்ரவரியில் நடை பெற்றது. இந்தக் கட்டுரையின் ஆசிரியரும் மாநாட்டில் பங்கு கொண்டார். இந்த மாநாட்டில் ஏகாதிபத்தியம் கடும் கண்டனத் துக்கு உள்ளாயிற்று; உலகில் செய்திப் போக்குவரத்துத் துறையில் தற்போது நிலவும் ஏற்றத் தாழ்வுகள் பற்றிப் பெரும் கவலை தெரிவிக்கப்பட்டது. ''தகவல் துறையில் ஏகாதிபத்தியம் ஆதிக்கம் செலுத்தும்'' போக்கைத் தடுத்து நிறுத்தவும், சமாதானத்தையும் மனிதகுல சமூக முன்னேற்றத்தையும் மேம்படுத்துவதற்கு வெகுஜன தகவல் சாதனங்களின் ஆற்றலை முன்னிலும் பயனுறுதியுள்ள முறையில் உபயோகிக்கவும் யுனெஸ்கோவும் இதர அமைப்புகளும் நடைமுறையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கோலாலம்பூர் பிரகடனமும், மாநாட்டின் ஏனைய தீர்மானங்களும் வலியுறுத்தின.

செய்திப் போக்குவரத்துப் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சர்வதேசக் கமிஷன் சமர்ப்பித்த அறிக்கையை யுனெஸ்கோ பொது மாநாட்டின் இருபத்தியோருவது கூட்டத் தொடர் விவாதித்தது. 16 நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் அடங்கிய ஒரு கமிஷனால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. பிரபல பொது வாழ்வுப் பிரமுகரும், லெனின் சமாதானப் பரிசும், நோபல் சமாதானப் பரிசும் பெற்றவருமான சீன் மக்பிரைடு இக்கமிஷனின் தலைவர். செய்தி சாதனத் துறையில் ஒரு புதிய சர்வதேச ஏற்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று இந்த அறிக்கை கூறுகிறது. பல்வேறு நாடுகளிலுள்ள செய்திப் போக்குவரத்து சாதனங்கள் பற்றி ஏராளமான தகவல்கள் இதில் அடங்கியுள்ளன. இந்தச் சாதனங்களின் விநியோகத்தில் பெரும் ஏற்றத்தாழ்வு நிலவு வதை அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. சமுதாயத்திலும் நாடு களிடையேயான உறவுகளிலும் தகவல் சாதனங்களின் பங்கை மதிப்பிடுவதில் பல்வேறு அணுகுமுறைகளை அது முன்வைக்கிறது. தகவல் பரிமாற்றத் துறையில் ஏகாதிபத்தியப் பன்னாட்டுக் கார்ப்ப ரேஷன்கள் ஆற்றும் பெரும் கேடு பயக்கவல்ல பாத்திரம் குறித்து அநேக திடுக்கிடும் விவரங்களை அறிக்கை வழங்குகிறது. முக்கியமாக வளரும் நாடுகளைக் கருத்திற்கொண்டு, தேசிய செய்திப் போக்கு வரத்து அமைப்புகளை நிறுவுவதற்கான பல பரிந்துரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

செய்திப் போக்குவரத்துத் துறையில் நிலவும் ''ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு'' முற்றுப்புள்ளி வைப்பதற்கு வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க அசோஸியேட்டட் பிரஸ் நிறுவனம் 110 நாடுகளிலுள்ள 10,000 சந்தாதாரர்களுக்கு நாள்தோறும் 1 கோடி 70 லட்சம் சொற்களை அனுப்புகிறது என்று அறிக்கை கூறியுள்ளது. இந்த ஒரு வழி செய்திப் போக்குவரத்துக் காரணமாக ஆப்பிரிக்காவிலுள்ள மக்கள் தங்கள் அண்டை நாடுகளை விட அமெரிக்கா அல்லது பிரான்ஸைப் பற்றியே அதிகம் தெரிந்து கொள்ளும் ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது என்று காஞுவைச் சேர்ந்த ஏ. ஒபாரி சுட்டிக் காட்டினுர். மேலைய நாடுகள் வழங்கும் தகவல் களின் உள்ளடக்கமும் பாணியும், அதே போல் மேலைய நிறுவனங்கள் அளிக்கும் செய்திகளும் ஒருதலைப் பட்சமானவையாகவும், முதலாளித்துவ நாடுகளின் நலன்களுக்கு உகந்தவையாகவும் உள்ளன என்று இந்தியாவைச் சேர்ந்த என். அகர்வால் குற்றம் சாட்டியுள்ளார்.

புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் தமது சொந்த வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களைத் தோற்றுவித்துக் கொள்வதே இப்போதைய நிலைமையிலிருந்து விடுபடுவதற்கான வழியாகும். இந்தப் பணியின் முக்கியத்துவத்தை மக்பிரைடு அறிக்கை வலியுறுத்தியுள்ளது. ஆகவே, தகவல் துறையில் ஏகாதிபத்திய ஆதிக்கம் நிலவுவதை ஆதரிப்பவர்கள் இந்த அறிக்கையைக் கடுமை யாக எதிர்த்ததில் வியப்பேதும் இல்லை. மேலைய தகவல் நிறுவனங் களின் ஆதிக்கத்தைத் துடைத்தெறிய வளரும் நாடுகள் மேற் கொண்ட முயற்சிகளை பத்திரிகை சுதந்திரத்தின் மீது நடத்தப்பட்ட அத்துமீறலாக இவர்கள் சித்திரித்துக் காட்டினர்.

மிகப் பெரும்பாலான பிரதிநிதிகள் மக்பிரைடு அறிக்கையை ஆதரித்தனர்; சமத்துவ அடிப்படையில் உலகில் தகவல் பரிமாற்றம் நடைபெற வேண்டும் என்று பேசினர். தகவல் துறையில் சர்வதேச உறவுகளைத் திருத்தியமைப்பதற்கு யுனெஸ்கோ எத்தகைய நடவடிக் கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை அறிக்கை பற்றி ஏற்கப் பட்ட ஒரு தீர்மானம் விவரிக்கிறது.

சர்வதேச செய்திப் போக்குவரத்து விவகாரங்களில் யுனெஸ்கோ வுக்குள்ள பங்கையும் இடத்தையும் பற்றி இதுவரை கூறப்பட்டுள்ள வற்றை தொகுத்துக் கூறும்போது ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும்: இந்த நிறுவனம் தனது விதிமுறைகளில் வகுத்துத் தரப் பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அதாவது தேசங் களிடையே சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும், ஒத்துழைப் பையும் வளர்க்கும் நோக்கங்களை ஈடேற்றுவதற்கு வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களின் ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்வதில் எவ்வளவோ செய்துள்ளது. இனியும் எவ்வளவோ செய்ய முடியும் என்பதில் ஐயமில்லை.

## கூட்டு நடவடிக்கை இன்றியமையாதது

உலக சோஷலிசத்துடன் கூட்டணி அமைத்துக் கொண்டதன் காரணமாக ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் தேச விடுதலை இயக்கம் பல மாபெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளது; இதனை வரலாறு ஊர்ஜிதம் செய்திருக்கிறது. இருபது அல்லது முப்பது ஆண்டுக் காலத்திற்குள்ளாக ஏறத்தாழ நூறு இளம் நாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்றுள்ளன; சோஷலிசக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகள் மட்டும் சக்திமிக்க ஆதரவை அளித்திருக்கவில்லை என்றால், செயலூக்கமான நிலையை மேற்கொண்டிருக்கவில்லை என்றால் இதனை எண்ணிக்கூடப் பார்க்க முடியாது.

தேச விடுதலை இயக்கத்தின் அடுத்த கட்டத்தில், சர்வதேசப் பொருளாதார உறவுகளை நியாயமான, ஜனநாயக அடிப்படையில் புனரமைக்க வேண்டும் எனும் வளரும் நாடுகளின் சட்ட பூர்வமான கோரிக்கைக்கும் சோஷலிச நாடுகள் தீவிர ஆதரவு தந்துள்ளன.

''சித்தாந்த காலனியாதிக்கம்'' அல்லது ''தகவல் துறை ஏகாதிபத்தியம்'' ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த கோடானு கோடி மக்களைப் பெருவாரியான மேலைய சித்தாந்த விஸ்தரிப்புக்கு பலி கொடுத்து வருகிறது; இதற்கு முடிவு கட்டுவதே இப்போதைய அவசர அவசியப் பணி. அரசியல், பொருளாதார சுதந்திரத்தை எய்துவதற்கு நடைபெறும் போராட்டத்தைப் போலவே இந்தப் பணியும் கடினமானது என்பதை இங்கு வலியுறுத்திக் கூற வேண்டும். இங்குள்ள பிரச்சினை லட்சக் கணக்கான மக்களின் அனுதாபத்தை சம்பாதிப்பது மட்டுமல்ல, கிட்டத் தட்ட நூறு இளம் வளரும் நாடுகளின் சமூக, பொருளாதார அமைப்பையும், அதே போல் அவற்றின் சித்தாந்த, அரசியல் திசை வழியையும் புனரமைக்க வேண்டும். புரட்சிகர மாற்றங்களுக்கு சித்தாந்த ரீதியில் பூர்ஷுவாக்கள் காட்டும் எதிர்ப்பு ''மிகவும் ஆழமானது, கடுமையானது'' என்று லெனின் வருணித்தார் (நூல் தொகை, தொகுதி 31, பக்கம் 370).

ஏகாதிபத்தியத்துக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் வளரும் நாடுகள் எவ்வாறு வெற்றி பெற முடியும்? சோஷலிச நாடுகளுடன் கூட்டணி சேர்ந்தே அவை இந்த வெற்றியைச் சாதிக்க முடியும். சோஷலிசக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகள் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குப் பெருமளவில் உதவி செய்து வருகின்றன; வெகுஜனத் தகவல் துறையில் அளிக்கப்படும் உதவியும் இதில் அடங்கும். சோவியத் செய்திப் போக்குவரத்து துணைக்கோள்கள் அடங்கலாக சோவியத் யூனியன் வழங்கும் ஏராளமான செய்திப் போக்குவரத்து எந்திர சாதனங்களை வளரும் நாடுகள் மேன்மேலும் அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றன. இவற்றைக் குறைந்த விலையில் இறக்குமதி செய்யும் சலுகைகளையும் அவை அனுபவிக்கின்றன; தமது பத்திரிகையாளர்களைப் பயிற்சியின் நிமித்தம் சோவியத்

யூனியனுக்கு அனுப்புகின்றன. சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிச நாடுகளும் இந்த ஒத்துழைப்பை தொடர்ந்து விரிவு படுத்தும் என்பதில் ஐயமில்லை.

மற்றொரு முக்கிய அம்சத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும்: தமது நியாயமான நலன்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, தகவல் பரப்புத் துறையில் சர்வதேச உறவுகளைத் திருத்தியமைக்க வேண்டும் எனும் வளரும் நாடுகளின் கோரிக்கைக்கு சோஷலிச நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. இதனால் இன்று ''தகவலைப் பரப்புவது சம்பந்தப்பட்ட சர்வதேச நடவடிக்கைகளில் ஒரு புதிய ஏற்பாட்டைப் புகுத்த வேண்டும்'' எனும் பிரச்சினை குறித்து விரிவாக விவாதம் நடைபெற்றுவருவதைப் பார்க்கிறோம். இந்தக் கண்ணோட்டம் ஓரளவு தெளிவற்றதாய் இருந்த போதிலும் (''தகவல் துறையில் நிலவும் காலனியாதிக்கத்தை ஒழித்துக்கட்டுதல்'' என்று இதனை வருணிப்பதே பொருத்தமாக இருக்கும்), சோஷலிச நாடுகள் அதன் ஏகாதிபத்திய-எதிர்ப்பு, காலனியாதிக்க-எதிர்ப்புத் தன்மையை ஆதரிக்கின்றன; அதே சமயம் மேலைய நாடுகள் இந்தக் கண்ணோட்டத்தை அடியோடு நிராகரிக்கின்றன. சோஷலிச நாடுகளும் வளரும் நாடுகளும் ஒரு பொதுப் போக்கை மேற்கொண்டும், தமது நிலைகளை ஒருங்கிணைத்தும் இந்தப் ''புதிய ஏற்பாட்டிற்காக'' ஐக்கிய நாடுகள் சபைக்குள்ளும், யுனெஸ்கோவுக்குள்ளும் செயலூக்கமுடன் பாடுபட முடியும்.

வரலாற்று ரீதியில் மிகக் குறுகிய காலத்தில் நவநவீன வெகுஜன செய்திப் போக்குவரத்து அமைப்புகளைத் தோற்றுவித்து வளர்ப்பதில் சோஷலிச நாடுகள் ஈட்டியுள்ள நடைமுறை அனுபவம் வளரும் நாடுகளுக்கு அளப்பரும் முக்கியத்துவம் வாய்ந்தது. 1917 ஆம் வருட மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு முன்னர் ரஷ்யாவின் மக்கட் தொகையில் 76 சதத்தினர் எழுத்தறிவற்றவர்களாக (மத்திய ஆசியாவில் ஏறத்தாழ நூறு சதத்தினர்) இருந்தனர் என்பதும், வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள் ஆரம்பக் கட்டத்திலேயே இருந்தன என்பதும் இன்று அனைவரும் அறிந்த சங்கதியாகும். எனினும், சோஷலிச வளர்ச்சிப் பாதையை மேற்கொண்டதன் காரணமாக சோவியத் யூனியன் ஒரு சில பத்தாண்டுக் காலத்திற்குள்ளேயே பெரிதும் ஆற்றல் மிக்க, ஜனநாயக பூர்வமான, பல-தேசிய இன வெகுஜன தகவல், செய்தி தொடர்பு அமைப்பை பலகோடி மக்கள் கொண்ட உலகின் மிகப் பெரிய நாட்டின் எல்லையற்ற பரப்புகளில் கட்டி உருவாக்குவதில் வெற்றி பெற்றுவிட்டது. அதுவும் எத்தகைய அந்நிய உதவியுமின்றி இது சாதிக்கப்பட்டது என்பது இங்கு முக்கியமானது. இதனை சாதிக்க எங்களால் எவ்வாறு முடிந்தது? வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களை அமைப்பதும், நாடு முழுவதற்கும் செய்திப் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும், வானொலிப் பெட்டிகளையும், தொலைக்காட்சிப் பெட்டிகளையும் வழங்குவதும்,

மக்களுக்குச் சொந்தமான செய்திப் போக்குவரத்து சாதனங்களைக் கட்டி வளர்ப்பதும் எங்களால் எவ்வாறு சாத்தியமாயிற்று? இந்த அனுபவம் வளரும் நாடுகளுக்கு மிகுந்த பயனுடையதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த அனுபவத்தை அந்த நாடுகளுடன் தயக்க மயக்கமின்றி, அணுவளவும் சுயநலமின்றி, தங்குதடையின்றி பகிர்ந்து கொள்ள நாங்கள் சித்தமாக இருக்கிறோம். சோஷலிச நாடுகளதும் வளரும் நாடுகளதும் பத்திரிகையாளர்கள் நண்பர்கள் என்ற முறையில், சகாக்கள் என்ற முறையில் அடிக்கடி சந்தித்து கூட்டாக பணியாற்ற வேண்டும்; மகத்தான சக்தி படைத்த வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களை தேசங்களிடையே முன்னேற்றத்தையும், சமாதானத்தையும் வளர்ப்பதற்குப் பயன்படுத்தும் பொதுக் குறிக்கோளை எய்த அவை அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

# சோவியத் யூனியனில் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்கள்

## பத்திரிகைகளும் பதிப்பகங்களும்

கட்சி, மற்றும் பொதுஜன அபிப்பிராயத்தின் உண்மைக் குரலாக ஒலிக்கும் பணியை சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 26-வது காங்கிரஸ் சோவியத் பத்திரிகைகளுக்கு வகுத்துத் தந்துள்ளது. காங்கிரசுக்கு சமர்ப்பித்த சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி அறிக்கையில், அன்றாடத் தகவலை மெய்யாகப் பிரதிபலிக்கும்படி, ஒரு நம்பகமான திசை காட்டிக் கருவியாக செயல்படும்படி 38 கோடிப் பிரதிகள் விற்பனையாகும் நமது பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் லியோனித் பிரெஷ்னேவ் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

பிரசுரத் தொழிலில் உலகில் முன்னணியில் உள்ள நாடு சோவியத் யூனியன்; உலகில் மொத்தம் பிரசுரமாகும் செய்திப் பத்திரிகைகளில் கிட்டத்தட்ட நான்கிலொரு பங்கை அது வெளியிடுகிறது. சோவியத் நாட்டில் 8,000-க்கு மேற்பட்ட செய்திப் பத்திரிகைகள் இருக்கின்றன. அவற்றின் மொத்த விற்பனை 17 கோடி 50 லட்சம் பிரதிகள். அதேசமயம் புரட்சிக்கு முந்தைய ரஷ்யாவில் 856 செய்திப் பத்திரிகைகளே இருந்தன. அவற்றின் விற்பனை 27 லட்சம் பிரதிகள்தான். வேறுவிதமாகச் சொன்னால் சோவியத் ஆட்சிக் காலத்தில் செய்திப் பத்திரிகைகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 10 மடங்கும், விற்பனை 30 மடங்குக்கு அதிகமாகவும் உயர்ந்துள்ளன. சில பத்திரிகைகள் நாடு முழுவதும் விற்பனையாகின்றன. சில பத்திரிகைகள் ஒரு குடியரசுக்குள், வட்டாரத்திற்குள் அல்லது நகரத்துக்குள் விற்பனையாவதோடு சரி, வேறு சில பத்திரிகைகள் ஒரு குறிப்பிட்ட தொழிலை அல்லது துறையைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. பத்திரிகைகளில் பல வகை உண்டு: சில பொது அரசியல் பத்திரிகைகள்; சில குறிப்பிட்ட விஷயங்களில் விசேட கவனம் செலுத்தும் பத்திரிகைகள்; சில வயது வந்த வாசகர்களுக்கான பத்திரிகைகள்; சில இளம் பிராயத்தினர்க்கும் குழந்தைகளுக்குமான பத்திரிகைகள். மிகப் பெரிய மத்தியப்

பத்திரிகைகள் லட்சக் கணக்கான பிரதிகள் விற்பனையாகின்றன. பிராவ்தா (தினசரி விற்பனை, 1 கோடி பிரதிகளுக்கும் அதிகம்), இஸ்வெஸ்தியா, காம்சொமால்ஸ்கயா பிராவ்தா, பயோனீர்ஸ்கயா பிராவ்தா (கிட்டத்தட்ட 1 கோடிப் பிரதிகள்), செல்ஸ்கயா ஷிஸின் (கிராம வாழ்க்கை) த்ருத் (உழைப்பு) கிராஸ்னயா ஸ்வெஸ்தா (சிவப்பு நட்சத்திரம்), சோவெத்ஸ்கயா ரோஸ்ஸியா (சோவியத் ரஷ்யா) சோவத்ஸ்கி, ஸ்போர்த், லித்தரேதுர்னயா கஜெத்தா (இலக்கிய ஏடு), உசிதெல்ஸ்கயா கஜெத்தா (ஆசிரியர் ஏடு), சோவெத்ஸ்கயா தர்கோவிலியா (சோவியத் வர்த்தகம்), சோத்சியலிஸ்திசெஸ்கயா இண்டஸ்த்ரியா (சோஷலிசத் தொழில் துறை). குதோக் (விசில்), சோவெத்ஸ்கயாகல்துரா (சோவியத் கலாசாரம்) முதலிய பத்திரிகைகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

5,000-க்கும் அதிகமான சமூக, அரசியல், இலக்கிய, விஞ்ஞான சஞ்சிகைகளும், குழந்தைகளின் சஞ்சிகைகளும் சோவியத் யூனியனில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் வருடாந்தர விற்பனை 300 கோடிப் பிரதிகளுக்கும் அதிகம். மிகப்பெரிய விற்பனையுள்ள சஞ்சிகைகளில் சமூக, அரசியல் சஞ்சிகைகளை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்; அவை வருமாறு: இருபது லட்சம் பிரதிகளுக்கும் கூடுதலாக விற்பனையாகும் பொலிதி செஸ்கோயே சமூபிரஸோ வனியே (அரசியல் சுயபோதனை); அஜிதேத்தர்; பார்ட்டினயா ஷிஸின் (கட்சி வாழ்க்கை), கொம்மூனிஸ்டு; ஸ்தோரோவியே (ஆரோக்கியம்), ஆகியவற்றின் விற்பனை ஒரு கோடிப் பிரதிகள்; நௌகா இ ஷிஸின் (விஞ்ஞானமும் வாழ்க்கையும்); வோக்ருக் சுவெதா (உலகைச் சுற்றிலும்). யூனியன் குடியரசுகள், மற்றும் சுயாட்சிக் குடியரசுகளின் தேசிய மொழிகளிலும் ஏராளமான சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றன.

சோவியத் யூனியனில் உள்ள தேசங்கள், தேசிய இனங்களின் 55 மொழிகளிலும் (வருடம் 4,000 கோடிக்கும் அதிகமாக விற்பனையாகும் 8,000-க்கு மேற்பட்ட பத்திரிகைகள்), 10 அயல் மொழிகளிலும் (வருடம் கிட்டத்தட்ட 10 கோடிப் பிரதிகள் விற்பனையுள்ள 21 பத்திரிகைகள்) செய்திப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகின்றன.

சோவியத் சமுதாயத்தின் கலாசார வாழ்க்கையை செழுமைப் படுத்துவதிலும், கட்சியின் பிரசாரப் பணிகளை நிறைவேற்றுவதிலும் புத்தக வெளியீடு ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

சோவியத் ஆட்சிக் காலத்தில், புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்திப் பத்திரிகைகளை வெளியிடும் எண்ணற்ற பதிப்பகங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. இவற்றில் மிகப் பெரிய பதிப்பகங்கள் வருமாறு: பொலிதிஸ்தாத் (அரசியல் இலக்கியப் பதிப்பகம்), பிராவ்தா, நௌகா (விஞ்ஞானம்), குதோஸெஸ்த் வென்னயா லித்தரேத்துரா (சிறு கதைகள், நவீனங்கள்), சோவெத்ஸ்கி பிசதெல் (சோவியத் எழுத்தாளர்), புரோஸ் வெஷ்செனியே (கல்வி), வைஸ்கயா

ஸ்கோலா (கல்லூரி), தெத்ஸ்கயா லித்தரேச்சர் (குழந்தைகள் இலக்கியம்) மொலோதயா கிவர்தியா (இளைஞர் படை), சோவெத்ஸ்காயா என்சைக்ளோபெதியா (சோவியத் கலைக்களஞ்சியம்), மிசில் (சிந்தனை), இஸ்வெஸ்தியா (செய்தி), இஸ்குஸ்த்வோ (கலைகள்), மெதித்சினு (மருத்துவம்), புராக்கிரஸ், மிர் (உலகம்), மஷிநோஸ் துரோயெனியே (மெக்கானிகல் இஞ்சினியரிங்), நெத்ரா (கனிச்செல்வம்), டிரான்ஸ்போட், எனெர்ஜியா (மின்விசை), ஸ்த்ராயிஸ்தர்த் (நிர்மாணத் தொழில் பதிப்பகம்), வொயனிஸ்தாத் (ராணுவ இலக்கியப் பதிப்பகம்), புரோபிஸ்தாத் (தொழிற்சங்கப் பதிப்பகம்). சோவியத் பதிப்பகங்கள் மத்திய, குடியரசு, மண்டல, பிரதேச, பிராந்திய மட்டத்தில் அமைந்துள்ளன. இவையன்றி பிரத்தியேகமான பதிப்பகங்களும் உள்ளன. விஞ்ஞான நிலையங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், பெரிய நூலகங்கள், கல்லூரிகள், பொது நிறுவனங்கள் முதலியவற்றில் தனிப் பிரசுரப் பிரிவுகள் இருக்கின்றன. சோவியத் ஆட்சிக் காலத்தில் மொத்தம் 30 லட்சம் புத்தகங்களும், சிறு பிரசுரங்களும் 5 ஆயிரம் கோடிப் பிரதிகளில் வெளியிடப்பட்டிருக்கின்றன. 10-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மட்டுமே (1977-80) ஆயிரம் கோடி புத்தகங்களும், சிறு பிரசுரங்களும் அச்சிடப் பட்டன. இவற்றில் 180 கோடிப் புத்தகங்கள் 1980-ல் வெளியாயின.

பல்வேறு மொழிகளில் புத்தகங்கள் பிரசுரிக்கப்படுகின்றன; அவற்றின் உள்ளடக்கம் செழுமை மிக்கதாகவும், பல்வகைப்பட்டதாகவும் அமைந்துள்ளது. பல்வேறு பொருள்கள் பற்றி உயர்ந்த தரமுள்ள புத்தகங்கள் வெளியிடுவதில் சோவியத் யூனியனிலுள்ள பதிப்பகங்கள் பிரதான கவனம் செலுத்துகின்றன. அரசியல், சமூக, பொருளாதார நூல்கள், அதிலும் முக்கியமாக மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் நூல்கள், கட்சி தஸ்தாவேஜுகள், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் சோவியத் அரசுத் தலைவர்களின் படைப்புகள் முதலியவை மொத்த வெளியீடுகளில் மிகப் பெரும் பங்கு வகிக்கின்றன. சோவியத் சமுதாயத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சி சம்பந்தப்பட்ட தத்துவத்திற்கும், நடைமுறைக்கும், அதே போல் சோவியத் மக்களுக்கு கம்யூனிச போதனை அளிப்பதற்கும் இவை மாபெரும் சேவை செய்கின்றன, சோவியத் மக்களின் 49 மொழிகளிலும், இதர நாடுகளது 41 மொழிகளிலுமாக மொத்தம் 90 மொழிகளில் சோவியத் யூனியனில் மார்க்ஸ், எங்கெல்ஸ் நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. லெனின் நூல்கள் மொத்தம் 118 மொழிகளில் அதாவது சோவியத் மக்களின் 66 மொழிகளிலும், இதர நாடுகளின் 52 மொழிகளிலும் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

சோவியத் பதிப்பக வரலாற்றில் அண்மைக் காலத்தில் சில மிக முக்கியமான நூல்கள் வெளியிடப்பட்டன. 200 தொகுதிகள் கொண்ட உலக இலக்கியத் தொகுப்பு, புராதன இலக்கியத் தொகுப்பு, 50 தொகுதிகள் கொண்ட உலகக் குழந்தைகள் இலக்கியத் தொகுப்பு, சர்வ

தேச வெற்றி நிகழ்ச்சிகள் தொகுப்பு, சோஷலிச நாடுகளின் இலக்கியத் தொகுப்புகள், மற்றும் சோஷலிசம்: அனுபவமும் பிரச்சினைகளும் வர்ய்ப்புகளும், பூர்ஷுவா சித்தாந்த விமர்சனமும் திருத்தல்வாதமும் எனும் தொடர் பதிப்புகள் முதலியவற்றை இவ்வகையில் முக்கிய மாகக் குறிப்பிட வேண்டும்.

எல்லா அறிவுத் துறைகளிலும் ஆராய்ச்சி நூல்களையும், விஞ்ஞானத் தகவல் நூல்களையும், ஜனரஞ்சகமான விஞ்ஞான நூல் களையும் வெளியிடுவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பாடப் புத்தகங்களையும், கையேடுகளையும் வெளியிடுவது மிகவும் முக்கியமானது. இவ்வகையான புத்தகங்கள் ஆண்டுதோறும் 50-க்கு மேற்பட்ட மொழிகளில் மத்திய, குடியரசு, ஸ்தல பதிப்பகங் களாலும், கல்லூரிகளாலும் பிரசுரிக்கப்படுகின்றன.

கதைகளையும் நவீனங்களையும் வெளியிடுவதில், குறிப்பாக இளம் மக்களுக்கும் குழந்தைகளுக்குமான புத்தங்களை வெளியிடுவதில் பிரதான கவனம் செலுத்தப்படுகிறது. பல அயல்நாட்டுப் புத்தகங்கள் மொழி பெயர்த்துப் பிரசுரிக்கப்படுகின்றன; உண்மையில் இதர நாடுகளின் மொழிகளிலிருந்து கதைகளையும் நவீனங்களையும் மொழி பெயர்த்து வெளியிடுவதில் உலகில் சோவியத் யூனியன் முதல் இடம் வகிக்கிறது எனலாம்.

சோவியத் ஆட்சிக் காலத்தில் சோவியத் மக்களின் 89 மொழி களில் உட்பட 155 மொழிகளில் புத்தகங்களும், பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. ஜாராட்சியில் 90 சதவிகித புத்தகங்கள் ரஷ்ய மொழியிலேயே அச்சிடப்பட்டன; ரஷ்யாவில் வாழ்ந்து வந்த பெரும்பாலான மக்களின் மொழிகளில், உதாரணமாக, மொல்தாவியன், கிர்கீஜ், துருக்மெனியன் போன்ற மொழிகளில் புத்தகங்கள் ஏதும் இருக்கவில்லை. 1917 அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு முன்னர் கிர்கீஜியர், பாஷ்கீர், புர்யாத்துகள் முதலான பல சோவியத் தேசிய இனங்களுக்கும், தாகெஸ்தான் மக்களுக்கும், தொலைக் கிழக்கைச் சேர்ந்த மக்களுக்கும் எழுத்து மொழிகூட இல்லை.

தற்போது நாள்தோறும் பல்வேறு பொருள்கள் பற்றி சராசரி யாக 50 லட்சம் புத்தகங்களும், சிறு பிரசுரங்களும் வெளியிடப்படு கின்றன.

சோவியத் யூனியனில் பிரசுரிக்கப்படும் எல்லா வகையான நூல் களையும் பற்றி இச்சிறு நூலில் விவரிப்பது என்பது சாத்தியமல்ல. எனவே, இந்த அத்தியாயத்தில் சோவியத் யூனியனில் செயல்பட்டு வரும் வானொலி, தொலைக்காட்சி அமைப்புகளையும், செய்தி நிறுவனங் களையும் குறித்துக் கூறுவதுடன் நிறுத்திக் கொள்கிறோம்.

## வானொலியும் தொலைக்காட்சியும்

வானொலியும் தொலைக்காட்சியும் பல தலைசிறந்த உலக விஞ்ஞானி களின் முயற்சியால் தோன்றியவை. பொது விஞ்ஞான முன்னேற்றத்

திலிருந்து கனிந்த கனிகள் இவை. வானொலி, தொலைக்காட்சியின் வளர்ச்சிக்கு ரஷ்ய விஞ்ஞானம் பெரும் பங்காற்றியுள்ளது.

1895-ல் அலெக்சாந்தர் பொப்போவ் எனும் ரஷ்ய விஞ்ஞானி புயலை பதிவு செய்யும் கருவி ஒன்றை கண்டுபிடித்தார்—இதனை பிற்கால கம்பியில்லா தந்தி சாதனத்துக்கு ஒரு முன்னோடி எனலாம். அவர் ஒரு கம்பியில்லாத் தந்தி சாதனத்தையும், 1904-ல் பேச்சை ஒலிபரப்பும் சாதனத்தையும் பகிரங்கமாக இயக்கிக் காட்டினார்.

1880-ல் போர்பிரி பகமெத்யேவ் எனும் மற்றொரு ரஷ்ய விஞ்ஞானி உருவப் படங்களைத் தொடர்ந்து ஒளிபரப்பும் சாதனம் ஒன்றை உருவாக்கினார். இதனை அவர் "டெலிபோட்டோகிராபி" எனக் கூறினார்.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க் தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த போரிஸ் ரோசிஸ் என்ற பேராசிரியர் ஒரு மின்னணுவியல் தொலைக்காட்சி அமைப்பு ஒன்றை உருவாக்கினார். இதற்கு காப்புரிமை வேண்டி 1907-ல் ஒரு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தார். 1911-ல் அவர் உருவங்களை வெற்றிகரமாக ஒளிபரப்பி, உலகின் முதலாவது டெலிவிஷன் செட்டை படைத்தார். இதற்கு 18,076 என்ற எண்ணுள்ள லைசென்ஸையும் பெற்றார்.

வானொலியும், தொலைக்காட்சியும் கண்டுபிடிக்கப்பட்டு, அரிய வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களாகப் பரிணமிப்பதற்கு முன்னர் எத்தனை எத்தனையோ பரிசோதனைகளையும், தொழில் நுட்ப அபிவிருத்தியையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனினும் தொழில் நுட்ப ஆற்றலை விட சமூகத் தேவைகளாலேயே பெரும்பாலும் வானொலியும் தொலைக் காட்சியும் தோன்றின எனக் கூற வேண்டும்.

சோவியத் யூனியனில் வானொலியானது அதன் கம்பியில்லாத் தந்தி கட்டத்திலேயே வெகுஜன தகவல் தொடர்பு சாதனமாக வளர்ந்து விட்டது. 1917 அக்டோபர் புரட்சி வெற்றி பெற்ற ஒரு சில தினங்களுக்குள்ளேயே, அதன் வெற்றியை "ரஷ்யாவின் பிரஜைகளுக்கு" அறிவிக்கும் லெனினது வரலாற்றுச் சிறப்புடைய பிரகடனம் ஒலிபரப்பப் பட்டது. 1917 நவம்பர் முதல் சோவியத் அரசாங்கத்தின் ஆணைகளும், பிரதான உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளும் கம்பியில்லாத் தந்தி மூலம் ஒலிபரப்பப் பட்டன. லட்சக் கணக்கான மக்களுக்கு ஒலிபரப்பப்பட்ட இந்த ரேடியோ கிராம்கள் பொதுவாக சி. கியூ என்ற சமிக்கைச் சொல்லுடன் ஆரம்பமாயின. செய்திப் போக்குவரத்து மொழியில் இதற்கு "எல்லோருக்கும்" என்று பொருள். இவற்றில் அநேகம் செய்திகள் துண்டுப் பிரசுரங்களாகவும் சுவரொட்டிகளாகவும் அச்சிடப்பட்டு பொது இடங்களில் வைக்கப்பட்டன. அச்சமயம் கம்பியில்லாத் தந்திதான் நாட்டின் தொலைதூரப் பிரதேசங்களுக்கு தகவலை விரைவாகவும், முறையாகவும் அனுப்புவதற்கான ஒரே சாதனமாக இருந்தது.

1919 நவம்பரில், நிஷ்னிநோவ்கோராடிலிருந்த (இப்போது கோர்க்கி) ஒரு ரேடியோ ஆய்வுக்கூடம் ரேடியோ டெலிபோன் பேச்சுக்களை அனுப்பி சோதனை செய்யத் தொடங்கிற்று. டெலிவிஷனை உருவாக்குவதிலும் இந்த ஆய்வுக்கூடம் ஈடுபட்டிருந்தது. அந்நாட்களில் டெலிவிஷன் "ரேடியோ டெலஸ்கோப்" என அழைக்கப்பட்டு வந்தது.

ரஷ்யன் டெலிகிராப் ஏஜன்சியின் (ரோஸ்டா) "வாய் மொழிப் பத்திரிகையை" ஒலிபரப்புவதற்காக 1921 ஜூன் 17-ல் மாஸ்கோவின் ஆறு சதுக்கங்களில் ஒலி பெருக்கிகள் அமைக்கப் பட்டன. தினமும் இரவு 9 முதல் 11 வரை இந்த ஒலி பெருக்கிகள் கடைசிச் செய்திகளையும், அதிகார பூர்வமான அறிக்கைகளையும், ஜனரஞ்சகமான உரைகளையும் ஒலிபரப்பின. வெகுஜன தகவல் தொடர்பு சாதனம் என்ற முறையில் இதனை வானொலியின் இரண்டாவது ஜெனனம் எனலாம்.

1922-ல், காமின்டர்ன் வானொலி நிலையம் மாஸ்கோவில் செயல் படத் தொடங்கிற்று; அமெச்சூர் வானொலி நடவடிக்கைகள் பரந்த அளவில் பெருக இது துணை புரிந்தது. 1924 இறுதிவாக்கில் நாட்டின் வானொலி அமெச்சூர்கள் ஒன்று சேர்ந்து வானொலி நேயர்கள் கழகத்தை அமைத்துக் கொண்டனர். நாடெங்கிலும் வானொலி அமைப்புகளைக் கட்டி உருவாக்குவதற்கு இந்தக் கழகம் விரிவான பணியை மேற்கொண்டது.

1924 அக்டோபர் 1-ல் "அனைவருக்குமான ரேடியோ" எனும் நிறுவனம் அமைக்கப் பட்டது. இரண்டு மாதங்களுக்குப் பிறகு "ரேடியோ ஒலிபரப்பு" எனும் ஜாயிண்ட் ஸ்டாக் கழகம் ஏற்படுத்தப் பட்டது.

இருபதாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் சோவியத் ஒலிபரப்புகளை அயல்நாடுகளிலும் கேட்க முடிந்தது. மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் நடைபெற்ற அக்டோபர் புரட்சி ஆண்டுவிழாக் கொண்டாட்டங்களின் நேர்முக வருணனை ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளில் 1925 நவம்பர் 7-ல் அயல்நாட்டு நேயர்களுக்காக ஒலிபரப் பப்பட்டது.

கிராமப்புறங்களில் கலாசார வளர்ச்சிக்கு துணைபுரியும் ஒரு முக்கிய சாதனமாக வானொலி அபிவிருத்தி அடைந்து வந்தது. விவசாயிகளுக்கான நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கென்று "ரேடியோ-ஒலிபரப்புக் கழகம்" ஒரு விசேட பிரிவை ஏற்பாடு செய்தது. கிட்டத் தட்ட இதே காலத்தில் அநேக யூனியன் குடியரசுகளில் முறையான ரேடியோ ஒலிபரப்பு தொடங்கிற்று. உதாரணமாக, 1925 நவம்பரில் பைலோரஷ்ய வானொலி நிலையம் செயல்பட ஆரம்பித்தது; ஒரு வருடத்திற்குப் பிறகு அஜெர்பைஜான் ரேடியோ நிலையம் இயங்க ஆரம்பித்தது. 1925 டிசம்பரில் "அகில உக்ரைன் தொழிலாளர் வானொலிப் பத்திரிகையின்" முதலாவது இதழ் கார்கோவில்

ஒலிபரப்பப்பட்டது. 1927 ஜனவரியில் தாஷ்கெண்டைச் சேர்ந்த பிராவ்தா வோஸ் தோகா எனும் செய்திப் பத்திரிகை இதே போன்றதொரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. 1927 மார்ச்சில் தாஷ்கெண்டு வானொலி நிலையம் உஸ்பெக், துருக்மென், கஜாக், தாஜிக் ஆகிய நான்கு மொழிகளில் ஒலிபரப்பத் தொடங்கிற்று. 1927 நவம்பர் 7-ல் தத்தாரியாவில் முதலாவது வானொலி நிலையம் இயங்க ஆரம்பித்தது.

1925 ஏப்ரலில் "ரேடியோ பயோனிர்," "ரேடியோ ஒக்தியா பிரியனோக்" என்ற பெயரில் குழந்தைகளுக்கு முறையாக ரேடியோ நிகழ்ச்சிகள் ஒலிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டது.

1922-23-ல் முதலாவது வானொலிக் கச்சேரிகள் நடத்தப்பட்டன; முறைப்படி இசை ஒலிபரப்புகள் நடைபெறுவதற்கு இவை அடிகோலின.

1928-ல் "வானொலிப் பல்கலைக் கழகம்" என்ற பெயரில் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் கல்வி நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. 1929 ஆம் ஆண்டுக்குள் தொழிலாளிகள், விவசாயிகள், கம்யூனிஸ்டுக் கட்சி ஊழியர்கள், இளம் கம்யூனிஸ்டுக் கழகத்தினர் ஆகியோருக்காக அநேக "வானொலிப் பல்கலைக் கழகங்கள்" தோன்றிவிட்டன. நாட்டில் வானொலி நேயர்களின் எண்ணிக்கை 60,000-ஐ எட்டிற்று. 1930 ஆகஸ்டில் வானொலிப் பல்கலைக் கழகங்கள் பல்கலைக் கழகத்துக்கு அப்பாற்பட்ட வானொலிக் கல்விக் கழகமாகப் புனரமைக்கப் பட்டன; இதன் கிளைகள் கார்கோவ், வொரோனெஜ், சுவெர்த்லோவ்ஸ்க் முதலிய நகரங்களில் அமைக்கப்பட்டன.

1941–45 ஆம் வருட மகத்தான தேச பக்த யுத்தத்தின் போது, நாஜி படையெடுப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் மக்களை அணிதிரட்டுவதில் சோவியத் ரேடியோ முக்கிய பங்கு வகித்தது. கொரில்லா வீரர்களுக்கும், நாஜிகளால் ஆக்கிரமித்துக் கொள்ளப் பட்ட பிரதேசங்களில் இருந்த மக்களுக்கும் விசேட ஒலிபரப்புகள் செய்யப்பட்டன.

1931 அக்டோபர் 1-ல் மாஸ்கோவில் தொலைக்காட்சி ஒளி பரப்புகள் தொடங்கின. 1937-ல் மாஸ்கோவிலும் லெனின்கிராடிலும் புதிய, முன்னிலும் முன்னேற்றமடைந்த டெலிவிஷன் கேந்திரங்கள் கட்டப்பட்டன.

தொலைக்காட்சியை அபிவிருத்தி செய்யும் பணி யுத்தத்தால் தடைபட்டது. எனினும் யுத்தத்திற்குப் பிறகு மாஸ்கோ தொலைக்காட்சிக் கேந்திரம்தான் ஐரோப்பாவில் முதலில் தனது பணியை மீண்டும் ஆரம்பித்தது—1945 மே 5 ஆம் தேதி அது திரும்பவும் செயல்படத் தொடங்கிற்று. இதற்குப் பிறகு விரைவிலேயே, நாடு முழுவதிலும் தொலைக்காட்சிக் கேந்திரங்களை நிர்மாணிக்கும் பணி ஆரம்பமாயிற்று. சோவியத் யூனியனில் தயாரிக்கப்படும் டெலிவிஷன் செட்டுகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. 1950-ல் நாட்டில் மொத்தம் 4,000 டி. வி. பெட்டிகள்தான் இருந்தன. ஆனால் அவற்றின்

எண்ணிக்கை 1960-ல் சுமார் 50 லட்சத்தையும், 1970-ல் கிட்டத் தட்ட 3 கோடி 50 லட்சத்தையும், 1981 ஜனவரியில் 7 கோடி 50 லட்சத்தையும் எட்டிற்று. இவற்றில் 65 லட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் அடங்கும்.

இதே சமயம், வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கையும் தொடர்ந்து பெருகி வந்தது. 1940-ல் ரேடியோ செட்டுகளின் எண்ணிக்கை 70 லட்சமாக இருந்தது; இது 1965-ல் 8 கோடி 95 லட்சமாகவும், 1970-ல் 12 கோடி 96 லட்சமாகவும், 1975-ல் 17 கோடி 77 லட்சமாகவும், 1981 ஜனவரியில் 21 கோடி 63 லட்ச மாகவும் உயர்ந்தது.

## வானொலி, தொலைக்காட்சி ஒழுங்கமைப்பு

சோவியத் யூனியனில் வனொலியும் தொலைக்காட்சியும் அரசால் நடத்தப்படுகின்றன. தொலைக்காட்சிக்கும் வானொலிக்குமான சோவியத் அமைச்சரவையின் அரசாங்கக் கமிட்டியால் அவை நிர்வகிக்கப்படுகின்றன. சோவியத் யூனியன் அமைச்சரவையின் ஓர் உறுப்பினரே இக் கமிட்டியின் தலைவர். மத்தியத் தொலைக் காட்சித் துறையும், மத்திய ரேடியோ ஒலிபரப்பின் உள்நாட்டு, வெளிநாட்டுத் துறையும் கமிட்டியின் பொறுப்பில் உள்ளன.

மத்தியத் தொலைக் காட்சித் துறையில் பின்கண்ட பிரதான பிரிவுகள் அடங்கியுள்ளன: தகவல், அரசியல், கல்வி, இலக்கிய, நாடக நிகழ்ச்சிகள், இசை, கிராமியக் கலை, ஜனரஞ்சகமான விஞ்ஞான, கல்வி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் பிரிவு, குழந்தைகளுக்கும் இளம் மக்களுக்குமான நிகழ்ச்சிகள், மாஸ்கோ மற்றும் மாஸ்கோ பிராந்தியத்துக்கான நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள். இந்தப் பல்வேறு பிரிவுகளின் பணி நிகழ்ச்சித் தயாரிப்புப் போர்டின் தலைவரால் கண்காணிக்கப்படுகிறது. மத்திய டெலிவிஷன் துறை ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய மாஸ்கோ தொலைக் காட்சிக் கேந்திரத்தை நடத்துகிறது.

''எக்ரான்'' திரைப்பட நிறுவனம் தொலைக்காட்சித் திரைப்படங்களைத் தயாரித்துத் தருகிறது. இந்த நிறுவனத்துக்கென சொந்த டாகுமெண்டரி, முழுநீளத் திரைப்பட ஸ்டுடியோக்களும், இசைத் திரைப்பட ஸ்டுடியோவும் உள்ளன. தொலைக்காட்சிக்கும் வானொலிக்குமான சோவியத் யூனியன் அமைச்சரவையின் அரசாங்கக் கமிட்டி தரும் ஆர்டர்களின்பேரில் நாட்டின் திரைப்பட ஸ்டுடியோக்கள் ஆண்டுதோறும் 100-க்கு அதிகமான முழுநீளப் படங்களைத் தயாரித்துத் தருகின்றன.

மத்திய ரேடியோ ஒலிப்பரப்பின் உள்நாட்டுத் துறையில் பின்கண்ட முக்கிய பிரிவுகள் அடங்கியுள்ளன: தகவல், அரசியல், கல்விப் பிரிவு, குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள், இளம் மக்களுக்கான நிகழ்ச்சிகள், இலக்கிய, நாடக, இசை நிகழ்ச்சிகள், மாஸ்கோவுக்கும்

மாஸ்கோ பிராந்தியத்துக்குமான நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள். அரசாங்க ரேடியோ ஒலிபரப்பு மற்றும் ஒலிப்பதிவு நிலையம்தான் மத்திய வானொலித் துறையின் தொழில் நுட்பப் பணிமனையாகும்.

மத்திய டெலிவிஷன் துறையைத் தவிர யூனியன் குடியரசுகளிலும், சுயாட்சிக் குடியரசுகளிலும் 122 தொலைக்காட்சிக் கேந்திரங்கள் உள்ளன. இந்தக் கேந்திரங்கள் நவநவீன தொழில்நுட்ப வசதிகளையும், மத்திய டெலிவிஷன் துறையில் இருப்பவை போன்ற அதே பிரதான பிரிவுகளையும் பெற்றுள்ளது. இவற்றில் 79 கேந்திரங்களிலிருந்து 800-க்கும் அதிகமான பெரிய நகரஙகளுக்கும் சிறிய நகரங்களுக்கும் வண்ண ஒளி பரப்பு செய்யப்படுகிறது.

இன்று 23 கோடிப் பேர் அதாவது சோவியத் மக்கட் தொகையில் 86 சதத்தினர் பிரதான டெலிவிஷன் சேவைத் துறைப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். கிட்டத்தட்ட ஒவ்வொரு சோவியத் குடும்பத்திலும் தொலைக்காட்சி பெட்டி இருக்கிறது. 1978 முதல், மத்தியத் தொலைக்காட்சிக் கேந்திரத்தின் எல்லா நிகழ்ச்சிகளுமே வண்ணத்தில் ஒளி பரப்பப்படுகின்றன.

சோவியத் தொலைக்காட்சி அமைப்பில் 3,174 டெலிவிஷன் ஒளி பரப்பு நிலையங்களும், ஏராளமான கேபிள் மற்றும் அஞ்சல் மார்க்கங்களும், செய்திப் போக்குவரத்துத் துணைக்கோள்களும் அடங்கி உள்ளன. உலகிலேயே தேச வியாபகமான விண்வெளி செய்திப் போக்குவரத்து அமைப்பை முதன் முதலில் உருவாக்கிய நாடு சோவியத் யூனியன்தான்; சைபீரியா, தொலை வடக்கு, தொலைக் கிழக்கு, மத்திய ஆசியா முதலிய பகுதிகளுக்கு இது தொலைக்காட்சி ஒளிபரப்புகளை அஞ்சல் செய்கிறது. ''மோல்னியா,'' ''ராதுகா,'' ''கொரிஸோன்த்'' செய்திப் போக்குவரத்துத் துணைக்கோள்கள், 86 ''ஆர்பிட்டா'' தரை நிலையங்கள், ஏராளமான ''மார்ஸ்'' நிலையங்கள், 10 ''இன்டர்ஸ்பூத்னிக்'' நிலையங்கள், கூட்டு உபயோகத்துக்கான எண்ணற்ற தொலைக்காட்சி ரிசீவர் நிலையங்கள் இந்த அமைப்பில் இடம் பெற்றுள்ளன. ''எக்ரான்'' செய்திப் போக்குவரத்து அமைப்பைச் சேர்ந்த நிலையங்கள் சைபீரியாவிலும், தொலைவடக்கிலும் 800-க்கு மேற்பட்ட இடங்களில் உள்ளன. ''மாஸ்க்வா'' செய்திப் போக்குவரத்து அமைப்பானது செய்திப் போக்குவரத்து செயற்கைத் துணைக்கோள்களிலிருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அதிக மக்கட் தொகை இல்லாத சின்னஞ்சிறு பிரதேசங்களுக்கு அஞ்சல் செய்கிறது. சிறிது காலத்துக்கு முன்பு ''ஸ்டேட்சியனர்'' அமைப்பைச் சேர்ந்த செய்திப் போக்குவரத்து செயற்கைத் துணைக்கோள்கள் விண்வெளியில் செலுத்தப்பட்டன. மாஸ்கோ ஒலிம்பிக் பந்தயங்களின்போது பல நாடுகளுக்கு நிகழ்ச்சிகளை ஒளி பரப்புவதற்காக இந்த செயற்கைத் துணைக்கோள்கள் பயன்படுத்தப்பட்டன. தற்போது ''ஆர்பிட்டா,'' ''மாஸ்க்வா'' அமைப்புகளின் மூலமாக மத்திய டெலிவிஷன் கேந்திரத்

திலிருந்து நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்வதற்கு இவை பயன்படுத்தப் படுகின்றன.

ரேடியோ ஒலிபரப்புத் துறை சோவியத் நாட்டின் பிரதேசம் முழுவதற்கும் சேவை செய்கிறது. நாட்டின் கம்பிவழி-வானொலி அமைப்பு உலகிலேயே மிகப் பெரியது. அதன் ஒட்டுமொத்த நீளம் சுமார் 20 லட்சம் கிலோ மீட்டர்; 200-க்கு மேற்பட்ட நகரங்கள் பல-சானல் கம்பிவழி ஒலிபரப்பு வசதிகளைப் பெற்றுள்ளன.

சோவியத் யூனியனிலுள்ள எல்லாப் பிராந்திய கேந்திரங்களிலும், பெரிய நகரங்களிலும் மத்திய ரேடியோ, குடியரசு சர்வீசுகள் தவிர, அவற்றின் சொந்த ரேடியோ ஒலிபரப்பு சர்வீசுகளும் இயங்கி வருகின்றன. "கம்பி வழி—ரேடியோ ஒலி பரப்பு வசதிகளைத் துரித மாக அமைக்க வேண்டும்" என்ற சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் தீர்மானத்துக்கு இணங்க மூன்று சானல்களில் கம்பி வழி—ரேடியோ ஒலிபரப்பு வசதிகளை நிறுவுவதற்கான பணி நடைபெற்று வருகிறது. அகில யூனியன் வானொலியின் முதல் நிகழ்ச்சி முதலாவது சானல் மூலமும், "மயாக்" நிகழ்ச்சிகள் இரண்டாவது சானல் மூலமும், உள்ளூர் நிகழ்ச்சிகள் மூன்றாவது சானல் மூலமும் ஒலிபரப்பப்படும். கம்பி வழி—ரேடியோ ஒலிபரப்பு முறை சோவியத் யூனியனில் ஏறத்தாழ 600 நகரங்களிலும், ஜனத்தொகை மிகுந்த பிரதேசங்களிலும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது; தற்போது கிராமப் புறங்களிலும் புகுத்தப்பட்டு வருகிறது. கம்பி வழி—ரேடியோ ஒலிபரப்பு மத்திய, ஸ்தல ரேடியோ நிலையங்களிலிருந்து ஏக காலத்தில் ஒலிபரப்பப்படும் மூன்று நிகழ்ச்சிகளிலிருந்து வானொலி நேயர்கள் தமக்குப் பிடித்தமானதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு வகை செய்கிறது. ஏக காலத்தில் ஒலிபரப்பப்படும் மூன்று நிகழ்ச்சிகள் நின்றதும், முதலாவது அகில யூனியன் நிகழ்ச்சிகளிலிருந்தும் ஸ்தல நிகழ்ச்சிகளிலிருந்தும் சில பகுதிகளைக் கொண்ட ஒரு கலப்பு நிகழ்ச்சியை கம்பி வழி-ரேடியோ ஒலிபரப்புகிறது. கம்பி வழி—ரேடியோ செட்டுகள் வைத்திருப்பவர்கள் மாதம் 50 கோபெக்குகள் கட்டணமாக செலுத்துகின்றனர்.

ஆலைகள், தொழிற்சாலைகள், கூட்டுப் பண்ணைகள், அரசாங்கப் பண்ணைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், பள்ளிக்கூடங்கள், நிர்மாணத் திட்ட நிலையங்கள் முதலியவை தமது சொந்த ரேடியோ நிலையங்களை நடத்துகின்றன.

யூனியன் குடியரசுகள், சுயாட்சிக் குடியரசுகள், சுயாட்சிப் பிராந்தியங்கள், பிரதேசங்கள் ஆகியவற்றில் நடைபெறும் ரேடியோ ஒலிபரப்பிலும், தொலைக் காட்சி ஒலிபரப்பிலும் பெரும் பகுதி ஸ்தல மொழிகளில் நடத்தப்படுகின்றன. இன்று டெலிவிஷன் ஒளிபரப்பு சோவியத் யூனியனின் 43 மொழிகளிலும், ரேடியோ ஒலிபரப்பு 69 மொழிகளிலும் நடத்தப்படுகிறது.

நாட்டில் மொத்தம் 162 ஸ்தல ரேடியோ, தொலைக்காட்சி கமிட்டிகள் உள்ளன; இவற்றில் 113 கமிட்டிகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்கின்றன (உதாரணமாக தாகெஸ்தானில் ரேடியோ ஒலிபரப்பு ஒன்பது மொழிகளில் நிகழ்த்தப்படுகிறது).

## மத்திய ரேடியோ ஒலிபரப்பு அமைப்பின் உள்நாட்டுப் பிரிவு

மத்திய ரேடியோ ஒலிபரப்பு அமைப்பின் உள்நாட்டுப் பிரிவில் மொத்தம் 178.4 மணி ஒலிபரப்பு நேரம் கொண்ட மூன்று அடிப்படை சானல்கள் உள்ளன.

முதலாவது சானல் நாடு முழுவதற்கும் பிரதானமானது. சராசரி மொத்த தினசரி ஒலிபரப்பு நேரமான 20 மணிகளில் ஏறத்தாழ 50 சதவிகிதம் செய்தி அறிக்கைகளுக்காகவும், சமூக, அரசியல் விவகாரங்கள் பற்றிய நடப்பு தகவல்களுக்காகவும், குழந்தைகள், இளம் மக்களுக்கான நிகழ்ச்சிகளுக்காகவும் ஒதுக்கப்படுகிறது. பரந்த ஜனப் பகுதியினருக்கான இந்த முதலாவது சானலில் நாட்டின் அரசியல், பொருளாதார, கலாசார வாழ்க்கை பற்றியும், சர்வதேச விவகாரங்கள் பற்றியும் சித்திரிக்கும் நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன.

பிரதான தகவல் நிகழ்ச்சிகள் வருமாறு: சமீபத்திய உலகச் செய்திகள் (24 மணி நேரத்தில் 10 ஒலிபரப்புகள்), ''பிராவ்தா பத்திரிகையின் விமர்சனம்'', ''மத்திய செய்திப் பத்திரிகைகளின் விமர்சனம்'', ''காலமும், நிகழ்ச்சிகளும், மக்களும்'', ''புகழ்மிகு உழைப்பு சாதனைகளின் தொகுப்பு'' ஆகிய நிகழ்ச்சிகள் சோவியத் யூனியனில் மக்களின் வாழ்க்கையும், பணியும் பற்றி விரிவாகக் கூறுகின்றன. ''சர்வதேச டைரி'', ''சர்வதேச நிகழ்ச்சிகள் பற்றிய வட்ட மேஜை விவாதம்'', ''சர்வதேச நிலைமை: கேள்வியும் பதிலும்'', 'சோஷலிச நாடுகளில்'', ''நாடுகளும் கண்டங்களும்'' ஆகிய பகுதிகளில் உலக நிகழ்ச்சிகள் எடுத்துரைக்கப்படுகின்றன. ''சட்டமும் மனிதனும்'', இளம் படை வீரர்களுக்கும் பொதுவாக இளம் மக்களுக்குமான நிகழ்ச்சிகள், ''நையாண்டி ஒலிபெருக்கி'', 'ஆரோக்கியம்'', ''வானொலி நாடகங்கள்'', ''வானொலி தபால், பெட்டி'', ''காலை வணக்கம்!'' முதலியவை மிகவும் பிரபலமான பகுதிகள்.

லெனினுடைய துணைவியாரும், அனுபவ மிக்க புரட்சியாளருமான நதெஸ்தா குருப்ஸ்கயாவின் பரிந்துரையின் பேரில், ரேடியோ ஒலிபரப்பின் ஆரம்ப நாட்களில், பல்வேறு சமூகப் பிரிவினரையும் வயதுப் பிரிவினரையும் மனத்திற்கொண்டு நிகழ்ச்சிகள் தயாரிக்கப் பட்டன. தற்போது தொழிலாளர்கள் (''தொழிலாளர் நண்பகல்''), விவசாயிகள் (''நிலமும் மக்களும்''), குழந்தைகள் (''ரேடியோ நான்னி''), இளம் மக்கள் (''யுனோஸ்த்'' வானொலி நிலையம் அல்லது ''இளைஞர்'' வானொலி நிலையம்), குறிப்பாக கிராமப்புற இளைஞர்கள், தொழிற் பயிற்சிப் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், படை

வீரர்கள், பைகால்—அமுர் இருப்புப் பாதை நிர்மாணிகள் முதலியோருக்காக இப்போது பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. முதல் சானலில் ஏராளமான இலக்கிய நிகழ்ச்சிகளும், நாடக, இசை, விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.

வெவ்வேறு கால மண்டலங்கள் இருப்பதால் அகில யூனியன் (அல்லது மத்திய) வானொலி தனது முதல் சானலில் நான்கு நகல் சானல்களைச் சேர்த்துள்ளது. 1980-ல் நான்காவது நகல் சானல் புகுத்தப்பட்டதன் பயனாய் மத்திய டெலிவிஷன் சர்வீசின் முதல் சானல் நிகழ்ச்சிகளைப் பெறும் மண்டலங்களும், அகிய யூனியன் வானொலி சர்வீசின் முதல் சானல் நிகழ்ச்சிகளை பெறும் மண்டலங்களும் முதல் தடவையாக ஒன்றிணைந்தன. வேறுவிதமாகச் சொன்னால் சோவியத் யூனியனின் எந்தப் பகுதியிலும் வாழும் தொலைக்காட்சி நேயர்களும் வானொலி நேயர்களும் வானொலி நிகழ்ச்சிகளையும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் உகந்த முறையில் ஒன்றிணைந்து பெற முடியும். முன்பு மத்தியப் பிராந்தியங்களில் மட்டும்தான் இது சாத்தியமாக இருந்தது. 1980-ல் ஒலிம்பிக் தொலைக்காட்சி, வானொலித் தொகுதி ஆரம்பமான பிறகு, ரேடியோ, டெலிவிஷனின் முதல் சானலில் நகல் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டதன் பயனாய் ஒலி, ஒளியின் தரம் குறிப்பிடத்தக்க அளவு அபிவிருத்தி அடைந்தது. நகல் நிகழ்ச்சிகள் சைபீரியாவின் தொலைதூரப் பிரதேசங்களுக்கும், சோவியத் தொலைக் கிழக்குக்கும், மற்றும் கஜாக்ஸ்தான், சோவியத் மத்திய ஆசியக் குடியரசுகள் ஆகியவற்றுக்கும் அஞ்சல் செய்யப்பட்டன.

இரண்டாவது சானலான ''மயாக்'' அல்லது "கலங்கரை விளக்கம்'' இரவு பகலாக செயல்படுகிறது; நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் ஏக காலத்தில் தகவலையும் இசையையும் கொண்டு செல்கிறது. "மயாக்கின்'' சமிக்கைப் பண்ணை உள்நாட்டு வெளிநாட்டு நிகழ்ச்சிகள் பற்றிய சுருக்கமான அறிக்கைகளுடன் அரை மணி நேரத்துக்கு ஒரு முறை கேட்கலாம். 4 அல்லது 5 நிமிடங்கள் நீடிக்கும் இந்த செய்தி அறிக்கைகளைத் தொடர்ந்து மிகச் சிறந்த ரஷ்ய இசை, அயல் நாட்டு இசை, நையாண்டித் துணுக்குகள், ஓரங்க நகைச்சுவை நாடகங்கள் முதலியவை இடம் பெறுகின்றன. நாள்தோறும் ''மயாக்'' 2.5 மணி நேரம் பல திசைகளிலிருந்து வருவது போல் தோன்றும் ஸ்டீரியோ இசையை அஞ்சல் செய்கிறது.

மூன்றாவது சானலில் இலக்கிய நிகழ்ச்சிகளும், இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. இந்த சானல் தினம் 17 மணி நேரம் இயங்குகிறது; சாஸ்திரீய இசை, நவீன சிம்போனி இசை, ஆபேரா இசை நிகழ்ச்சிகளையும், மற்றும் நாடக, இலக்கிய நிகழ்ச்சிகளையும் இது ஒலி பரப்புகிறது. இதுவல்லாமல், பதிவு செய்யப்பட்ட ஸ்டீரியோ இசையையும் நாள்தோறும் சுமார் 3 மணி நேரம் இந்த சானல் அஞ்சல்

செய்கிறது. முதலாவது சானலில் ஒலிபரப்பப்படும் மிகச் சிறந்த நிகழ்ச்சிகள் நேயர்களின் வேண்டுகோளின் பேரில் இந்த சானலில் மறு ஒலிபரப்பு செய்யப்படுகின்றன. சோவியத் யூனியனின் மிகப் பெரும் பாலான பகுதிகளில் மூன்ருவது சானலில் வரும் நிகழ்ச்சிகளைக் கேட்க முடியும்.

நான்காவது சானல் எல்லா வகையான இசையையும் ஒலிபரப்பு கிறது. இசைக் கச்சேரிகளின் நேரடி ஒலிபரப்பும் இதில் அடங்கும். இந்த சானல் தினம் ஒன்பது மணி நேரம் இயங்குகிறது. இதில் ஐந்து மணி நேரம் ஸ்டீரியோ இசை ஒலிபரப்பப் படுகிறது.

ஐந்தாவது சானல் நாள் முழுவதும் செயல்படுகிறது. பல்வேறு சமூக—அரசியல் கலாசார விஷயங்கள் இதில் இடம் பெறுகின்றன. மீனவர், மாலுமிகள், ஆர்க்டிக் ஆராய்ச்சியாளர்கள், மற்றும் வெளிநாடுகளிலுள்ள சோவியத் பிரஜைகள் இந்த சானலினுல் பெரிதும் பயனடைகின்றனர். இந்த சானல் மூலம் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் ரஷ்ய மொழி மாணவர்களை வெகுவாகக் கவரக் கூடியவை.

ஒலிபரப்பு முறைகள் இடையருது அபிவிருத்தி அடைந்து வருகின்றன; சோவியத் மக்களின் மேன்மேலும் வளர்ந்துவரும் கலாசாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் வானெலி முக்கிய பங்காற்றுவதற்கு இது துணை புரிகிறது. கடந்த சில ஆண்டுகளில் வானெலி நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் பெறும் பிரதேசங்களின் பரப்பு மேலும் அதிகரித்துள்ளது; ஒலிப்பரப்பின் தரமும் மேம்பட்டுள்ளது.

கிராமப்புறத்தில் கிட்டும் வானெலி வசதிகள் அபிவிருத்தி செய்வதற்கு எவ்வளவோ செய்யப்பட்டுள்ளது; கிராம மக்களுக்காக விசேட நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன.

## முக்கிய வானெலி நிகழ்ச்சிகள்

**நடப்பு விவகாரங்களும் செய்திகளும்:** ஓர் அரசின் வலிமை மக்களின் அரசியல் விழிப்பை பொறுத்துள்ளது என்று லெனின் கூறினர். முன்னேற்றமடைந்த சோஷலிச நிலைமைகளில் வாழ்க்கை லெனினது இந்தக் கோட்பாட்டுக்கு மேலும் முக்கியத்துவத்தை அளித்துள்ளது. மக்கள் விஷயம் தெரிந்தவர்களாக, எதையும் தாங்களே எடைபோடக் கூடியவர்களாக, தங்களது நடவடிக்கைகளால் ஏற்படும் விளைவுகளை நன்கு உணர்ந்தவர்களாக இருந்தால்தான் ஒரு நாடு உண்மையிலேயே பலமிக்கதாக இருக்க முடியும். ''சித்தாந்த, அரசியல், கல்விப் பணியை மேலும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து'' சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி ஒரு தீர்மானத்தை ஏற்றது. இத்தீர்மானப்படி, மக்களின் அக்கறைக்குரிய பல்வேறு விஷயங்கள் பற்றி அவர்களுக்கு எடுத்துரைப்பதிலும், அந்தப் பிரச்சினைகளை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளும்

படி செய்வதிலும் மக்கள் பிரசார அமைப்புகளும், வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களும் மிக முக்கிய பங்காற்ற வேண்டும்.

அகில யூனியன் வானொலியின் பல்வேறு பிரிவுகளது கொள்கை எத்தகைய நோக்கத்தைக் கடைப்பிடிக்கிறது? உள்நாட்டு, வெளி நாட்டு நிகழ்ச்சிகளை சோவியத் பிரஜைகள் நன்கு தெரிந்து கொள்ள உதவி செய்வதையும், கம்யூனிச நிர்மாணம் எனும் பொது லட்சியத் திற்கு அவர்கள் அதிகப்பட்ச அளவு பங்காற்றும்படி ஊக்குவிப் பதையும், நாட்டின் பொருளாதார வலிமை மேலும் பெருகுவதற்கு அத்தியாவசியமான விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தை வளர்ப்பதிலும் தேசியப் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்று வதிலும் தமது சொந்தப் பங்கெடுப்பின் சமூக முக்கியத்துவத்தை அவர்கள் உணர்வதற்கு துணைபுரிவதையும் நோக்கமாகக் கொண் டுள்ளது இந்தக் கொள்கை. அகில யூனியன் வானொலி தொழிலாளி வர்க்கம், கூட்டுப்பண்ணை விவசாயிகள், அறிவுத் துறையினர் ஆகியோரின் வாழ்க்கை பற்றிய ஒரு முழுப் படப்பிடிப்பினை வழங்கு கிறது; பொருளாதார, விஞ்ஞான, கலாசாரத்துறைகளில் காணப்படும் மிக முக்கியமான சாதனைகளை சோவியத் மக்களுக்குப் பரிச்சயம் செய் கிறது; தனிப்பட்ட பிரஜைகள், உழைப்புக் கூட்டமைப்புகள் ஆகியோரின் வெற்றிகளையும் அவர்களின் அரிய அனுபவத்தையும் வெளிப்படுத்திப் பிரபலமாக்குகிறது; இந்த அனுபவத்தின் முக்கியத் துவத்தைப் புலப்படுத்துகிறது; லட்சக்கணக்கான மக்கள் இந்த அனுப வத்தின் பால் ஆர்வம் காட்டும்படிச் செய்கிறது; அது நடைமுறையில் பயன்படுத்தப்படுவதற்கு வகை செய்கிறது. தவிரவும், அகில யூனியன் வானொலி முக்கிய உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரச்சினைகளை நேயர் களின் பரிசீலனைக்குக் கொண்டு வருகிறது; விமர்சனத்தையும் சுயவிமர்சனத்தையும் ஊக்குவிக்கிறது; நமது முன்னேற்றப் பாதையில் எதிர்ப்படும் இடையூறுகளை அகற்ற உதவுகிறது; தேசபக்தியையும், சோஷலிச சர்வ தேசியத்தையும், தேசிய வெறிப்போக்குகளை சகித்துக் கொள்ளாத பண்பையும் ஊட்டி வளர்க்கிறது; நேயர்கள் பகைமை யும் அவதூறும் மிக்க பிரசாரத்தின் உண்மை சொரூபத்தைக் காணத் துணை புரிகிறது; உலகின் முதலாவது சோஷலிச நாட்டினது மகத்தான சாதனைகளையும், அங்கு நடைபெற்று வரும் நிகழ்ச்சிப் போக்குகளையும் அனைத்து நாடுகளையும் சேர்ந்த மக்களுக்கு எடுத்தியம்புகிறது.

"லட்சக் கணக்கான மக்களுக்கான லெனினியப் பல்கலைக் கழகம்" எனும் வாராந்தர நிகழ்ச்சி ஒன்று ஒலிபரப்பப்படுகிறது. மக்களுக்கு அரசியல் போதனை அளிப்பதிலும், மார்க்சிய–லெனினிய சித்தாந்தத்தைப் பரப்புவதிலும், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி கடைப்பிடித்தொழுகும் அயல்துறை, உள்துறைக் கொள்கையை மக்களுக்கு விளக்கிக் கூறுவதிலும் இந்த நிகழ்ச்சி முக்கியப் பங்காற்று கிறது. அரசாங்கத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், கட்சி

நிர்வாகிகள், பிரபல விஞ்ஞானிகள், முன்னணித் தொழிலாளர்கள் முதலியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர். பொதுவாக இந்த நிகழ்ச்சியை புகழ்பெற்ற சமூகவியலாளர்கள் அறிமுகம் செய்கின்றனர். "லட்சக் கணக்கான மக்களுக்கான லெனினியப் பல்கலைக் கழகத்தின் தபால் பெட்டி" எனும் நிகழ்ச்சியை மாதம் ஒரு முறை சோவியத் ரேடியோ ஒலிபரப்புகிறது; சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாற்றையும் கொள்கையையும் பற்றி வானொலி நேயர்களும், பிரசாரகர்களும் கேட்கும் கேள்விகளுக்கு இந்தப் பகுதியில் பதிலளிக்கப்படுகிறது.

"காலமும், நிகழ்ச்சிகளும், மக்களும்" எனும் நிகழ்ச்சி தினசரி ஒலிபரப்பப்படுகிறது; இதுவன்றி "புகழ்மிகு சாதனைகள்", "நாடும் மக்களும்" ஆகிய நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்படுகின்றன. நாட்டின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்ச்சிகள், சோஷலிச உழைப்புப் போட்டியின் முன்னேற்றம், முன்னுரிமை பெற்ற நிர்மாணத் திட்ட நிலையங்கள், நாட்டின் மிகச் சிறந்த தொழிலாளர்களது அனுபவம், சோவியத் மக்களது சுபிட்ச நலனை மேம்படுத்துவது சம்பந்தப்பட்ட, அவர்களது கலாசாரத் தரங்களை உயர்த்துவது சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் முதலியவை குறித்து இந்த நிகழ்ச்சிகளில் விவாதிக்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சிகளைத் தயாரிப்பவர்கள் வானொலி நேயர்களின் பரந்த நலன்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, அவற்றில் நிருபர்கள் ஸ்தலத்திலிருந்து அனுப்பும் செய்திகளையும், விவரங்களையும், சிறு சிறு குறிப்புகளையும் சேர்க்கின்றனர். "நாடும் மக்களும்" எனும் வானொலி மலர் நாட்டையும், விவசாயிகளின் உழைப்பையும் நேசிக்கும், மதிக்கும் உணர்வை நேயர்களிடையே ஊட்டி வளர்ப்பதில் பிரதான கவனம் செலுத்துகிறது.

மகத்தான தேசபக்த யுத்தத்தில் நாஜிகள் மீது பெற்ற வெற்றியின் 35-வது ஆண்டுவிழாவையும், லெனினது 110-வது பிறந்த தினவிழாவையும், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26-வது காங்கிரசையும் (பிப்ரவரி—மார்ச் 1981) பற்றிய நிகழ்ச்சிகளில் சோவியத் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களும், நடப்பு அவசரப் பிரச்சினைகளும், சோவியத் மக்களின் வீரஞ்செறிந்த கடந்தகால வரலாறும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. காங்கிரசின் முடிவுகளுக்கு சோவியத் வானொலியில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டது; அவை பற்றி அநேகமாக நாடு முழுவதும் விவாதம் நடைபெற்றது.

கம்யூனிஸ்டுக் கட்சியின் மாபெரும் திட்டங்களை நிறைவேற்றுவதில் தங்களுக்கு நேரடிப் பொறுப்புண்டு என்பதை உணர்ந்துள்ள சோவியத் மக்களிடமிருந்து அகில யூனியன் வானொலிக்கும், ஏனைய வெகுஜன தகவல் தொடர்பு சாதனங்களுக்கும் ஏராளமான கடிதங்கள் வருகின்றன. வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களின் மீது மக்கள் பெரும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதையும், அவற்றைத் தமது சொந்த சாதனங்களாகக் கருது

கிறார்கள் என்பதையும், தமது கருத்துகளை வெளிப்படுத்துவதற்கான மேடையாக அவற்றைப் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் இவை யாவும் காட்டுகின்றன.

விமர்சனம் என்பது ரேடியோ ஒலிபரப்பில் ஒரு முக்கியமான பகுதி; இதற்கு மக்களிடையே மிகுந்த ஆதரவு உள்ளது. ''நையாண்டி ஒலிபெருக்கி'' எனும் பகுதியில் சர்ச்சைக்குரிய பல்வேறு பிரச்சினைகள் விவாதிக்கப்படுகின்றன. இத்தகைய நிகழ்ச்சிகள் குறித்து செய்யப்படும் விமர்சனங்களைத் தொடர்ந்து அவற்றில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளை நேயர்கள் தமது கடிதங்களில் பாராட்டி எழுதுகின்றனர்.

''சர்வதேச டைரி,'' ''சர்வதேச வாழ்க்கையின் அவசர அரசியல் பிரச்சினைகள்'', ''நாடுகளும் கண்டங்களும்,'' ''சர்வதேச நிலைமை: கேள்வியும் பதிலும்,'' ''சோஷலிச நாடுகளில்'' போன்ற சர்வதேச அரசியல் பற்றிய நிகழ்ச்சிகளில் பெரும் ஆர்வம் காட்டப்படுகிறது.

அகில யூனியன் வானொலியின் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ''காலை வணக்கம்!'', ''உங்கள் கடிதம்'', '''மயாக்கில்' மாலைநேரச் செய்திகள்'' ஆகியவை மிகவும் பிரபலமானவை என்பதை நேயர் கடிதங்கள் காட்டுகின்றன.

இதர தகவல் சாதனங்களைவிட வானொலிக்கு ஒரு மிகப் பெரிய அனுகூலம் உண்டு: சோவியத் யூனியனிலும் வெளிநாடுகளிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் அது வழங்க முடியும் என்பது தான் அந்த அனுகூலம். அகில யூனியன் வானொலியில் இது தகவல் பிரிவின் பொறுப்பு. இந்தப் பிரிவு ''மயாக்'' சர்வீசில் 20 செய்தி அறிக்கைகளையும், 56 தகவல் வெளியீடுகளையும் ஒலிபரப்புகிறது.

செய்திச் சுருள்கள், முக்கிய நடப்பு நிகழ்ச்சிகள் பற்றிய சுருக்கமான விமர்சனங்கள், நேர்முக வருணனைகள், பேட்டிகள், நிபுணர்களின் உரைகள் முதலியவற்றின் மூலம் பல்வகையான தகவல்கள் கிட்டுகின்றன. இவை மிகவும் இரத்தினச் சுருக்கமாக உள்ளன. ''மயாக்'' சர்வீசில் ''கடைசிச் செய்திகள்'' பற்றிய மிகவும் நீண்ட விமர்சனமேகூட மூன்று நிமிடங்களுக்கு மேல் செல்லுவதில்லை. இத்தகைய சுருக்கமான, அதேசமயம் விளக்கமான தகவல்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றி ஒரு முழுப் படப்பிடிப்பைப் பெறுவதை சாத்தியமாக்குகின்றன. இத்தகைய ஒலிபரப்புகளில் தொழிலாளர்கள், கூட்டுப் பண்ணை விவசாயிகள், கட்சி நிர்வாகஸ்தர்கள், அரசாங்க அதிகாரிகள், பொருளாதார நிர்வாகிகள், கலாசார ஊழியர்கள் முதலியார் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

**நாடக, இலக்கிய, இசை நிகழ்ச்சிகள்:** சோவியத் யூனியனின் தொலைதூரப் பகுதிகளில் வாழும் மக்கள் மிகச் சிறந்த உலக கலை, இலக்கியப் படைப்புகளைப் பரிச்சயம் செய்துகொள்ள வானொலி துணை புரிகிறது; வேறுவிதமாகச் சொன்னால் அவர்கள் தமது இல்லங்களிலேயே பிரபல

எழுத்தாளர்கள், கவிஞர்கள், நடிகர்கள், கலை இயக்குநர்கள், விமர்சகர்கள் முதலியோரைச் சந்திக்கின்றனர் எனலாம். உலகில் எழில் மிக்கவற்றை மக்களுக்கு வானொலி அறிமுகம் செய்கிறது; அவர்கள் கலையைப் போற்றவும், அழகியல் ரசனையை வளர்த்துக் கொள்ளவும் அது உதவி செய்கிறது.

பல-தேசிய இன சோவியத் கலை, இலக்கியம், தொன்மைமிக்க ரஷ்ய, உலக இலக்கியங்கள், வெளிநாடுகளைச் சேர்ந்த இன்றைய முற்போக்கு இலக்கியங்கள், நாடகங்கள் ஆகியவை பற்றிய நிகழ்ச்சிகள் இலக்கிய, நாடகப் பிரிவைச் சேர்ந்த ஊழியர்களால் தயாரிக்கப்படுகின்றன.

இந்த சர்வீசில் ஒலிபரப்பப்படும் பிரதான நிகழ்ச்சிகள் வருமாறு: "ஒலிபெருக்கி முன்னர் எழுத்தாளர்கள்," "மதிப்பீடுகள்," "புதிய இலக்கிய ஒலிப்பதிவுகள்", "புதிய புத்தக விமர்சனங்கள்," "பழைய கலை, இலக்கியச் செல்வங்கள்," "வெளிநாடுகளில் கலையும் இலக்கியமும்" "சொற்கள் உலகில்," "வானொலியில் நகைச்சுவை", "கவிதை நோட்டுப் புத்தகம்", "சோவியத் கவிஞர்களின் படைப்புகள்," "கவிஞர்கள் தமது கவிதைகளை இசைக்கிறார்கள்", "வானொலி நாடகங்கள்", "நாடகமும் வாழ்க்கையும்", "குழந்தைகளுக்கு லெனினைப் பற்றி", "சோவியத் நாடகக் களஞ்சியம்", "இலக்கிய மன்றம்."

இந்த நிகழ்ச்சிகளின் பிரதான நோக்கங்களில் ஒன்று சோவியத் எழுத்தாளர்களதும், அயல்நாட்டு எழுத்தாளர்களதும் படைப்புகளைப் பிரபலப்படுத்துவதாகும். அதிலும் குறிப்பாக "மதிப்பீடுகள்" எனும் நிகழ்ச்சி வானொலி நேயர்களின் பேராதரவைப் பெற்றுள்ளது. புகழ் பெற்ற நாடக நடிகர்களும், திரைப்பட நடிகர்களும் இதில் பங்கேற்கின்றனர்.

நாட்டின் பொது வாழ்க்கையிலும், கலாசார வாழ்க்கையிலும் முக்கி மான தினங்கள் குறித்து விசேட நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 26-வது காங்கிரஸ் நடைபெறுவதற்கு முன்னரும், நடைபெற்றுவந்தபோதும் பல கலைப் பிரமுகர்களும் இலக்கிய வல்லுநர்களும் வானொலி நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்வதற்கு அகில யூனியன் ரேடியோ வாய்ப்பளித்தது.

மக்களுக்கு சித்தாந்த போதமும், அரசியல் கல்வியும் அளிப்பதில் இசை நிகழ்ச்சிகளும் ஒரு பகுதியாக விளங்குகின்றன; இவை ரஷ்ய, சோவியத், உலக இசைச் செல்வத்தை அவர்களுக்கு அறிமுகப் படுத்தி வைக்கின்றன; அவர்களிடம் கலை ரசனையை ஊட்டி வளர்க்கின்றன. இசை நிகழ்ச்சிகள் மிகவும் விரிவானவை; ஆபேரா முதல் கிராமியப் பாடல்கள் வரையிலும், சிம்பொனி முதல் மெல்லிசை வரையிலும் இவற்றில் இடம் பெறுகின்றன.

இதுவல்லாமல், இந்நிழ்ச்சிகளில் சாஸ்திரிய இசை முதலாய் பிரபல சோவியத் மற்றும் அயல்நாட்டு இசையமைப்பாளர்கள்,

இசை இயக்குநர்கள், பாடகர்கள் முதலியோரின் வாழ்க்கை வரலாறுகள் ஈருக பல்வேறு விஷயங்களைக் கேட்கலாம். மேலும், முழுநீள இசை நாடகங்கள், ஓரங்க இசை நாடகங்களின் நேரடி அஞ்சல்கள், சோவியத் பாட்டுக் கச்சேரிகள், பின்னணி விவரங்களுடன் அயல்நாட்டுப் பாட்டுகள், இசை விளக்கத் துடன் சோவியத் யூனியனது மக்களின் கலாசாரம் பற்றிய உரைகள், சோவியத் யூனியனிலும் வெளிநாடுகளிலும் இசை வாழ்க்கை பற்றிய தகவல்கள் முதலியனவும் இந்த நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பப்படுகின்றன. இந்த நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு வானொலி நேயர்களின் கடிதங்கள் பெரிதும் உதவுகின்றன.

அகில யூனியன் ரேடியோவுக்கும் மத்திய டெலிவிஷனுக்கும் சொந்த இசைக் குழுக்கள் உண்டு. கிராண்ட் சிம்பொனி ஆர்கெஸ்ட்ரா, தி அகாடமிக் ஆர்கெஸ்ட்ரா ஆல் ரஷ்யன் போல்க் இன்ஸ்ட்ரு மெண்ட்ஸ், தி கிராண்ட் அகாடமிக் காய்ர், தி சோவியத் சாங் என்செம்பிள் ஆகியவை இவற்றில் முக்கியமானவை. இந்தக் குழுக்கள் சோவியத் யூனியனிலும், இதர நாடுகளிலும் சுற்றுப்பயணம் செய்கின்றன. இவற்றின் கச்சேரிகள் ஐரோப்பாவிலுள்ள ஏராளமான ரேடியோ, டெலிவிஷன் கம்பெனிகளால் அஞ்சல் செய்யப்படுகின்றன.

இளம் மக்களுக்கும் குழந்தைகளுக்குமான நிகழ்ச்சிகள் ''யுனோஸ்த்'' (இளைஞர்) ரேடியோ நிலையத்தின் மற்றும் குழந்தைகள் பகுதியின் சம்பந்தப்பட்ட பிரிவுகளால் தயாரிக்கப்படுகின்றன. சமூக-அரசியல், இலக்கிய, நாடக இசை நிகழ்ச்சிகள் இவற்றில் அடங்கும். இள, தலைமுறையினரின் சித்தாந்த, தேசபக்த, சர்வதேசிய, தார்மிக, அறநெறி மற்றும் அழகியல் கல்வியை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டவை இந்த நிகழ்ச்சிகள்.

இளம் மக்களுக்கான பிரதான நிகழ்ச்சிகள் வருமாறு: நாள் தோறும் ஒன்றேமுக்கால் மணி மாலைநேர நிகழ்ச்சி (வாரம் ஐந்து முறையும் மறுநாள் காலை மறு ஒலிபரப்புகளும்); ''ஹல்லோ, தோழா!'' சனிக்கிழமைகளில் ஒலிபரப்பப்படுகிறது; ''யுனோஸ்த்'' ரேடியோ நிலையத்தின் தபால் பெட்டி'' (தினம் அரை மணி நேரம்); ''பைகால்-அமூர் ரயில்பாதை நிர்மாணிகளுக்கு தினசரி ஒலிபரப்பப் படும் நிகழ்ச்சி.''

''அக்டோபர் புரட்சியின் வாரிசுகள்'', ''புதிய தொழிலாளர் தலைமுறை'', ''மாணவர்களின் உழைப்பு செமெஸ்டர்'', ''பைகால்—அமூர் ரயில் பாதையை நிர்மாணித்து வருகிறோம்'', ''இளம் மக்களின் அஞ்சல் முகவரிகள்'', ''ஹல்லோ, தோழா!'' ஆகிய நிகழ்ச்சிகளுக்கு இளம் பிராயத்தினரின் தார்மிக, சித்தாந்த போதனை அடிநாதமாக அமைந்துள்ளது. சோவியத் நாட்டில் சோவியத் மக்களது புகழ்மிகு புரட்சிகர உழைப்புப் பாரம்பர்யங்களின் வழித் தோன்றல்களாக விளங்கும் இளைஞர்கள், யுவதிகளின் வாழ்வையும் பணியையும் இவை சித்திரிக்கின்றன. பைகால்—அமூர் ரயில்

பாதையை நிர்மாணித்து வருபவர்களுக்கு ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சியில், கிழக்கு சைபீரியாவில் ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் தொலைவுக்கு வியாபித்திருக்கும் இந்தப் பிரம்மாண்டமான நிர்மாணத் தளத்தில் பணி எவ்வாறு முன்னேறி வருகிறது என்பதை மத்திய ரேடியோ எடுத்துரைக்கிறது. இளம் தொழிலாளர்களுக்கு ஒலி பரப்பப்படும் நிகழ்ச்சிகள் பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கின்றன; தொழிலாளர்களின் தொழில்கள், தொழிற் பயிற்சிப் பள்ளிகள், இளம் தொழிலாளர்களின் வாழ்க்கை, பணி, ஓய்வு பொழுது போக்குகள், உழைப்புக் கூட்டமைப்புகளில் உருவாக்க வேண்டிய இணக்கமான ஆளுமை ஆகியவை பற்றி விவாதிக்கின்றன. சோஷலிச உழைப்பு வீரர் விருது பெற்ற முன்னணித் தொழிலாளர்கள் சம்பந்தமாக ஏராளமான நிகழ்ச்சிகள் அஞ்சல் செய்யப்படுகின்றன. கிராமப்புற இளைஞர்களின் வாழ்க்கை குறித்தும் இந்த நிகழ்ச்சிகள் சிலவற்றில் விவரிக்கப்படுகிறது. ''இளம் மக்களின் அஞ்சல் முகவரிகள்'' எனும் நிகழ்ச்சி இளம் பிராயத்தினரிடையே மிகுந்த பிரபலம் பெற்றிருக்கிறது; இளம் வானொலி நேயர்களிடமிருந்து வரும் எண்ணற்ற கடிதங்கள் இதனைக் காட்டுகின்றன; உரையாடல் வடிவத்தில் வழங்கப்படும் இந்த நிகழ்ச்சி இளம் பிராயத்தினரின் வாழ்க்கையில் எதிர்படும் மிக முக்கிய பிரச்சினைகள் பற்றிப் பரிசீலிக்கிறது.

மாலை நேர நிகழ்ச்சிகள் பெரும்பாலும் இளைஞர்களின் அழகியல் கல்வி சம்பந்தப்பட்டதாகவே அமைந்துள்ளன. மிகச் சிறந்த பண்டைய இலக்கிய, இசைச் செல்வங்கள், இன்றைய சோவியத் கலை, இசை, இலக்கியப் படைப்புகள் முதலியவற்றை இவை பிரபலப் படுத்துகின்றன. ''இளம் மக்களுக்கு முதல் தர கலை'', ''எழில் கொஞ்சும் உலகத்திலே'' போன்ற நிகழ்ச்சிகள் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் உலகக் கலாசாரக் கருவூலங்களை அறிமுகம் செய்து வைக்கின்றன. ''யுனோஸ்த்'' ரேடியோ நிலையம் ஒலி பரப்பும் ''இளைஞர் படைப்புகள்'', ''கிராமியக் கலை பற்றி இளைஞர்களுக்கு'', ''உங்கள் மதிப்பீடு'' முதலான நிகழ்ச்சிகளில் கலை, இலக்கியம் பற்றிய பிரச்சினைகள் விவாதிக்கப்படுகின்றன.

வானொலியானது கோடானு கோடி சோவியத் மக்களுக்கு அவர்களது குழந்தைப் பருவம் முதலே நண்பனாக விளங்கி வருகிறது. எழுதப் படிக்கத் தெரியாத சிறு குழந்தைகளிடம் மட்டுமன்றி, பள்ளிப்படிப்பை விரைவில் பூர்த்தி செய்ததும் தங்கள் எதிர்காலத் திட்டம் என்ன என்பதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பவர்களிடையிலும் அகில யூனியன் வானொலிக்கு ஏராளமான ரசிகர்கள் உள்ளனர். ''இளம் பயோனீர்களின் சூரியோதயம்'', ''ஒத்த வயது கூட்டாளிகள்'' போன்ற பாரம்பரியமான நிகழ்ச்சிகள் நாட்டின் வரலாற்றையும், சோவியத் யூனியனின் இன்றைய சாதனைகளையும், தேசம் பெருமையும் பெருமிதமும் கொள்ளும் இளைஞர்களையும் யுவதிகளையும் பற்றி விவரிக்கின்றன.

குழந்தைகளுக்கான ஒலி பரப்புகளின் மிக முக்கிய நோக்கங்களில் ஒன்று இலக்கிய, இசை நிகழ்ச்சிகள் மூலம் இளம் வானொலி ரசிகர்களுக்கு அழகியல் போதனை அளிப்பதாகும். இத்தகைய நிகழ்ச்சிகளில் சில வருமாறு: "எனக்குப் பிடித்த புத்தகம்", "'மாலிஷ்' வானொலி நாடக மன்றம்", "இலக்கிய நாயகர்களின் நாட்டில்," "குழந்தைகளுடன் எழுத்தாளர்கள் பேசுகிறார்கள்," "குழந்தைகள் வானொலி நாடக மன்றம்," "தபால்காரர் ஒரு கடிதம் கொண்டு வந்திருக்கிறார்," "இசை மந்திரவாதிகளின் நாட்டில்," "இசைப் பெட்டி," "ஏன், எப்படி?" "கானக ரேடியோ மலர்," "நமது நாட்டின் வழியே," "புகழ்பெற்ற காப்டன்கள் மன்றம்."

பள்ளிக்கூடப் பாடத் திட்டத்துடன் நெருக்கமாகப் பிணைந்த நிகழ்ச்சிகளையும் அகில யூனியன் ரேடியோ ஒலிபரப்புகிறது. இந்த நிகழ்ச்சிகள் பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களையோ, வகுப்புப் பாடங்களையோ அப்படியே ஒலிபரப்புவதில்லை; ஆசிரியரின் இடத்தை சுவீகரித்துக் கொள்வதும் இந்நிகழ்ச்சிகளின் நோக்கமில்லை; அதற்கு மாறாக பள்ளிக்கூடத்தில் மாணவர்களின் அறிவை வளமும் செழுமையும் படுத்துவதற்கு இவை ஒரு வகையான செவிப்புலன் சாதனமாக விளங்குகின்றன. உதாரணமாக, மனிதகுல வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்து வந்தோரின் வாழ்க்கை போன்ற வரலாற்றுப் பாடங்கள் நாடக வடிவத்தில் அளிக்கப்படுகின்றன. "ஒரு மத்திய காலப் பள்ளியில்", "ஒரு நிலப் பிரபுத்துவ எஸ்டேட்டில்" ஆகிய நிகழ்ச்சிகளை இவ்வகையில் முக்கியமாக குறிப்பிடலாம்.

வானொலியில் விளையாட்டுப் போட்டிகளுக்கு நிறைய இடம் தரப்படுகிறது. "தயாராக இரு! புறப்படு!" என்னும் நிகழ்ச்சி அகில யூனியன் விளையாட்டுப் பந்தயங்களையும், சோவியத் விளையாட்டுப் போட்டி வீரர்களின் ஒப்பற்ற சாதனைகளையும் எடுத்துக் கூறுகிறது.

பெற்றோர்களுக்கென்று தனி நிகழ்ச்சிகள் உண்டு. அவை வருமாறு: "குழந்தைகளைப் பற்றி வயது வந்தோர்க்கு", "குடும்பமும் பள்ளிக்கூடமும்", "சமூகக் கடமை, தேசபக்த உணர்வில் குழந்தைகளை வளர்த்து ஆளாக்குதல்", "குழந்தைகளின் உழைப்பு போதனையில் குடும்பம் ஆற்றும் பங்கு." விஞ்ஞானிகள், அனுபவமிக்க ஆசிரியர்கள் போன்றோர் இந்த நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்கின்றனர். வானொலி நிலையத்தில் உள்ள குழந்தைகளுக்கான பிரிவைச் சேர்ந்த ஊழியர்கள் அவர்களை வளர்த்து ஆளாக்கும் பிரச்சினைகளில் ஈடுபாடு கொண்டுள்ள சகல நிறுவனங்களுடனும், நிலையங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளனர்.

அகில யூனியன் வானொலிக்கு நாள்தோறும் வரும் எண்ணற்ற கடிதங்களிலிருந்து குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்குமான நிகழ்ச்சிகள் எவ்வளவு பிரபலம் பெற்றுள்ளன என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

விளையட்டுப் போட்டிகளைப் பற்றிய ஒலிபரப்புகள்: வானொலி நேரத்தில் கணிசமான பகுதியை இவை எடுத்துக் கொள்கின்றன. விளையாட்டுப் பந்தயங்களின் நேரடி வருணனைகள், விளையாட்டுப் போட்டி செய்திகள், விமர்சனங்கள், விளையாட்டுப் போட்டிகளைப் பற்றிய கடைசிச் செய்திகள், ''மயாக்'' விளையாட்டுப் போட்டி ஒலிபரப்புகள் முதலியவை இந்த நிகழ்ச்சிகளில் அடங்கும். ஞாயிற்றுக் கிழமைகளில் ''விளையாட்டுப் போட்டி வானொலி மஞ்சரி'' எனும் நிகழ்ச்சியையும், வார நாட்களில் ''உங்களுக்கு காலை உடற் பயிற்சிகள்'', ''வேலை நேரத்தில் உடற்பயிற்சிகள்'' (காலை 11 மணிக்கு), ''காலம், நிகழ்ச்சிகள், மக்கள்'' எனும் ஒலிபரப்புக்கான விளையாட்டுப் போட்டிச் செய்திகள், அயல்நாட்டு நேயர்களுக்காக ''சோவியத் விளையாட்டுப் போட்டி'' எனும் வானொலி மலர், ''கால் பந்தாட்ட விமர்சனம்'' ஆகிய நிகழ்ச்சிகளையும் அகில யூனியன் ரேடியோ ஒலி பரப்புகிறது.

சோவியத் மற்றும் உலக விளையாட்டுப் போட்டி வரலாற்றில் 1980-ல் மாஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்கள் ஒரு பொன்னேடு அத்தியாயமாக அமைந்தன. எல்லாத் தேசங்களும் சமாதானத்துடனும் நட்புறவுடனும் வாழவே ஆர்வம் கொண்டுள்ளன என்பதை இந்தப் பந்தயங்கள் காட்டின; இன்றைய விளையாட்டுப் போட்டிகளின் மிக உயர்ந்த தரங்களைப் புலப்படுத்தின. அதியற்புத ஒழுங்கமைப்பிலும், அடையப் பெற்ற விளையாட்டுப் போட்டி சாதனைகளிலும், அங்கு அமைக்கப்பட்ட மிகச் சிறந்த மின்னணுவியல் சாதனங்களிலும், பந்தயங்களில் கலந்து கொண்டவர்களுக்கும் அவற்றைக் காண வந்திருந்த விருந்தினர்களுக்கும் வழங்கப் பட்ட பல்வேறு வகையான செழுமை மிக்க கலாசார நிகழ்ச்சி களிலும் மாஸ்கோ ஒலிம்பிக் பந்தயங்களுக்கு உலக வரலாற்றில் ஈடு இணையில்லை என்பதை அனைவருமே ஒப்புக் கொள்கின்றனர். மாஸ்கோ ஒலிம்பிக்குக்கு என்று பிரத்தியேகமாக நிர்மாணிக்கப்பட்ட ஒரு விசேட தொலைக்காட்சி—வானொலித் தொகுதியால் இந்தப் பந்தயங்கள் அஞ்சல் செய்யப்பட்டன. சோவியத் யூனியனிலிருந்து ஒளி பரப்பப் பட்ட மாஸ்கோ ஒலிம்பிக் நிகழ்ச்சிகளை எல்லாக் கண்டங்களிலும் சுமார் நூற்றைம்பது கோடிப் பேர் கண்டு மகிழ்ந்தனர். ரேடியோ, கேபிள், மற்றும் புவித்துணைக் கோள்களின் உதவியுடன் 20 வண்ண டெலிவிஷன் சானல்கள் மூலமும், 50 வானொலி சானல்கள் மூலமும் இந்த நிகழ்ச்சிகள் அஞ்சலாயின.

''சோவியத் விளையாட்டுப் போட்டி வீரர்களின் மகத்தான சாதனைகளை மாஸ்கோ ஒலிம்பிக் தெள்ளத் தெளிவாகப் புலப்படுத் திற்று. எனினும், நாம் எப்போதும் விளையாட்டுப் போட்டி சாதனை களில் மட்டுமே அக்கறை செலுத்தி வந்ததில்லை, உடற்பயிற்சிக்கும் விளையாட்டுப் போட்டிக்கும் வெகுஜனத் தன்மை அளிப்பதிலும் நாம் மிகுந்த ஆர்வம் காட்டி வந்திருக்கிறோம். இந்தத் துறையில்

நாம் கண்டுள்ள முன்னேற்றம் கண்கூடானது. என்றாலும் பெரும் பாலோருக்கு விளையாட்டுப் போட்டி இன்னமும் ஒரு கேளிக்கை யாகவே இருந்து வருகிறது. இந்த நிலைமை மாற வேண்டும். மக்களில் பெரும்பகுதியினரின், குறிப்பாக குழந்தைகளின் அன்றாட வாழ்க்கையில் உடற்பயிற்சி ஒரு பகுதியாக அமைய வேண்டும்.'' இவ்வாறு 26-வது கட்சிக் காங்கிரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் அறிக்கை கூறுகிறது. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் இந்த தாக்கீது அகில யூனியன் வானொலியின் விளையாட்டுப் போட்டி பத்திரிகையாளர்களுக்கு ஒரு வழிகாட்டு நெறியாக அமைந்துள்ளது.

## அயல்நாடுகளுக்கு ரேடியோ ஒலிபரப்பு

மாஸ்கோ ரேடியோவும், யூனியன் குடியரசுகளிலுள்ள வானொலி நிலையங்களின் அயல்நாட்டுப் பிரிவுகளும் 77 அந்நிய மொழிகளில் தமது நிகழ்ச்சிகளை ஒலி பரப்புகின்றன. இவ்வாறு இவை தினம் ஒலி பரப்பும் மொத்த நேரம் 262 மணிகளாகும்.

சோவியத் யூனியனின் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் குறித்து விரிவான தகவல்களை வழங்குவதும், எல்லா முக்கிய சர்வதேசப் பிரச்சினைகளிலும் சோவியத் நிலையை விளக்குவதும், சோவியத் யூனியனது உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள் பற்றி அயல்நாட்டு மக்களுக்குத் தவறான செய்திகளைத் தரும் முதலாளித்துவ நாடுகளது வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களின் பிரசாரத்தை எதிர்த்து முறியடிப்பதும் சோவியத் ரேடியோவின் பிரதான நோக்கம் எனலாம்.

1981 பிப்ரவரி 23-ல் மாஸ்கோ ரேடியோ சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 26-வது காங்கிரசின் திறப்பு விழா நிகழ்ச்சியை ஒலி பரப்பிற்று. இந்த ஒலி பரப்பு 70 மொழிகளில் நடைபெற்றது. ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் துவக்க நாள் கூட்டத் தொடரின் நேரடி ஒலி பரப்பு நிகழ்ந்தது.

பிரபல சோவியத் அரசியல், பொது வாழ்வுப் பிரமுகர்கள், விஞ்ஞானிகள், தொழிலாளர்கள், கூட்டுப் பண்ணை விவசாயிகள், எழுத்தாளர்கள், மாணவர்கள், அயல்நாட்டு விருந்தினர்கள் முதலியோர் மாஸ்கோ ரேடியோ நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

மாஸ்கோ ரேடியோ அயல்நாட்டு வானொலி நிறுவனங்களுடன் விரிவான தொடர்புகளை வளர்த்து வருகிறது. இந்த நிறுவனங்கள் பலவற்றுடன் மாஸ்கோ ரேடியோ ஒப்பந்தங்கள் செய்துள்ளது; இந்த ஒப்பந்தங்களின்படி அது நிகழ்ச்சிகளையும், சொற்பொழிவு களையும், இசைப் பதிவுகளையும் பரிமாறிக் கொள்கிறது. வானொலி, தொலைக்காட்சி உட்பட கல்வி, கலாசாரம், விஞ்ஞானம் ஆகிய துறை

களில் பரிமாற்ற ஒப்பந்தங்களை சோவியத் யூனியனும் இந்தியாவும் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை செய்து கொள்கின்றன.

நேயர்களின் கடிதங்கள் அடிப்படையில் அமைந்த நிகழ்ச்சிகளும் உண்டு. ''தபால் பெட்டி'', ''நேயர்களுடன் உரையாடல்'', ''நீங்கள் கேட்டவை'' முதலியவை இத்தகைய நிகழ்ச்சிகளாகும். விசேட நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு அவை மாணவர்கள், இளம் மக்கள், ரேடியோ அமெச்சூர்கள், தபால் தலைகள் தயாரிப்போர், ரஷ்ய மொழி மாணவர்கள் முதலியோருக்கு ஒலி பரப்பப்படுகின்றன.

பகைவர்களின் அவதூறுகளுக்கும் பொய்ப் பிரசாரத்திற்கும் பதிலளிப்பது சோவியத் வானொலி, தொலைக்காட்சி சர்வீசுகளின் பணியில் ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. ''அரசியல், சித்தாந்த, போதனைப் பணியை மேலும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்'' குறித்து சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானம் ''ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது கைக்கூலிகளும் செய்யும் சித்தாந்த சீர்குலைவுக்கு உடனடியாக தக்க பதிலடி தர வேண்டிய அவசியத்தை'' வலியுறுத்திற்று.

சர்வதேச நிலைமை பெரிதும் மோசமடைந்துவரும் வேளையில், பதற்றத் தணிவைக் குலைக்கவும் ''கெடுபிடிப் போரை'' புதுப்பிக்கவும் ஏகாதிபத்திய வட்டாரங்கள் முயற்சி செய்துவரும் நேரத்தில் இந்தப் பணி விசேட முக்கியத்துவம் பெறுகிறது. ஏகாதிபத்தியக் கொள்கை வழியைத் தொடர்ந்து, ''மனோதத்துவ யுத்தமுறை'' மூலமும், அப்பட்டமான சோவியத் எதிர்ப்பு நடவடிக்கைள் மூலமும் சித்தாந்தப் போராட்டம் உக்கிரமடைகிறது. சோவியத் யூனியனுக்கும், சோஷலிச நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கும் ஒலி பரப்புவதற்காக புதிய சக்தி வாய்ந்த ரேடியோ நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அயல்நாடுகளுக்கு ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளை மேலும் ஆற்றல் மிக்கவையாக ஆக்குவதற்கு சோவியத் யூனியன் அரசாங்க வானொலி, தொலைக்காட்சிக் கமிட்டி அண்மையில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது; தனது தகவல் துறையையும் புனரமைத்தது. 1980 ஏப்ரல் முதல் மாஸ்கோ ரேடியோவின் உலக சர்வீஸ் இரவு பகலாக ஆங்கிலத்தில் ஒலி பரப்புகிறது. உலகெங்கிலும் இதனை ஏராளமானோர் கேட்கின்றனர். இந்த சர்வீஸ் 11 செய்தி அறிக்கைகளை ஒலி பரப்புகிறது. இவற்றில் சில செய்தி அறிக்கைகள் இரவில் அஞ்சல் செய்யப் படுகின்றன.

மாஸ்கோ ரேடியோவானது செய்திகளை ஒலிபரப்பும் தரம் பெரிதும் அபிவிருத்தி அடைந்துள்ளது. இன்று முக்கிய நிகழ்ச்சிகளை முதலில் ஒலிபரப்பும் நிலையமாக மாஸ்கோ ரேடியோ மாறி வருகிறது.

''சோவியத் வாழ்க்கை முறை'' எனும் அன்றாட ரேடியோ மலர் மாஸ்கோ வானொலியின் அயல்நாட்டு சர்வீஸ் சோவியத் நாட்டு நிகழ்ச்சிகளைப் பெரிய அளவுக்கு ஒலிபரப்புவதற்கு துணை புரிகிறது.

ஒலி பரப்பை அதிக பயனுடையதாக்குவதற்கும், அதன் தரத்தை மேம்படுத்துவதற்கும் மாஸ்கோ ரேடியோவின் அயல் நாட்டு சர்வீஸைச் சேர்ந்த ஊழியர்கள் வெளிநாட்டு நேயர்களின் ஆதரவைத் திரட்ட பெருமுயற்சி எடுத்துக் கொள்கின்றனர். வானொலி நேயர்கள் முன்னின்று பங்கெடுத்துக் கொள்ளும் ரேடியோ மன்றம், ரேடியோ பேரவை, ரேடியோ பல்கலைக் கழகம் போன்ற புதிய நிகழ்ச்சிகள் மாஸ்கோ ரேடியோ ஒலிபரப்புகளை எளிதாகப் புரிந்து கொள்வதை சாத்தியமாக்கியுள்ளன; புதிய நேயர்களையும் கவர்ந்து ஈர்த்துள்ளன.

மாஸ்கோ ரேடியோவின் அயல்நாட்டு சர்வீஸ் வானொலி ரசிகர்களிடம் மேன்மேலும் பிரபலம் பெற்று வருகிறது. 1980-ல் 150-க்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து அது சுமார் 3 லட்சம் கடிதங்களைப் பெற்றது. சோவியத் யூனியனையும், சோவியத் வாழ்க்கை முறையையும், சோவியத் நாட்டின் சமாதான நேயமிக்க அயல்துறைக் கொள்கையையும் பற்றி மேலும் அதிகம் தெரிந்து கொள்ள தாங்கள் கொண்டுள்ள ஆர்வத்தை பலர் இந்தக் கடிதங்களில் குறிப்பிட்டிருந்தனர். அயல்நாட்டு சர்வீஸைச் சேர்ந்த பல்வேறு பிரிவுகள் தமது நேயர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வளர்த்து வருகின்றன; தமக்கு வரும் ஒவ்வொரு கடிதத்திற்கும் பதில் எழுதுகின்றன; அவர்களது கேள்விகளுக்கு வானொலி வாயிலாகவும் பதில் அளிக்கின்றன. மாஸ்கோ ரேடியோ நிகழ்ச்சிகள் அடங்கிய ஒரு சிறு பிரசுரம் வானொலி நேயர்களுக்குக் கிட்டுகிறது.

பெரும்பாலான நேயர் கடிதங்கள் முக்கிய உலக நிகழ்ச்சிகள் குறித்து சோவியத் கண்ணோட்டத்தைத் தெரிந்து கொள்ள அவர்கள் கொண்டுள்ள ஆர்வத்தைப் பிரதிபலிக்கின்றன. மாஸ்கோ ரேடியோ நிகழ்ச்சிகள் பற்றி அவர்கள் எழுதுவதாவது:

''நான் கேட்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும், மாஸ்கோ ரேடியோவிலிருந்து நான் பெறும் ஒவ்வொரு கடிதமும் சிந்தனைக்கு உணவளிக்கின்றன. நான் நினைப்பதைப் போலவே நினைக்கின்ற, உலக நிகழ்ச்சிகள் குறித்து என்னுடைய கண்ணோட்டத்தை ஒத்த கண்ணோட்டத்தை கொண்டுள்ள உண்மையான நண்பர்களுடன் தொடர்பு கொண்டிருக்கும் உணர்வை நான் பெறுகிறேன்'' (ஹங்கேரியைச் சேர்ந்த ஒரு நேயர்).

''அடிமைத்தனத்திலிருந்தும் வறுமையிலிருந்தும் விடுதலை பெறுவதற்கு தெற்கு ஆப்பிரிக்காவிலுள்ள எங்கள் சகோதரர்கள் நடத்திவரும் போராட்டத்துக்கு சோவியத் யூனியன் அளித்துவரும் பிரம்மாண்டமான ஆதரவை நாங்கள் பெரிதும் மதிக்கிறோம். எனவேதான் உங்கள் நாட்டின், மாஸ்கோ ரேடியோவின் நண்பனாக என்றுமே நான் இருந்து வருவேன் என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்'' (கானாவிலிருந்து வந்த ஒரு கடிதம்).

''உங்கள் ஒலிபரப்புகள் சாமானிய ஆப்பிரிக்கர்களாகிய எங்களுக்கு உலக நிகழ்ச்சிகள் பற்றிய ஓர் உண்மையான படப்பிடிப்பை வழங்குகின்றன. காலனி ஆதிக்கத் தளைகளிலிருந்து விடுபட்ட ஆப்பிரிக்காவின் ஒளிமயமான எதிர்காலத்தில் எங்களுக்குள்ள நம்பிக்கையை மாஸ்கோ ரேடியோ நிகழ்ச்சிகள் வலுப்படுத்து கின்றன'' (செனகலைச் சேர்ந்த ஒரு நேயர்).

''சமாதானம், பதற்றத்தணிவு, படைக் குறைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும், உலகின் எல்லாத் தேசங்களது சுபிட்சத்திற்கும், முன்னேற்றத்திற்கும் சோவியத் அரசாங்கமும், கம்யூனிஸ்டுக் கட்சியும், சோவியத் மக்களும் எவ்வளவு மகத்தான சேவை செய்து வருகின்றனர் என்பதை நான் பெரிதும் புரிந்து கொள்ள உங்கள் ரேடியோ உதவியுள்ளது. மக்களைப் பிரிப்பதற்கும் வானொலி நேயர் களுக்குத் தவறான தகவல்களை வழங்குவதற்கும் முதலாளித்துவ நாடுகளின் ரேடியோ நிலையங்கள் முயற்சி செய்து வரும் வேளையில், சோவியத் ஒலிபரப்புத் துறை தேசங்களிடையே சமாதானத்தையும், நட்புறவையும், ஒத்துழைப்பையும் வளர்க்கும் பணியை நிறைவேற்றி வருகிறது'' (இந்தியாவைச் சேர்ந்த ஒரு ரசிகர்).

''சோஷலிசத்தைப் பற்றி ஒரு சரியான கண்ணோட்டத்தைப் பெறுவதற்கு நான் தொடர்ந்து மாஸ்கோ வானொலியைக் கேட்டு வருவேன்'' (ஜப்பானைச் சேர்ந்த ஒரு நேயர்).

அரசாங்கத்துக்குச் சொந்தமான அயல் மொழிகள் சர்வீஸ் தவிர சோவியத் பொது நிறுவனங்கள் நடத்தும் வானொலி நிலையம் ஒன்றும் உள்ளது. ''சமாதான, முன்னேற்ற ரேடியோ'' என்பது இதன் பெயர். 1964 நவம்பரில் அது அமைக்கப்பட்டது. நவோஸ்தி செய்தி நிறுவனம், அயல் நாடுகளுடன் நட்புறவுக்கும் கலாசார உறவுகளுக்கு மான சோவியத் கழகங்களின் யூனியன், சோவியத் சமாதானக் கமிட்டி, சோவியத் மாதர் கமிட்டி, அகில யூனியன் ''ஜினனியே'' (அறிவு) கழகம், சோவியத் எழுத்தாளர் சங்கம், சோவியத் பத்திரிகை யாளர் சங்கம், சோவியத் இசை அமைப்பாளர்கள் சங்கம், சோவியத் யூனியன் இளைஞர் நிறுவனங்களின் கமிட்டி ஆகியவை இந்த வானொலி நிலையத்தை நிர்வகிக்கின்றன.

ஹெல்சிங்கியில் நடைபெற்ற ஐரோப்பிய பந்தோபஸ்து, ஒத்துழைப்பு மாநாட்டில் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிப் பொதுச் செயலாளர் எல். ஐ. பிரெஷ்னேவ் பேசும்போது குறிப்பிட்டதாவது: ''தகவல் சாதனங்கள் சமாதான, நம்பிக்கை நோக்கங்களுக்காக சேவை செய்ய முடியும் அல்லது உலகம் முழு வதிலும் நாடுகளுக்கும் மக்களுக்கும் இடையே பூசல், பிணக்கு எனும் விஷ வித்தையும் தூவ முடியும் என்பது இரகசியம் ஒன்று மல்ல.''

அயல் நாடுகளுக்கு சோவியத் ரேடியோ செய்யும் ஒலிபரப்புகள் சமாதானத்தையும், நம்பிக்கையையும், சர்வதேச ஒத்துழைப்பையும்,

தேசங்களுக்கிடையே பரஸ்பர இணக்கத்தையும் வளர்க்கும் உன்னத உயரிய லட்சியங்களுக்கு சேவை செய்து வருகின்றன.

## மத்திய டெலிவிஷன் சர்வீஸ்

மத்திய தொலைக்காட்சி சர்வீசில் 11 சானல்கள் உள்ளன. எல்லா நிகழ்ச்சிகளுமே வண்ணத்தில் ஒளிபரப்பப் படுகின்றன. ஒளி அடுக்கு வரைவெண் 625 ஆக இருப்பதால் படம் மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

முதலாவது சானல் அகில யூனியன் தொலைக்காட்சி சர்வீசின் அடிப்படையான சானல்; சமூக-அரசியல், கலாசார, கல்வி நிகழ்ச்சிகளை இது வழங்குகிறது; சராசரி அன்றுட மொத்த ஒளிபரப்பு நேரம் 13.6 மணிகள்.

சோவியத் யூனியனிலும், வெளிநாடுகளிலும் நடைபெறும் முக்கிய அரசியல் பொருளாதார, கலாசார நிகழ்ச்சிகளை இந்த சானல் சித்திரிக்கிறது; அகில யூனியன் முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களைக் கொண்டாடுவதற்காக நடைபெறும் பொது வைபவங்கள், அணி வகுப்புகள், கூட்டங்கள், அரசாங்க அதிகாரிகளுடன் சந்திப்புகள், இதர முக்கிய அரசியல் வைபவங்கள் முதலியவற்றை நேரடியாக ஒளிபரப்புகிறது. புறவெளியிலிருந்து அஞ்சல் செய்யப்படும் செய்திகளும் இதில் இடம் பெறுகின்றன.

இந்த சானலில் ஒளிபரப்பப்படும் பிரதான நிகழ்ச்சிகள் வருமாறு: கடைசிச் செய்திகள், ''விரமியா'' (காலம்) எனும் நடப்பு நிலவரங்களைக் கூறும் நிகழ்ச்சி, ''இன்றைய உலகைச் சுற்றிலும்,'' ''நடைமுறையில் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 26-வது காங்கிரசின் முடிவுகள்'', ''சோஷலிச உழைப்புப் போட்டியின் முன்னேற்றம்'', ''முன்னேடியான அனுபவம்—நாட்டின் சொத்து'', ''கிராமப் பகுதிகளுக்கு'', ''வீரசாதனை'', ''சோவியத் யூனியனுக்கு சேவை'' (பின்னர் குறிப்பிட்ட இரண்டு நிகழ்ச்சிகளும் படைவீரர்களுக்கு உரியவை), ''இன்றைய விஞ்ஞானம்'', ''பிரச்சினைகள், தேட்டங்கள், தீர்மானங்கள்'', ''மனிதனும் சட்டமும்.''

நடப்பு உலகப் பிரச்சினைகளுக்கும், மற்றும் ''சர்வதேசக் காட்சிகள்'' ''சமுதாய உறவு'', ''ஒன்பதாவது ஸ்டுடியோ'', ''அயல் நாட்டு விருந்தினர்கள் கண்ணோட்டத்தில் சோவியத் யூனியன்'' அரசியல் விமர்சகர்களின் சொற்பொழிவுகள், முன்னணித் தொழிலாளர்களுடனும், முதுபெரும் போர் வீரர்கள், உழைப்பு வீரர்களுடனும் பேட்டிகள், (உதாரணமாக ''யுத்தகால நண்பர்களின் மன்றம்'') முதலிய நிகழ்ச்சிகளுக்கும் ஒளிபரப்பு நேரத்தில் கணிசமான பகுதி ஒதுக்கப்படுகிறது.

''சுற்றுப் பயண ரசிகர்கள் மன்றம்'', ''விலங்குகள் உலகம்'', ''அதிசயம் ஆனல் உண்மை'', ''மனிதன், புவிக்கோள், பிரபஞ்சம்,''

''திரைப்படக் காட்சிகள்'' போன்ற பொதுத் தகவல், போதனைத் தொடர்களும் பிரபலமானவை.

தொலைக்காட்சியானது பல்வேறு இசை இலக்கிய நிகழ்ச்சிகளை வழங்குகிறது. ஆபேராக்கள், நாடகங்கள், தொலைக்காட்சிப் படங்கள், முழுநீளத் திரைப்படங்கள், இசைக் கச்சேரிகள், அமெச்சூர் குழுக்களின் கலைநிகழ்ச்சிகள், பல்சுவை நிகழ்ச்சிகள், நகைச்சுவைத் துணுக்குகள், விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் முதலியவற்றை நேரடியாக ஒளிபரப்புவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

தொலைக்காட்சி நேயர்களில் பல்வேறு பகுதியினரின் தேவைகள், வெவ்வேறு வயது பிரிவினர், அவர்களது கல்வித்தரம், அவர்களுக்குள்ள ஓய்வு நேரம், அவர்களது விசேட அக்கறைகள் முதலியவற்றைக் கணக்கிலெடுத்துக் கொண்டு இந்த நிகழ்ச்சிகள் வகுக்கப்படுகின்றன. உதாரணமாக, ஷிப்டு அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்கள், மாலைநேரப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், பென்ஷனர்கள், குடும்பத் தலைவிகள் போன்றோரைப் பிரதானமாக மனத்திற்வைத்து காலைநேர நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. ''விரமியா'', மற்றும் இதர சுவையான நிகழ்ச்சிகளை மாலையில் காண இயலாதவர்கள் அடுத்தநாள் காலை, அவற்றைக் காணலாம்.

1980 அக்டோபர் 20 முதல் மத்திய டெலிவிஷன் சர்வீசின் முதல் சானல் நிகழ்ச்சிகள் சைபீரியா, தொலைக் கிழக்கு, கஜாக்ஸ்தான், சோவியத் மத்திய ஆசியக் குடியரசுகள் ஆகியவற்றுக்கு ஒளிபரப்பப் பட்டு வருகின்றன. இதனால் இப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பிரதான நிகழ்ச்சிகளை தங்களுக்கு சௌகர்யமான நேரத்தில் பார்ப்பது சாத்தியமாகி உள்ளது.

இவ்வாறு மத்திய டெலிவிஷனின் முதலாவது சானல் சோவியத் மக்களில் சுமார் 86 சதத்தினர்க்கு சேவை செய்கிறது.

இரண்டாவது சானல் மாஸ்கோவுக்கும் மாஸ்கோ பிராந்தியத்திற்கும் செய்திகளையும், நடப்பு விவகாரங்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியையும் ஒளிபரப்புகிறது. தினம் அதன் சராசரி நேரம் 4.5 மணிகள்.

''மாஸ்கோ செய்திகள்'', ''மாஸ்கோ'', ஸ்தல கட்சிக் கூட்டங்கள் மற்றும் மாஸ்கோவையும் மாஸ்கோ பிராந்தியத்தையும் சேர்ந்த பல்வேறு பகுதிகளில் சாலை நிர்வாகம் சம்பந்தமான மாநாடுகள் பற்றிய செய்திகள், ''மாஸ்கோவும் மாஸ்கோ வாசிகளும்'' எனும் நிகழ்ச்சிகள், ''மாஸ்கோ பிராந்தியத்தின் விவசாயி'', ''மாஸ்கோவுக்கு வெளியே சந்திப்புகள்'', ''மாஸ்க்விச்சா'' தொலைக்காட்சி மன்றம் ''வார நாட்களில் ஓய்வு'' முதலான நிகழ்ச்சிகள் இந்த சானலில் அடங்கும். இதல்லாமல் நாடகமாக்கங்கள், இசை, டாகுமெண்டரி, நாடகங்கள் (இவற்றில் சில நாடகங்கள் தொலைக்

காட்சிக்கென்றே தயாரிக்கப்பட்டவை) விளையாட்டுப் போட்டி செய்திகள் முதலியவற்றையும் இரண்டாவது சானல் ஒளிபரப்புகிறது.

மூன்றாவது சானலில் ஜனரஞ்சகமான விஞ்ஞான நிகழ்ச்சிகளும் கல்வி நிகழ்ச்சிகளும் தினம் மொத்தம் 7.1 மணி நேரம் ஒளிபரப்பப் படுகிறது.

உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், தொழிற் பயிற்சிப் பள்ளி மாணவர்கள், தனிப் பயிற்சி உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் தேசப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் ஆகியோர் இந்த நிகழ்ச்சிகளைப் பெரிதும் விரும்புகின்றனர். பள்ளி ஆசிரியர்கள், டாக்டர்கள், அயல் மொழிகளைக் கற்றுக் கொள்வோர் போன்றோருக்கும் இவை பயனுள்ளவையாக இருக்கின்றன. மேற்கல்வி நிலையங்களில் சேர விரும்புவோர்க்கு இந்த சானல் மூலம் ஒளி பரப்பப்படும் கல்வி நிகழ்ச்சிகள் உபயோககரமாக இருக்கின்றன. ஜனரஞ்சகமான விஞ்ஞான நிகழ்ச்சித் தொடர்புகளை அஞ்சல் செய்வதற்குக் கணிசமான நேரம் ஒதுக்கப்படுகிறது. செவிப் புலன் இழந்தோருக்காக துணைத் தலைப்புகளுடன் கூடிய திரைப்படங்கள் மூன்றாவது சானலில் அடிக்கடி ஒளிபரப்பப் படுகின்றன.

பிரதான சர்வீஸ் பிரதேசம் தற்போது அதிகரித்திருப்பதால், சோவியத் மக்களில் பெரும்பகுதியினர் மூன்றாவது சானலில் நிகழ்ச்சிகளைக் கண்டு ரசிக்க முடியும்.

நான்காவது சானல் கலைகளுக்கும் விளையாட்டுப் போட்டிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. தினமும் அது சராசரியாக இயங்கும் நேரம் 7.5 மணிகள். ரிலே லைன்கள் மூலமும், கேபிள் மூலமும் ஏழு சுயாட்சிக் குடியரசுகளுக்கும், ரஷ்ய சமஷ்டியைச் சேர்ந்த 34 பிராந்தியங்களுக்கும், மற்றும் உக்ரைன், பைலோ ரஷ்யா, மொல்தாவியா, லாத்வியா, லிதுவேனியா ஆகிய சோவியத் சோஷலிச குடியரசுகளுக்கும் அது அஞ்சல் செய்யப்படுகிறது. விண்வெளி செய்திப் போக்குவரத்து அமைப்பின் வாயிலாக இதன் நிகழ்ச்சிகள் சோவியத் மத்திய ஆசியா, டிரான்ஸ்காக்கேசியா, காக்கேசியா கருங்கடல் கரை, யூரல், சைபீரியா, தொலை வடக்கு ஆகிய பகுதிகளுக்கு ஒளி பரப்பப் படுகின்றன. மொத்தம் 6 கோடி 20 லட்சம் சோவியத் மக்கள் இந்த சானலில் நிகழ்ச்சிகளைக் காண்கின்றனர்.

மூன்றாவது, நான்காவது சானல் நிகழ்ச்சிகளை சோவியத் மக்களில் 35 சதவிகிதத்தினர்க்கு அதிகமானோர் பார்த்து ரசிக்க முடியும்.

சோவியத் யூனியன் பிரதேசம் 11 கால மண்டலங்களில் வியாபித்துள்ளது. தொலைதூரப் பகுதிகளில் வாழும் மக்கள் டெலிவிஷன் நிகழ்ச்சிகளை தங்களுக்கு சௌகர்யமான நேரத்தில் காணும் பொருட்டு முதல் சானல் நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டு தரை மற்றும் விண்வெளி செய்திப் போக்குவரத்து மூலம் வெவ்வேறு நேரங்களில் அஞ்சல் செய்யப்படுகின்றன. 1977 முதல் ஆர்பிட்டா

நிகழ்ச்சிக்குப் பதில் மூன்று நிகழ்ச்சிகள் ஒளி பரப்பப்படுகின்றன; இவை மூன்று கால மண்டலங்களுக்குப் பயன்படுகின்றன.

## பிரதான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

**நடப்பு விவகாரங்களும், செய்திகளும்:** இந்தத் தலைப்பில் நிகழ்ச்சிகள் மத்திய டெலிவிஷன் சர்வீசின் பிரதான தகவல் பிரிவால் தயாரிக்கப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சிகளில் மிக முக்கியமானது ''விரமியா''; சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கை பற்றியும், 26—வது கட்சிக் காங்கிரஸ் முடிவுகளின் செயலாக்கம் பற்றியும் இது பிரதானமாக ஒளி பரப்புகிறது. சோவியத் டெலிவிஷன், ரேடியோ, டாஸ், நவோஸ்தி செய்தி நிறுவனம், மற்றும் அகில யூனியன் செய்திப் பத்திரிகைகள் ஆகியவற்றின் அயல்நாட்டு நிபுணர்களும், அரசியல் விமர்சகர்களும் இந்த விஷயங்கள் குறித்து ஸ்தலத்திலிருந்து அனுப்பும் செய்திகளும், கருத்துகளும் விரிவாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

''சர்வதேசக் காட்சிகள்'' எனும் வாராந்தர ஒளி பரப்பு முந்தைய வாரத்தில் நடைபெற்ற முக்கிய சர்வதேச நிகழ்ச்சிகளை எடுத்துரைக்கிறது. இந்த நிகழ்ச்சிகள் பற்றிய ஒரு பொதுக் கண்ணோட்டத்துடன் ஒளி பரப்பு ஆரம்பமாகிறது; இதனைத் தொடர்ந்து, முதலாளித்துவ நாடுகளில் அரசியல், பொருளாதார வாழ்க்கை, தமது உரிமைகளுக்காக உழைப்பாளி மக்கள் நடத்தும் போராட்டம், தேச விடுதலை இயக்கத்தின் முன்னேற்றம் ஆகியவை பற்றிய நிருபர்களின் செய்தி அறிக்கைகள் ஒளி பரப்பப்படுகின்றன. பூர்ஷுவா ஜனநாயகத்தின் சாராம்சம், ''அமெரிக்க வாழ்க்கை முறை'', ''பயனீட்டு சமுதாயத்தின்'' மறுபக்கம் போன்ற விஷயங்கள் நேயர்களின் பேராதரவைப் பெற்றுள்ளன.

''அயல்நாட்டு விருந்தினர்கள் கண்ணோட்டத்தில் சோவியத் யூனியன்'' எனும் நிகழ்ச்சி அயல் நாடுகளுடன் சோவியத் யூனியனுக்குள்ள விரிவடைந்து வரும் உறவுகளைப் பற்றி விவரிக்கிறது. சோவியத் யூனியனில் சுற்றுப் பயணம் செய்த பிறகு இந்த அயல் நாட்டு விருந்தினர்கள் தமது அனுபவங்களை எடுத்துரைக்கின்றனர். பல்வேறு தேசிய இனங்களையும், சமூகப் பிரிவுகளையும் சேர்ந்தவர்கள் தெரிவிக்கும் கருத்துகள் சோவியத் மக்கள் கண்டுள்ள சாதனைகளையும், சோவியத் வாழ்க்கை முறையையும் பற்றிய ஓர் எதார்த்த படப்பிடிப்பை வழங்குகின்றன.

சர்வதேச விவகாரங்கள் பற்றிய டாகுமெண்டரிகள் இந்த நிகழ்ச்சிகளில் ஒரு முக்கிய இடம் வகிக்கின்றன.

சோவியத் மக்களை கம்யூனிச உணர்வில் வளர்த்து உருவாக்குதல், மார்க்சிய—லெனினிய தத்துவம், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சிக்

கொள்கை, தொழில் நிர்மாணம், விவசாயம் ஆகிய துறைகளில் முன்னேற்றமடைந்த உற்பத்தி அனுபவத்தைப் பரப்புதல் ஆகியவை குறித்தும் நிகழ்ச்சிகளை மத்திய டெலிவிஷன் சர்வீஸ் ஒளிபரப்புகிறது.,

மத்திய டெலிவிஷனின் பிரதான சமூக–அரசியல் நிகழ்ச்சிகள் வருமாறு: ''நடைமுறையில் 26-வது கட்சிக் காங்கிரசின் முடிவுகள்'', ''லட்சக் கணக்கானோர்க்கு லெனினிய பல்கலைக் கழகம்'' (பொருளாதார, அரசியல் ஞானத்தைப் பரப்புதல்), ''ஐந்தாண்டுத் திட்டமும் கூட்டமைப்பும்,'' ''முன்னோடி அனுபவம்–தேசத்தின் சொத்து'' (முன்னணித் தொழிலாளர்களைப் பற்றி) ''நீங்கள் விரும்பிய சந்திப்புகள்'', ''கிராமப் பகுதிகளுக்கு'', ''பிரச்சினைகள், தேட்டங்கள். தீர்மானங்கள்.''

கட்சி வகுத்துத்தந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு நடைபெறும் சோஷலிசப் போட்டியையும், விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றத்தைத் தீவிரப்படுத்துவதையும், உழைப்பின் உற்பத்தித் திறனை வளர்ப்பதையும், வேலையின் திறத்தையும் தரத்தையும் மேம்படுத்துவதையும், 11–வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1981–1985) தேசப் பொருளாதாரத்தை உறுதியாக அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளையும் பற்றி ''நடைமுறையில் 26-வது கட்சிக் காங்கிரசின் தீர்மானங்கள்'' எனும் தொலைக்காட்சித் தொடர் கூறுகிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் பிரதான நிர்மாணத் திட்ட நிலையங்கள் பற்றி ஸ்தலத்திலிருந்து அனுப்பப்படும் செய்திகளும், சோவியத் தொலைக் கிழக்கு, சைபீரியா, சோவியத் மத்திய ஆசியா ஆகிய பகுதிகளிலுள்ள பிரதேச உற்பத்தித் தொகுதிகளைப் பற்றிய விவரங்களும் மற்றும் மேற்கு சைபீரியா, ஆர்க்டிக் வடக்கில் எண்ணெய், எரிவாயுப் படிவங்களின் அபிவிருத்தி, எண்ணெய்க் குழாய்வழிப் பாதைகள், மின்விசைக் கம்பிவழிப் பாதைகள், போக்குவரத்து, மாபெரும் தொழில் நிலையங்களின் நிர்மாணம் பற்றிய தகவல்களும் ''ஐந்தாண்டுத் திட்டமும் கூட்டமைப்பும்'' எனும் நிகழ்ச்சித் தொடரில் அடிக்கடி ஒளிபரப்பப்படுகின்றன.

''பிரச்சினைகள், தேட்டங்கள், தீர்மானங்கள்'' எனும் தொலைக் காட்சித் தொடரை சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி, மற்றும் சோவியத் அரசின் பொருளாதாரக் கொள்கையைப் பிரபலப்படுத்துவதற்கான புதிய வழிமுறைகளைத் தேடுவதில் ஒரு நூதனமான பரிசோதனை எனலாம். பிரபல சோவியத் விஞ்ஞானிகள் இந்த நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்கின்றனர். விஞ்ஞானிகளுக்கும் தொலைக்காட்சி நேயர்களுக்கும் இடையே நடைபெறும் ஓர் உரையாடல் ரூபத்தில் இந்த நிகழ்ச்சி அமைகிறது. நிகழ்ச்சி தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கையில், நேயர்கள் தொலைக்காட்சி நிலையத்திற்கு போன் செய்து கேள்விகள் கேட்கின்றனர்; அவற்றிற்கான பதில்களை அவர்கள் உடனுக்குடன் டெலிவிஷனில் கேட்கின்றனர். இன்றைய சோவியத்

விஞ்ஞானத்தின் நிலைமை, அதன் சாதனைகள், பிரச்சினைகள், எதிர்கால வாய்ப்புகள், பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கு ஒரு சக்தி வாய்ந்த அம்சம் என்ற முறையில் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 26-வது காங்கிரசின் முடிவுகளில் விஞ்ஞானத்திற்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் ஆகியவை பற்றி இந்த நிகழ்ச்சிகள் இயம்புகின்றன. நேயர்கள் இந்நிகழ்ச்சிகளில் முன்னின்று பங்கெடுத்துக் கொள்வது இவ்வகையான தகவல் தொடர்பானது (டெலிவிஷன்—நேயர்–டெலிவிஷன்) ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது என்பதையும், இந்தத் தொலைக்காட்சித் தொடர்களின் தரத்தை மேலும் அபிவிருத்தி செய்ய துணை புரிகிறது என்பதையும் காட்டியுள்ளது.

"புகார்களுக்குப் பதில்", "அன்றாட வாழ்க்கை அனைவரது அக்கறைக்கும் உரியது", "அதிக தரமுள்ள பண்டங்கள்" முதலிய விமர்சன நிகழ்ச்சிகளில் நேயர்கள் தமது கடிதங்களில் குறிப்பிட்டிருந்த குறைபாடுகளைக் களைவதற்கு எத்தகைய திட்டவட்டமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்வகையான ரேடியோ, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நயமான பாணியும், ஆக்கபூர்வமான உள்ளடக்கமும் கொண்டு விளங்குகின்றன என்பது குறிப்பிடத் தக்கது. பல சந்தர்ப்பங்களில் ஒட்டுமொத்த அரசின் நலன்களால் அல்லாமல், குறுகிய இலாகா நலன்களால் வழிகாட்டப்படும் பல்வேறு அந்தஸ்துகளிலும் பொறுப்புகளிலுமுள்ள அதிகாரிகள் காட்டும் அசமந்தத்தாலும், அலட்சியத்தாலும், சிவப்பு நாடா போக்காலும் தோன்றும் குறைபாடுகளையும், சிரமங்களையும் ஒழித்துக் கட்டும் நோக்கம் கொண்டவை இந்த நிகழ்ச்சிகள்.

**இசை நிகழ்ச்சிகளும் நாடகமாக்கங்களும்:**

"நூற்றாண்டுக் காலமாக ஒரு சில கேந்திரங்களில் குவிந்து வந்துள்ள விஞ்ஞான, கலைச் செல்வங்களை மக்கள் அனைவரும் அனுபவிப்பதற்கும், ஏறத்தாழ நாடு முழுவதும் சமமாகப் பரவுவதற்கும்" எத்தகைய தடைகளும் இல்லாத ஒரு காலம் வரும் என்று லெனின் தமது காலத்தில் கனவு கண்டு வந்தார். சோவியத் மக்களுக்கு சித்தாந்த, தார்மிக, அழகியல் கல்வி அளிப்பதற்கு ஒரு சக்தி வாய்ந்த சாதனமாக விளங்கும் டெலிவிஷன் இன்று இந்தக் கனவை நனவாக்கியுள்ளது. கலாசாரத் தரங்களில் நகர்ப்புற மக்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும் இடையே உள்ள கணிசமான வேறுபாடுகளை அகற்றுவதற்கு டெலிவிஷன் உதவுகிறது; கலாசார செல்வங்களைப் பகிர்ந்து கொள்ள பெரிய நகரங்களிலுள்ள மக்களுக்கும் சிறிய நகரங்களிலுள்ள மக்களுக்கும் சமத்துவ வாய்ப்புகளை அளித்துள்ளது.

நேயர்களின் பல்வேறு நலன்கள், ரசனைகள், தேவைகள், கலாசாரப் பின்னணிகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு டெலிவிஷன் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. எனவே, இவை புதிய புத்தகங்கள், நாடகக் காட்சிகள் கலைக் கண்காட்சிகள் முதலிய வேறு

பட்ட விஷயங்களைப் பற்றிய நானுவித நிகழ்ச்சிகளாக அமைகின்றன. இவை யாவும் சோவியத் மக்களின் அறிவாற்றலை செழுமைப்படுத்துவதையும், அவர்களது அழகியல் ரசனைகளை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டவை.

''ஒரு-மனித நாடக மன்றம்'', ''நாடகத் துறை பற்றிய விவரங்கள்'', ''நாடகத் துறையும் காலமும்'', ''உணர்ச்சிகரமான சந்திப்புகள்'', ''கலை வல்லுநர்கள்'', ''நமது அண்டை அயலார்கள்'', ''இலக்கியச் சொற்பொழிவுகள்'', ''புத்தகக் கடை'', ''எழுத்தாளரும் இன்றைய காலமும்'', ''இலக்கிய மதிப்பீடுகள்'', ''உங்களுக்குப் பிடித்தமான கவிதைகள்'', ''ஓவியர்களைப் பற்றிய கதைகள்'', ''அருங்காட்சியகங்களையும் கண்காட்சிகளையும் சுற்றிப் பார்த்தல்'', ''நண்பர்களை ஒன்று சேர்க்கிறது டெலிவிஷன்'', ''கிராமியக் கலை'' முதலியவை இந்த நிகழ்ச்சிகளில் முக்கியமானவை ஆகும்.

''உணர்ச்சிகரமான சந்திப்புகள்'' எனும் நிகழ்ச்சி கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகவே ஒளிபரப்பப்பட்டு வருகிறது. முன்னணித் தொழிலாளர்கள், விஞ்ஞானிகள், முதுபெரும் போர் வீரர்கள், தொழில் முறை நடிகர்கள், நாடகத் தயாரிப்பாளர்கள் நாடகாசிரியர்கள் முதலியோர் இந்த நிகழ்ச்சியில் இடம் பெறுகின்றனர்.

''அருங்காட்சியகங்களையும் கண்காட்சிகளையும் சுற்றிப் பார்த்தல்'' எனும் நிகழ்ச்சி ரஷ்ய, சோவியத், மற்றும் அயல்நாட்டு ஓவிய விற்பன்னர்களின் ஓவியங்களை தொலைக்காட்சி நேயர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறது; ''நண்பர்களை ஒன்று சேர்க்கிறது டெலிவிஷன்'' எனும் நிகழ்ச்சியும், ''உலக மக்களின் கலை'' எனும் நிகழ்ச்சியும் இந்தியா, சைப்ரஸ், ஜப்பான், கொலம்பியா, அங்கோலா, கிரீஸ், மற்றும் இதர பல நாடுகளின் கலைப் படைப்புகளைக் காட்டுகின்றன.

ஆபேராக்கள், சிம்பனிகள் முதல் கதம்ப நிகழ்ச்சிகள், மெல்லிசை வரை பல்வேறு நிகழ்ச்சிகள் இசை ஒலிப்பரப்புகளில் அடங்கும். மத்திய டெலிவிஷன் சர்வீசின் இசைப் பிரிவு சோவியத் இசை அமைப்பாளர்களின் புதிய படைப்புகளை தொலைக்காட்சி நேயர்களுக்குப் பரிசயம் செய்கிறது; சோவியத் யூனியனதும் வெளிநாடுகளதும் இசை வாழ்க்கையில் முக்கியமான நிகழ்ச்சிகளை அவர்களுக்கு விவரிக்கிறது; சாஸ்திரீய ரஷ்ய மற்றும் உலக இசையைப் பிரபலப்படுத்துகிறது.

''பாட்டுடன் வாழ்க்கையை அனுபவித்தல்,'' ''வானவில்'' (கிராமிய கலை பற்றிய நிகழ்ச்சிகள்), ''ஹல்லோ, நாங்கள் திறமையைத் தேடிக் கொண்டிருக்கிறோம்!'' வருடத்தின் மிகச் சிறந்த பாட்டிற்காக நடைபெறும் போட்டி, ''கிராமியக் கலை'' ஆகியவை இப்போது வழக்கமான நிகழ்ச்சிகளாகி விட்டன; புதிய திறமையாளர்களைத்

தேடிக் கண்டுபிடிப்பதும், கிராமியக் கலையை வளர்ப்பதும் இந்த நிகழ்ச்சிகளின் நோக்கம்.

குழந்தைகளின் படைப்பாக்க நடவடிக்கைகள் பற்றிய "துருவ வட்டம்" எனும் தொடர் உட்பட "உலகெங்கிலுமுள்ள மக்களின் படைப்பாக்கக் கலை" என்ற நிகழ்ச்சி அயல் நாடுகளது கலையின் பல்வேறு அம்சங்களை தொலைக்காட்சி நேயர்களுக்கு அறிமுகம் செய்கிறது; சர்வதேசிய உணர்வில் மக்களை வளர்த்து உருவாக்க உதவுகிறது. கலை கலாசாரத் துறைகளைச் சேர்ந்த பிரமுகர்களும், விஞ்ஞானிகளும், சர்வதேச விவகாரங்கள் பற்றி எழுதும் எழுத்தாளர்களும் பேட்டி காணப்படுகின்றனர். சோவியத் யூனியன் விஞ்ஞானப் பேரவையைச் சேர்ந்த இனப்பரப்பு விளக்கவியல் கழகத்தின் சீனியர் ஆராய்ச்சியாளரான நதாலியா குசேவா இந்தியக் கலை பற்றி நிகழ்த்திய சொற்பொழிவை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இந்த நிகழ்ச்சியில் இடம்பெற்ற சில விஷயங்கள் இதர சோஷலிச நாடுகளின் தொலைக்காட்சி நிலையங்களில் ஒளிபரப்பப்பட்டன. டில்லிப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் தேபு சௌதுரி டெலிவிஷனில் தோன்றி இந்திய இசைக் கருவிகள் பற்றி நிகழ்த்திய உரையை தொலைக்காட்சி ரசிகர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டு மகிழ்ந்தனர்.

**கல்வி நிகழ்ச்சிகளும் ஜனரஞ்சகமான விஞ்ஞான நிகழ்ச்சிகளும்:** மக்களின் சித்தாந்த, கல்வி, கலாசாரத் தரங்களை உயர்த்துவதையும், படிப்பில் பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் உதவுவதையும், தேசப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களுக்குத் தகவல் வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டவை இந்த நிகழ்ச்சிகள்.

பள்ளிப் படிப்புக்கு முந்திய கல்வி நிலையக் கட்டம் முதல் நிபுணர்களுக்கு மறு பயிற்சி அளிக்கும் கட்டம் வரை பொதுக்கல்வி அமைப்பு முழுவதற்கும் தொலைக்காட்சிக் கல்வி ஒலிபரப்புகள் மிகவும் உதவிகரமாக இருக்கின்றன.

ஜனரஞ்சகமான விஞ்ஞான நிகழ்ச்சிகள் எல்லா சானல்களிலும் ஒளிபரப்பப்பட்ட போதிலும், மூன்றாவது சானலில்தான் அவை பெரும்பாலும் இடம் பெறுகின்றன. இந்த சானல் பொது மற்றும் விசேட கல்வி நிகழ்ச்சிகளையும் அஞ்சல் செய்கிறது.

"விஞ்ஞான வாழ்க்கை", "இன்றைய விஞ்ஞானம்", "ஆரோக்கியம்", "மனிதன், புவிக்கோள், பிரபஞ்சம்", "புதுமைப் புனைவாளர்", "புத்தகங்கள், காலம், வாசகர்கள்", "அதிசயம் ஆனால் உண்மை", "விலங்குகள் உலகம்", மற்றும் "சுற்றுப் பயண ரசிகர்கள் மன்றம்" போன்றவை ஜனரஞ்சக விஞ்ஞான நிகழ்ச்சிகளில் முதலிடம் வகிக்கின்றன.

கல்லூரி மாணவர்களுக்கான தொலைக்காட்சிப் பயிற்சிப் பாடங்கள் மேன் மேலும் பிரபலம் பெற்று வருகின்றன. மாஸ்கோ தொலைக்காட்சி ஆயத்த வகுப்புகளில் படித்துத் தேர்ச்சியுற்ற ஆயிரக் கணக்கான இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன.

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு உதவும் நோக்கத்தோடு ஒளி பரப்பப்படும் விசேட நிகழ்ச்சிகள் பலவும் உள்ளன. "ஆசிரியருக்குத் தொலைக்காட்சி", "ஆசிரியர்களுக்குப் பாடங்கள்", "ஆசிரியவியல் பள்ளி" போன்றவற்றை இவ்வகையில் முக்கியமாகக் குறிப்பிடலாம்.

அயல் மொழிகளைப் பயிலும் மாணவர்களுக்காக ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ் முதலான வகுப்புகளை டெலிவிஷன் நடத்துகிறது. அயல்மொழி மாணவர்கள் இன்றைய பேச்சு மொழியைப் புரிந்து கொள்வதற்கும், பெருமளவில் பயன்படுத்தப் படும் மரபுவழிச் சொற்றொடர்களைக் கற்றுக் கொள்வதற்கும் இந்த விசேட நிகழ்ச்சிகள் உதவுகின்றன; இவ்வாறு ஓர் அயல் மொழியில் அடிப்படை ஞானம் மாணவர்களுக்கு ஊட்டப்படுகிறது.

## ரேடியோ மற்றும் டெலிவிஷன் துணை நிலையங்கள்

ஆசிரியர் குழுக்கள், தொழில் நுட்பக் குழுக்கள் தவிர, விஞ்ஞான ரீதியில் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கான கேந்திரம், வானொலி, தொலைக்காட்சி ஊழியர்களின் தரத்தை உயர்த்துவதற்கான அகில யூனியன் கழகம், அகில யூனியன் ரேடியோ, டெலிவிஷன் ஆராய்ச்சிக் கழகம், அகில யூனியன் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளின் ஏடகம் போன்ற ஏராளமான துணை நிலையங்களை சோவியத் வானொலி யும், தொலைக்காட்சியும் பெற்றுள்ளன.

விஞ்ஞான ரீதியில் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கான கேந்திரம் சோவியத் தொலைக்காட்சி மற்றும் ரேடியோ ஒலிபரப்பின் அனுபவத்தைப் பற்றி ஆராய்கிறது; முக்கியமான, அரிய அனுப வத்தை நடைமுறையில் பயன் படுத்துவதற்கு பிறருக்கு உதவுகிறது. ரேடியோ, டெலிவிஷன் நிகழ்ச்சிகளின் கட்டமைப்பு, உள்ளடக்கம், பயனுறுதி ஆகியவை பற்றி அது ஆராய்ச்சி நடத்துகிறது; ஒலிபரப்பின் சித்தாந்த, கலைத் தரத்தை உயர்த்துவதற்கு யோசனைகளை வகுத்துத் தருகிறது.

ரேடியோ, டெலிவிஷன் ஊழியர்களது தரங்களை உயர்த்துவதற் கான அகில யூனியன் கழகம் மத்திய மற்றும் ஸ்தல வானொலி, தொலைக்காட்சி சர்வீசுகளில் பணிபுரியும் ஊழியர்களின் சித்தாந்த, அரசியல் தரத்தையும், அவர்களது தொழில் திறத்தையும் மேம்படுத்து கிறது; ரேடியோ டெலிஷன் இஞ்சினீயர்களுக்கும், ஆபரேட்டர் களுக்கும் மறுபயிற்சி அளிக்கிறது; உழைப்பையும் நிர்வாகத்தையும் விஞ்ஞான ரீதியில் ஒழுங்கமைப்பதற்கான அடிப்படைகள் குறித்து

யோசனைகள் கூறுகிறது; ஆசிரிய, தொழில் நுட்ப அனுபவத்தைப் பரிமாறிக் கொள்ள வகை செய்கிறது; ரேடியோ, டெலிவிஷன் ஊழியர்களுக்கு பயிற்சிக் குறிப்புகளையும், புத்தகங்களையும் வெளியிடுகிறது.

அகில யூனியன் ரேடியோ, டெலிவிஷன் ஆராய்ச்சிக் கழகம் தான் சோவியத் யூனியன் முழுவதிலும் வானொலி, தொலைக் காட்சிக் கேந்திரங்களில் புதிய தொழில் நுட்ப வசதிகளை உருவாக்கிப் புகுத்துவதற்கான யோசனைகளை வகுத்துத் தரும் பிரதான கேந்திர மாகும். இந்தக் கேந்திரத்தில் 30 ஆய்வுக் கூடங்களும், ஒரு பரிசோதனைத் தொழிற்கூடமும் அடங்கும்.

அகில யூனியன் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளின் ஏடகம் டேப்பிலும், படச் சுருளிலும், வீடியோ மாக்னெட்டிக் டேப்பிலும் புகைப்படத்திலும் பதிவு செய்யப்பட்ட எல்லா வகையான தொலைக் காட்சி நிகழ்ச்சிகளையும் மத்திய டெலிவிஷன், மற்றும் ரேடியோ சர்வீசைச் சேர்ந்த ஊழியர்களுக்கு வழங்குகிறது. தனது வசமுள்ள பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளை அது சரிபார்க்கிறது; அவசியமான புனருத்தாரணப் பணியை மேற்கொள்கிறது; தன்னிடமுள்ள நிகழ்ச்சிப் பதிவுகளையும், புதிதாகப் பெற்ற நிகழ்ச்சிப் பதிவுகளையும் பற்றி அரசாங்க டெலிவிஷன், ரேடியோ கமிட்டியின் சம்பந்தப்பட்ட, சர்வீசுகளுக்கும் நிறுவனங்களுக்கும் அவ்வப்போது தகவல்களை வழங்குகிறது.

தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள், முழு நீளத் திரைப் படங்கள், டாகுமெண்டரிகள், சோவியத் யூனியன் அரசாங்க டெலிவிஷன், ரேடியோக் கமிட்டியின் வேண்டுகோளின் பேரில் நாட்டின் பிரபல திரைப்பட ஸ்டூடியோக்கள் விசேடமாகத் தயாரித் தளித்த திரைப்படங்கள் போன்ற 15 லட்சத்துக்கு மேற்பட்ட பொருள்கள் தற்போது இந்த நூலகத்தில் இருக்கின்றன. இதுவன்றி, ஸ்தல ரேடியோ கேந்திரங்களின் மிகச் சிறந்த படைப்புகளையும், அயல் நாட்டு வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்ற பொருள்களையும், இசைப் பதிவுகளையும், புகைப்படப் பொருள்களையும் இந்த ஏடகம் பெற்றுள்ளது. பிலிம்கள் மட்டும் 2 லட்சத்துக்கு மேல் இங்கு உள்ளன.

லெனின், அவருடைய சகாக்கள், லியோ டால்ஸ்டாய், கான்ஸ் தாந்தின் த்சியல்கோவ்ஸ்கி, செர்கி கொரலெவ், யூரி ககாரின், செர்கி யெஸ்ஸனின், விளதீமிர் மயாகோவ்ஸ்கி, மாக்சிம் கோர்க்கி, பியோதர் சாலியாபின் ஆகியோரின் பதிவு செய்யப்பட்ட குரல்கள் மாஸ்கோ ரேடியோவின் "தங்கக் கருவூலத்தில்" பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. செர்கி ரஹ்மானினேவ், எட்வர்டு கிரெய்க் ஆகியோரின் பியானோ இசையும் பதிவு செய்யப்பட்டு இங்கு பேணிக் காப்பாற்றப்பட்டு வருகிறது. ஜவாஹர்லால் நேரு, பிரெட்ரிக் ஜூலியோ கியூரி, மாரிஸ் தோரே, சால்வடார் அல்லந்தே, மற்று

இதர பல பிரபல பொது வாழ்வுப் பிரமுகர்கள், அரசாங்கப் பிரமுகர்களின் பதிவு செய்யப்பட்ட உரைகளையும் இங்கு காணலாம். சிலியில் பாப்புலர் யூனிட்டி அரசாங்கம் நடைபெற்ற 1,000 நாட்களைச் சித்திரிக்கும் டாகுமெண்டரிகளும், இதர தகவல்களும் இங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றை டெலிவிஷனில் காட்டும் போது அல்லது ரேடியோவில் ஒலிபரப்பும்போது இந்த லத்தீன் அமெரிக்க நாட்டில் அக்கிரமமாக அதிகாரத்தை அபகரித்துக் கொண்ட பிற்போக்காளர்களுக்கு எதிராக நடைபெறும் போராட்டத்தில் பங்கு கொள்வோருக்கு அவை புதிய உத்வேகத்தை அளிக்கின்றன.

அரசாங்க டெலிவிஷன், ரேடியோ கமிட்டி பல சஞ்சிகைகளைப் பிரசுரிக்கிறது. அவற்றில் முக்கியமானவை வருமாறு: "டெலிவிஷனும் ரேடியோவும்", இது படங்கள் நிறைந்த மாத சஞ்சிகை, இதில் இலக்கிய விமர்சனங்களும் தத்துவார்த்த கட்டுரைகளும் இடம் பெறுகின்றன; "மாஸ்கோ ரேடியோவும் டெலிவிஷனும்" என்பது நிகழ்ச்சி நிரல் அட்டவணை அடங்கிய வாராந்தர சஞ்சிகை, இது சுமார் 10 லட்சம் பிரதிகள் அச்சிடப்படுகிறது; "குரு கோஸர்" எனும் மாதாந்தர சஞ்சிகை இசைத் தட்டுகளுடன் 5 லட்சம் பிரதிகள் வெளியிடப்படுகிறது; குழந்தைகளுக்காக "கொலோபோக்" எனும் இதே போன்றதோர் சஞ்சிகை இரண்டரை லட்சம் பிரதிகள் பிரசுரிக்கப்படுகிறது.

*   *   *

சோவியத் டெலிவிஷனில் முப்பரிமாண படங்களைப் பார்ப்பதற்கான வசதிகள் விரைவில் செய்து தரப்படும்.

## சர்வதேச ஒத்துழைப்பு

தற்போது சோவியத் யூனியனின் அரசாங்க டெலிவிஷன், ரேடியோ கமிட்டி 120 நாடுகளிலுள்ள 140 தொலைக்காட்சி நிறுவனங்களுடனும், 118 வானொலி நிறுவனங்களுடனும் தொடர்புகள் கொண்டுள்ளது. அயல்நாட்டு நிறுவனங்களில் பயன்படுத்தப் படுவதற்காக சோவியத் யூனியனில் பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் கம்யூனிச நிர்மாணத்தின் தத்துவம், நடைமுறை பற்றிய பிரச்சினைகள், சமாதானத்தையும் பதற்றத் தணிவையும் வளர்ப்பதற்காக சோஷலிசக் கூட்டமைப்பு மேற்கொண்டுவரும் முயற்சிகள், சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைவை மேலும் அபிவிருத்தி செய்தல், வேறுபட்ட சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளிடையே பரஸ்பரம் அனுகூலமுள்ள, பரந்த ஒத்துழைப்பை வளர்த்தல் ஆகியவை பற்றிக் கூறுகின்றன. பதற்றத்தணிவை எதிர்ப்பதிலும், "கெடுபிடிப்போர்" மற்றும் மோதல் நிலைக்கொள்கையை மீண்டும் கடைப்பிடிப்பதிலும் முனைந்து ஈடுபட்டுள்ள ஏகாதிபத்திய வட்டாரங்களின் ஆக்கிரமிப்பு வெறியை அவை அம்பலப்படுத்துகின்றன.

அரசாங்க தொலைக்காட்சி, வானொலிக் கமிட்டி இதர நாடு களுடன் டெலிவிஷன் நிகழ்ச்சிகளைப் பரிமாறிக் கொள்கிறது; திரைப் பட விழாக்களையும், தொலைக்காட்சிப் போட்டிகளையும் ஏற்பாடு செய்வதில் பங்கு கொள்கிறது.

நாஜி ஜெர்மனிமீது பெற்ற வெற்றியின் 35-வது ஆண்டு விழாவுக்கு வேண்டிய விஷயங்களைத் தயாரிப்பதற்கு பின்லந்து, ஜப்பான், பிரான்ஸ், பெல்ஜியம், மேற்கு ஜெர்மனி, நெதர்லேண்ட்ஸ் ஆகிய நாடுகளின் டெலிவிஷன் நிறுவனங்களுக்கு சோவியத் யூனியனின் அரசாங்க தொலைக்காட்சி, வானொலிக் கமிட்டி அவசிய மான உதவியைச் செய்தது; காதினிலுள்ள நினைவுச் சின்ன தொகுதி பற்றிய நேரடி விவரங்களையும், முதுபெரும் போர் வீரர்களுடன் நடைபெற்ற சந்திப்புகள் பற்றிய செய்திகளையும் வழங்கிற்று.

சோவியத் யூனியனது உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையைப் பிரபலப்படுத்துவதற்கான மற்றொரு பயனுறுதி மிக்க வழி மேற்கத்திய டெலிவிஷன் சர்வீசுகளில் காட்டப்படும் நிகழ்ச்சிகளாகும். உதாரண மாக ஆப்கனிஸ்தான் சம்பவங்களைப் பற்றி பிரெஞ்சுப் பத்திரிகை யாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு 1980-ல் வாதிம் ஜக்லாதின் பதில் அளித்தார். இதே போல் அந்த ஆண்டின் முக்கிய சர்வதேச நிகழ்ச்சிகள் சம்பந்தமான சோவியத் கண்ணோட்டத்தை பேரவை யாளர் ஜியார்ஜி அர்பதோவ் பிரெஞ்சு தொலைக்காட்சி நேயர்களுக்கு விளக்கிக் கூறினார். அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்கள் பற்றி இத்தாலிய டெலிவிஷன் சர்வீசில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் பிராவ்தா விமர்சகர் யூரி ஜுகோவும், ஏபிஎன் விமர்சகர் கென்றிக் பொரோவிக்கும் பங்கெடுத்துக் கொண்டனர்.

1980—ல் சோவியத் யூனியன் அரசாங்கத் தொலைக்காட்சி, வானொலிக் கமிட்டி 81 வளரும் நாடுகளில் உள்ள 129 தொலைக் காட்சி, வானொலி நிறுவனங்களுடன் ஒத்துழைத்தது.

1981 ஆம் ஆண்டின் ஒரு முக்கியமான அரசியல் நிகழ்ச்சி சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிப் பொதுச் செய லாளரும், சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுத் தலைவருமான லியோனித் பிரெஷ்னேவ் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயமாகும்.

இந்த விஜயத்திற்கு சில நாட்களுக்கு முன்னர் டிசம்பர் 7-ல் டில்லி தொலைக் கட்சி "பொதுச் செயலாளர்" எனும் திரைப்படத்தை ஹிந்தியிலும், லியோனித் பிரெஷ்னேவின் சர்வதேச நடவடிக்கைகள் பற்றி 20 நிமிடநேர நிகழ்ச்சி ஒன்றையும் காட்டிற்று. இதுவல்லாமல், "மாஸ்கோ—ஆண்டின் பருவங்கள்," "சோவியத் உஸ்பெக்கிஸ்தான்," "டிரான்ஸ்காக்கேசியக் குடியரசுகள்" "தனிச் சலுகை பெற்ற வர்க்கம்" (சோவியத் குழந்தைகளின் வாழ்க்கை பற்றி) ஆகிய

சோவியத் தொலைக்காட்சிப் படங்களை இந்திய டெலிவிஷன் ரசிகர்கள் கண்டு மகிழ்ந்தனர்.

1980-ல் வளரும் நாடுகளுக்கு 115 தொலைக்காட்சிப் படங்கள் அனுப்பப் பட்டன; அந்த நாடுகளைச் சேர்ந்த 72 படங்கள் சோவியத் டெலிவிஷனில் காட்டப்பட்டன. சோவியத் யூனியன் அரசாங்க தொலைக்காட்சி, வானொலிக் கமிட்டி தயாரித்த படங்களில் பின்வருபவற்றை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்: ''லெனின்-ஒரு மாபெரும் வாழ்க்கையிலிருந்து சில ஏடுகள்'' ''புரட்சியின் வரலாறு,'' ''லெனின்கிராடு—புரட்சியின் தொட்டில்,'' ''சிறு நிலம்.''

சோவியத் ரேடியோவும், டெலிவிஷனும் ரஷ்ய மொழிப் பாடங்களைத் தொடர்ந்து அஞ்சல் செய்தன. ரேடியோ மூலம் ரஷ்யன், டெலிவிஷன் மூலம் ரஷ்யன் ஆகிய நிகழ்ச்சிகள் ரஷ்ய மொழியைப் பிரபலப்படுத்தும் முக்கியமான மார்க்கங்களாக அமைந்துள்ளன. இவ்வாறே சோவியத் வாழ்க்கை முறையையும், பொருளாதாரம், விஞ்ஞானம், கலாசாரம் ஆகிய துறைகளில் காணப்பட்டுள்ள சாதனைகளையும் பற்றி இதர நாடுகளில் எடுத்துரைப் பதற்கும் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பயன்படுகின்றன.

''நாங்கள் ரஷ்யன் பேசுகிறோம்'' எனும் புதிய டெலிவிஷன் பாடம் 30 தொடர்களாகத் தயாரிக்கப்பட்டு 81 நாடுகளில் காட்டு வதற்கு அனுப்பப்பட்டன.

# செய்தி நிறுவனங்கள்

சோவியத் யூனியனின் டெலகிராப் ஏஜன்சியும் (டாஸ்), நவோஸ்தி செய்தி நிறுவனமும் சோவியத் நாட்டின் பிரதான தகவல் நிறுவனங்களாகும். அரசாங்கத்தால் நடத்தப்படும் செய்தி நிறுவனம் டாஸ்; பல சோவியத் பொது நிறுவனங்கள் சேர்ந்து நடத்தும் தகவல் நிறுவனம் ஏபிஎன்.

நாட்டின் பொருளாதார, அரசியல், கலாசார வாழ்க்கை சம்பந்தப்பட்ட முக்கிய பிரச்சினைகளையும், சர்வதேச வாழ்க்கையையும் பற்றிய தகவல்களை டாஸும் ஏபிஎன்னும் சோவியத் யூனியன் முழுவதும் மக்களுக்கு உடனுக்குடன் வழங்குகின்றன. அரசாங்க அமைப்புகள், பொது நிறுவனங்கள், உழைப்புக் கூட்டமைப்புகள் ஆகியவற்றின் பணிகள் குறித்து பிரசாரம் செய்வது இந்த நிறுவனங்களின் கடமை. முறையான தகவல்களை வழங்குவது பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதிலும், அதனைப் பிரதிபலிப்பதிலும், நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை சோவியத் மக்கள் சரிவரப் புரிந்து கொள்ளச் செய்வதிலும், பல்வேறு மக்கட் பகுதியினரின் சித்தாந்த, அரசியல் கல்வியை மேம்படுத்துவதிலும் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

சோவியத் மக்களின் அரசியல், பொருளாதார, கலாசார சாதனைகளையும், ஒரு புதிய சமூக அமைப்பை நிர்மாணிப்பதில் கண்டுள்ள முன்னேற்றத்தையும், உலக நிகழ்ச்சிகளையும் பற்றி நம்பகமான தகவல்களை டாஸும் ஏபிஎன்னும் அயல்நாடுகளின் மக்களுக்கு அளிக்கின்றன. இந்தத் தகவலை உலக மக்களுக்குக் கிட்டச் செய்வதன் மூலம் இந்த நிறுவனங்கள் சோவியத் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையை வெளிநாடுகளின் மக்கள் புரிந்து கொள்ள உதவுகின்றன; மக்களிடையே சமாதானம், நட்புறவு, வேறுபட்ட சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளின் சமாதான சக வாழ்வு, தேசங்களிடை இணக்கம், நேச உறவு, பொருளாதார, விஞ்ஞான, கலாசார ஒத்துழைப்பை வளர்த்தல் ஆகிய லட்சியங்களுக்கு சேவை செய்கின்றன.

## சோவியத் யூனியன் டெலகிராப் ஏஜன்சி (டாஸ்)

டாஸ் 1917 அக்டோபர் புரட்சியில் பிறந்த ஒரு நிறுவனம். இந்தப் புரட்சியின் போது போல்ஷிக் கட்சி பல எதிர்ப்புரட்சி கொத்தளங்களைக் கைப்பற்றிற்று. இவற்றில் பிற்போக்கான பெத்ரோகிராடு டெலகிராப் ஏஜென்சியும் ஒன்று.

பெத்ரோகிராடு டெலகிராப் ஏஜென்சியைப் புனரமைக்கும் மக்கள் கமிசார் கவுன்சிலின் ஆணையில் 1917 டிசம்பர் 1-ல் லெனின் கையெழுத்திட்டார். இந்த நிறுவனத்தின் வரலாற்றில் இது ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தது; உலகின் முதலாவது செய்தி நிறுவனம் உதயமாக வழிகோலிற்று; இன்றளவும் இந்த நிறுவனம் உழைப்பாளி மக்களின் நலன்களுக்கு, சமாதானம், சோஷலிசத்தின் நலன்களுக்கு சேவை செய்து வருகிறது.

இந்நிறுவனத்தைப் புனரமைக்கும் பணி லெனினது தனிப்பட்ட மேற்பார்வையில், அவரது தீவிர பங்கெடுப்புடன் நடைபெற்றது. 1918-ல் புனரமைப்புப் பணி பூர்த்தி அடைந்ததும் ரஷ்ய டெலகிராப் ஏஜன்ஸி (ரோஸ்டா) என்று இதற்குப் பெயர் சூட்டப்பட்டது; சோவியத் அரசின் ஒருங்கிணைந்த தகவல் கேந்திரமாக இது பரிணமித்தது; 1925 ஜூலை வரையில் இந்தப் பெயருடனேயே இது செயல்பட்டு வந்தது. பிறகு சோவியத் சோஷலிசக் குடியரசுகள் ஒன்றியம் (சோவியத் யூனியன்) அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த நிறுவனம் டாஸ் எனும் பெயரைப் பெற்றது.

சோவியத் அரசையும், கம்யூனிஸ்டுக் கட்சியையும் சேர்ந்த பிரமுகர்களும், லெனினியப் பத்திரிகைத் துறைப் பாரம்பரியங்களைப் பின்பற்றி வரும் பத்திரிகையாளர்களும் டாஸ் செய்தி நிறுவனத்தின் பால் மிகுந்த கவனம் செலுத்தி வருவது குறித்து அதன் ஊழியர்கள் தனிப் பெருமிதம் கொள்கின்றனர்.

ஜியார்ஜி திமித்ராவ், ரோஸா லக்சம்பர்க், பெலா குன் போன்ற அநேக தலைசிறந்த சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்க, கம்யூனிஸ்டு இயக்கத் தலைவர்கள் இந்த செய்தி நிறுவனத்தின் நடவடிக்கைகளில் செயலூக்கமுடன் பங்கெடுத்துக் கொண்டனர்; இது ரோஸ்டாவையும், டாஸ்ஸையும் ஓர் உண்மையான சர்வதேசிய அமைப்பாக மாற்றிற்று.

பல பிரபல எழுத்தாளர்களும், கவிஞர்களும், ஓவியர்களும் ரோஸ்டா, டாஸ் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பெருஞ் சேவை செய்தனர்; புரட்சியின், சோஷலிச நிர்மாணத்தின் மாபெரும் கவிஞரான விளதிமிர் மயாகோவ்ஸ்கி இவர்களில் முக்கியமானவர்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் காலத்தில், சோஷலிச சமுதாயத்தை நிர்மாணித்து வந்த மக்களின் உழைப்புச் சாதனைகளையும், வீரத்தையும், லெனினிய தேசிய இனக் கொள்கையின்

வெற்றியையும், உலக நிலைமையையும் பற்றி டாஸ அரிய செய்திகளை சேகரித்து அளித்து வந்தது.

மகத்தான தேசபக்த யுத்தத்தின்போது (1941-1945) டாஸ் நிருபர்கள் எல்லாப் போர் முனைகளிலிருந்தும் சோவியத் சைன்யத்தின், சோவியத் கப்பற்படையின் ராணுவ நடவடிக்கைகள் குறித்து நாள் தோறும் ஏராளமான செய்திகளை அனுப்பி வந்தனர்.

யுத்தப் பிற்கால ஆண்டுகளில், நாட்டின் பொது வாழ்வையும், அரசியல் வாழ்வையும், அதன் தேசப் பொருளாதாரத்தின் வளர்ச்சியையும், கலை, கலாசார, விஞ்ஞான முன்னேற்றத்தையும், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் முடிவுகளை நிறைவேற்ற சோவியத் மக்கள் மேற்கொண்ட பிரயத்தனங்களையும், உலக நிலைமையையும், சோஷலிசக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகளின் வாழ்க்கையையும், லெனினிய சமாதானக் கொள்கையின் வெற்றிகளையும் பற்றி எண்ணற்ற தகவல்களையும், விவரங்களையும் டாஸ் வழங்கியுள்ளது.

1971 முதல், டாஸ் மத்திய அலுவலகம் தவிர, சோவியத் யூனியனது பதினைந்து குடியரசுகளில் ஒவ்வொன்றிலும் செய்தி நிறுவனங்கள் இருந்து வருகின்றன. சோவியத் யூனியன் அமைச்சரகத்தின் வேறு எந்த அரசாங்கக் கமிட்டிக்கும் உள்ள அதே உரிமைகள் டாஸ் நிறுவனத்துக்கும் உண்டு. டாஸின் மத்திய அலுவலகமும், சோவியத் யூனியன் முழுவதிலும் வெளி நாடுகளிலுமுள்ள அதன் கணக்கற்ற நிருபர்களும், யூனியன் குடியரசுகளிலுள்ள செய்தி நிறுவனங்களும் சேர்ந்து ஓர் ஒருங்கிணைந்த தகவல் அமைப்பாக விளங்குகின்றன.

இன்று டாஸ் உலகின் மிகப் பெரிய, மிக முக்கியமான செய்தி நிறுவனங்களில் ஒன்ருகத் திகழ்கிறது. இந்த நிறுவனத்தில் ஆயிரக் கணக்கான ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இந்த நிறுவனத்தின் நடவடிக்கைகளது பரிமாணத்தைப் பின்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்; எங்கள் நாட்டில் மட்டும் டாஸ் சுமார் 4,000 செய்திப் பத்திரிகைகளுக்கும், தொலைக்காட்சி, வானொலிக் கேந்திரங்களுக்கும் செய்திகளை வழங்குகிறது; 93 நாடுகளிலுள்ள 400-க்கு மேற்பட்ட அயல்நாட்டுச் செய்தி நிறுவனங்களும், தகவல் அமைச்சகங்களும், பிரதான பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், ரேடியோ, டெலிவிஷன் நிறுவனங்களும் டாஸ் தரும் சமாசாரங்களையும், தகவல்களையும், அறிக்கைகளும் பயன்படுத்துகின்றன. உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்கள் பற்றி டாஸ் இரவு பகலாக செய்தி அறிக்கைகளை வெளியிடுகிறது; இவை டெலி டைப் மூலம் அஞ்சல் செய்யப்பட்டு, சைக்ளோஸ்டைல் வடிவத்திலோ அல்லது அச்சிடப்பட்ட தகவல் வெளியீடு வடிவத்திலோ அனுப்பப்படுகின்றன. பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப தகவல்களும் மற்றும் விளையாட்டுப் போட்டி செய்திகளும் அடங்கிய அறிக்கைகளையும் அது வெளியிடுகிறது. ஒவ்வொரு நாளும் இந்த நிறுவனம் தனது எல்லாச்

சானல்கள் மூலமும், இருபத்திஞன்கு மணி நேரமும் ரஷ்யன், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், அரபி ஆகிய ஆறு மொழிகளில் மொத்தம் சுமார் 500 செய்திப் பத்திரிகைப் பக்க அளவில் தந்திச் செய்திகளைப் பெறுகிறது; அனுப்புகிறது. ஆண்டுதோறும் சோவியத் மற்றும் அயல்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு இந்த நிறுவனத்திடமிருந்து ஐம்பது லட்சம் முதல் அறுபத்தைந்து லட்சம் புகைப்படங்களும், பிளாஸ்டிக் அச்சு வார்ப்புகளும் கிடைக்கின்றன.

இந்தச் செய்தி நிறுவனம் தனது சர்வதேசப் பிணைப்புகளை விஸ்தரித்து வருகிறது; இன்று டாஸ் நிறுவனத்துக்கு 125 நாடுகளில் அலுவலகங்கள் உள்ளன.

வெளி நாடுகளிலிருந்து வரும் எல்லாத் தகவல்களும் பிராந்தியக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள அயல் நாட்டுத் தகவல் பிரிவில் கையாளப்படுகின்றன; சோஷலிச நாடுகளுக்கு என்று ஒரு தனிப் பிரிவு இருக்கிறது; இதேபோல் அமெரிக்கா, ஐரோப்பா, கீழ்த்திசை நாடுகள், ஆசியா, ஆப்பிரிக்கா முதலானவற்றுக்கும் பிரத்தியேகப் பிரிவுகள் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தின் அரசியல், பொருளாதார விவகாரங்களில் டாஸ் பத்திரிகையாளர்கள் தனித் தேர்ச்சி பெறுவதற்கு இந்த அமைப்பு முறை துணை புரிகிறது.

நாள்தோறும் வெளி நாடுகளிலிருந்தும், சோவியத் யூனியனின் எல்லாப் பகுதிகளிலிருந்தும், சுமார் 300 செய்தி அறிக்கைகள் வரப் பெற்று, 90-க்கு மேற்பட்ட நாடுகளிலுள்ள அயல் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படுகின்றன. வெளி நாடுகளுக்குத் தகவல் வழங்குவதற்குப் பொறுப்பாக உள்ள பிரிவு இந்தப் பணியை செய்கிறது. இந்தப் பிரிவில் இரண்டு பகுதிகள் உள்ளன: ஒரு பகுதி அயல்நாட்டு விஷயங்களைத் தயார் செய்கிறது; மற்ெருரு பகுதி சோவியத் யூனியனுக்கு வெளியே உள்ள பத்திரிகைகளில் பயன்படுத்துவதற்கான விஷயங்களைத் தயாரிக்கிறது. இந்தப் பிரிவில் பணிபுரியும் ஊழியர்கள் மொழிவாரி அடிப்படையில் வெவ்வேறு பிராந்தியங்களின் விவகாரங்களில் தனிக் கவனம் செலுத்துகின்றனர்.

உள்நாட்டுத் தகவல் பிரிவு 14 குடியரசு செய்தி நிறுவனங்களிடமிருந்தும், மூன்று கிளைகளிலிருந்தும், ரஷ்ய சமஷ்டியிலுள்ள 72 நிருபர் அலுவலகங்களிலிருந்தும், மற்றும் செய்தி நிறுவன ஊழியர்கள் எல்லாத ஏராளமான நிருபர்களிடமிருந்தும் தகவல்களைப் பெறுகிறது. கடைசியாகக் குறிப்பிடப்பட்ட நிருபர்கள் தொழில் துறைத் தொழிலாளிகள், விவசாயிகள், எல்லா மட்டங்களிலுமுள்ள கட்சி, அரசாங்க அமைப்புகள், பொருளாதார நிர்வாக அமைப்புகள் முதலியவற்றுடன் நெருங்கிய தொடர்புகளை வளர்த்து வருகின்றனர். மாஸ்கோவிலிருந்து அபரிமிதமான தகவல் கிட்டுகிறது.

ஸ்தல தகவல்கள் விசேட பகுதிகளால் கையாளப்படுகின்றன; சமூக—அரசியல் பிரச்சினைகள், தொழில் துறை, பொருளாதாரப்

பிரச்சினைகள், கிராமப்புறப் பிரச்சினைகள், விஞ்ஞான, கலாசாரப் பிரச்சினைகள் என்று குறிப்பிட்ட பிரச்சினைகளில் ஒவ்வொரு பகுதியும் அக்கறை காட்டுகின்றன. இந்தப் பகுதிகளில் ஒன்று வட்டார, நகர செய்திப் பத்திரிகைகளுக்கான விஷயங்களைத் தயாரித்து அளிக்கிறது. மொத்தம் சுமார் 500 நிருபர்களும், 360 புகைப்படக்காரர்களும் டாஸ் நிறுவனத்துக்கு ஸ்தல தகவல்களை வழங்குகின்றனர்.

எல்லா சோவியத் பிரஜைகளின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் நாடு தழுவிய நிகழ்ச்சிகள் குறித்து டாஸ் செய்திகளை வழங்குவதோடு, மக்களின் பல்வேறு பிரிவினர்க்கு வேண்டிய விரிவான தகவல்களையும் அளிக்கிறது. இவை யூனியன் குடியரசுகளுக்கு அவற்றின் தேசிய மொழிகளில் தரப்படும் தகவல்களாகும். தொழில் துறை வகை, உத்தியோகம், குடியிருப்புப் பிரதேசம், சமூக அந்தஸ்து, வயது ஆகியவற்றைப் பொறுத்தும் வெவ்வேறு விதமான தகவல்கள் சப்ளை செய்யப்படுகின்றன.

டெலிடைப் தகவல்கள் தவிர, கூடுதல் தகவல் வெளியீடுகளையும் சோவியத் வாடிக்கையாளர்களுக்கு டாஸ் அளிக்கிறது. "வட்டார வாசகர்க்கு டாஸ்'', "இளம் மக்களின் வாழ்க்கை'', "வெளி நாடுகளில் கலாசார வாழ்க்கை'', "அயல் நாட்டு விஞ்ஞான, தொழில் நுட்பத் தகவல் வெளியீடு'' ஆகியவை இவற்றில் அடங்கும்.

புகைப்படத் தகவல் பிரிவு சோவியத் வாடிக்கையாளர்களுக்கும், அயல் நாட்டு வாடிக்கையாளர்களுக்கும் வேண்டிய விஷயங்களைத் தயாரித்துத் தருகிறது. அது வெளி நாடுகளிலுள்ள சோவியத் வாடிக்கையாளர்களுக்கு புகைப்பட ஆய்வுகள், புகைப்பட வெளியீடுகள் முதலியவற்றை வழங்குகிறது; அயல்நாடுகளிலுள்ள சோவியத் நிறுவனங்களுக்காக புகைப்படக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்து வருகிறது. சோவியத் யூனியனது சமூக—அரசியல் நிகழ்ச்சிகள் பற்றிய ஒரு பரந்த படப்பிடிப்பினை இவை நல்குகின்றன.

அரசியல் ஆய்வுப் பிரிவு, பொருளாதாரத் தகவல் பிரிவு, விளையாட்டுப் போட்டித் தகவல் பிரிவு, பிரதான செய்திப் போக்குவரத்துப் பிரிவு, அந்நியச் செலாவணிப் பிரிவு என்று அநேக பிரிவுகள் டாஸ் மத்திய அலுவலகத்தில் உள்ளன. இவற்றில் பிரதான செய்திப் போக்குவரத்துப் பிரிவுதான் எல்லாப் பிரிவுகளிலுமே மிகப் பெரியது. சுமார் 700 இஞ்சினீயர்களும், தொழில் நுட்ப நிபுணர்களும் பெரிதும் தேர்ச்சி பெற்ற தந்தி ஆபரேட்டர்களும் இதில் பணி புரிகின்றனர். டாஸ் தினந்தோறும் 25 லட்சத்துக்கு மேற்பட்ட சொற்களை அல்லது 10,000 டைப் அடித்த பக்கங்களைப் பெறுகிறது, அனுப்புகிறது.

இந்த செய்தி நிறுவனத்தின் அகில யூனியன் இருவழி டெலிடைப் மார்க்கம் 3,00,000 கிலோ மீட்டருக்கு மேல் வியாபித்து சுமார் 300 நகரங்களை எட்டுகிறது. டாஸ் 38 நகரங்களுடன் இருவழி

மார்க்கங்களால் பிணைக்கப்பட்டுள்ளது. அதன் சர்வதேச மார்க்கங்களின் நீளம் 1,50,000 கிலோ மீட்டருக்கும் அதிகம்.

நாள்தோறும் 25 ரேடியோ டிரான்ஸ்மிட்டர்கள் ஆறு மொழிகளில் மொத்தம் 550 மணி நேரம் டாஸ் செய்தி அறிக்கைகளை அஞ்சல் செய்கிறது. ரேடியோ மூலம் அனுப்பப்படும் டாஸ் தகவல்கள் 57 நாடுகளில் பயன் படுத்தப்படுகின்றன. பெரும்பாலான தந்தி மார்க்கங்கள் நிமிடத்துக்கு 800 குறியீடுகளை ஒலி பரப்புகின்றன.

புகைப்பட-தந்தி முறையின் மூலம் புகைப்படங்களைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு சர்வதேசப் புகைப்படப் போக்குவரத்து அமைப்பை சோஷலிச நாடுகளின் செய்தி நிறுவனங்கள் பராமரித்து வருகின்றன.

எல்லா யூனியன் குடியரசுகளது தலை நகரங்களுடனும், ரஷ்ய சமஷ்டியிலுள்ள மிகப் பல நகரங்களுடனும் டாஸ் நிறுவனத்துக்கு புகைப்பட—தந்திப் பிணைப்புகள் உள்ளன. பைகோனூரிலுள்ள விண்ணூர்தி நிலையத்திலிருந்தும், விண்வெளிக் கேந்திரத்திலிருந்தும், முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறும் இடத்திலிருந்தும் செய்திப் போக்கு வரத்துத் துணைக்கோள்கள் மூலம் நேரடியாக கறுப்பு—வெள்ளை, மற்றும் வண்ண தந்தி-புகைப்படங்களைப் பெறமுடியும்.

ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் டாஸ் புகைப்பட நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இங்கு பத்து லட்சத்துக்கு மேற்பட்ட புகைப்பட நெகட்டிவ்களும், ஸ்லைடுகளும் உள்ளன.

கட்டுப்பாடு மற்றும் ஆவணப் பிரிவு இருபது லட்சத்துக்கு மேற்பட்ட பதிவுக் குறிப்புகள் கொண்ட ஓர் அட்டவணையைப் பராமரித்து வருகிறது. அதன் நூலகத்தில் 60,000-க்கு அதிகமான தகவல் நூல் தொகுதிகள் உள்ளன. ரஷ்யனிலும், அயல்மொழிகளிலும் சுமார் 300 செய்திப் பத்திரிகைகளும், 200-க்கும் கூடுதலான சஞ்சிகைகளும் இந்தப் பிரிவுக்கு கிட்டுகின்றன. இந்த செய்தி நிறுவனத்தில் பணியாற்றும் பத்திரிகையாளர்கள் தங்களுக்கு வேண்டிய எந்தத் தகவலையும் இந்தப் பிரிவிலிருந்து ஒன்று அல்லது இரண்டு நிமிடத்தில் பெற முடியும்.

தகவல்களை ஒழுங்குபடுத்தும் தற்போதைய முறைகளுக்குப் பதிலாக அதிக ஆற்றலுள்ள கம்ப்யூட்டர் சாதனங்கள் படிப்படியாகப் புகுத்தப்பட்டு வருகின்றன.

டாஸ் பயன்படுத்தும் எல்லாத் தகவல்களும் எதார்த்த விவரங்களையும், உண்மை நிகழ்ச்சிகளையும், அதிகாரிகளும் இதர பொறுப்பு வாய்ந்த நபர்களும் பத்திரிகைகளுக்கு விடுக்கும் அறிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டவை. வதந்திகள், ஊகங்கள், மற்றும் நம்பகமல்லாத இதர ஆதாரங்களை இந்த செய்தி நிறுவனம் நிராகரித்து வருகிறது.

ஜுர்னலிஸ்ட் (பத்திரிகையாளர்) எனும் சஞ்சிகையின் நிருபருக்கு டாஸ்செய்தி நிறுவனத்தின் டைரக்டர்—ஜெனரலான செர்கி லோசெவ் அளித்த பேட்டியில் கூறியதாவது: டாஸ் செய்திகள் பரவாதபடி மேலைய நாடுகளிலுள்ள சில வட்டாரங்கள் தம்மால் முடிந்த அனைத்தையும் செய்துவந்தபோதிலும், அவை வெளி நாடுகளிலுள்ள பரந்த மக்கட் பகுதியினரிடம் போய்ச் சேருகின்றன என்றே நம்புகிறேன். இந்த செய்திகள் எங்கள் வாழ்க்கை பற்றிய ஓர் எதார்த்த மான, உண்மையான படப்பிடிப்பை வழங்குகின்றன; பகைமைப் பிரசாரம் செய்யும் எல்லா முயற்சிகளுக்கும் இடையேயும் அவை தமது இலக்குகளைப்போய் அடைகின்றன.''

## நவோஸ்தி செய்தி நிறுவனம் (ஏ பி என்)

நவோஸ்தி செய்தி நிறுவனம் என்பது சோவியத் பொது ஸ்தாபனங்களின் ஒரு தகவல் அமைப்பாகும். சோவியத் பத்திரிகையாளர்கள் சங்கம், சோவியத் எழுத்தாளர்கள் சங்கம், அயல்நாடுகளுடன் நட்புறவுக்கும் கலாசார உறவுகளுக்குமான சோவியத் கழகங்களின் இணையம், “ஜ்ஞனியே'' (அறிவு) கழகம், அகில யூனியன் மத்தியத் தொழிற்சங்கக் கவுன்சில் ஆகியவை சேர்ந்து 1961-ல் ஏபிஎன் செய்தி நிறுவனத்தை நிறுவின.

இந்த நிறுவனத்தின் ஆதரவாளர்களது மாநாடு தான் ஏபிஎன்னின் மிக உயர்ந்த அதிகார அமைப்பாகும். குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மாநாடு கூட்டப்படுகிறது. இந்த நிறுவனத்தின் குழுமம் (போர்டு) சமர்ப்பிக்கும் அறிக்கைகளை மாநாடு பரிசீலிக்கிறது; நிறுவனத்தின் சட்ட திட்டங்களை ஊர்ஜிதம் செய்கிறது; அவற்றைத் திருத்துகிறது; ஆதரவாளர் கவுன்சிலுக்கான புதிய வேட்பு மனுக்கள் குறித்து விவாதிக்கிறது; ஆதரவாளர் கவுன்சிலைத் தேர்ந்தெடுக்கிறது.

ஆதரவாளர் கவுன்சில் குறைந்த பட்சம் வருடம் ஒரு முறை கூடுகிறது; மாநாடுகள் நடைபெறுவதற்கு இடைப்பட்ட காலத்தில் அது நிறுவனத்தின் முழு நடவடிக்கைகளையும் நிர்வகிக்கிறது, கண்காணிக்கிறது; போர்டின் அறிக்கைகளைப் பரிசீலித்து ஊர்ஜிதம் செய்கிறது; நிறுவனம் மேற்கொண்டு ஆற்ற வேண்டிய பணிகளை நிர்ணயித்துத் தருகிறது; நிறுவனத்தின் சகல நிதி மற்றும் தொழில் நடவடிக்கைகளை மேற்பார்க்கிறது.

ஏபிஎன் தனது எல்லா நடவடிக்கைகளுக்கும் சோவியத் யூனியன் அரசியல் சட்டத்தின் 50, 51-வது விதிகளை வழிகாட்டியாகக் கொண்டு செயல்படுகிறது. இந்த விதிகள் எல்லா சோவியத் பிரஜைகளுக்கும் பத்திரிகை சுதந்திரத்தையும், பொது ஸ்தாபனங்களை அமைத்துக் கொள்வதற்கான உரிமையையும் உத்தரவாதம் செய்கின்றன.

நவோஸ்தி செய்தி நிறுவனத்தின் போர்டு, அதன் பதிப்பகம், ஆசிரியர் குழுக்கள், இதர பிரதான சர்வீசுகள் ஆகியவை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு சோவியத் யூனியன் அரசியல் சட்டத்தின் 10-வது விதிப்படி சோவியத் அரசு இந்நிறுவனத்திற்கு கட்டிடங்களை வழங்கியுள்ளது. வாகனங்கள், செய்திப் போக்குவரத்து வசதிகள், துணைக் கட்டிடங்கள் முதலிய இதர எல்லா சொத்துகளும் குத்தகை சொத்துகளாக ஏபிஎன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஏபிஎன்னுக்கு சொந்த வங்கி கணக்கு இருக்கிறது. ஆதரவாளர் நிறுவனங்கள் செலுத்தும் சந்தாக் கட்டணங்கள், நிறுவனத்தின் பதிப்பகப் பணியிலிருந்து பெறப்படும் வருமானங்கள், வெளி நாடுகளிலுள்ள வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களுக்கு நூல்கள், படங்கள் நிறைந்த வெளியீடுகள் முதலியவற்றை விற்பனை செய்வதன் மூலம் கிட்டும் தொகைகள், சோவியத் யூனியனிலும் அயல் நாடுகளிலும் இந்த நிறுவனம் விநியோகம் செய்யும் சஞ்சிகைகளுக்காகவும் செய்தி வெளியீடுகளுக்காகவும் கிடைக்கும் சந்தாக்கள் முதலியவை இந்த வங்கிக் கணக்குக்கு ஆதாரமாக உள்ளன.

ஏபிஎன்னின் தொழில் நடவடிக்கைகளுக்கும், நிதிப் பொறுப்புகளுக்கும் அல்லது வேறு எந்த நடவடிக்கைகளுக்கும் சோவியத் அரசாங்க அமைப்புகள் எவ்வகையிலும் பொறுப்பு ஏற்பதில்லை; அதேபோல் சோவியத் அரசுக்கும், வேறு எந்த சோவியத் நிறுவனத்துக்கும் எதிராக எழுப்பப்படும் எத்தகைய பாத்தியதைகளுக்கும் ஏபிஎன் பொறுப்பு ஏற்பதில்லை.

ஏபிஎன் தனது பெயரிலேயே விஷயங்களையும் வெளியீடுகளையும் பிரசுரிக்கிறது; விநியோகிக்கிறது; இவற்றுக்கு பதிப்புரிமையையும் பெற்றுள்ளது.

மத்திய அளவில் அமைந்த பிரதான ஆசிரியர் குழு, பிரதேச அளவில் (சோஷலிச நாடுகள், வட அமெரிக்கா, ஆசியா, மேற்கு ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா போன்றவற்றுக்கு) அமைந்த ஆசிரியர் குழுக்கள், அரசியல், விமர்சகர்கள் குழு, ஒரு பதிப்பகம், மாஸ்கோவ்ஸ்கியி நவோஸ்தி (மாஸ்கோ நியூஸ்) செய்திப் பத்திரிகையின் ஆசிரியர் குழு, புகைப்படப் பிரிவு, உள்நாட்டு நிருபர்கள் பிரிவு, தொழில்நுட்ப சர்வீஸ்கள் பிரிவு முதலியவற்றை ஏபிஎன் கொண்டுள்ளது.

93 நாடுகளில் 115 அலுவலகங்களையும், நிருபர்களையும், யூனியன் குடியரசுகளின் தலைநகரங்களிலும் சோவியத் யூனியனது பெரிய தொழில் நிலையங்களிலும் கலாசாரக் கேந்திரங்களிலும் 29 அலுவலகங்களையும் நிருபர்களையும் ஏபிஎன் பெற்றிருக்கிறது. அது 110 நாடுகளில் 4,000-க்கு மேற்பட்ட செய்தி நிறுவனங்களுடனும், வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களுடனும் தொழில் தொடர்புகளை வளர்த்து வருகிறது. சர்வதேச, தேசிய செய்தி நிறுவனங்கள்,

செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், பதிப்பகங்கள், ரேடியோ ஒலிபரப்பு நிலையங்கள் ஆகியவை இவற்றில் அடங்கும்.

3,000-க்கு மேற்பட்ட பிரபல சோவியத் மற்றும் அயல்நாட்டு அரசியல் தலைவர்கள், பொது வாழ்வுப் பிரமுகர்கள், விஞ்ஞானிகள், சிறுகதை எழுத்தாளர்கள், நாவலாசிரியர்கள், அரசியல் எழுத்தாளர்கள், கலாசார ஊழியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் முதலியோருடன் ஏபிஎன் ஒத்துழைக்கிறது; இவர்கள் இந்த செய்தி நிறுவனத்துக்கு பல்வேறு வகையில் விஷயதானம் செய்கின்றனர்.

''சமாதானத்திற்கும் சர்வதேச ஒத்துழைப்புக்கும் தகவல்'' என்பதே ஏபிஎன்னின் குறிக்கோள் வாசகம். சோவியத் யூனியனைப் பற்றிய உண்மை விவரங்களை வெளிநாடுகளில் விரிவாகப் பரப்புவதன் மூலமும், இதர மக்களின் வாழ்க்கையை சோவியத் மக்களுக்குப் பரிசயம் செய்வதன் மூலமும் சர்வதேச இணக்கத்தையும், நம்பிக்கையையும், நட்புறவையும் வளர்த்து வலுப்படுத்துவதற்கு உதவுவது ஏபிஎன்னின் நோக்கம்.

இந்த செய்தி நிறுவனத்தின் சட்ட திட்டங்களில் வரையறுத்துக் கூறப்பட்டிருக்கும் அதன் பிரதான லட்சியங்கள் வருமாறு:

—அயல் நாடுகளைச் சேர்ந்த பத்திரிகைகளுக்கும், செய்தி நிறுவனங்களுக்கும், பதிப்பகங்களுக்கும், வானொலி, தொலைக்காட்சி நிலையங்களுக்கும் புத்தகங்கள், துண்டு வெளியீடுகள், ஆல்பம்கள், கட்டுரைகள், விமர்சனங்கள், பேட்டிகள், திறனாய்வுகள், விளக்கக் கட்டுரைகள், செய்திகள், புகைப் படங்கள், சோவியத் யூனியனின் உள்துறை, அயல்துறைக் கொள்கையையும் சோவியத் மக்களின் பொருளாதார, கலாசார, பொது வாழ்க்கையையும் பற்றிய இதர தகவல்கள், மற்றும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள் சம்பந்தமாக அவர்களது கருத்துகளைப் பிரதிபலிக்கும் பல்வேறு விஷயங்கள் முதலியவற்றைத் தயாரித்து அளிப்பது;

—சோவியத் மக்களின் வாழ்க்கையை தெள்ளத் தெளிவாக சித்திரித்துக் காட்டும் பொருட்டு அயல் நாடுகளில் அவற்றின் சட்டங்களுக்கு இணங்க சஞ்சிகைகள், செய்திப் பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள், சிறு வெளியீடுகள், மற்றும் இதர நூல்களை வெளியிடுவது.

செய்திகளைச் சுடச்சுட கேட்பதுடன் மட்டுமே வாசகர் நின்றுவிடுவதில்லை; உலகில் நடைபெற்று வரும் பல்வேறு நிகழ்ச்சிகளின் தன்மையைப் புரிந்து கொள்ளவும் அவர் ஆவலோடு இருக்கிறார். ஏபிஎன் எப்பொழுதுமே உண்மை நிலவரங்களை நன்கு அலசி ஆராய்ந்து, பிரச்சினையின் பிரதான சாரத்தை வாசகர் புரிந்து கொள்ள உதவுகிறது. இது இந்த செய்தி நிறுவனத்தின் ஒரு தனிச் சிறப்பாகும். ஏபிஎன் தான் சேகரிக்கும் பல்வேறு விஷயங்களையும் முக்கியமாக கட்டுரைகள், விமர்சனங்கள், பேட்டிகள், அறிக்கைகள்

வடிவத்தில் வழங்குவது தற்செயலானது ஒன்றுமல்ல. இந்த நிறுவனம் வருடம் கிட்டத்தட்ட 50,000 விஷயங்களை வெளியிடுகின்றது. இவை பெரும்பாலும் பகுத்தாய்வு செய்யும் அடிப்படையில் அமைந்துள்ளன.

இவற்றை எழுதுபவர்கள் ஏபிஎன் நிறுவனத்தில் பணியாற்று பவர்களோ, தொழில் முறை பத்திரிகையாளர்களோ மட்டுமல்ல. சோவியத் மக்களின் பிரதிநிதிகளால், பல்வேறு துறைகளில் சேவை செய்யும் நிபுணர்களால் இவை பிரதானமாக எழுதப்படுகின்றன. இதர நாடுகளைச் சேர்ந்த பொது வாழ்வுப் பிரமுகர்கள், பிரபல எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் முதலியோர் இந்த நிறுவனத் தின் பணியில் விரிவாக பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

ஆக, உள்நாட்டு வாழ்க்கையிலும் சர்வதேச வாழ்க்கையிலும் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள், அவை பற்றி சோவியத் மக்களின் பிரதிநிதிகளும், அயல் நாடுகளைச் சேர்ந்த மக்களின் பிரதிநிதிகளும் வழங்கும் பகுப்பாய்வுகள், மதிப்பீடுகள், சோவியத் யூனியனதும் வெளிநாடுகளதும் அரசியல், பொருளாதார அறிவுத் துறை வாழ்க்கை குறித்து சோவியத் மக்கள் தெரிவிக்கும் கருத்துகள் முதலியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளன ஏபிஎன் தரும் தகவல்கள் என்பது தெளிவு.

சோவியத் பத்திரிகைகளுக்காக ஏபிஎன் அநேக செய்தி வெளி யீடுகளைக் கொணர்கிறது. "சோவியத் யூனியன் முழுவதிலும்", "சர்வதேசத் தகவல்" ஆகிய வெளியீடுகள் இவ்வகையில் முக்கிய மானவைகளாகும். டாஸ் தரும் தகவலும் ஏபிஎன் அளிக்கும் தகவலும் ஒன்றுக்கொன்று உதவியாக உள்ளன. இதனுல் நடப்பு நிகழ்ச்சிகள் குறித்தும், உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் நடந்தேறி வரும் மாற்றங்கள் குறித்தும் ஒரு விரிவான சித்திரத்தை வழங்குவது சாத்தியமாகி உள்ளது.

சமாதான லட்சியத்துக்கும், மற்றும் நவீன காலனி ஆதிக்கம், வருண இனவெறி, இன ஒதுக்கல், ஜியோனிசம் ஆகியவற்றை எதிர்த்து, அனைத்து தேசங்களின் சுதந்திரத்துக்காகவும் அரசுரிமைக் காகவும் நடைபெறும் போராட்ட லட்சியத்துக்கும் ஏபிஎன் தகவல் சேவை புரிகிறது.

தகவலைப் பரப்புவதற்குக் கையாளும் முறைகளைப் பொறுத்த வரையில், கட்டுரைகள், விமர்சனங்கள், வழக்கமான பாணியில் அமைந்த அறிக்கைகள் தவிர, பின்னணிக் குறிப்புகள், சுருக்கமான தொகுப்புகள் ஆகியவற்றையும் ஏபிஎன் விரிவாகப் பயன்படுத்துகிறது.

பின்னணிக் குறிப்புகள் நிபுணர்களாலும் பத்திரிகையாளர் களாலும் எழுதப்படுகின்றன; வெளி நாடுகளில் தகவல், செய்தி தொடர்பு சாதனங்களில் பணிபுரிவோருக்கு இவை மிகவும் பயனுள்ளவையாக இருக்கின்றன. இந்த நிபுணர்கள் உண்மை விவரங்கள், புள்ளி விவரங்கள், அறிக்கைகள் முதலியவற்றை வழங்கு வதன் மூலம் பிரச்சினைகளைப் பற்றிய ஒரு சரியான கண்ணோட்டத்தை

பத்திரிகையாளர்களுக்கு அளிக்கின்றனர்; அவர்கள் தமது சொந்தக் கட்டுரைகளையும் இதர விஷயங்களையும் எழுதுவதற்குத் துணை புரிகின்றனர்.

பல்வேறு சோவியத் பத்திரிகைகளில் வெளியாகும் சமாசாரங்கள் இரத்தினச் சுருக்கமான, ஜனரஞ்சகமான முறையில் சுருக்கமான தொகுப்புகளில் தரப்படுகின்றன. சோவியத் வாழ்க்கையைப் பற்றி சோவியத் பத்திரிகைகள் எவ்வாறு எழுதுகின்றன, முக்கிய பிரச்சினைகளை அவை எவ்விதம் கையாள்கின்றன என்பதை அறிய அயல்நாட்டு மக்கள் கொண்டுள்ள ஆர்வத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனேயே திரட்டு சஞ்சிகைகளை ஏபிஎன் வெளியிடுகிறது.

இந்த செய்தி நிறுவனம் ஏராளமான தகவல் பிரசுரங்களை வெளியிடுகிறது. இவற்றில் முக்கியமானவை வருமாறு: "சோவியத் காட்சிகள்," "சோவியத் யூனியனைச் சுற்றிலும்," "சோவியத் யூனியன்—கலாசாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பம்," "சி எம் இ ஏ: விமர்சனங்களும் தகவலும்," "உலகச் செய்திகள்," "லத்தீன் அமெரிக்கக் காட்சிகள்," சோவியத் வாழ்க்கையையும் வெளி நாடுகளின் வாழ்க்கையையும் இவை சித்திரிக்கின்றன.

ஒரு தினசரி மதிப்பாய்வு பிரசுரத்தையும் இந்த நிறுவனம் வெளியிடுகிறது. சோவியத் அரசாங்கத்தின் அதிகார பூர்வமான தஸ்தாவேஜுகள், அரசாங்க அதிகாரிகளும், கட்சி நிர்வாகிகளும் வெளியிடும் அறிக்கைகள் முதலியவற்றின் மொழி பெயர்ப்புகளும், சர்வதேச விமர்சனங்களும், மார்க்சிய-லெனினிய சித்தாந்தம், பொருளாதாரம், விஞ்ஞானம், கலாசாரம் பற்றிய கட்டுரைகளும் ஆங்கிலத்தில் வெளியாகும் இந்தப் பிரசுரத்தில் இடம் பெறுகின்றன.

மாஸ்கோவ்ஸ்கியே நவோஸ்தி (மாஸ்கோ நியூஸ்) எனும் செய்திப் பத்திரிகையைப் பதிப்பிக்கும் பொறுப்பை அயல் நாடுகளுடன் நட்புறவுக்கும் கலாசார உறவுகளுக்குமான சோவியத் கழகங்களின் யூனியனுடன் கூட்டுச் சேர்ந்து 1980-ல் ஏபிஎன் ஏற்றுக் கொண்டது. ரஷ்யன், ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், அரபி ஆகிய மொழிகளில் இது பிரசுரிக்கப்படுகிறது. சுமார் 8 லட்சம் பிரதிகள் அச்சிடப்படும் இந்த இதழ் 140 நாடுகளில் விற்பனை செய்யப்படுகிறது. இந்தப் பத்திரிகையின் அனுபந்தம் "மாஸ்கோ நியூஸ் இன்பர்மேஷன்" எனும் பெயரில் வாரம் இருமுறை மொத்தம் ஏறத்தாழ 1 லட்சம் பிரதிகள் வெளியிடப்படுகிறது.

நவோஸ்தி செய்தி நிறுவனத்தின் பதிப்பகம் அயல் மொழிகளில் பல்வேறு புத்தகங்களைப் பிரசுரிக்கிறது. சோவியத் மக்களின் வாழ்க்கை, சோவியத் யூனியனின் சமூக, பொருளாதார வளர்ச்சி, நாட்டின் விஞ்ஞான, தொழில் நுட்ப, கலாசார, கல்வி முன்னேற்றம், சோவியத் அயல்துறைக் கொள்கை, சர்வதேச வாழ்க்கை சம்பந்தப் பட்ட பிரதான பிரச்சினைகள் முதலியவை குறித்த தகவல்கள் இந்த

நூல்களில் அடங்கியுள்ளன. சுருக்கத் திரட்டுகள், சிறு பிரசுரங்கள் புகைப்பட-செய்திப் பத்திரிகைகள் போன்றவற்றையும் அது வெளியிடுகிறது. ஏபிஎன் பதிப்பகம் ஆண்டுதோறும் 200 புத்தகங்களையும், துண்டு வெளியீடுகளையும் 22 மொழிகளில், மொத்தம் 1 கோடி 50 லட்சத்துக்கும் அதிகமான பிரதிகள் பிரசுரிக்கிறது. இந்த நூல்களில் கணிசமான பகுதி பல்வேறு வரிசைகளில் வெளியிடப்படுகிறது.

இந்தப் புத்தகங்கள் யாவும் உலகின் வெவ்வேறு பிராந்தியங்களில் உள்ள வாசகர்களின் குறிப்பிட்ட ஆர்வ விருப்பங்களைக் கருத்திற் கொண்டு பிரசுரிக்கப்படுகின்றன.

ஏபிஎன் பதிப்பகம் பரஸ்பர அனுகூல அடிப்படையில் அயல் நாட்டுப் பதிப்பகங்களுடன் ஒத்துழைத்து வருகிறது.

சோவியத் பத்திரிகைகளில் வெளியாகும் மிகச் சிறந்த சமாசாரங்கள் அடங்கிய மாதாந்தர திரட்டு ஒன்றையும் ஏபிஎன் பதிப்பகம் வெளியிடுகிறது. படங்கள் நிறைந்த இந்த சஞ்சிகையின் பெயர் ஸ்பூத்னிக். இது 98 நாடுகளில் விற்பனை செய்யப்படுகிறது. ரஷ்யன், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், செக், ஹங்கேரியன் ஆகிய மொழிகளில் இந்த சஞ்சிகை வெளி வருகிறது. இதல்லாமல், **சோஷலிசம்: தத்துவமும் நடைமுறையும்** (எஸ்டிபி) எனும் மாதாந்தர திரட்டு சஞ்சிகையை ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ் ஆகிய மொழிகளிலும், இதைவிட ஜனரஞ்சகமான இதன் பதிப்பான **சோஷலிசம்: கோட்பாடுகள்—நடைமுறை-எதிர்கால வாய்ப்புகள்** (எஸ்பிபிபி), எனும் சஞ்சிகையை ஆங்கிலம், பிரெஞ்சு, போர்த்துக்கீசிய மொழிகளிலும் ஏபிஎன் பதிப்பகம் பிரசுரிக்கிறது. மார்க்சிய—லெனினிய தத்துவார்த்தப் பிரச்சினைகள், சோவியத் யூனியனில் சோஷலிச, கம்யூனிச நிர்மாணம், உலக தொழிலாளி வர்க்க, தேச விடுதலை இயக்கங்கள் முதலியவை பற்றி சோவியத் பத்திரிகைகளில் வெளியாகும் கட்டுரைகள் இந்த இரண்டு சஞ்சிகைகளிலும் இடம் பெறுகின்றன. 100-க்கு மேற்பட்ட நாடுகளில் இவை விற்பனை செய்யப்படுகின்றன. இதுவன்றி, 11 நாடுகளிலுள்ள பதிப்பகங்கள் 24 மொழிகளில் இந்த சஞ்சிகைகளின் ஸ்தல பதிப்புகளை வெளியிடுகின்றன.

ஏபிஎன் வாசகர்களின் எண்ணிக்கை ஏராளம்; அதே போல் அவர்களின் வகைகளும் ஏராளம். இதனால் தான் ஒரே விஷயங்கள் ஒவ்வொரு நாட்டின் பிரத்தியேக நிலைமைகளையும், சோவியத் யூனியனிலுள்ள வெவ்வேறு மக்கள் பகுதியினரையும் கருத்திற் கொண்டு விவாதிக்கப்படுகின்றன; வழங்கப்படுகின்றன. அதே சமயம், வாசகர்களின் கல்வி, கலாசாரத் தரம், அவர்களது சமூக, தேசிய சிறப்பியல்புகள், அவர்களது ஆர்வ விருப்பங்கள் முதலியவற்றையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே தான் ஏபிஎன்னின் தகவல்கள் முழுவதும் ஒரு குறிப்பிட்ட நாட்டை நோக்கி, அதன் மக்களில் குறிப்பிட்ட பகுதியினரை நோக்கி திருப்பி விடப்படுகிறது.

வெளி நாடுகளில் பிரசுரிக்கப்படும் படங்கள் நிறைந்த சஞ்சிகைகள், செய்திப் பத்திரிகைகள், 150-க்கு மேற்பட்ட செய்தி வெளியீடுகள், பத்திரிகை வெளியீடுகள் முதலியவற்றுக்கு வேண்டிய தகவல்களையும் விஷயங்களையும் நவோஸ்தி செய்தி நிறுவனம் வழங்குகிறது.

இந்த சஞ்சிகைகள் உலகில் பின்வரும் நாடுகளில் பிரசுரிக்கப் படுகின்றன. பல்கேரியா (தினெஸ் சி உத்ரே), ஹங்கேரி (பாக்லியா), வியத்நாம் (வியன் ஸோ நிகாய் நே), மங்கோலியா (ஒக்தியாபிரின் துயா), போலந்து (கிராய் ராத்), ருமேனியா (அரோரா), யுகோஸ்லாவியா (சோவ்ஜெத்ஸ்கி ஹொாிஸாந்தி), கியூபா, (யு ஆர் எஸ்எஸ்), ஆஸ்திரியா, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு (சோவியத் யூனியன் ஹியூடே), பிரான்ஸ் (இடுயிஸ் சோவியட்டிகியூ), டென்மார்க் (பாக்டா அம் சோவ்ஜெட்யூனியனென்), சுவீடன் (நை ஹெட்டர் பிரான் சோவியட் யூனியனென்), போர்ச்சுகல் (விதா சோவியட்டிகா), அமெரிக்கா (சோவியத் லைப்), ஜப்பான் கொான்னிடி-ஞே-சொரம்போ), அர்ஜென்டினு (நோவதாதெஸ் டி லா யூனியன் சோவியட்டிகா), கொலம்பியா (என்கோகியூ இன்டர்னேசியனல்), மெக்சிகோ (யு ஆர் எஸ் எஸ்), பெரு (பனேரமே இன்டர்னேசியனல்), ஆப்கனிஸ்தான் (அக்பார்), ஸ்ரீ லங்கா (சோவியத் தேசயா), நேப்பாளம் (சோவியத் பூமி), தாய்லந்து (சகாபன் சோவியத்), இந்தோனேஷ்யா (நெகரி சோவியத்), இந்தியா (சோவியத் லாண்டு), சோவியத் ரெவ்யூ, ஸ்பூத்னிக் ஜூனியர்). எகிப்து அரபுக் குடியரசு (அல் மகால்லா அஸ் சோவெத்தியி), லெபனுன் (அல் மதார், நியூ டான், அபே நோவெல்லே), எதியோப்பியா (தி ரெயின்போ).

ஏபிஎன் ஆதரவுப் பெற்ற செய்திப் பத்திரிகைகள் பின்வரும் நாடுகளில் பிரசுரிக்கப் படுகின்றன: செக்கோஸ்லோவாகியா (திதனிக் அக்துவாலிட்), பிரிட்டன் (தி சோவியத் வீக்ளி), ஐஸ்லந்து (பிரெட்டிர் பிரா சோவெத் ரிக்ஜுனும்), நார்வே (சோவியத்-நித்), நியூஜிலந்து (சோவியத் நியூஸ்), இந்தியா (யூத் ரெவ்யூ), பங்களாதேஷ் (ஜுபோபர்டா), பர்மா (சோவியி டெதின்ஜின்), ஆப்கனிஸ்தான் (ஜெவனுன்), டான்ஜானியா (உருசி லியோ).

ஏபிஎன் புத்தகங்களையும், துண்டுப் பிரசுரங்களையும் வெளியிடுவதுடன், அயல் நாடுகளிலுள்ள பத்திரிகைகள், தகவல் நிறுவனங்கள் பதிப்பகங்கள், ரேடியோ, டெலிவிஷன் நிலையங்கள் முதலியவற்றுக்கு சோவியத் கம்யூனிஸ்டுக்கட்சி மற்றும் சோவியத்அரசின் உள்துறை, அயல் துறைக் கொள்கையையும், சோவியத் மக்களின் பொருளாதார, கலாசார, பொது வாழ்க்கையையும் பற்றிப் பல்வேறு விவரங்களை சேகரித்து அளிக்கிறது. சோவியத் யூனியனிலுள்ள அயல்நாட்டு நிருபர்களுடன் நவோஸ்தி செய்தி நிறுவனம் ஒத்துழைக்கிறது; சோஷலிச நாடுகளிலிருந்தும், முதலாளித்துவ நாடுகளிலிருந்தும், வளரும் நாடுகளிலிருந்தும் சோவியத் யூனியனுக்கு வரும் எழுத்தாளர்கள், மற்றும்

வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களின் பிரதிநிதிகள் போன்ருேர்க்கு அவசியமான உதவியைச் செய்கிறது.

சோவியத் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களுடன் தான் கொண்டுள்ள ஒத்துழைப்புக்கு நவோஸ்தி செய்தி நிறுவனம் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. சோவியத் யூனியனிலும் வெளி நாடுகளிலுமுள்ள ஏபிஎன் நிருபர்கள் சோவியத் யூனியனதும் அயல் நாடுகளதும் அரசியல், பொருளாதார, கலாசார, பொது வாழ்வில் நடைபெறும் நிகழ்ச்சிகளை சோவியத் வாசகர்களுக்கு எடுத்துரைக் கின்றனர்; தமது புத்தகங்கள், தகவல்கள், செய்திகள் மூலம் பல்வேறு நாடுகளின் மக்களிடையே நல்லிணக்கத்தையும், நம்பிக்கையையும், நட்புறவையும் வளர்க்கின்றனர்.

* * *

சோவியத் யூனியனின் வெகுஜன தகவல், செய்தி தொடர்பு சாதனங்களையும், அவற்றின் கோட்பாடுகளையும், கட்டமைப்பையும், அவற்றின் பிரதான சிறப்பியல்புகளையும், நடவடிக்கைகளையும் உங்களுக்குப் பரிச்சயம் செய்ய இந்த சிறு நூலில் முயற்சி செய்துள்ளோம்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டி தனது சித்தாந்தப் பணியின் பல துறைகளில் கணிசமான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது; இந்தப் பணியை நம் காலத்தின் எதார்த்த நிலைமைகளுக்கு மிக நெருக்கமாகக் கொண்டு வரும் பொருட்டும், சோவியத் மக்களின் இன்றைய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டும், கடினமான பிரச்சினைகளைத் தட்டிக் கழிக்காமல் சமாளிக்கும் பொருட்டும் இந்த நடவடிக்கைளை அது மேற்கொண்டு வருகிறது. நமது கட்சியின் கொள்கை தெள்ளத் தெளிவானது; எந்தக் கேள்வி கேட்டாலும் அதற்குப் பதிலளிக்க நாம் தயாராக இருக்கிறோம்; ஏனென்றால் அவ்வாறு செய்யத் தவறினால், நமது நாட்டின் பகைவர்கள் இதைப் பயன்படுத்திக் கொண்டு சோஷலிசத்தின் மீது அவதூறையும் நிந்தனையையும் பொழிவதை மேலும் முடுக்கிவிட்டு விடுவார்கள்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 26-வது காங்கிரஸ், பத்திரிகை யாளர்களுக்கு திட்டவட்டமான பணிகளை நிர்ணயித்துத் தந்துள்ளது. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் சார்பில் 26-வது கட்சிக் காங்கிரசில் பேசும்போது லியோனித் பிரெஷ்னேவ் கூறிய தாவது: "பல்லாயிரக் கணக்கானோரைக் கொண்ட சோவியத் பத்திரிகையாளர் படையின் மீது நமது கட்சி மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளது; அவர்களது கடினமான பணியை மிக உயர்வாக மதிக்கிறது. நமது தகவல் சாதனங்கள் எப்போதும் கட்சியின்,

பொதுஜன அபிப்பிராயத்தின் உண்மைக் குரலாக ஒலிக்க வேண்டும் என்று நாம் அனைவரும் விரும்புவது இயல்பே. ஒரு செய்திப் பத்திரிகையில் அல்லது சஞ்சிகையில் வெளிபிடப்படும் ஒவ்வொரு கட்டுரையும், ஒவ்வொரு தொலைக்காட்சி அல்லது வானொலி நிகழ்ச்சியும் மக்களுடன் மனம்விட்டு நடைபெறும் ஓர் உரையாடலாகக் கருதப்பட வேண்டும். உண்மை விவரங்கள் உடனடியாகவும் யதார்த்த பூர்வமாகவும் வெளியிடப்பட வேண்டும் என்று மக்கள் விரும்புவதோடு மட்டுமன்றி, இந்த விவரங்கள் மிக ஆழமாகப் பகுத்தாயப்பட வேண்டும், பெரிதும் பொதுமைப்படுத்தப் படவேண்டும் என்றும் அவாவுகிறார்கள். நமது பத்திரிகைக்கு விஷய தானம் செய்யும் லட்சக்கணக்கானோருடன் சேர்ந்து சோவியத் பத்திரிகையாளர்கள் கட்சிப் பத்திரிகைத் துறையின் லெனினியக் கோட்பாடுகளாலும் பாரம்பரியங்களாலும் வழிகாட்டப்பட்டு, எப்பொழுதுமே மிக உயர்ந்த சமூக ஈடுபாட்டையும், பொறுப்பு உணர்ச்சியையும் காட்டுவார்கள் என்று நம்புகிறோம்.'' ★